திரு அருட்பா

பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

ஆம் புத்தகம்

முதல் திருமுறை

அல்லது

பெருநூல் பகுதி

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, பி.ஏ., எம்.எல்.,

"அருட்பா வளாகம்", தியாகராஜபுரம்,

மயிலாப்பூர், சென்னை - 4.

1956

All Rights Reserved

ANNOUNCEMENT

At the kind instance of eminent Indian and Foreign religious scholars, an English Translation of selected stanzas from Thiru Arutpa of Saint Sri Ramalinga Swamigal has been attempted by the Editor of the present Arutpa series. Bilingual and multilingual literary persons of great critical acumen and intimate religious persuasion have blessed this humble venture with their very loving and encouraging appreciation. The Translation will be published very early. Friends requiring copies may kindly write for particulars to the Editor with postal stamps for reply. The sale proceeds of this Translation as well as his other religious, literary and legal works will enure to the benefit of his Thiru Arutpa Trust.

திரு அருட்பா

முதல் திருமுறை

அல்லது

பெருநூல் பகுதி

உ

திரு அருட்பா

பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

ஏழாம் புத்தகம்

முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி

முதற்பதிப்பு

நம் பெருமானார்
இராமலிங்க அடிகளாரின்
திரு உருவம்

உ

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பிரகாச வள்ளலார்

என்னும்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திரு அருட்பா

ஏ. முதல் திருமுறை

அல்லது

பெருநூல் பகுதி

முதல் பதிப்பு

இது
சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் தத்துவநூல் போதகாசிரியராகவும், சென்னைச் சட்டக் கலாசாலையில் அறநூல் போதகாசிரியராகவும், சென்னை இந்து ரிலிஜியஸ் எண்டோமெண்ட்ஸ் போர்டில் செக்ரடெரியாகவும் கம்மிஷனராகவும் இருந்தவரும்
ஆன

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, பி.ஏ., எம்.எல்.,
அட்வொகேட் அவர்களால்

சுவாமிகள் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூல ஏடுகள், சுவாமிகளிடம் தொண்டு பூண்டு அவர்களை அடுத்திருந்த அன்பர்களின் கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றினின்றும் எடுத்து ஆராய்ந்து குறிப்புக்கள் எழுதி

அடக்க விலையில்

அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

All Rights Reserved.

கலியுகாதி௵ 5057-இல் நிகழும் மன்மத௵
மார்கழி௴ 29உ : சன்மார்க்க ஆண்டு அக.

Jaya & Co. (Paramount Press) Madras-5.

13 - 1 - 56.

உ

சிவமயம்

சிவகணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பா மகிமை

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு.

திருச்சிற்றம்பலம்

இது

வேதாகம சுத்தசைவ சித்தாந்த

சமயாசாரிய பீடமாய் விளங்குகின்ற

மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம்

சிதம்பர சுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்டது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆராதனை

ஊருணி நீர் நிறைந்தன்ன வள்ளற்றன்மையால் அகமும் புறமும் இயல்பாய் நிறைவுற்றவர்களும், தமிழெனும் அளப்பருஞ் சலதியில் பிறங்கும் அருட்பெரு நூல்களுக்கெல்லாம் தாயகமாக விளங்குபவர்களும், தமிழகத்தில், தேவார திருவாசகத் தெய்வத் தமிழ்ப் பெருமறையான—சிவமணங் கமழும் நாண்மலர்—அலங்கல் அணிந்து, இறைவன் திருக்கோயில் கொண்டிருக்கும், புனிதமான இடங்கள் பற்பலவற்றிலும், அறனும் அன்பும் எஞ்ஞான்றும் அமர்ந்து உறையுமாறு திருவுளங் கொண்டவர்களும், சொலற்கரிய மற்றெல்லா வகையிலும் தயாமூலதன்மமே வடிவெடுத்ததெனத் திகழ்பவர்களும், கருவிலே திரு அருள் அமையப்பெற்றுத் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரும், சிவாநந்தாநுபவ அந்தரங்கங்களில் இடையறாது திளைத்துத் தேக்குபவர்களும், எளியேன்பால் தலைநாளன்ன தயவுள்ளவர்களும், ஏழையேனுடைய குற்றங்குறைகளைப் பொருட்படுத்தாது, "நீங்கள் மக்களில் வைரம் போன்றவர்கள்" என்று அடியார்கள்முன் திருவாய் மலர்ந்தருளி, என்னை வழி அடிமையாக ஆட்கொண்டவர்களும், உலகப் பெருநலமான என் தெய்வத் திருப்பணியைப் பேரன்போடு ஆசீர்வதித்துப் பேருவகையோடு என்னை ஊக்கியவர்களும் ஆகிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர் பெருமானார்—தமக்கு மிக்காரும் ஒப்பாரும் இல்லாதவர்கள்—ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுள்ளங்கொள்ளும் ஓர் ஆராதனையாக அடியேனது இவ்வெளிய திருத்தொண்டின் நற்பயன் என்றும் நிலவுவதாக.

வாழ்க ஸ்ரீ காசிமடம்!

வாழ்க ஸ்ரீலஸ்ரீ எங்கள் பெருமானார்!

வாழ்க அவர்கள் தயாமூலதன்மம்!

திருச்சிற்றம்பலம்

இப்பதிப்பின் சிறப்பியல்புகள்

1. ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த ஸ்தோத்திர மாலைகள், சாஸ்திர மாலைகள், கீர்த்தனைகள், சன்மார்க்கப் பிரார்த்தனைகள், தர்ம சாஸ்திரங்கள், வியாக்கியானங்கள், பிரசங்கங்கள், உபதேசங்கள், கடிதங்கள், சன்மார்க்கக் கட்டளைகள், சன்மார்க்கப் பத்திரிகைகள், தனிப்பாடல்கள், சாற்றுக்கவிகள், அவர்களது திவ்விய சரித்திரம், அவர்கள் ஆராய்ந்து பதித்த பழைய நூல்கள், சன்மார்க்க சங்க நிகழ்ச்சிகள் முதலிய யாவும் இப்பதிப்பில் அடங்கும்.

2. சுவாமிகள் கை எழுத்திலுள்ள திருப்பாடல்கள், கடிதங்கள், வசனங்கள் முதலியவற்றின் போட்டோப் பிரதிகளும் அவர்கள் திரு உருவமும் ஞான சபை அமைப்பும் இதில் வெளிவரும்.

3. இதுவரையில் வெளிவராத பெருவாரியான பலப்பல அரும் பகுதிகள் இப்பதிப்பில்தான் முதன் முதலாக வெளிவருகின்றன. இவை இதற்கு முன்னுவது பின்னுவது வெளிவந்ததில்லை.

4. இப்பதிப்பில் வெளிவரும் பகுதிகளில் அடங்கியவை எல்லாம் சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திருஏடுகள், அவர்கள் பார்வையில் அச்சான முதற் பதிப்புக்கள், அவர்களை அடுத்திருந்த பேரன்பர்களின் கைஎழுத்துப் பிரதிகள் முதலியவற்றினின்றும் எடுத்த பரிசுத்த பாடங்களாகும்.

5. இப்பதிப்பின் ஒவ்வொரு பகுதியும் துருவித் துருவி எழுத்தெழுத்தாக நுட்பமாக ஆராயப்பட்டு, சிறு பிள்ளைகளும் தெரிந்துகொள்ளக்கூடிய ஓர் ஓர் பொருத்தமான முறையில் பாகுபாடு செய்து, ஏராளமான ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும், விரிந்த பாயிரங்களோடும், பல்வகைத்தாய அநுபந்தங்களோடும் வெளிப்படுத்தப்படுகிறது.

6. இப்பதிப்பு உயர்ந்த காகிதத்தில், நல்ல திருத்தமான வகையில், திறமான கட்டடத்தோடு, வேண்டிய போதெல்லாம் படிப்பதற்காக உடன் கொண்டு போவதற்கேற்ற அழகான அளவில், அடக்க விலையில், பகுதி பகுதிகளாக அச்சிடப்பட்டு வருகின்றது.

7. பொது நன்மையைத் தங்களது சொந்த நன்மையாகக் கொண்ட அநேக அன்பர்களின் முயற்சியால், இப்பதிப்பு தமிழ் நாடெங்கும் பரவி வருகிறது. வியாபாரிகளும், சென்னை, சிதம்பரம், தெலுங்கு நாடு முதலியவற்றின் யுனிவர்சிட்டி அதிகாரிகளும் இப்பதிப்பை விரும்பி இதற்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

8. தமிழ் மக்கள் யாவரும்—பெண்கள், பிள்ளைகள், வயதானவர்கள், வேலையாட்கள், அதிக படிப்பில்லாதவர்கள், பரதேசிகள், நோயாளிகள் முதலியவருங்கூட — காலமுள்ள போதே, சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய உபதேசங்களை நன்றாகத் தெரிந்து, அவர்கள் திருவடிச் சுவடுகளைப்

பின்பற்றி நடந்து, அவர்கள் அடைந்த ஆன்மாநுபவத்தை அடைந்துய்ய வேண்டும் என்பதே இப்பதிப்பின் நோக்கம்.

9. இவ் விருப்ப முயற்சி திருவருட் செயலால் தோன்றி நடைபெறுகிறது என்னும் ஒருவித உறுதியே இப்பதிப்பின் உயிர்நிலையாகும்.

10. இப்பதிப்பு ஆரம்பித்த 1931-ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பின்வரும் ஏழு பகுதிகள் வெளிவந்துள்ளன. இனி, மற்ற திருமுறைப் பகுதிகளும் பிறவும் வெளிவரும். ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே இயல்பான முடிவடைந்திருக்கிறதாதலால், எல்லாப் பகுதிகளையும் ஒருமிக்க வாங்கித்தீர வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் கிடையாது. அவரவர்க்குப் பிரியமான பகுதியை அவரவர் வாங்கிக் கொள்ளலாம். அல்லது ஒன்றன் பின் ஒன்றாகவும் வாங்கலாம்.

(1) திரு அருட்பா—கீர்த்தனைப் பகுதி
சுவாமிகளது சங்கீதப் பாடல்கள் முழுவதும், 2-ஆம் பதிப்பு ஸ்வரப்படுத்தியது. 8 இனங்கள், 182 பாடல் தொகுதிகள், 338 குறிப்புக்கள், 272 பக்கம்.

(2) திரு அருட்பா—வசனப் பகுதி
சுவாமிகளது வசன பாகங்கள் முழுவதும், 2-ஆம் பதிப்பு. 8 இனங்கள், 542 குறிப்புக்கள், 288 பக்கம்.

(3) திரு அருட்பா—வியாக்கியானப் பகுதி
சுவாமிகளது வியாக்கியானங்கள் முழுவதும், 2-ஆம் பதிப்பு. 7 இனங்கள், 550 குறிப்புக்கள், 416 பக்கம்.

(4) திரு அருட்பா—உபதேசப் பகுதி
சித்தமார்க்க மணி மந்திர ஔஷதங்கள், அநுஷ்டானங்கள், கோட்பாடுகள் முதலியவற்றைப் பற்றிய சுவாமிகளது உபதேசங்கள் முழுவதும், சின்மயதீபிகை என்னும் அரிய சாதன நூலும். 10 இனங்கள், 240 குறிப்புக்கள், 272 பக்கம்.

(5) திரு அருட்பா—திருமுகப் பகுதி
சுவாமிகளது கடிதங்கள், பத்திரிகைகள், கட்டளைகள் முழுவதும். 13 இனங்கள், 115 குறிப்புக்கள், 200 பக்கம்.

(6) திரு அருட்பா—தனிப்பாசுரப் பகுதி
பல மத ஸ்தோத்திரங்கள், குரு சிஷ்யர்களைக் குறித்த குடும்ப கோஷமும், குருட்டாட்டமும், சாற்றுக் கவிகள் முதலிய சுவாமிகளது பல்வகைய பாடல்கள் முழுவதும். 8 இனங்கள், 347 பாடல்கள், 111 குறிப்புக்கள், 136 பக்கம்.

(7) திரு அருட்பா—முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி
திருவடிப் புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா, மஹாதேவ மாலை, திருஅருண் முறையீடு, வடிவுடைமாணிக்க மாலை, இங்கிதமாலை கொண்டது. 8 இனங்கள், 3 பாடல் தொகுதிகளும் 705 பாடல்களும், 316 குறிப்புக்கள், பெரிய அளவு 280 பக்கம்.

முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதியின் முன்னுரை

எளியேனுடைய திருஅருட்பாப் பதிப்பு-மூலபாடங்களும் குறிப்புக் களும் கொண்டது—பன்னிரண்டு புத்தகங்களாக விரிந்ததாகும். இதில் ஏழாம் புத்தகமாகிய இந்த முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி என்னும் நூல் இன்று இங்ஙனம் வெளிவருவது நம் பெருமானார் இராமலிங்க அடிகளாரின் திருஉளக் குறிப்புப் போலும். முதல் மூன்று புத்தகங்களாகிய கீர்த்தனைப் பகுதி, வசனப் பகுதி, உரைப் பகுதி 1931-இல் வெளிவந்தன. நான்கு ஐந்து ஆறும் புத்தகங்களாகிய உபதேசப் பகுதி, திருமுகப் பகுதி, தனிப்பாசுரப் பகுதி வெளிவந்தும் இன்று 23 ஆண்டுகள் முடிவடைகின்றன. முதல் மூன்று பகுதிகளின் இரண்டாம் பதிப்புக்கள் வெளியிட்டதும் இற்றைக்கு 20 ஆண்டுகட்கு முன்பே ஆகும். எஞ்சிய ஆறு பகுதிகள் வெளி வராமல் இவ்வளவு நெடுங்காலம் கழிந்தது குறித்து, என் உளத்தில் குடிகொண்டிருந்த கழிபெருந் துயரத்திற்கும் ஏமாற்றத்திற்கும் ஓர் எல்லை இல்லை. அதன் காரணங்களில் சிலவற்றையாவது இங்கு விவரித்து, இதைக் கண்ணுறும் மெய்க்கல்வியாளரின் அகநெகிழ்ந்த அறிவாதரவைப் பெறும் விருப்பம் என் உள்ளத்தில் இயல்பாய் உண்டாயிருந்தும், அது இவ்வமயத் தில் அன்றிப் பிறிதோர் நல்ல சமயம் வெளியிடக்கருதி விட்டிருக்கிறது. இப் பகுதியினை அடுத்து ஐந்து திருமுறைப் பகுதிகள் வெளிவர வேண்டியிருக் கின்றன. அவை திருஒற்றியூர்ப் பகுதி, திருத்தணிகைப் பகுதி, பூர்வ ஞான சிதம்பரப் பகுதி, உத்தர ஞான சிதம்பரப் பகுதி, சித்தி வளாகப் பகுதி என்பனவாம். இன்னும் ஓர் ஆண்டிற்குள் அவை திருஅருட் செயலால் முற்றுப்பெறும் என்னும் முழு நம்பிக்கையோடு, எல்லாம் வல்ல இறைவன் திருஅருளை இரவு பகலாக, நனவிலேபோல் கனவிலும், இருந்தும் கிடந்தும் எழுந்தும் நடந்தும், மனமொழி மெய்களால் இறைஞ்சும் பணியே எளி யேனது ஆன்மப் பணியாக நிகழும். இமைப் பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க !

2. பொதுவாக அன்பராவார் யாவரும், சிறப்பாகப் பொருட் செல்வ மும் அருட் செல்வமும் ஒருங்கே அமையப்பெற்ற புண்ணிய சீலர்களில் இரண்டொருவர்தாமும் இந்தத் தெய்வத் திருப்பணியில் கலந்து கொண் டொழுகின், பெறற்கரிய பேறுன நம் அருமைத் தமிழ்த் தாய், தனது இனிய மதிமுகத்தில் புன்னகை பூத்து, தமிழ் மக்கள் அனைவர்க்கும், அவர்கள்வழி, பரந்த இவ் வுலகத்தவர்க்கெல்லாம் ஆசி கூறி, அவர்களை எல்லாம் சிவமணங் கமழும் திருநெறியில்—பொது நெறியில்—அன்பு நெறியில்—அருள்நெறியில்—அநுபவ நெறியில்—பேரின்ப நெறியில் நிற்க ஆளாக்குவிப்பாள் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

3. முதல் திருமுறை அல்லது பெருநூல் என்னும் இப்பகுதியில் எட்டு நூல்கள் அடங்கியிருக்கின்றன. அவற்றில் அவரவர் தகுதிக்கும் விருப்பத் திற்கும் தக, யாதானும் ஒன்றை ஆழ்ந்து நுணுகிப் பயின்று இடையீடில்லா

மல் சிந்திக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டால், அன்னார் நம் பெருமானாரின் அன்பு நெறியைக் கைக்கொண்டவர் ஆவர். திரு வளர்ந் தோங்கும் நம் நாட்டில் தொன்று தொட்டு வரும் பொதுநெறியே, நம் அடிகளாரது திருஅருட்பாவில், பொன்மலர்க்குச் சிவமணம் உண்டானதுபோல், பொலிந்து திகழ்கிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "யாதானும் நாடாமால் ஊராமால்", "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு", "இம்மைச் செய்தது மறுமைக்காம் எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்", "கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது", "ஒன்றாக நல்லது கொல்லாமை", "பேணிப் பிறவும் தமபோற் செயின்", "யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்", "கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய...பேகன்", "சிறு வீ முல்லைக்குப் பேருந்தேர் நல்கிய...பாரி", "சிறு சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே", "இல்லோர் ஒக்கல் தலைவன்", "வலைஞர் முன்றில் மீன் பிறழவும்", "என் தலைவன் ஊரின்கண் ஓடும்நீரில் இரைவேண்டி நிற்கும் குருகும் உலாவா நிற்கும் உயிர் மீன் உண்ணாது, இறந்துபட்டு நீரின்மேல் மிதந்துவரும் மீனையே அருந்தும்", "ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த...காரி" — இங்ஙனம் எண்ணிறந்த வகையில் உருக்கொண்டு விளங்குவதே நம் முன்னோர்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அநுபவித்து முடியா அருளில் சொல்லிக்காட்டிய பொதுநெறி.

4. இப்பகுதியில் அடங்கியிருக்கும் நூல்களின் பொருட் சிறப்பைக் கருத முயல்வோமாக :—

இதன் முதல் நூல் திரு அடிப் புகழ்ச்சி. இதன் தொடக்கத்தில், நம் பெருமானார் வேதாந்தம் அல்லது உபநிஷதங்களின் அடி நடு முடிகளாக விளங்கும் அரும்பெருங் கருத்துக்களைத் தெரிவிக்கும் வட மொழிச் செஞ்சொற்களைக் கொண்டு, இறைவன் திருவடியை வழுத்துகிறார்கள். இதனை அடுத்து, "விரிகலை" என்று ஆன்றோர் போற்றும் ஆகமாந்தத்தின் முடிவான உபதேசங்களைக் கொண்டு, எல்லையற்ற இன்பந்தரும் இறைவனது திருவடியைப் போற்றுகிறார்கள். இதன் பின்பு, பலவாய் விரிந்த புராண முடிபுகளின் உட்கிடையை விளக்கு முகத்தான், இறைவன் திருத்தாளினை இறைஞ்சுகிறார்கள். இறுதியில், நம் தமிழகத்தின் வரம்பற்ற செம்பொருட் செல்வங்களாகிய தேவார திருவாசகங்கள், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் முதலிய அருள் நூல்களின் உயிர்ப் பகுதிகளில் சிற்சில கூறித் தம்மை மறந்து அருளமுதம் உண்டு தேக்குகிறார்கள். இந்நூலின் தொடக்கம் முழுதும் தத்துவச் செம்பொருள் நிறைந்த வடமொழிச் சொற்கள் நிரம்பியிருத்தலால், அவற்றைச் சிறிதளவிலாவது தமிழ்ப் பெருமக்கள் விரும்பிப் பின்பற்றும் பொருட்டு, இந்நூலின் அநுபந்தத்தில் அவற்றின் விளக்கம் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒருவாறு கூறியிருக்கிறது. அதைக் கொண்டு, அறிஞர் மேலும் மேலும் ஆராய்ந்து, சிந்தித்துப் பயன்பெற்றுய்வார்களாக.

5. இதன் இரண்டாம் நூல் விண்ணப்பக் கலிவெண்பா. இதில் நம் அடிகளார் தென்தமிழ்ப் பெருமறையான தேவாரங்கள் அன்புகலிந்து ஏத்தும் இறைவனுடைய சிவமூர்த்தங்களை எல்லாம் தனித்தனியாகச் சிந்தித்து வணங்கியும், இறைவனைப் பொதுவில் வழிபட்டும், இறை நுகர்ச்சிக்குத் தடங்கல்களாக நிற்பனவற்றை எல்லாம் தொகுத்துத் தம்மேல் ஏற்றிக் கூறுமுகத்தான், அவற்றின் இயல்பான இருள்வன்மையைக் குறைத்தும், அடியராவார் குற்றங் குறைகளைப் பொருட்படுத்தாத இறைவன் பேரருளை இறைஞ்சியும், இறைவன் திருவடி இன்பம் தமக்கும் தந்தருளும்படி, தம் ஆன்மச் சார்பான கோரிக்கைகளை எல்லாம் என்புருக நெகிழ்ந்து விண்ணப்பித்தும், முறையிட்டுக் கொள்ளுகிறார்கள். இங்ஙனம் அடிகளார் சென்று சிறப்பெய்திய வழியில், வீடுபேற்றில் விருப்புற்று விளங்கும் ஒவ்வோர் உயிரும் சலிப்பறும், ஒருமையுற்றும், உளநெகிழ்ந்தும் இறைவன் திருத்தாளில் தம் விருப்பங்களை விண்ணப்பித்துக் கொண்டால், நம் பெருமானார் அடைந்த சிவாநுபவத்தைக் காலமுள்ளபோதே அவ்வவ்வுயிரும் அடைதல் திண்ணம்.

6. இதன் மூன்றும் நூல் நெஞ்சறிவுறுத்தல் என்பது. இந்நூலில் நம் பெருமானார் தம் நெஞ்சுக்கு இன்சொல் கூறி அறிவுறுத்தும் பொருட்டு, இறைவன் எப்படி எல்லாம் திகழ்கிறான் என்று சொல்லியும், அடியார்களின் சிறப்பியல்புகள் இன்னின்னவை என்று அறிவித்தும், இறைவனுடைய கல்யாண குணங்கள் இவைஎனக் காட்டியும், இறைபுரியும் அற்புத நிகழ்ச்சிகளை இயம்பியும், இறைவன் மறைந்து நின்று உலகங்களை எல்லாம் இயக்கும் தந்திரத்தைச் சுட்டி உணர்த்தியும், இறைவனை ஞானோபதேச மூர்த்தியாகவும், தாய் தந்தையர்களாகவும், சுற்றமாகவும், செல்வமாகவும், தோழனாகவும், அரசனாகவும், ஆண்டானாகவும் சித்திரித்தும், (இறைவடிவின் பேரழகையும் அதில் திளைப்பதன் பயனையும் தெரிவித்தும், நெஞ்சின் பொல்லாத தன்மையையும் இழிதகவையும் மொழிந்தும், பால் மயக்கத்தால் விளையும் துன்பங்களை விளக்கியும், பொருட்செல்வப் பற்றின் முறை தவற்றைப் பகர்ந்தும், கொலை களவு கள் காமம் கோபம் பொய் முதலிய மறங்களை முனிந்தும், இளமை நிலையாமையை எடுத்துரைத்தும், உடம்பினை அடுத்துவந்த உறவினர் தொடர்பு பயனற்றது என்று உரைத்தும், நெஞ்சினது–அடிப்படையில் உண்மையான–தன்மைக்கு இவை எல்லாம் அடுத்தன அல்லவென்று உணர்த்தியும், ஆன்மாநுபவம் இத்தன்மையது என்று அறைந்தும், இன்ன பலவகையிலும், அவ்வான்மாநுபவத்தை அடைவிக்கும் சன்மார்க்கத்தை உள்ளங்கை நெல்லி எனப் பொலிவுற விளக்கியிருத்தலை உணரலாம். இதில் கண்ட செம்பொருளின் பரப்பையும் ஆழத்தையும் நுட்பத்தையும் இவ்வளவு தெளிவாகவும், இவ்வளவு அறுதியாகவும், இவ்வளவு முழுமையாகவும், ஐயம்திரிபு மயக்கம்அறச் சொல்லும் நூல்களின் அருமையை ஆராய்ந்து உணரும் கல்விமான்களும் பிறரும் இந்நூலினைக் கொண்டு பயன்பெறுமல் போகார். இதை ஒருதரம் ஒருமையுடன் ஓதியவர் பிறகு கைவிடார்.

7. இதன் நான்காம் நூல் சிவநேச வெண்பா. இதில் சிவநேசம் அநுபவ மாவதற் கான பல திறப்பட்ட அறிவுரைகளும், உள்ளுணர்வுகளும் விவரித்திருக்கின்றன. நம் அகக் கரணங்களும் புற உறுப்புக்களும் இச் சிவ நேசத்தில் தோய்ந்திருத்தல் வேண்டும் என்று அறைந்தும், சிவநேசம் அற்ற உலகியலாளரின் இழிந்தனவும் தீயனவுமான நிலைகளை எடுத்துரைத்தும், சிவநேசம் கொண்ட அடியார்களின் செயற்கரிய செயலையும் பெருந்திறலையும் பேரின்பத்தையும் மொழிந்தும், இறைவனுடைய தயாவடிவத்தின் எளிமையைப் போற்றியும், தொண்டர்கள் தொடர்புடைய உயிரற்ற பொருள்கள்கூடத் தூய மேம்பாடுடையன என்று விளக்கியும், வழி அடியார்களுக்குப் பிணி மூப்புச் சாக்காடு இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியும், இறைவனுடைய தொண்டர்க்குத் தொண்டராம் திருவிளையாடல்களில் சிலவற்றை இயம்பியும், இறைவன் தம் உள்ளத்தில் கோயில் கொண்டிருக்கும் ஆற்றினை வியந்துரைத்தும், எப்பொருட்கும் எல்லார்க்கும் உள்ளும் புறமும் உறையும் இறைவன் பேரருள் வடிவினன் என்பதைப் பகர்ந்தும், கொலை புலையையும் சிறு தெய்வ வழிபாட்டினையும் வெறுத்துரைத்தும், அடியார் கூட்டத்தில் வதியும் பேற்றினையும் பெரும்பயனையும் விவரித்தும் இருக்கிறார்கள். இந்த எளிய தெள்ளிய நூலை ஒருமுகமாக ஊன்றிப் பயின்று உள்ளன்போடு தம்முடையதாக்கும் அன்பர்களுக்குச் சிவநேசம் அடுத்தாற் போல் கைகூடும் என்பது ஒருதலை. இது ஒரு பெரியார் வாழ்க்கையில் கண்ட உண்மை.

8. இதில் ஐந்தாம் நூலாகத் திகழ்வது மஹா தேவ மாலை. இதன் செம்பொருட் சிறப்பை முற்றும் மொழிந்தாயிற்று என்று எண்ணி அமைதல் எவர்க்கும் இயலாது. இறைவனுடைய பேரருள் வடிவத்தை ஒளியுறத் தீட்டியும், இறைவனைக் குறிக்கும் சொலற்கரிய பேருண்மைகளைத் தாம் கண்ட காட்சிகளில் எல்லாம் விவரித்துரைத்தும், இறைவனுடைய அளப்பருந்தன்மை எவ்வாற்றானும் உரைத்தறிவிக்க முடியாத தொன்று என்று வியந்தும், மெய்யடியார்களது பேரின்பாநுபவத்தைச் சுட்டிச் சொல்லிக் கருணையாளனான இறைவன், தமக்கும் அந்த ஆநந்தாநுபவத்தை உதவ வேண்டும் என்று மன்றாடியும் நம் அடிகளார் முறையிட்டிருக்கிறார்கள். இந்தப் பெருநூல் பகுதியில் மஹாதேவ மாலை நடுநாயகமாகப் பிறங்குகிறது. இதில் ஈடுபட்டு நெஞ்சம் கரைந்துருகிச் சிறுமையுற்ற தன்-தன்மையை மறக்காத தமிழ்மகன் இருத்தல் அரிது. இந்நூலைக் குறித்துப் பலபல சொல்வதையும் அவற்றைப் படிப்பதையும்விட, இதனை ஒருமை மனத்துடன் ஓதி, உள்ளந்தாள் நின்று உச்சிவரையும் நெஞ்சாய் உருகி, இறைவன் திருவருளினுக்கு உரியவர் ஆதலே ஒருவர் செய்யக்கடவது. இந்நூலின் அடிக்குறிப்புக்கள் இதனை வலியுறுத்தும்.

9. ஆறும் நூல் திருஅருண் முறையீடாகும். இதில் நம் பெருமானார் அழுது அடி யடைந்த அடியார் ஒப்ப, உடம்பெல்லாம் கண்ணாய் ஊற்றெடுத்தோட, இறைவன் திருவடி இன்பம் வேண்டிப் பதறிப் பதறி விம்மி முறை

யிட்டுக் கொள்வது எவ்வெவர் மனத்தையும் இளக்கி நல்வழிப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அருட்பாவின் என்புருக்கும் எளிமையை இந்நூலில் இயல்பாகக் கண்கூடாகக் காணலாம். 221, 222-ஆம் அடிக்குறிப்புக்களில் இந்நூலின் இத்தன்மை ஒருவாறு உரைத்திருக்கிறது. ஆங்குக் காண்க.

10. இதன் ஏழாம் நூல் வடிவுடை மாணிக்க மாலை. இந்நூல் அன்புருவமும் இன்புருவமும் ஒருங்கே அமையப் பெற்றது. நம் தாய்மார்கள் எல்லாரும், எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும், ஓதி உணர்ந்து, அநுபவிக்க உரியது. இறைவனைத் தாயாக—தேவியாக—வழிபடும் நோன்பினர் இந்நூல் கொண்டு, தாயன்பில் தோய்ந்து, நாளும் வழிபடும் வழக்கத்தைக் கைக்கொண்டால், அவர்தம் நல் விருப்பங்கள் எளிதில் வந்தெய்தும். இந்நூலின் தனிச் சிறப்பினை 276, 277-ஆம் அடிக் குறிப்புக்களில் ஒருவாறு உரைக்க முயன்றிருத்தல் காண்க.

11. இதன் எட்டாம் நூலாக விளங்குவது இங்கிதமாலை என்பது. இறைவனும் ஆன்மாவும் தலைவனும் தலைவியும் ஆகப் பேரன்பில் பேசிப் பெருங்களிப்பில் விளையாடுதலைக் காட்டுவதே இந்நூலின் பொருள். தமிழ் மக்களின் தலை சிறந்த செம்பொருள் துணிபுடையது. முற்றிலும் அக அநுபவம் வாய்ந்தது. நேர்மொழிகளில் சொல்ல முடியாதது. மறைமுகமான சொற்களிலும் சொற் பொருள்களிலும் திளைப்பது. 311-ஆம் அடிக்குறிப்பில் இது குறித்து ஓரளவு சொல்லியிருத்தல் காண்க. இதைத் தனி நூலாகச் சொற்பொருள் விளக்கத்தோடு அச்சிட்டு, அது வேண்டி நிற்பார்க்கு உதவ வேண்டும் என்னும் எண்ணம் உடையேன். திருஅருள் துணை செய்யுமாக !

12. மேற்சொன்ன அரும்பொருள் துறைகளை அறிவிக்கும் இந் நூற்களின் செய்யுள் இயல்பையும் ஒருவாறு காண முயலலாம். பொருட்சிறப்பளவிற்குச் சொற்சிறப்பும் அருட்பாவில் பொலிந்து திகழ்கிறது என்பதை நுண்ணறிவாளர் ஆராய்ந்தறிதல் பொருந்தும் :—

திருவடிப்புகழ்ச்சி 128 அடிகளால் இயன்ற ஒரு விருத்தம். அதன் முதல் முப்பத்திரண்டு அடிகள் வடமொழிச் சொற்கள் நிரம்பியன. நாவிற்கும் செவிக்கும் வடசொற்கள் பிறப்பிலும் ஓசையிலும் உள்ள பெருமிதத்தையும் நுட்பத்தையும் உணர்த்தி, அவற்றின்கண் பொதிந்த பொருளின் உயர்வையும் மேலான நுண்மையையும் உளத்திற்கு அறிவிப்பன. இடையில் உள்ள அறுபத்து நான்கு அடிகளில் சைவாகமங்கள் புராணங்களில் கண்ட வடசொற்கள் சிலச்சில தமிழ்ச் சொற்களோடு கலந்து பிணைந்திருக்கின்றன. அவை சித்தாந்த நூல்களில் வழங்கிப் பழக்கமான வடசொற்களாதலால், அந் நூல்களைப் பயின்றவர்க்கு எளிதில் பொருள் தருவன. இறுதியில் உள்ள முப்பத்திரண்டு அடிகளோ எனில், தெய்வத் தமிழ்ப் பெருமறை மேற்கொண்ட சிவமணங் கமழும் தென் தமிழ்ச் சொற்கள் நிரம்பி, தமிழில் தனி இனிமை பயப்பன. நாளும் கடவுள் வழிபாடியற்றும் நெறியுடையார் இந்த 128 அடிகள்கொண்டு, இறை வழிபாடு செய்யும் (அர்ச்சனை செய்யும்) ஆற்றினைக் கைக்கொண்டால்,

இக் காலத்திற்கும் இந் நாட்டிற்கும் ஏற்புடைத்தாய வடமொழி தென்மொழிச் சமரசம், வேதாந்த சித்தாந்த சமரசம் வளரும்; பொருள் விளக்கமும் கூடுதல் ஆகும். இவ் வடிகளின் நடையோ, சொல்லச் சொல்ல நாவிற்குச் சுவையும், கேட்கக் கேட்கச் செவிக்கு இன்பமும், சிந்திக்கச் சிந்திக்க மற்றக் கருவிகரணங்கட்குத் தூய்மையும் அமைதியும் ஒருமையும் தரும் பான்மைய தாக நிலவுகிறது. அன்புடையார் இடைவிடாது ஓதில், அருள் நலம் அடைவர் எனலாம்.

13. விண்ணப்பக் கலிவெண்பா 417 கண்ணிகளா லாயது. முதல் 279 கண்ணிகளில் இறைவனுடைய சிவமூர்த்தங்களின் உறைவிடங்களாகிய புனிதப் பெயர்கள் வருதலால், செய்யுள் நடை, அவற்றிற்கு இடங்கொடுத்து இயங்குமுகத்தான், சிறிது இறுகியதாக இருக்கிறது; 280 முதல் இறுதி வரையில் உள்ள கண்ணிகளில், இந்தக் கட்டாயம் இல்லாததால், நீரொழுக் காகப் பொலிந்து எளிய இனிய அடக்கம் வாய்ந்ததாக இருக்கின்றது. குறைகளை விண்ணப்பித்துஇறைவனை இறைஞ்ச இக் கலிவெண்பாவின் நடை இயல்பாக உதவுகிறது. படித்துப் பார்த்து இதன் உண்மையை உணர்க.

14. நெஞ்சறிவுறுத்தலும் கலிவெண்பாவால் இயன்றதே. 703 கண்ணி கள் கொண்டது. இதில், சொற்களும் கருத்துக்களும் உளக்காட்சிகளும் உணர்வுகளும் உவமைகளும் மேற்கோள்களும் ஒன்றோடொன்று இயல் பாகச் சேர்ந்து, வெடித்தளிந்த முக்கனியின் வடித்த ரசம்போலத் தெவிட்டா இன்பளிப்பனவாக இயங்குகின்றன. இது தெள்ளிய எளிய இன்தமிழ்ச் சொற்கள் கொண்டு கனிவுள்ள தளர்நடை பயில்வது. படிக்கப் படிக்கக் கற்பனைக் கதைகள்போல் ஆர்வம் உண்டாக்குவது. அறிந் துணர்ந் தடங்கப் பேரின்பப் பெரும் பயனை அள்ளிக் கொடுப்பது. வீடு பேற்றில் விருப்ப முடையார் பழம் புண்ணிய வசத்தால் கைக்கொள்ளக் கிடப்பது.

15. சிவநேச வெண்பாவில் 104 நேரிசை வெண்பாக்கள் உண்டு. தமிழ்ச் சொற்கள் எளியனவே. கறந்த பால் போன்ற மாசற்ற நடை. சிறிதும் ஐயம் திரிபு மயக்கம் இல்லாதது. படித்து உணர்ந்து சிந்திக்கச் சிவ நேசத்தை அடுத்தாற்போல் உண்டாக்க வல்லது. பயின்று பயன் பெறுதல் நம்மனோர் கடனாம்.

16. மஹாதேவ மாலை 101 ஆசிரிய விருத்தங்களால் புனைந்தது. அந் நூலைப் பயிலுந்தொறும், சொற்களும் அவற்றில் அடங்கிய கருத்துக்களும் கருத்துலகங்களும் தோன்றியவாறே மறைய, உளமானது உணர்ச்சி மய மாகி, ஆன்மாநுபவ ஒளியில் திளைப்பது அநுபவசித்தம். இங்குச் சிற்றறிவின் தர்க்கத்துக்கும் குதர்க்கத்துக்கும் இடமே இல்லை. இதைக் காட்டிலும் உயர்ந்த செய்யுள் நடையைத் தமிழெனும் அளப்பரும் பெருவாரிதியின்கண் காண்பதரிது. பயின்று யோகெய்திப் பெரும் பயன் பெற்றுய்க. இதை விடப் பெரிய பேறு ஒருவர்க்கு வாய்த்தல் அரிது.

17. திருஅருண் முறையீட்டில் 232 கட்டளைக் கலித்துறைப் பாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாவும் செவ்விய சொற்களால் ஆயது. எளிமை இனிமை தெளிவு உருக்கம் பொருந்திய செம்பாகமான நடை உடையது. இறைபால், "அமுமதுவே அன்றி மற்றென்செய்கேன் பொன்னம்பலத் தரைசே" என்று விம்மி முறையிடுவதற் கேற்ற செய்யுள் நடையை இக்கட்டளைக்கலித்துறைப் பாவே கொண்டிருக்கிறது என்றெண்ணும்படி அமைந் திருக்கிறது. கலித்துறைஇலக்கணம் பயில்பவர்க்கு வற்றாத ஊற்றாகும். அமுது அடி அடைவார் இதனை அநுபவிக்க ஒருப்படுக.

18. வடிவுடை மாணிக்க மாலையும் கட்டளைக் கலித்துறைப் பாக்களால் புனைந்ததுவே. 102 பாக்கள் கொண்டது. கறந்த பால் கன்னலொடு தேன் கலந்தாற் போன்றதொரு தெவிட்டாத இனிய நடை ஏற்றது. பாசிளங் கிளி கள் மிழற்றுகின்றனவோ, அணிமயில்கள் தோகை விரித்து ஆடுகின்றனவோ, மழஇளங் குயில்கள் கூவுகின்றனவோ, மான் கணம் மகிழ்ச்சியில் மலர்ந்து பார்க்கின்றனவோ, தாய் முகம் பார்த்துக் குழந்தைகள் புன்னகை புரிகின் றனவோ என்றென்று மருளும்படியான செய்யுள் இன்பம் நிறைந்தது. சொற்கள்தாம் இனியவோ, அவை ஏற்கும் கருத்துக்கள்தாம் இனியவோ, அக் கருத்துக்களைப் பின்பற்றி வரும் உளக் காட்சிகளும் உணர்வுகளுந்தாம் இனியவோ என்றறிய முடியாவண்ணம், அவை ஒன்றை ஒன்று இயல்பாய்ச் சேர்ந்து, ஒரு தெய்வத் திருஉருவமாக அமைந்திருக்கின்றன. இலக்கிய இலக்கண வரம்புக் குட்படாத பேரின்பப் புதுநறவளிப்பது இம்மாலை. நுகர்ந்து, உலகன்னையின் திருவடி நீழலில் வதிக.

19. இங்கித மாலை 166 விருத்தப் பாக்களால் புனைந்து விளங்குவது. இறைவனும் ஆன்மாவும் ஆகிய தலைவன் தலைவியர் காதல் மேலீட்டால் ஒரு வரோடொருவர் மகிழ்ந்து விளையாடித் தத்துவங்களெல்லாம் குழைந்து அநு பவிப்பது பொருளாதலால், சொற்களும் அவற்றின் நடையும் பெருங்களிப் பில் தோய்ந்து இடையீடுபட்டுத் தயங்கி இயங்குகின்றன. தமிழ்ப் பெரு மொழியின் ஒப்புயர்வற்ற அகப்பொருளை ஆய்ந்து பயன்கொள்ள விரும் பும் அடியார்களே இந்நூலைப் பயிலும் தகுதிவாய்ந்தவர்கள். இதன் தனிப் பதிப்பில் இது குறித்து மேலும் சொல்லப்படும். இங்கு இந்நூலின் 311-ஆம் அடிக்குறிப்பினைப் பார்க்க.

20. இந்த எட்டு நூல்களுள் திருஅடிப் புகழ்ச்சி, மஹாதேவ மாலை, திருஅருண் முறையீடு, வடிவுடை மாணிக்க மாலை, இங்கித மாலை இவ் வைந் திற்கும் நம் பெருமானார் இராமலிங்க அடிகளாரின் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய திருஏடே இங்கு மேற்கொண்ட மூலமாகும். நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா ஆகிய இவ்விரு நூல்களுக்கும் அடிகளாரின் அணுக்கத் தொண்டரான திருவாளர் தருமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிவைத்திருந்த சுவடிகளே மூலபாடமாகும். விண்ணப்பக் கலிவெண்பாவிற்கு ஏட்டுப் பிரதி எதுவும் கிடைக்கவில்லை. அடிகளாரின் தலைமாணுக்கரான உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் 1867-இல் முதல்

முதலாக அச்சிட்ட திருஅருட்பாப் பிரதியில் கண்ட பாடமே இங்கு எடுத்துக் கொண்ட மூலம். விவரங்களுக்கு அவ்வந் நூலின் அடிக்குறிப்பினைப் பார்க்க. முதலியார் அவர்கள் முதல் திருமுறைக்கு எழுதிய குறிப்புக்கள் எல்லாம் அவர்கள் திருப்பெயரோடு இப்பதிப்பில் காட்டப்பட்டிருக்கின்றன. இவற்றில் விடுபட்டவை அநுபந்தத்தில் உள. இவ் வெட்டு நூல்களை முதல் திருமுறையாகத் திரட்டியதும், இவற்றை முன்பின் வரிசைப்படுத்தியதும் முதலியாரவர்களே. இத் தமிழ்ப் பெருமகனுர்க்குத் தமிழுலகம் என்றும் கடப்பாடுடையதாகும். அவர்களும் அவர்களைச் சார்ந்த அடிகளாரது பேரன்பர்கள் மூவரும் எப்படி நம் பெருமானுரிடம் தவங்கிடந்து, அவர்கள்தம் அருள் நூல்களில் சிலவற்றையாவது அச்சிட்டு வெளியிட அவர்கள் சம்மதியைப் பெற்றுர்கள் என்பது திருமுகப் பகுதியினின்றும் வசனப்பகுதி முன்னுரையினின்றும் தெளிவாகும். அவற்றைக் காண்க. இந்நூலின் 229, 230-ஆம் பக்கங்களும் பாயிரம் 4, 31-ஆம் பக்கங்களும் பார்க்க.

21. ஏழாவது புத்தகமாகிய இப்பெருநூல் பகுதி முழுதும் பரிசுத்த மான பாடமாகும். இப் பதிப்பினைப் பொறுமையுடன் கூர்ந்துநோக்கும் நுண்ணறிவினர்க்கும் பெருங் கல்வியாளர்க்கும், முன்போந்த அல்லது நடைமுறையில் உள்ள பிற பதிப்புக்களில் இருக்கும் முறை பிறழ்ச்சிகள் கூட்டல் குறைத்தல் முதலியன இப்பதிப்பில் களையப்பட்டு, இந்நூல் ஆதி முதல் அந்தம் வரையில் பரிசுத்த பாடமாகப் பொலிவது, தெள்ளிதில் தெரியும். இவற்றின் சிலசில விவரங்களை அவ்வந்நூலின் அடிக்குறிப்புக் களில் காணலாம்.

22. என் நோக்கமும் முயற்சியும் நம் அடிகளாருடைய அருள் நூல் களின் மூல பாடத்தைப் பற்றியனவே. பாடங்களை எல்லாம் அவர்களது தெய்வத் தன்மைவாய்ந்த கைஎழுத்து மூலங்களைப் பின்பற்றிச் சுத்த பாட மாக அச்சிற் பதிப்பித்துத் தமிழுலகத்திற்கு என்றென்றைக்கும் நிலைபெற்ற உரிமைச் செம்பொருட் செல்வமாக்கவேண்டும் என்பதே என் வாழ்நாளைய விருப்பப் பெரு முயற்சி. ஆங்காங்கே அவ்வவற்றின் பொருட் சிறப்பினையும் என் சிற்றறிவிற்கும் சிற்றநுபவத்திற்கும் எட்டியவரையில், அது வேண்டுவார் பொருட்டுக் குறித்தலும், நான் மேற்கொண்டிருக்கும் குறிக்கோளின்பாற் படும். கீர்த்தனைப் பகுதி, வசனப் பகுதி, வியாக்கியானப் பகுதி ஆகிய இவற்றின் இரண்டாம் பதிப்பின் மூலபாடங்களையும் குறிப்புக்களையும் விரிந்த முன்னுரைகளையும், இவற்றிற்கு முன்போந்த ஆறு பகுதிகளின் மூலபாடங் களையும் முன்னுரைகளையும் குறிப்புக்களையும் பார்த்துணர்க. இது இங்ஙன மாக, அருட்பாக்களுக்கு, என் பதிப்பில், தமிழ்ப் பெருமறையாகிய தேவா ரம் திருவாசகம் முதலிய அருள்நூல்களினின்றும்—நான் அவற்றைப் பேரன்போடும் சிவாநுபவச் சிந்தையோடும் பயின்றுணர்ந்த முறையில் — எடுத்துக் காட்டுக்கள் காட்டி அச்சிடுமாறு, என்னிடம் அடிக்கடி சொல்லி வற்புறுத்தி வந்தவர் என் ஆன்மநேயப் பெருந்தகையார் திருவாளர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களாவர். அப்படித் தொழிற்படுதல் அருட்பாவின் மூலபாட வெளிப்பாட்டில் காலந் தாழ்த்தநேரும் என்று

அஞ்சி, அதை உளம்கொண்டும் கொள்ளாமலும் இருந்தேன். ஆனால், இப் பகுதி அச்சாகும்போது, திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களது இவ் விருப்பத்தையே என்னிடம் விரும்பிச் சொன்னவர் என் அரும்பெரு நண்பர் திருவாளர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆவர். இங்ஙனம் இடித்துரைக்கப் பட்ட இந் நற்கருத்தினை மேற்கொண்டு, சிற்சில எடுத்துக்காட்டுக்களும் மேற் கோள்களும் இப்பகுதியிலுள்ள அருட்பாக்கள் பலப்பலவற்றிற்கு, ஆங் காங்கே அடிக் குறிப்புக்களில் பேரன்போடும் பெருங்களிப்போடும் காட்டி யிருக்கிறேன். அவற்றின் நற்பயன் கொள்வோர் கொள்க.

23. எளியேனது திருஅருட்பாப் பதிப்பின் சிறப்பியல்புகளை இம் முன்னுரையின்கண் தெளிவுபடுத்தல் வேண்டும் என்று என் உரிமை நண்பர் திருவாளர் கே. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் யோசனை கூறினார்கள். இம் முன்னுரை விரியும் என அஞ்சி, அவற்றைத் தனியாக இப் பாயிரத்துள் சேர்த்திருக்கிறேன். அங்கே காண்க.

24. இங்கு, நல்லார்க்கெல்லாம் வருத்தம்தரும் செய்தி ஒன்றைக் குறிக்க வேண்டுவது என் கடமையாக நேர்ந்திருக்கிறது. இம் முன்னுரை முதற்பத்தியில் கூறியபடி, என் அருட்பாப் பதிப்புக்கள் 1931-இல் தொடங்கி 1935-இல் ஆறு பகுதிகளாகவும் ஒன்பது புத்தகங்களாகவும் இருந்தன. அவை வெளிவர வெளிவர, அவற்றினின்றும், நம் பெருமானார் கையெழுத்து முதலிய பெறற்கரிய மூலங்களினின்று பல ஆண்டு உழைப்பினால் திருஅருட் செயலால் சேகரித்த — இதற்குமுன் வெளி வராத — பலப்பல பாடங்களையும், முன்னுரைகளையும், குறிப்புக்களையும், தலைப்புக்களையும், தொகுத்தல் வகுத்தல் முறைகளையும் எடுத்துக்கொண்டு, சிறியவும் பெரியவுமாக எவ்விதப் பொருளும் கொள்ளாத வகையில் அவற்றைத் திரிபுபடுத்தியும், அவை என் பதிப்பினின்று எடுத்தவை என்று குறிக்காமலும், சத்தியத்தை மட்டும் அன்றிச் சட்டவரம்பையும் மீறி அச்சிட்டு, ஏதும் அறியாப் பொது மக்களினின்றும் மாணாக்கர்களினின்றும் பொருள் திரட்டும் நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, சிற்சிலர் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். இங்ஙனம் ஆற்றும் நூற்களவிற்கும் பொய் நோட்டுக்கள் தயாரித்துப் பணம் பறிப்பதற்கும் வேற்றுமை காண்ப தரிது. இதன் சார்பாகஓர் எச்சரிக்கையை 1934, 1935-இல் முதல் மூன்று பகுதிகளின் இரண்டாம் பதிப்புக்களில் வெளியிட்டிருக்கிறேன். அந்த எச்ச ரிக்கையை இப் பாயிரத்திலும் பார்க்கலாம். இங்ஙனம் நூற்பொருளைக் களவு செய்து, விற்றுப் பணமாக்குவது என் அருட்பாப் பதிப்பினை மட்டும் பொறுத்து நிற்கவில்லை. 1926-இல் வெளிவந்த "பருந்தும் நிழலும்" என்ற என் நூலிலிருந்து ஒரு பகுதியை எடுத்து அச்சிட்டுத் தாம் இயற்றிய நூல் என்று விளம்பரம் செய்தவரும் இருக்கிறார். யோகமீமாம்சை என்னும் ஒப்புயர்வற்ற யோகநூலின் பொருளைப் பலர் களவாடித் திரிபுபடுத்தி விற்ப தாக, அதன் இணையற்ற பேராசிரியர் ஸ்ரீமத். குவலயானந்த சுவாமிகள் மனங்கசந்து முறையிட்டு, அதன் மேற்பகுதிகளை வெளியிடாது நிறுத்தியே விட்டார்கள்; நூற்கள்வரால் நேரும் கேட்டிற்கு ஓர் எல்லை இல்லை போலும்!

25. இன்னும் எவ்வளவெவ்வளவு இங்ஙனம் களவாடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து தமிழுலகத்திற்கு அறிவிக்க, என் நண்பர்கள் சிலர் சேர்ந்து தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில், தமிழ் நூல்கள் இவ்வண்ணம் தாயற்ற பச்சிளங் குழவிகள் போல் தவித்துப் பாதுகாப்பார் அற்று, உருமாற்றப்படுவது பெரிதும் வருந்தத்தக்க தொன்றென்று நன்மக்களும் நற்கல்வியாளரும் ஒத்துக்கொள்வார்கள். இப் பகல்கொள்ளை தலை எடுத்து, ஏதுமறியாப் பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பறிக்காதிருக்க, நாட்டில் நல்ல முறையில் மக்களின் கவனமும் அநுதாபமும் தொழிற்பட வேண்டும். இதற்காக ஒரு கல்விச் சங்கம் உண்டாகித் தொழிற்படுதல் நல்லது என்று தோன்றுகிறது. நூலாசிரியர், நூற்பதிப்பாசிரியர் வாழ் நாளிலேயே இக்களவு தாண்டவமாடினால், அன்னார் வாழ்நாட்களுக்குப் பிறகு அவர் நூல்கள் என்ன கதி அடையும் என்று சொல்லவே வேண்டுவதில்லை.

26. எளியேன் திரு அருட்பாப்பதிப்பின் சிறப்பியல்புகளைக் கருதி, இப்பதிப்பிற்குப் பொருளாதரவு செய்யும் நோக்கமுடைய அண்ணாமலைச் சர்வகலாசாலையார்க்கு என் நன்றி எக்காலத்தும் நிலை பெற்றிருக்கும். நம் பெருமானார் பிறந்து வளர்ந்து ஆண்டவனுக்கு அடிமைப்பட்டு அருள் நெறியில் திகழ்ந்த பரிசுத்தமான இடங்கள் சிதம்பரம் பக்கலும் சென்னைப் பக்கலும் ஆகும். ஆதலால், அவர்களுடைய அருள் நூலை ஆதரித்துத் தவறு நுழையாமலும், களவுபட்டுத் திரிபுபடாமலும், பொன்னேபோல் போற்றித் தமிழ் மக்களின் பின்சந்ததிகள் மட்டும் அன்றி, நம் இந்திய நாட்டின் வடதிசை மக்களும், மற்ற உலக மக்களும் நிரந்தரமான பயன் எய்துமாறு, அதன் சுத்த பாடங்களை எஞ்ஞான்றும் பாதுகாத்தலும், வேறு மொழிகளில் பெயர்த்து அவற்றை வெளியிடுதலும், அண்ணாமலை, சென்னை—இவ்விரு கலாசாலையார் பொறுப்பிலும், இந்தச் சென்னை அரசாங்கத்தார் பொறுப்பிலும் அன்றி, இந்திய அரசாங்கத்தார் பொறுப்பிலும் நடைபெறுதல் நன்முறையாகும். இம்மாதிரி கல்வித்துறை வளர்ச்சிக்காக, இந்திய சர்வகலாசாலைகளைச் சார்ந்து நூல் அறநிலயம் (Book Trust) ஒன்றும், இந்திய சர்க்கார் சார்பில் பெருநூல்கள் வெளியிடும் பேர் ஏற்பாடு ஒன்றும் இந்நாளில் உண்டாயிருப்பது இறைவன் திருஅருட் செயலே ஆகும். உலகியல் முறையில் உணர்ந்தால், இவை, நம் இந்திய நாட்டின் பேரமைச்சர், கருணையே வடிவமாக உடையவர், சமரசப் பொது நோக்கம் கொண்டவர், உலக மக்களின் நன்மைக்காக ஒவ்வொரு விநாடியும் உழைப்பவர், ஒப்புயர்வற்ற உலக அரசியல் ஞானி, உலகப் பெருமக்கள் அனைவரும் தம்தம் கண்ணேபோல் – உயிரேபோல் – பேரன்போடு பாராட்டப்பெறுபவர், நம் அருமை ஜவஹர்லால் நேருஜி அவர்கள் அருள்வழி நின்று நடத்தும் பேரரசின் சொலற்கரும் பெருஞ் சிறப்பின்பாற் பட்டுத் திகழ்வனவாகும். "நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்," என்று பண்டைக் காலத்தில் நம் முன்னோர்கள் கண்ட உண்மை இக்காலத்தும் எவ்வளவு வியக்கத்தக்க ஒளியோடு விளங்குகிறது!

27. இந் திருஅருட்பாப் பதிப்பின் சார்பாக முதன்மையான ஒரு விஷயம் விண்ணப்பிக்க வேண்டியிருக்கிறது. தொடக்கத்திலிருந்தே, திருஅருட்பாவின் இந்தச் சுத்தப் பதிப்பினை என்றென்றும் தமிழ்ப்பெரு மக்களுக்கும் மற்ற உலகப் பெருமக்களுக்கும் உதவுமாறு ஒரு நிலைபெற்ற அறநிலையம் (Thiru Arutpa Trust) ஏற்படுத்துவது என் பெருவிருப்ப முயற்சியாக இருந்துவருகிறது. இந்த விருப்ப முயற்சியை அண்ணாமலைச் சர்வகலாசாலையாரும் ஆதரித்து என்னை ஊக்கியிருக்கிறார்கள். இங்ஙனம் ஒரு சுத்தப் பதிப்பு எப்போதும் எவ்விடத்தும் யாவர்க்கும் எளிதில் கிடைப்ப தாக இருந்தால், மேலே 24, 25-ஆம் பத்திகளில் கண்டபடி, களையும் கசப்பும் முளைத்துப் பயிரை அழிப்பதற்கு இடம் கிடைப்பது அரிதாகும். களையும் கசப்பும் தோன்றினாலும், அவற்றைக் களை என்றும் கசப்பு என்றும் அறிஞர் அறிந்தொழுகுவர். விவிலிய நூல் (The Holy Bible), ஆக்ஸ்போர்டு கலாசாலையாரால் பல நூற்றாண்டுகட்குமுன் ஒழுங்கு செய்யப்பட்டு, இன்றும் நடைமுறையில் மூறை பிறழ்ச்சிகள் கூட்டல் குறைத்தல் திரிபுகள் இல்லாமல், வழங்கிவருகிறது. ஆங்கிலேயர்களிடமிருந்து இந்த நல்ல பாடத்தை நாம் கற்றுக்கொள்ளுதல் இன்றியமையாதது. கடந்த நூற்றாண்டில் தோன்றிய நம் இராமலிங்க அடிகளாரது அருட்பா ஒன்றுவது தொல்லையான பாட பேதங்களின் தொந்தரவில்லாமலும், மூவர் அடங்கன் முறையில் இடைச் செருகல்களான வெள்ளிப்பாடல்கள் போன்ற அருவருப்புக்கள் இல்லாம லும், களைகள் கசப்புக்கள் தோன்ற வழி இல்லாமலும் நிகழ்ந்தால், தமிழ்ப் பெரு மக்களுக்கு அஃது ஒரு பெருஞ் சிறப்பாகும் அன்றோ ? தமிழில் எந்தப் பெருநூல் எடுத்தாலும் பாடபேதம். அதுவோ இதுவோ என்று ஐயம். பத்துப்பேர் இது என்பர். இன்னொரு பத்துப்பேர் அது என்பர். மூன்றும் பத்துப்பேர் இதுவும் அன்று அதுவும் அன்று வேறொன்று என்பர். இவ் வகையில் அன்றோ கம்பநாடர் கதியும் திருவள்ளுவர் கதியும் தேவார திருவாசகங்கள் கதியும் ஆகி இருக்கின்றன ! தமிழ் மொழியில் எந்தச் சிறு நூல் பெருநூலுக்கு இக்கதி இல்லை ? அருட்பாவில் " சுத்த சன்மார்க்கச் சத் தியச் சிறு விண்ணப்பம் " என்னும் வசன நூலை, இங்ஙனம் வேண்டுமென்றே சிலர் இழிவான நோக்கத்தோடு, கூட்டியும் குறைத்தும் திரிபுபடுத்தியும் அச் சிட்டு வழங்கி வந்திருக்கிறார்கள். அது காணப்பொறுத நான் அவ்விண்ணப் பத்தின் மூலபாடத்தை — நம் பெருமானார் கையெழுத்தில் உள்ளதை — " போட்டோ " எடுத்து, " பிளாக்கு " செய்து, இப்பதிப்பின் இரண்டாம் புத் தகமான வசனப் பகுதியின் இரண்டாம் பதிப்பில் 1934-இல் அச்சிட்டிருக்கி றேன். இங்ஙனம், முறை பிறழ்ச்சிகள் சூதுவாதுகள் இழிவான தந்நலங்கள் ஏற்பட்டு, நம் அடிகளார் கருத்துக்கள் மாறுபட்டு வேற்றுருவம் அடைந்து, உண்மையும் அருள்நெறியும் மாசுற்று தமிழ்ப் பெரு மக்கள் ஏமாறுதிருக்க, இப்பத்தியில் மேலே சொன்ன நிரந்தர ஏற்பாட்டை இன்னே செய்வது இன்றியமையாதது என்று எளியேன் கருதுவது போல், என் அரும்பெரு நண்பர்கள் சிலரும் கருதி, அதை முடித்துவைக்கத் திருஅருட்செயலால் முன் வந்திருக்கிறார்கள். எல்லாம் வல்ல இறைவன் அதைக் கூட்டிவைத்தருள் வானாக !

28. இப் பெருநூல் பகுதியின் பதிப்புக்கு உறுதுணையாய என் ஆன்ம நேயப் பெருந்தகையினரது வண்மையை எடுத்தோதி மகிழ்வதுதான் எஞ்சி நிற்கிறது. "உங்கள் பதிப்பை மேற்கொண்டு நடத்துங்கள். நீங்கள் விரும்பும் வண்ணம் அது நன்முடிவடையும். இறைவன் துணைபுரிவார். எனக்குப் பரிபூர்ண நம்பிக்கை இருக்கிறது" என்றும், இன்ன பலவகையிலும் எனக்கு அறிவுறுத்தியவர் பெறற்கரும் என் அருமை நண்பர் நால்வராவர். அவர்கள் திருவாளர்கள் சு. அநவரத விநாயகம் பிள்ளை, எம். ஏ. அவர்களும், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களும், பேராசிரியர், மஹாவித்து வான், புலவரேறு, அ. வரத நஞ்சையப் பிள்ளை அவர்களும், பேராசிரியர், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல். அவர்களும் ஆவர். முதல் இருவரும் என் உளக்கண்ணில் ஒளிவிட்டு நிறைந்திருந்தாலும், புறக் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்துவிட்டார்கள். மறைந்தாலும், மேலுலகத்தினின்றும் அவர்களது பூரணஆசி இந்நூலுக்கு உண்டென்பது என் முழு நம்பிக்கை. பேராசிரியர் வரத நஞ்சையப் பிள்ளை அவர்களின் ஆதரவு இப்பதிப்பிற்கு எக்காலத்தும் நிலைபெற்று நிலவுவது. தமிழ்நாட்டு நீலவான்கண் நிலவெனத்தோன்றி விளங்கும் பல்கலைச் செல்வர், பன் மொழிப் புலவர், நம் மீனாட்சிசுந்தரனார் ஒல்லும் வகை எல்லாம் இப்பதிப்புக்கு உதவி செய்தார், செய்கிறார், இனியும் செய்வார். இந்த நூலின் அச்சுத்தாள் களையும் என் விருப்பத்திற்கிணங்கிப் பார்த்து வந்திருக்கிறார். இவரோடு இன்னும் மூவர் பெரு நண்பர்கள் இதன் அச்சுத்தாள்களைப் பார்த்துதவ இணங்கியது என் நல்வினைப் பயனே. நுண்ணறிவாற்றல் அமைந்தவரும், பெருங் கல்வியாளரும், எனக்கு எய்ப்பினில் வைப்பாக இருப்பவரும், சென்னை அரசாங்கத்தில் அசிஸ்டெண்டு செக்ரடெரியாக இருந்தவரும் ஆன திருவாளர் கே. சோமசுந்தரம் செட்டியார் பி.ஏ. அவர்களும், சென்னைச் சர்வ கலாசாலைத் தமிழ் ஆராய்ச்சி நிலையத்தில் இலக்கிய இலக்கணத் தலைமைத் தமிழ் விரிவுரையாளராகப் புகழ்பெற்றுத் திகழ்பவரும், வேதாந்தநூல் போதகாசிரியரும், மெய்யன்பரும், என்பால் கனிவுள்ளவரும் ஆன திரு வாளர் டாக்டர் எம்.ஏ. துரையரங்கசாமிப் பிள்ளை எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி. அவர்களும், தமிழ்க் களஞ்சியத்தில் மொழி பதிப்பாசிரியராக இருப்பவரும், மைசூர் சர்க்கார் கல்வி இலாக்காவில் உயர் பதவியிலிருந்த வரும், சைவ சித்தாந்த நூலாசிரியரும், பலகற்றும் மெய்யன்பையும் அடக்கத் தையும் ஆபரணமாகக் கொண்டவரும் ஆன திருவாளர் வித்துவான், ப. மு. சோமசுந்தரம் பிள்ளை, ஆனர்ஸ் எம்.ஏ., எல்.டி. அவர்களும் ஆவர். அநு பந்தத்தில் உள்ள திருவடிப் புகழ்ச்சியின் வடமொழி விளக்கம் குறித்து நான் முயன்று சமாதானம் அடையாமல் இருந்தபோது, ஆடை அவிழ்ந்தவன் கைபோல், கேட்டதும் கடிதில் மனமுவந்து உதவியவர் என் அரும்பெரு நண்பர் திருவாளர் டாக்டர் டி. எம். பி. மஹாதேவன், எம்.ஏ., பிஎச்.டி. அவர்கள் ஆவர். சென்னைச் சர்வகலாசாலையில் தத்துவநூல் பேராசிரிய ராகத் திகழ்பவர். தத்துவநூல் பேருலகத்தில் பெரும்புகழ் பெற்றும், அன்பை யும் அடக்கத்தையுமே அணிகலன்களாகக் கொண்டு சாந்தமாக வதிபவர்.

உலகப் பெரு சமய மதங்களை எல்லாம் சமரசமாக ஆராய்ந்து, பொதுநெறி காண்பதற்காக ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலைச் சார்பாக உண்டாயிருக்கும் உலக சங்கத்திலே நம் நாட்டுப் பிரதிநிதியாகவும் விளங்குபவர். இக்காலத்தில் இத்தமிழ்ப் பெருமக்கள் நான் எடுத்த பணியைத் தாமும் எடுத்ததுபோல் மனமுவந்து உதவியதற்குத் "தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை" என்று பேருவகையோடு நன்றிபாராட்டுவது தவிர்த்து, வேறு செயக்கடவ தறியேன். கருணை வடிவினனை இறைவன் அவர்களுக்கு எல்லாப் பெரு நலங்களையும் அளித்துக் காப்பானாக!

29. இன்னும் ஒரு வரி. நான் தன்னந்தனியனாக முயன்று, வெற்றி கண்டும் காணாதும் சலிப்புற்றும், தயங்கி நிற்பதைக் காணப்பொறாத தமக் கென வாழாப் பிறர்க்குரியாளர், என் பிற்காலத்தில் பெற்ற பெறற் கரிய பெரு நண்பர், திருவாளர் கே. கே. மேனன், பி. ஏ. அவர்கள், என் வாழ்க்கை இலட்சியமான இப் பேருலக நலத்தை, இப்பதிப்பினைத் தாம் அருகில் இருந்து ஒல்லும் வகையெல்லாம் உதவி செய்து, முடித்து வைப்ப தாகப் பேரன்போடு உரைத்து, இப்பகுதியை முன்னின்று ஓர் நன்னாளில் அச்சில் தொடங்கி வைத்தார். இங்ஙனம் அவர் மேற்கொண்ட விருப்ப முயற்சி வெற்றி பெறுமாக! சில நாட்களுக்குமுன், இவரது உறுதுணை நேயர், முருகப் பெருமான்பால் முதிர்ந்த பத்திமை பூண்டவர், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தன்ன வள்ளற்றன்மை வாய்ந்த பெருங்குணத்தினர், 'பார்க்கர்' அச்சுக்கூடத் தலைவர், திருவாளர் பி. ஜி. நடராஜ முதலியார் அவர் கள் வந்து என்னைப் பார்த்ததுதான் தாமதம். உடனே, இருபத்து நான்கு ஆண்டிற்கு முன் பிரதிகள் அற்றுப்போன உபதேசப் பகுதி, திருமுகப் பகுதி ஆகிய இவ்வரிய நூல்களின் இரண்டாம் பதிப்பின் பொருட் செலவைத் தாம் ஏற்றுக்கொள்வதாக வாக்களித்து, இப்பதிப்பின் பெரு நலம் பரவினர். என் அன்பும் நன்றியும், தமிழுலகத்தின் அன்பும் நன்றி யும் இவ்விரு பெருமக்களுக்கும் என்ஞான்றும் உரியன ஆம். எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்க்கும் எல்லாப் பெருநலங்களும் அளித்துக் காத்தருள்வானாக! இப்பகுதியை அச்சிடுபவர்கள் என் பழைய உரிமை நண்பர்கள் திருவாளர்கள் தி. கண்ணபிரான் முதலி யார் அவர்களும், தி. சபாபதி முதலியார் அவர்களும் ஆவர். வெறும் தொழில் முறையிலன்றி, முழு அன்போடும் ஆர்வத்தோடும் நம் அடிகளா ரிடம் பத்திமையோடும், இதன் பதிப்பினை அவர்கள் நடத்தி வருவதற்கு நான் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம் பெருமானார் திருஅருள் அவர்களுக்கு எப்போதும் துணைநிற்குமாக!

30. உலகத்தின் எப்பாங்கரும், இறைவன் திருஅருளால்,

" கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக;
அருள் நயந்த சன்மார்க்கர் ஆள்க;—தெருள் நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக; நன்று நினைத் (து)
எல்லோரும் வாழ்க இசைந்து."

"அருட்பா வளாகம்", தியாகராஜபுரம்,
மயிலாப்பூர். 4 - 1 - 1956.

ஆ. பாலகிருஷ்ணன்.

முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதியின்
மூலபாடங்களைச் சார்ந்த
குறிப்பு[316]

பக்கம்	பாடல் எண்	பாடம் அல்லது பிழை	பாடபேதம் அல்லது திருத்தம்
8	25	நண்ணும்*	நண்ணு
35	397	யார்காமம்*	யார்க்காமம்
40	35	யோகியர்	யோகியா
60	294, 295, 296	தீக்கண்டாய்	தீகண்டாய்
61	307	ஏழைமை	ஏழமை
69	401	மங்கதனை	மங்கதுனை
89	646	வோன்	வான்
92	680	ளைஞ்சும்	ளஞ்சும்
92	681	லைஞ்சும்	லஞ்சும்
102	44	வெம்பனை*	வம்பணை
111	96	சித்தமிரங்காத	சித்தந்திரும்பாத
134	76	யெண்ணி	யெண்ணிக்
138	86	யபின்	பின்
199	81	யபிடர்	யபிடா

316. இதில் கண்டவை திருவாளர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களது முதல் பதிப்பில் திருத்தங்கள் எனக் காட்டப்பட்டவற்றின்பாற் படும். ஆனால், இவற்றுள் உடுக் குறியிட்டவை அவர்களுடைய இரண்டாம் பதிப்பிலும் பாடங்களாகவே காணகின்றன. ஏட்டில் எழுத்துக்கள் தெளிவாகத் தெரியாத இடங்களில் இத்தகைய வேறுபாடுகள் உண்டாவது இயல்பு. எனினும், அவை வருந்தத்தக்கனவே. அவரவரும் அவ்வவற்றின் சொற்பொருள்களின் பொருத்தமும் சிறப்பும் ஆய்ந்து தேர்தல் கடனும்.

உ

திருச்சிற்றம்பலம்

வாயுறை வாழ்த்து

1.

பேராசிரியர், மஹாவித்துவான், புலவர்ஏறு,

அ. வரதநஞ்சையப் பிள்ளை அவர்கள் கூறும் ஆசி.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

வள்ளலார் தோற்றம்

அறிவால் உயர்ந்த பிறவிமக்கள் அடைதற் கேற்ற அறமுதலாய்
நிறையும் பேறு நான்கனுள்ளும் நிகரற்(று) உயர்வீ(டு) அடைந்தின்பம்
பெறுதற் பொருட்டே இவ்வுடம்பு பெற்றேம் என்னக் கருதாதார்
அறிவு விளங்க அறியாமை அகற்றக் காலம் வருங்காலே. (1)

தனைப்போல் இன்பம் அடைந்துயர்மே தக்க ஞான சித்தர்களை
அனுப்பி மீட்டற்(கு) உரியாரை அருளால் மீட்பன் இறைவனென
நுனித்த நூலோர் புகல்வர்அது நோக்கின் உண்மை எனவிளக்க
மனித்த உருவில் தோன்றினர்இம் மகிமேல் ஒருநூற் றாண்டுகள்முன். (2)

வடபால் இராம கிருட்டினப்பேர் வயங்கும் தவமெய்ஞ் ஞானியுடன்
அடிசேர் விவேகா நந்தர்எனும் அம்மா தவரும் அவ்வாறே
படிமேல் புகழ்சேர் தமிழ்நாடு படைத்த பெரும்புண் ணியத்தாலே
வடலூர் இராம லிங்கர்எனும் வள்ளற் பெருமான் அவதரித்தார். (3)

வள்ளலார் பெருமை

இளமைப் பருவத்(து) ஓதாதே எல்லாம் முன்பே கற்றதுபோல்
அளவற் றுயர்வே தாகமநூ லாதிக் கலைநுண் பொருள்தெளிந்தே
உளமுற் றினிய அமுதப்பேர் ஊற்றாய்ப் பெருகிப் பொங்கிடல்போல்
எளிதே அரிய நுண்பொருட்கள் இசைக்கும் தமிழ்ப்பா வகையின்அம்மா. (4)

பாலுந் தேனும் முக்கனியின் பயனும் சுவையும் செழுங்கரும்பும்
மேலும் விண்ணோர் பெறும்அமுதும் வேறும் இனிய பொருள்பலவும்
சாலக் கூடி னாலும்இது தனைப்போன்(று) இனியா இனியாதே
ஞாலத் துரைக்க உளதென்றே நன்காய்ந்(து) அறிஞர் திகைப்புறவே. (5)

எல்லாக் குலமும் ஓர்நிறையே எடையிட்(டு) உயர்வு தாழ்வில்லை
எல்லாச் சமயங் களும்உறுப்பாய் இயையும் சமயம் ஒன்றேகாண்
கொல்லா விரதம் ஒன்றுகொண்மின் குலாவிப் பரவும் சன்மார்க்கம்
அல்லால் வேறு வழியிலைநீர் அல்லல் படுவ(து) அழகன்றே. (6)

ஓடுங் கதிரோன் உடன்ஓடும் ஓகோ நுந்தம் வாழ்நாளும்
வாடும் இறுதி வரும்அந்தோ மக்காள் யாது செயவல்லீர்
நாடி நுமக்கின் னருள்சுரக்கும் நம்பன் உங்கள் உளந்தோறும்
ஆடிக் கலந்து நிற்பவும்நீர் அறியீர் மயங்கல் அறிவன்றே. (7)

அழியும் பொருட்கண் பேராசை அழியா இன்பத்(து) ஆசையற்றீர்
பழியென்(று) எண்ணீர் தீதுசெய்யப் பதைத்துத் துடித்து முந்துகின்றீர்
வழியல் வழியே நயக்கின்றீர் மக்காள் நும்மைக் காண்தோறும்
அழுகை தோன்றி அலமருவேன் அமலற் றொழுவான் வாரீரோ. (8)

என்னக் கருணை பெருகும்இன்ப இசையால் கூவி வழிகாட்டிப்
பன்னிப் பனுவல் மழைபொழிந்த பண்பின் அருட்பா வழங்கினரே
என்னைப் பாரின் இருப்புமனம் இளகிக் குழைந்து நெக்குருகிச்
சொன்ன வாறு கேட்பனென்று சொல்லு மாயில் சொல்வதென்னே. (9)

செஞ்சொல் தெளிவும் அரும்பொருளும் திகழும் மோனைச் சந்தமுதல்
நெஞ்சம் இனிக்கும் எதுகைநலம் நிலவும் அணிகள் பலசூழும
விஞ்சிப் பெருமாக் கடலேபோல் விரிந்து பரந்து விளங்கினவால்
எஞ்சும் விரிப்பின் அளவுபடா(து) இதயங் கடந்த பெருமையதே. (10)

ஓர்செய் யுளைநாத் தொடுமுன்னே உள்ளம் உருகத் தொடங்கிவிடும்
சீர்ஒன் றிரண்டு படிக்குமுன்னே சேட்டை மனமாக் குரங்கடங்கும்
நீர்வார் கண்ணோர் புறந்தடுக்கும் நிகழ்த்த நாவும் தழுதழுக்கும்
ஓர்வம் என்னில் சிவாநந்தத் துள்ளே மூழ்கும் அறிவம்மா. (11)

மூவர் வழங்கும் தேவார முற்றும் பொதிந்த சுவைபெருகும்
மேவும் மணிவா சகச்செந்தேன் வெள்ளக் கடலில் மிதப்பிக்கும்
யாவும் புலன்கள் தொழிற்படாஅ அறைவ தென்னே இம்மையிலே
தேவ தேவன் கழல்டைந்தால் அன்ன நனவும் செறிந்திடுமே. (12)

உரையால் முடியா உணர்வோர்தம் உள்ளத் துணர்வே கரியாமல்
அரியவீடு பெறுமாறீ(து) அகிலத் தார்க்கும் பொதுநெறியே
உரிய தமிழ ரெனப்பிறந்தேம் ஒப்பில் லாத நமதன்னை
இருமைப் பேறும் அளிக்கின்றாள் எனுமோர் தருக்கும் உளதன்றே. (13)

இப்பதிப்பின் சிறப்பு

இன்ன வகையால் உலகைஎலாம் இன்ப உருவாய்ச் சமைத்திடும்நூல்
முன்னம் அடிகள் திருக்கரத்தால் முனைந்தே எழுதும் ஏடுகளை
உன்னித் தேடிப் பலவிடத்தும் ஒருங்கே தொகுத்து முறைப்படுத்தி
மன்னும் எழுதா எழுத்திலிட்டு வழங்கும் வள்ளல் அறிவீரோ. (14)

பிறந்தார் பிறவிப் பயன்பெறுமா(று) இதுவே பிறிதொன் றில்லைஎனாச்
சிறந்தோர் போற்றும் திருப்பணியைச் செய்து முடிக்கும் திறன்எளிதோ
குறைந்தும் கூடிப் பிறழ்ந்துமிகக் கோது பட்டும் பேதமுற்றும்
மறைந்தும் இருந்த பாத்தேடி வழுக்கள் அகற்றித் தூய்மையுற. (15)

பாம்பின் கால்பாம் பால்அறியப் படுதல் போல அருட்பாவைத்
தாம்பற் பலநாள் நாத்தழும்பு சாரப் படித்தும் ஆராய்ந்தும்
மேம்பட்(டு)உயர்ந்த அநுபவத்தால் விளங்கும் பொருள்கள் விளக்கமுற
நாம்பெற் றுய்ய அருள்சுரந்த நன்றிக்(கு) உளதோ கைம்மாறே. (16)

சீலன் சைவ சித்தாந்தச் செந்நூற் கடலும் தமிழ்க்கடலும்
மேலும் மேனாட்(டு) ஆங்கிலமாம் விரிந்த கடலும் கடந்தசைவன்
கோல ஆறு முகக்குரிசில் கோதை சின்னம் மைக்குதித்த
பால கிருட்டி ணப்பேரான் பரவும் அன்பர் உளம்பேரான். (17)

வம்மின் தமிழ ராய்ப்பிறக்க வரம்பெற்(று) உயர்ந்த மாண்புடையீர்
தம்மின் இன்பக் களஞ்சியத்தைத் தரணி மாந்தர் கொள்ளைகொள்ள
மெய்ம்மைச் சிவப்பே ராநந்தம் வேண்டின் இங்கே யேபெறலாம்
நம்மை உய்வித் திடற்கிந்த நவைதீர் நூலே சாலுமம்மா. (18)

வாழ்க அருட்பாத் திருத்தமுற வழியே செய்வோர் பொருள்கொடுத்தோர்
வாழ்க வேதா கமசார வடிவாய் இன்பம் வழங்கமக்கள்
வாழ்க கருணை கூர்அரசர் வள்ளல் செல்வர் நல்லறிஞர்
வாழ்க வாழ்க எனஎல்லாம் வல்லான் அடியை வணங்குதுமே. (19)

திருச்சிற்றம்பலம்

திருவாளர் கே. சோமசுந்தரம் செட்டியார், பி.ஏ., அவர்கள் கூறும் ஆசி.

உலகிற்கொரு கண்ணென ஒளிரும் செங்கதிரவனது பேரொளிக் கதிர்த்திரளை உலகிற்கு இன்னொரு கண்ணாகிய திங்களஞ் செல்வன் தன்வயத்தே வாங்கித் தண்ணிய கதிர்த் தொகுதியாக்கி உலகிலுள்ள அனைத்துயிர்களையும் மகிழ்வித்தும் பயிர்பச்சைகளைத் தழைவித்தும் எங்கும் இன்பமயமாக்கும் பான்மைபோல, எல்லாம் வல்ல இறைவனது பெருவாரியான வெள்ளப் பெருக்கினை நந்தம் இராமலிங்க அடிகளார் தமது அகமாகிய விரிந்த ஆழ்ந்த தேக்கத்தினிடை வாங்கித் தமது பாமாலைகளாகிய கால்கள் வழியாய் நமக்கு அன்புற வூட்டி இன்பக் கடலிலே நாம் திளைக்குமாறு அருளுகின்றார்கள். அவர்தம் அருளே அருள். அவர்தம் பாடலே பாடல்.

கடவுட்பாவாகிய அவரது திருவருட்பா ஒரு தண்ணறும் சோலைபோல் உளது. எங்கும் இனிமை, எங்கும் அழகு, எங்கும் ஒளி, எங்கும் அருள், எங்கும் இறை, எங்கும் அவன் திரு நடனம், எங்கும் இனிய கீதம், எங்கும் முழவொலி. உள்ளம் குளிருகின்றது; பரவசமாகிப் பேரானந்தம் அடைகின்றது.

இன்ன பெற்றித்தாகி, அல்லலுற்ற உலக வாழ்விடையே, அமைதிக்கோர் அரும்பெரும் வைப்பாக இருக்கின்றது அடிகளாரது திருவருட்பா. அதனுள் 'அருட்பெருஞ் சோதி, தனிப்பெருங்கருணை' என்று எங்கணும் பரநெறி முரசு முழங்குகின்றது. அதான்றியும், அருட்பா, ஜீவகாருண்ய மென்னும் புண்ணிய நெறியும், சமரச சன்மார்க்க மென்னும் பொதுநெறியும், கொலைபுலை தவிர்த்தலென்னும் அருள் நெறியும் கொண்டதோர் கருவூலமாகவும் கிடக்கின்றது.

இத்தகைய அரும்பெரும் அருளார்ந்த ஞானநூலாகிய திருவருட் பாவினை இளமை தொட்டே நுழைந்து நுழைந்து பயின்றவர் ஆவார் இந்நூலின் பதிப்பாசிரியராகிய ஆ. பாலகிருஷ்ண பிள்ளையவர்கள். அவ்வுழுவலன்புடைப் பெருந்தகையின் மிகமிக நுட்பம் வாய்ந்த அறிவு செறிந்த பேச்சுக்கள் என்னை வியக்கச் செய்த

காலங்கள் பல. தேவார திருவாசகங்களிலும் நுணுகிப் பயின்று ஆய்ந்தவர். அவர்கள் கல்லூரியில் தத்துவக் கலையைத் தமது பாடமாக ஓதியவர். அதனில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்; தங்கப் பதக்கம் ஒன்று பரிசளிக்கவும் பெற்றவர். எனவே, இயல்பான தமது பண்பாலும் மதிநுட்பத்தாலும் ஏற்புடைக் கல்வி கேள்விகளாலும் இந்நூலைப் பதிப்பிக்க எவ்வாற்றானும் தகுதியுடையவர் என்பது சொல்லாமலேயே போதரும். இதான்றியும், அவர் இராமலிங்க அடிகளாருடைய கையேடுகள் கையேட்டுப் பிரதிகள் கிடைக்கப் பெற்றவர். காலந் தொட்டுத் திருவருட்பாவினிடைப் பழகியவர். ஆகவே, அவர்தம் பதிப்பு தனிப் பதிப்பு, சுத்தப் பதிப்பு. பிள்ளையவர்கள் திருவருட்பாவைச் சுத்தப் பதிப்பாகப் பதிப்பதே தமது வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டவர்கள். பல்லோரும் திருவருட்பாவினை உண்மை முறையில் ஓதிப் பயன்பெறவேண்டும் என்னும் பெருநோக்கத்துடன் இப்பதிப்பினைத் தந்திருக்கிறார்கள்.

எனவே, இவர்தம் சுத்தப் பதிப்பு வழிவரும் திருவருட்பாவினைத் தமிழ் மக்களெல்லோரும் ஓதிப் பல நலன்களுமுற இறைவன் இன்னருள் பாலிப்பாராக.

வாழ்க திருவருட்பா !
வாழ்க பாலகிருட்டினர் !
வாழ்க அவர்தம் பதிப்பு !
வாழ்க சமரச கருணையே !

புரசவாக்கம்,
சென்னை-7.
9-1-1956.

K. Somasundaram,
Retd. Asst. Secretary to Govt. of Madras.

INTRODUCTION

By

Sri T. P. Meenakshisundaram Pillai, M.A., B.L., M.O.L.,

Professor of Tamil, Presidency College, Madras.

Here is an edition of the Collected Works of Saint Ramalinga. He is the last of the saints of Tamil land delivering the message of the fundamental unity of all life and love, inspiring a prayer of service in the spiritual democracy of this universe which thereby becomes a happy family of God. His is a casteless, classless, creedless society knowing, in short, no barriers whatsoever. It is, in his poems, not a dream but a realisation. The One World Idea becomes his universal poetry.

This poetry is as old as Tamil but he belongs to our modern age. He sings therefore in modern idiom which we all speak and understand, revealing to us at the same time the spiritual depth and the divine sweetness of this work-a-day language of ours. He is in a sense the Poet of the Future yet to dawn, the saint of the One World yet in the making. His contemporary, saint Ramakrishna Paramahamsa is known to the whole world. Ramalinga had no Vivekananda, for the time was not as yet ripe.

Ramalinga is a poet and the Poet is for all times and climes. His poetry was not intended for publication: it was all sung in the seclusion of divine communion, a seclusion which however is an omnipresence. The Divine Light is switched on from a secret corner but the whole universe is lighted.

The Poet has justly become popular in Tamil land in whose language he had sung: witness the congregation at Vadalur every year on the Thai-p-poosam day! Many cheap editions of his poems flood the market. Commerce always corrupts. A cash nexus cannot give us his love nexus. The congregation threatens to become a crowd. Though he lived only in the nineteenth century, still fresh in the living memory of the elders of our own generation, it has become a herculean task to recover the correct readings as he himself wrote or as his disciples preserved. Mr. A. Balakrishna Pillai has made this his life-work. He has come none too soon. Providence has ordained him for this great literary and spiritual service and he has dedicated himself whole-heartedly to this sacred task with an undivided allegiance,

His introduction gives us all a glimpse of his literary quest in a wilderness of ignorance and hatred, of filthy lucre and foul play. The originals he had recovered are to be placed in a library and the printing of the future editions to be entrusted to a permanent Trust.

The preservation of the Text, uncontaminated, is indeed the major task but it is not the whole of it. It ought not to be a close preserve of anyone. The light cannot be hidden under a bushel. The universal message of the Poet should become available to all those who yearn for it. I had the good fortune—nay, the spiritual happiness—of reading through Mr. A. Balakrishna Pillai's translation of Ramalinga's poems into English. Our familiarity with Tamil makes us blind and deaf to the beauties of these poems which therefore come with all the joy and wonder of a revelation in a translation. The translation thus becomes a microscope and a telescope to bring within our vision the infinity and the infinitesimal. His life-long study of Ramalinga within the true perspective of the historical march of Tamil and Philosophy makes his translation much more precious than a commentary. May I therefore appeal to him to offer his choicest fruits to the hungry world? A study of these translations in an International Language may start a chain of translations into other languages ultimately bringing more and more students and devotees to drink at the original fountain of Tamil. Like the great Hanuman of our epic our editor has no confidence in the completion of his work. The public have therefore a duty. There are yet many more volumes to come and to come only when the present edition of the volume is sold. May my prophecy that the copies will be sold in a few months come true and may we all have the divine bliss of reading through all the poems of Ramalinga as edited and translated by my loving friend, Balakrishna!

Chintadripet,
Madras-2
9-1-1956.

T. P. Meenakshisundaram.

உ

திருச்சிற்றம்பலம்

ஆசாரிய ஸ்துதி

அடிகளார் முதல் மாணாக்கர்
உபயகலாநிதிப் பெரும்புலவர்
தொழுவூர் ஸ்ரீ வேலாயுத முதலியாரவர்களால்
திரு அருட்பா வரலாற்றில் சொல்லப்பட்டது.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாநிதமில்

நிராமயம் காரகம திலாதசஞ் சீவிதம்நல்
நிராசைகொண் டாருடைய நிகேதனம் சூதமுறல்

வராதஇன் பாரஎனை முனுளில்வந் தேஅருளி
மகாபலம் சேரஅருள் விராவுசெம் பாதநம !

இராமலிந் தார்மனதில் இராதசந் தோஷநம !
இராமலிங் காயநம ! இராமலிங் காயநம !

அடிகளார் மாணாக்கர்
பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்களால்
செய்யப்பட்டது.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனார் எங்கள்
சனிப்பிறப்பை ஒறுத்துவினைத் தனித்தொடக்கை அறுக்க

ஏய்மலர்ந்த கருணைதிரு மேனிகொண்ட காலத்(து)
எண்தோளோ இருதோளோ முக்கண்ணோ இருமை

ஆய்மலர்ந்த அருட்கண்ணோ நாமம்எழுத்(து) ஐந்தோ
அன்றிஅருள் இராமலிங்க அற்புதப்பொற் பெயரோ

வாய்மலர்ந்த(து) ஈரிரண்டு மறையோமூ விரண்டு
மாமுறையோ வகுத்துரையீர் மயக்கொழிமா தவரே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

நம் பெருமானுர் இராமலிங்க அடிகளார் தெய்வத் திருக்கரத்தால் ஏட்டில் எழுதிய திரு அருட்பாக்களின் வடிவம் உள்ளவாறு.



—மஹாதேவ மாலை.



—வடிவுடை மாணிக்க மாலை.



—இங்கித மாலை.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பா

௭. முதல் திருமுறை

அல்லது

பெருநூல் பகுதி

சிவகணபதி துணை

௧. திருவடிப் புகழ்ச்சி[1]

நேரிசை வெண்பா[2]

திருச்சிற்றம்பலம்

இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்
றென்றுவரு மோஅறியேன் எங்கோவே—துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்குஞ் சுகம்.

திருச்சிற்றம்பலம்

நாற்றிருபத்தெட்டு அடியான் மிகுத்துவந்த
கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்[3]

திருச்சிற்றம்பலம்

பரசிவஞ் சின்மயம் பூரணஞ் சிவபோக பாக்கியம் பரமநித்தியம்[4]
பரசுகந் தன்மயஞ் சச்சிதா னந்தமெய்ப் பரமவே காந்தநிலயம்
பரமஞா னம்பரம சத்துவம தத்துவம் பாமகை வல்யநிமலம்

---

1. இது ஸ்ரீ சுவாமிகளின் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏட்டு மூலத்தில் உள்ளவாறு இங்கு அச்சிட்டிருக்கிறது. இதன் ஒவ்வோர் ஏட்டிலும் ஸ்ரீ சுவாமிகள் “உ சிவாயநம” என்னும் மறைமொழியை முதற்கண்வைத்தே தொடங்கியிருக்கிறார்கள். திரு அருட்பா ௫-ஆவது திருமுகப் பகுதி 35-ஆம் பக்கம் பார்க்க.
2. ஸ்ரீ சுவாமிகளின் இக் கடவுட் செய்யுள் “திருவடிப் புகழ்ச்சி” என்னும் தலைப்பின்கீழ் அதனை அடுத்தே காப்பேட்டில் எழுதியிருக்கிறது.
3. இப் பாவகை மூலத்தில் இல்லை. இந் நூலை முதல்முதல் 1867-இல் அச்சிட்டபோது, ஸ்ரீ தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் இங்ஙனம் குறித்திருக்கிறார்கள்.
4. சீரும், ஸ்ரீ தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் பிரித்து அச்சிட்டிருக்குமாறே இங்குக் காட்டியிருக்கிறது. இதன்கண் உள்ள வடமொழிச் சொற்களையும் அவற்றின் பிரயோகங்களையும் ஒருவாறு தெளிவுபடுத்தியிருப்பதை அநுபந்தத்தில் காண்க.

பரமதத் துவநிரதி சயநிட்க ளம்பூத பௌதிகா தாரநிபுணம்
பவபந்த நிக்ரக விஞேதச களஞ்சிற் பரம்பரா னந்தசொருபம்
பரிசயா தீதஞ்சு யஞ்சதோ தயம்வரம் பரமார்த்த முக்தமௌனம்
படனவே தாந்தாந்த மாகமாந் தாந்தநிரு பாதிகம் பரமசாந்தம்
பரநாத தத்துவாந் தஞ்சகச தரிசனம் பகிரங்க மந்தரங்கம்
பரவியோ மம்பரம ஜோதிமயம் விபுலம் பரம்பர மனந்தமசலம்
பரமலோ காதிக்க நித்தியசாம் பிராச்சியம் பரபதம் பரமசூக்ஷமம்
பராபர மநாமய நிராதர மகோசரம் பரமதந் திரம்விசித்ரம்
பராமுத நிராகரம் விகாசனம் விகோடணம் பரசுகோ தயமக்ஷயம்
பரிபவ விமோசனம் குணரகிதம் விசுவம்ப தித்துவ பரோபரீணம்
பஞ்சகிர்த் தியசுத்த கர்த்தத்து வந்தற்ப ரஞ்சிதம் பரவிலாசம்
பகர்சுபா வம்புனித மதுலமது லிதமம்ப ராம்பர நிராலம்பனம்
பரவுசா க்ஷாத்கார நிரவய வங்கற்ப ஞதீத நிருவிகாரம்
பரதுரிய வநுபவங் குருதுரிய பதமம் பகம்பகா தீதவிமலம்
பரமகரு ணும்பரந் தற்பதங் கனசொற் பதாதீத மின்பவடிவம்
பரோக்ஷஞா ஞதீத மபரோக்ஷ ஞாஞனு பவவிலாசப் பிரகாசம்
பாவஞ தீதங்கு ணதீத முபசாந்த பதமகா மௌனரூபம்
பரமபோ தம்போத ரகிதசகி தஞ்சம்ப வாதீத மப்பிரமேயம்
பகரனந் தானந்த மமலமுசி தஞ்சிற்ப தஞ்சதா னந்தசாரம்
பரையாதி கிரணங்க சாங்கசௌ பாங்கவிம் பாகார நிருவிகற்பம்
பரசுகா ரம்பம்ப ரம்பிரம வித்தம்ப ரானந்த புரணபோகம்
பரிமிதா தீதம்ப ரோதயம் பரகிதம் பரபரீணம் பராந்தம்'
பரமாற்பு தம்பரம சேதனம் பசுபாச பாவனம் பரமமோக்ஷம்
பரமாணு குணநவா தீதஞ்சி தாகாச பாஸ்கரம் பரமபோகம்
பரிபாக வேதன வரோதயா னந்தபத பாலனம் பரமயோகம்
பரமசாத் தியவதீ தானந்த போக்கியம் பரிகதம் பரிவேத்தியம்
பரகேவ லாத்விதா னந்தாணு பவசத்த பாதாக்ர சுத்தபலிதம்
பரமசுத் தாத்விதா னந்தவனு பூதிகம் பரிபூத சிற்குணந்தம்
பரமசித் தாந்தநிக மாந்தசம ரசசுத்த பரமாணு பவவிலாசம் (வ)

தரமிகுஞ் சர்வசா திட்டான சத்தியஞ் சர்வவா னந்தபோகம்
சார்ந்தசர் வாதார சர்வமங் களசர்வ சத்திதர மென்றளவிலாச்
சகுணநிர்க் குணமுறு சலக்ஷண விலக்ஷணத் தன்மைபல வாகநாடித்
தம்மைநிகர் மறையெலா மின்னுமள் விடநின்ற சங்கர னநாதியாதி

சாமகீ தப்பிரியன் மணிகண்ட சீகண்ட சசிகண்ட சாமகண்ட
சயசய வெனுங்தொண்ட ரிதயமலர் மேவிய சடாமகுடன் மதனதகனன்
சந்திரசே கரனிடப வாகனன் கங்கா தரன்சூல பாணியிறைவன்
தனிமுத லுமாபதி புராந்தகன் பசுபதி சயம்புமா தேவனமலன்
தாண்டவன் றலைமாலை பூண்டவன் றெழுமன்பர் தங்களுக் கருளாண்டவன்
தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச் சைலமெனு மொருவில்லவன்
தக்ஷிணா மூர்த்தியருண் மூர்த்திபுண் ணியமூர்த்தி தருமட்ட மூர்த்தியானோன்
தலைமைபெறு கணநாய கன்குழக னழகன்மெய்ச் சாமிநங் தேவதேவன்
சம்புவே தண்டன் பிறப்பிலான் முடிவிலான் றுணுமுக் கண்களுடையான்
சதுரன் கடாசல வுரிப்போர்வை யான்செங் தழற்கரத் தேந்திநின்றோன்
சர்வகா ரணன்விறற் காலகா லன்சர்வ சம்பிரமன் சர்வேச்சுரன்
தகைகொள்பர மேச்சுரன் சிவபிரா னெம்பிரான் றம்பிரான் செம்பொற்பதம்
தகவுபெறு நிட்பேத நிட்கம்ப மாம்பரா சத்திவடி வாம்பொற்பதம்
தக்கநிட் காடின்ய சம்வேத நாங்கசிற் சத்திவடி வாம்பொற்பதம்
சாற்றரிய விச்சைஞா னங்கிரியை யென்னுமுச் சத்திவடி வாம்பொற்பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவாநந்த சத்திவடி வாம்பொற்பதம்
தருவிந்தை மோகினியை மானையசை விக்குமொரு சத்திவடி வாம்பொற்பதம்
தாழ்விலீ சானமுதன் மூர்த்திவரை யைஞ்சத்தி தஞ்சத்தி யாம்பொற்பதம்
சவிகற்ப நிருவிகற் பம்பெறு மனந்தமா சத்திசத் தாம்பொற்பதம்
தடநிருப வவிவர்த்த சாமர்த்திய திருவருட் சத்தியுரு வாம்பொற்பதம்
தவாதசாங் தப்பதங் துவாதசாங் தப்பதங் தருமிணை மலர்ப்பூம்பதம்
சகலர்விஞ் ஞானகலர் பிரளயா கலரிதய சாக்ஷியா கியபூம்பதம்
தணிவிலா வணுபக்ஷ சம்புப க்ஷங்களிற் சமரச முறும்பூம்பதம்
தருபரஞ் சூக்குமங் தூலமிவை நிலவிய தமக்குளுயி ராம்பூம்பதம்
சரவசர வபரிமித விவிதவான் மப்பகுதி தாங்குங் திருப்பூம்பதம்
தண்டபிண் டாண்டவகி லாண்டபிர மாண்டங் தடிக்கவரு ளும்பூம்பதம்
தத்வதாத் விகசகசி ருட்டிதிதி சங்கார சகலகர்த் துருபூம்பதம்
சகசமல விருளகல நின்மலசு யம்பரகா சங்குலவு நற்பூம்பதம் (௭)

மரபுறு மதாதீத வெளிநடுவி லானந்த மாநடன மிடுபூம்பதம்
மன்னும்வினை யொப்புமல பரிபாகம் வாய்க்கமா மாயையை மிதிக்கும்பதம்
மலிபிறவி மறலியி னழுந்துமுயிர் தமையருளின் மருவுற வெடுக்கும்பதம்
வளரூர்த்த வீரதாண் டவமுதற் பஞ்சக மகிழ்ந்திட வியற்றும்பதம்
வல்லமுய லகன்மீதி னூன்றிய திருப்பதம் வளந்தரத் தூக்கும்பதம்
வல்வினையெ லாந்தவிர்த் தழியாத சுத்தநிலை வாய்த்திட வழங்கும்பதம்
மறைதுதிக் கும்பத மறைச்சிலம் பொளிர்பத மறைப்பாது கைச்செம்பதம்

மறைமுடி மணிப்பத மறைக்குமெட் டாப்பத மறைப்பரி யுகைக்கும்பதம்
மறையவ னுளங்கொண்ட பதமமித கோடியா மறையவர் சிரஞ்சூழ்பதம்
மறையவன் சிரசிகா மணியெனும் பதமலர்கொண் மறையவன் வாழ்த்தும்பதம்
மறையவன் செயவுலக மாக்கின்ற வதிகார வாழ்வையீந் தருளும்பதம்
மறையவன் கனவினுங் காணாத பதமந்த மறையவன் பரவும்பதம்
மால்விடை யிவர்ந்திடு மலர்ப்பதந் தெய்வநெடு மாலருச் சிக்கும்பதம்
மால்பரவி நாடோறும் வணங்குபத மிக்கதிரு மால்விழியி லங்கும்பதம்
மால்தேட நின்றபத மோரனந் தங்கோடி மாற்றலை யலங்கற்பதம்
மான்முடிப் பதநெடிய மாலுளப் பதமந்த மாலுமறி வரிதாம்பதம்
மால்கொளவ தாரங்கள் பத்தினும் வழிபட்டு வாய்மைபெற நிற்கும்பதம்
மாலுலகு காக்கின்ற வண்மைபெற் றடிமையின் வதிந்திட வளிக்கும்பதம்
வரையுறு முருத்திரர்கள் புகழ்பதம் பலகோடி வயவுருத் திரர்சூழ்பதம்
வாய்ந்திடு முருத்திரற் கியல்கொண்முத் தொழில்செய்யும் வண்மைதந் தருளும்பதம்
வானவிந் திராதி யெண்டிசைக் காவலர்கண் மாதவத் திறனும்பதம்
மதியிரவி யாதிசுர ரசுரரந் தரர்வான வாசிகள் வழுத்தும்பதம்
மணியுரகர் கருடர்காந் தருவர்விஞ் சையர்சித்தர் மாமுனிவ ரேத்தும்பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள் மகித்துவர மேற்கும்பதம்
மன்னுகின் னரர்பூதர் வித்தியா தரர்போகர் மற்றையர்கள் பற்றும்பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கண் மனக்கோயில் வாழும்பதம்
மாதேவி யெங்கண்மலை மங்கையென் னம்மைமென் மலர்க்கையால் வருடும்பதம்
மறலியை யுதைத்தருள் கழற்பத மரக்கனை மலைக்கீ ழடர்க்கும்பதம்
வஞ்சமறு நெஞ்சினிடை யெஞ்சலற விஞ்சுதிறன் மஞ்சுற விளங்கும்பதம்
வந்தனைசெய் புந்தியவர் தந்துயர் தவிர்ந்திடவுண் மந்தணந விற்றும்பதம்
மாறிலொரு மாறனுள மீறின்மகிழ் வீறியிட மாறிநட மாடும்பதம்
மறக்கருணை யுந்தனி யறக்கருணை யுந்தந்து வாழ்விக்கு மொண்மைப்பதம் (௫)

இரவுறும் பகலடிய ரிருமருங் கினுமுறுவ ரெனவயங் கியசீர்ப்பதம்
எம்பந்த மறவெமது சம்பந்த வள்ளன்மொழி யியன்மண மணக்கும்பதம்
ஈவரச ரெம்முடைய நாவரசர் சொற்பதிக விசைபரி மளிக்கும்பதம்
ஏவலார் புகழெமது நாவலா ரூரர்புக லிசைதிருப் பாட்டுப்பதம்
ஏதலூர் தங்காத வாதவூ ரெங்கோவி னின்சொன்மணி யணியும்பதம்
எல்லூரு மணிமாட நல்லூரி னப்பர்முடி யிடைவைகி யருண்மென்பதம்
எடுமேலெ னத்தொண்டர் முடிமேன் மறுத்திடவு மிடைவலிந் தேறும்பதம்
எழில்பரவை யிசையவா ரூர்மறுகி னருள்கொண்டி ராமுழுது முலவும்பதம்
இன்தொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறு மிரக்கநடை கொள்ளும்பதம்
இளைப்புற லறிந்தன்பர் பொதிசோ றருந்தமு னிருந்துபி னடக்கும்பதம்

எறிவிறகு விறகவளர் கூடற் றெருத்தொறு மியங்கிய விரக்கப்பதம்
இறுவைகை யங்கரையின் மண்படப் பல்கா லெழுந்துவிளை யாடும்பதம்
எங்கேமெய் யன்பருள ரங்கே நலந்தர வெழுந்தருளும் வண்மைப்பதம்
எவ்வண்ணம் வேண்டுகினு மவ்வண்ண மன்றேயிரங்கியீந் தருளும்பதம்
என்போன்ற வர்க்குமிகு பொன்போன்ற கருணைதந் திதயத் திருக்கும்பதம்
என்னுயிரை யன்னபத மென்னுயிர்க் குயிரா யிலங்குசெம் பதுமப்பதம்
என்னறிவெ னும்பதமெ னறிவினுக் கறிவா யிருந்தசெங் கமலப்பதம்
என்னன்பெ னும்பதமெ னன்பிற்கு வித்தா யிசைந்தகோ கனகப்பதம்
என்தவ மெனும்பதமென் மெய்த்தவப் பயனா யியைந்தசெஞ் சலசப்பதம்
என்னிருகண் மணியான பதமென்கண் மணிகளுக் கினியநல் விருந்தாம்பதம்
என்செல்வ மாம்பதமென் மெய்ச்செல்வ வருவாயெ னுந்தாம ரைப்பொற்பதம்
என்பெரிய வாழ்வான பதமென்க ளிப்பா மிரும்பதமெ னிதியாம்பதம்
என்தந்தை தாயெனு மிணைப்பதமெ னுறவா மியற்பதமெ னட்பாம்பதம்
என்குருவெ னும்பதமெ னிட்டதெய் வப்பத மெனதுகுல தெய்வப்பதம்
என்பொறிக ளுக்கெலா நல்விடய மாம்பதமெ னெழுமையும் விடாப்பொற்பதம்
என்குறையெ லாந்தவிர்த் தாட்கொண்ட பதமெனக் கெய்ப்பில்வைப் பாகும்பதம்
எல்லார்க்கு நல்லபத மெல்லாஞ்செய் வல்லபத மிணையிலாத் துணையாம்பதம்
எழுமனமு டைந்துடைந் துருகிநெகிழ் பத்தர்கட் கின்னமுத மாகும்பதம்
எண்ணுறிற் பாலினறு நெய்யொடு சருக்கரை யிசைந்தென வினிக்கும்பதம்
ஏற்றமுக் கனிபாகு கன்னல்கற் கண்டுதே னென்னமது ரிக்கும்பதம்
எங்கள்பத மெங்கள்பத மென்றுசம யத்தேவ ரிசைவழக் கிடுநற்பதம்
ஈறிலாப் பதமெலாந் தருதிருப் பதமழிவி லின்புதவு கின்றபதமே.[5] (க)

திருச்சிற்றம்பலம்

க. திருவடிப் புகழ்ச்சி முற்றிற்று.[6]

---

5. இந்த அரிய நூலில் ஸ்ரீ சுவாமிகள் வடமொழிச் செல்வங்கள் ஆகிய வேதோபநிஷதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலிய வற்றிலும், செந்தமிழ்க்கண் உள்ள தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய தெய்வ நூல்களிலும் சிறந்து விளங்கு வனவற்றையும், நமது புண்ணிய பூமியில் நெடுங்காலந்தொட்டு வாழையடி வாழையாக அடியார்கள் வழிவழிவரும் கடவுட்காட்சிகளையும், பண்புகளை யும், அருள் நிகழ்ச்சிகளையும், பேரின்ப உணர்ச்சிகளையும், தம்முடைய ஆன்மாநுபவங்களையும் ஒருங்கே வான்முறையாகத் தெளிவுபடுத்தி யிருப் பதை ஒருமையுடன் கூர்ந்து கண்டு அநுபவித்துணர்க.

6. ஸ்ரீ சுவாமிகளுக்கு ஆட்பட்ட அன்பர் ஸ்ரீ தருமலிங்கம்பிள்ளை அவர்கள் பிரதியின் தலைப்பேட்டில், "எனது சற்குருவாகிய சிதம்பரம் இராமலிங்க தேசிகர் திருவாய்மலர்ந்தருளிய திருவடிப் புகழ்ச்சி. திருச்சிற்றம்பலம்" என்று குறித்திருக்கிறார்கள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

———o———

சிவகணபதி துணை

௨. விண்ணப்பக் கலிவெண்பா[7]

காப்பு

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

அவ்வவ் விடைவந் தகற்றி அருள்தரலால்
எவ்வெவ் விடையூறும் எய்தலிலம்-தெவ்வர்தமைக்
கன்றுமத மாமுகமுங் கண்மூன்றுங் கொண்டிருந்த
தொன்றதுநம் முள்ள முறைந்து.

கலிவெண்பா[8]

திருச்சிற்றம்பலம்

சொற்பெறுமெய்ஞ் ஞானச் சுயஞ்சோதி யாந்தில்லைச்[9]
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே - நற்சிவையாந் (௧)

தாயி னுலகனைத்துந் தாங்குந் திருப்புலியூர்க்
கோயி லமர்ந்தகுணக் குன்றமே - மாயமிகும் (௨)

வாட்களமுற் றாங்குவிழி மாதர்மய லற்றவர்சூழ்
வேட்களமுற் றோங்கும் விழுப்பொருளே - வாழ்க்கைமனை (௩)

---

7. இவ் விண்ணப்பக் கலிவெண்பாவிற்கு ஸ்ரீ சுவாமிகள் கையெழுத்து மூலமாவது, அவர்களை அடுத்திருந்த அன்பர்கள் எழுதிக்கொண்ட பிரதிகளாவது கிடைக்கவில்லை. இங்கு மேற்கொண்டிருக்கும் மூலம் ஸ்ரீசுவாமிகளின் தலைமாணாக்கர் ஸ்ரீ தொழுவூர் வேலாயுத முதலியாரவர்கள் முதன் முதல் 1867-இல் அச்சிட்டிருக்கும் நூலே ஆகும்.

8. இக் கலிவெண்பாவில் முதல் 279 கண்ணிகளும், ஸ்ரீ சுவாமிகள், தம்முடைய தனிப்பெரு ஞானசிரியர்கள் ஆன திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய இம் மூவரும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பதிகங்களையும், அவை பாடப்பெற்ற சிவஸ்தலங்களையும், அவற்றில் ஓதப்பெறும் சிவபெருமானையும் முன்னிட்டு ஓர்ந்து உணர்ந்து வழிபடுவன ஆகும். இவற்றை ஓதும் முகத்தான் அவ்வத் திருப்பதிக்குரிய தேவாரப் பதிகங்களும் இவற்றோடு இயல்பாய்க் கலந்து இன்பம் விளைவிக்கக் காணலாம்.

9. இது முதல் 64 கண்ணிகளும், ஸ்ரீ சுவாமிகள் சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் உள்ள சிவஸ்தலங்களை முன்னிட்டு வழிபட்டவை ஆகும்.

நல்வாயி லெங்கு நவமணிக்குன் றோங்குதிரு
நெல்வாயி னின்றொளிரு நீளொளியே - செல்வாய்த் (ச)

தெழிப்பாலை வேலைத் திரையொலிபோ லார்க்குங்
கழிப்பாலை யின்பக் களிப்பே - விழிப்பாலன் (ரு)

கல்லூர்ப் பெருமணத்தைத் தகட்டுரைக்கச் சோதிதரு
நல்லூர்ப் பெருமணம்வாழ் நன்னிலையே - சொல்லுங் (சூ)

தயேந்திர ருள்ளத் தடம்போ லிலங்கும்
மயேந்திரப் பள்ளியின்ப வாழ்வே—கயேந்திரனைக் (எ)

காயலுறு தன்றுவந்து காத்தோன் புகழ்முல்லை
வாயிலி னோங்கு மணிவிளக்கே - மேய (அ)

பலிக்காவூர் தோறும் பதஞ்சேப்பச் சென்று
கலிக்காமூர் மேவுங் கரும்பே - வலிக்காலில் (கூ)

பாய்[10]க்காடு கின்றவொரு பச்சை முகில்பரவுஞ்
சாய்க்காடு மேவுந் தடங்கடலே - வாய்க்கமையச் (க0)

சொல்லவ னீச்சரங்கு தோயவும்ப ராம்பெருமைப்
பல்லவ னீச்சரத்தெம் பாவனமே - நல்லவர்கள் (கக)

கண்காட்டு நெற்றிக் கடவுளே யென்றுதொழ
வெண்காட்டின் மேவுகின்ற மெய்ப்பொருளே - தண்காட்டிக் (கஉ)

கார்காட்டித் தையலர்தங் கண்காட்டிச் சோலைகள்சூழ்
சீர்காட்டுப் பள்ளிச் சிவக்கொழுந்தே - பார்காட்

டுருகாவூ சொல்லா மொளிநயக்க வோங்கும்
குருகாவூர் வெள்ளடையெங் கோவே - அருகாத (கச)

கார்[11]காழி னெஞ்சக் கவுணியர்க்குப் போதமருள்
சீர்காழி ஞானத் திரவியமே - ஓர்காழிப் (கரு)

பாலற்கா வன்று பசும்பொற்று ளங்கொடுத்த
கோலக்கா மேவுங் கொடையாளா - கோலக்கா (கசூ)

10. காலில் பாய் என்பது சேஷசயநம். இது ஸ்ரீ தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் குறிப்பு. இதுபோன்று பின்வரும் அவர்களுடைய குறிப்புக்கள் "தொ. வே." என்று காட்டியிருக்கின்றன.

11. காழ் - இல் - நெஞ்சம் என்று பிரித்துப் பொருள்கொள்க : தொ. வே.

உள்ளிருக்கும் புள்ளிருக்கு மோதும் புகழ்வாய்ந்த
புள்ளிருக்கும் வேளூர்ப் புரிசடையாய் - கள்ளிருக்கும் (கஎ)

காவின் மருவுங் கனமுந் திசைமணக்கும்
கோவின் மருவுகண்ணார் கோயிலாய் - மாவின் (கஅ)

இடைமுடியின் றீங்கனியென் றெல்லின் முசுத்தாவும்
கடைமுடியின் மேவுங் கருத்தா - கொடைமுடியா (ககூ)

நன்றியூ ரென்றிந்த ஞாலமெலாம் வாழ்த்துகின்ற
நின்றியூர் மேவு நிலைமையனே - ஒன்றிக் (உ0)

கருப்புன்கூ ருள்ளக் கயவர் நயவாத்
திருப்புன்கூர் மேவுஞ் சிவனே - உருப்பொலிந்தே (உக)

ஈடூரி லாதுயர்ந்த ஏதுவினா லோங்குதிரு
நீடூ ரிலங்கு நிழற்றருவே - பீடுகொண்டு (உஉ)

மன்னியூ ரெல்லாம் வணங்க வளங்கொண்ட
அன்னியூர் மேவு மதிபதியே - மன்னர்சுக (உங)

வாழ்விக் குடிகளடி மண்பூச லாலென்னும்
வேள்விக் குடியமர்ந்த வித்தகனே - சூழ்வுற்றோர் (உச)

விண்ணெதிர்கொண் டிந்திரன்போன் மேவிநெடு நாள்வாழப்
பண்ணெதிர்கொள் பாடிப் பரம்பொருளே - நண்ணும் (உரு)

வணஞ்சே ரிறைவன் மகிழ்ந்து வணங்கும்
மணஞ்சேரி நீங்கா மகிழ்வே - மணஞ்சேர்ந்து (உசு)

வாரட்ட கொங்கை மலையா ளொடுங்கொறுக்கை
வீரட்ட மேவும் வியனிறைவே - ஓரட்ட (உஎ)

திக்குங் கதிநாட்டிச் சீர்கொள் திருத்தொண்டருளம்
ஒக்குங் கருப்பறிய லூரரசே - மிக்கதிரு (உஅ)

மாவளருஞ் செந்தா மரைவளருஞ் செய்குரக்குக்
காவளரு மின்பக் கனசுகமே - தாவுமயல் (உகூ)

காழ்கொ ளிருமனத்துக் காரிருணீத் தோர்மருவும்
[12]வாழ்கொளி புத்தூர் மணிச்சுடரே - தாழ்வகற்ற (ங0)

12. வாளொளிப் புற்றூ ரென்பது வாழ்கொளி புத்தூரென மருவியது. இது தொ. வே. அவர்களுடைய மூன்றாம் பதிப்பில் கண்டது.

நண்ணிப் படிக்கரையர் நாடோறும் வாழ்த்துகின்ற
மண்ணிப் படிக்கரைவாழ் மங்கலமே - விண்ணினிடை (௩௧)
வாமாம் புலியூர் மலர்ச்சோலை சூழ்ந்திலங்கும்
ஓமாம் புலியூர்வாழ் உத்தமமே - நேமார்ந்த (௩௨)
வானாட்டு முள்ளோர் மருவுகின்றோர் போற்றுதிருக்
கானாட்டு முள்ளூர்க் கலைக்கடலே - மேனாட்டும் (௩௩)
தேரையூர்ச் செங்கதிர்போற் செம்மணிக ணின்றிலங்கும்
நாரையூர் மேவு நடுநிலையே - பாரில் (௩௪)
உடம்பூர் பவத்தை யொழித்தருளும் மேன்மைக்
கடம்பூர்வாழ் என்னிரண்டு கண்ணே - தடம்பொழிலில் (௩௫)
கொந்தணவுங் கார்க்குழலார் கோலமயிற் போலுலவும்
பந்தண நல்லூர்ப் பசுபதியே - கந்தமலர் (௩௬)
[13]அஞ்சனூர் செய்ததவத் தாலப் பெயர்கொண்ட
கஞ்சனூர் வாழுமென்றன் கண்மணியே - அஞ்சுகங்கள் (௩௭)
நாடிக்கா வுள்ளே நமச்சிவா யம்புகலும்
கோடிக்கா மேவுங் குளிர்மதியே - ஓடிக் (௩௮)
கருமங்க லக்குடியிற் காண்டுமென வோதும்
திருமங்க லக்குடியில் தேனே - தரும (௩௯)
மனந்தாள் மலரை மருவுவிப்போர் வாழும்
பனந்தாளிற் பாலுகந்த பாகே - தினந்தாளிற் (௪0)
சூழ்திருவாய்ப் பாடியங்கு சூழ்கினுமா மென்றுலகர்
வாழ்திருவாய்ப் பாடி இன்ப வாரிதியே - ஏழ்புவிக்குள் (௪௧)
வாய்ஞ்ஞலூ ரீதே மருவவென வானவர்சேர்
சேய்ஞ்ஞலூர் இன்பச் செழுங்கனியே - வாஞ்சையுறும் (௪௨)
சீவன் குடிபுறவிச் சீர்நகரோன் றேயெனுஞ்சீர்த்
தேவன் குடிமகிழ்ந்த தெள்ளமுதே - ஓவில் (௪௩)
மயலூர் மனம்போல் வயலிற் கயலூர்
வியலூர் சிவானந்த வெற்பே - அயலாம்பல் (௪௪)

---

13. ஹம்சன் என்பது அஞ்சன் எனத் திரிந்தது. இதற்கு அன்னத்தை வாகனமாகவுடைய பிரமன் எனப் பொருள் கொள்க : தொ. வே.

மட்டையூர் வண்டினங்கள் வாய்ந்து விருந்துகொளும்
கொட்டையூ ருட்கிளருங் கோமளமே - இட்டமுடன் (சரு)

என்னம்ப ரென்னம்ப ரென்றயன்மால் வாதுகொள
இன்னம்பர் மேவிநின்ற என்னுறவே - முன்னம்பு (சசு)

மாற்கும் புறம்பியலா வாய்மையருள் செய்யவுளம்
ஏற்கும் புறம்பியம்வாழ் என்னுயிரே - மாற்கருவின் (சஎ)

கண்விசைய மங்கைக் கனிபோற் பெறத்தொண்டர்
எண்விசைய மங்கையில்வாழ் என்குருவே - மண்ணுலகில் (சஅ)

வைகாவூர் நம்பொருட்டான் வைகியதென் றன்பர்தொழும்
வைகாவூர் மேவியவென் வாழ்முதலே - உய்யும்வகைக் (சகூ)

காத்தும் படைத்துங் கலைத்துநிற்போர் நாடோறும்
ஏத்துங் [14]குரங்காட்டின் என்னட்பே - மாத்தழைத்த (ருo)

வண்பழனத் தின்குவிவெண் வாயிற்றேன் வாக்கியிட
உண்பழனத் தென்றன் உயிர்க்குயிரே - பண்பகன்ற (ருக)

வெய்யாற்றி னின்றவரை மெய்யாற்றி னேற்றுதிரு
ஐயாற்றின் மேவியஎன் னுதரவே - பொய்யாற்றி (ருஉ)

மெய்த்தான நின்றோர் வெளித்தான மேவுதிரு
நெய்த்தானத் துள்ளமர்ந்த நித்தியமே - மைத்த (ருங)

கரும்புலியூர்க் காளையொடுங் கண்ணோட்டங் கொள்ளும்
பெரும்புலியூர் வாழ்கருணைப் பேறே - விரும்பிநிதம் (ருச)

[15]பொன்னுங் கௌத்துவமும் பூண்டோன் புகழ்ந்தருளை
மன்னு மழபாடி வச்சிரமே - துன்னுகின்ற (ருரு)

நாய்க்குங் கடையேன் நவைதீர நற்கருணை
வாய்க்கும் பழுவூர் மரகதமே - [16]தேய்க்களங்கில் (ருசு).

வானூர் மதிபோன் மணியாற் குமுதமலர்
கானூ ருயர்தங்கக் கட்டியே - நானூறு (ருஎ)

---

14. குரங்காடு என்பது குரங்காட்டினென நின்றது, வேற்றுமைச்சந்தி யாகலான். அது வடகுரங்காடுதுறை யென்னுமோர் திருப்பதி : தொ. வே.

15. பொன் என்பது இலக்குமி : தொ. வே.

16. தே யென்ப நீண்டு விகுதி குன்றிய முதனிலைத் தொழிற்பெய ரென்க : தொ. வே.

[17]கோலந் துறைகொண்ட கோவையருள் கோவைமகிழ்
[18]ஆலந் துறையின் அணிமுத்தே - நீலங்கொள் (ருஅ)

தேந்துறையி லன்னமகிழ் சேக்கை பலநிலவு
மாந்துறைவாழ் மாணிக்க மாமலையே - ஏந்தறிவாம் (ருகூ)

நூற்றுறையில் நின்றவர்கள் நோக்கிமகிழ் வெய்துதிருப்
பாற்றுறையில் நின்ற பரஞ்சுடரே - நாற்றிசையுந் (சூ0)

தேனைக்கா வுள்மலர்கள் தேங்கடலென் றுக்குவிக்கும்
ஆனைக்கா மேவியமர் அற்புதமே - மானைப்போல் (சூக)

மைஞ்ஞீல வாட்கண் மலராள் மருவுதிருப்
பைஞ்ஞீலி மேவும் பரம்பரமே - எஞ்ஞான்றும் (சூஉ)

ஏச்சிரா மங்கலத்தோ டின்பந் தரும்பாச்சி
லாச்சிரா மஞ்சேர் அருள்நிலையே - நீச்சறியா (சூங)

தாங்கோய் மலைப்பிறவி யார்கலிக்கோர் வார்கலமாம்
ஈங்கோய் மலைவாழ் இலஞ்சியமே - ஓங்காது (சூச)

நாட்போக்கி நிற்கு நவையுடையார் நாடரிதாம்[19]
வாட்போக்கி மேவுகின்ற வள்ளலே - கோட்போக்கி (சூரு)

நில்லுங் கடம்ப நெறிபோ லெனப்பூவை
சொல்லுங் கடம்பந் துறைநிறைவே - மல்லலொடு (சூசூ)

வாழும் பராய்த்துறைவான் மன்னவரு மன்னவருஞ்
சூழும் பராய்த்துறைவாழ் தோன்றலே - கூழும்பல் (சூஎ)

கற்குடியு மோங்கி நலம்பெருகு மேன்மைதிருக்
கற்குடியிற் சந்தான கற்பகமே - சிற்சுகத்தார் (சூஅ)

பிற்சநந மில்லாப் பெருமை தருமுறையூர்ச்
சற்சனர்சேர் மூக்கீச் சரத்தணியே - மற்செய் (சூகூ)

அராப்பள்ளி மேவு மவனின்று வாழ்த்தும்
சிராப்பள்ளி ஞானத் தெளிவே - இராப்பள்ளி (எ0)

---

17. கோலத்துறை என்பது கோலந்துறையென விகாரமாயிற்று : தொ. வே.

18. ஆலந்துறை எ-து. அன்பிலாலந்துறையென்னுமோர் திருப்பதி: தொ.வே.

19. 65 முதல் 191 வரையிலுள்ள கண்ணிகள் ஸ்ரீ சுவாமிகள் சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள சிவஸ்தலங்களை முன்னிட்டு வழி பட்டவை ஆகும்.

நின்றெழின்மெய் யன்றெனவே நேர்ந்துலகு வாழ்த்துகின்ற
நன்றெறும்பி யூரிலங்கு நன்னெறியே - துன்றுகயற் (௭௧)

கண்ணார் நெடுங்களத்தைக் கட்டழித்த மெய்த்தவர்சூழ்
தண்ணார் நெடுங்களமெய்த் தாரகமே - எண்ணார் (௭௨)

தருக்காட்டுப் பள்ளித் தகைகொண்டோர் சூழுந்
திருக்காட்டுப் பள்ளியில்வாழ் தேவே - மருக்காட்டு (௭௩)

நீலம் பொழிற்குள் நிறைதடங்கட் கோர்காட்டும்
ஆலம் பொழிற்சிவயோ கப்பயனே - சீலநிறை (௭௪)

வாந்துருத்தி கொண்டுள் ளனமெழுப்பு வோர்புகழும்
பூந்துருத்தி மேவுசிவ புண்ணியமே - காந்தருவத் (௭௫)

தண்டியூர் போற்றுந் தகைகாசிக் கட்செய்து
கண்டியூர் வாழுங் களகண்ணே - கொண்டியல்பின் (௭௬)

வேற்றுத் துறையுள் விரவா தவர்புகழும்
சோற்றுத் துறையுட் சுகவளமே - ஆற்றலிலாத் (௭௭)

தீதிக் குடியென்று செப்பப் படார்மருவும்
[20]வேதிக் குடியின்ப வெள்ளமே - கோதியலும் (௭௮)

வன்குடித் திட்டை மருவார் மருவுதிருத்
தென்குடித் திட்டைச் சிவபதமே - நன்குடைய (௭௯)

உள்ளமங்கை மார்மே லுறுத்தா தவர்புகழும்
புள்ளமங்கை வாழ்பரம போகமே - கள்ளமிலஞ் (௮௦)

சக்கரப் பள்ளிதனிற் றும்பயின்ற மைந்தர்கள்சூழ்
சக்கரப் பள்ளிதனில் தண்ணளியே - மிக்க (௮௧)

அருகாவூர் சூழ்ந்தே அழகுபெற வோங்கும்
கருகாவூர் இன்பக் கதியே - முருகார்ந்த (௮௨)

சோலைத் துறையிற் சுகஞ்சிவநூல் வாசிக்கும்
பாலைத் துறையிற் பரிமளமே - சீலத்தர் (௮௩)

சொல்லூ ரடியப்பர் தூயமுடி மேல்வைத்த
நல்லூ ரமர்ந்தநடு நாயகமே - மல்லார்ந்த (௮௪)

---

20. வேதிகுடி என்பது வேதிக்குடியென விரித்தல் விகாரமாயிற்று : தொ.வே.

மாலூ ரிரவியின்பொன் வையமள வுஞ்சிகரி
ஆலூரி னுற்றவெங்கள் ஆண்டகையே - ஓவாது (௮௫)
சித்திமுற்ற யோகஞ் செழும்பொழிலிற் பூவைசெயும்
சத்திமுற்ற மேவுஞ் சதாசிவமே - பத்தியுற்றோர் (௮௬)
முட்டைச் சுரத்தின் முயலா வகையருளும்
பட்டைச் சரத்தெம் பராபரமே - துட்டமயல் (௮௭)
தீங்குவிழை யார்தமைவான் சென்றமரச் செய்விக்க
ஓங்குபழை யாறையிலென் னுள்ளுவப்பே - பாங்குபெற (௮௮)
ஆர்ந்த வடவிலையான் அன்னத்தான் போற்றிநிதம்
சார்ந்த வடதளிவாழ் தற்பரமே - சேர்ந்த (௮௯)
மலஞ்சுழி கின்ற மனத்தர்க் கரிதாம்
வலஞ்சுழி வாழ்பொன் மலையே - நிலஞ்சுழியா (௯௦)
தோணத்தில் வந்தோ னுடன்றுதித்து வாழ்கும்ப
கோணத்தில் தெய்வக் குலக்கொழுந்தே - மாணுற்றோர் (௯௧)
காழ்க்கோட்ட நீங்கக் கருதுங் குடமூக்கிற்
கீழ்க்கோட்ட மேவுமன்பர் கேண்மையே - வாழ்க்கோட்டத் (௯௨)
தேரோண மட்டுந் திகழ்குடந்தை மட்டுமன்றிக்
காரோண மட்டுங் கமழ்மலரே - சீரோங்கும் (௯௩)
யோகீச் சுரர்நின் றுவந்து வணங்குதிரு
நாகீச் சுரமோங்கு நங்கனியே - ஓகையுளம் (௯௪)
தேக்கும் வரகுணனுந் தென்னவன்கண் சூழ்பழியைப்
போக்கும் இடைமருதிற் பூரணமே - நீக்கமிலா (௯௫)
நன்குரங் காணு நடையோ ரடைகின்ற
தென்குரங் காடுதுறைச் செம்மலே - புன்குரம்பை (௯௬)
ஏலக் குடிபுகுந்த எம்மனோர்க் குண்மைதரு
நீலக் குடியிலங்கு நிட்களமே - ஞாலத்து (௯௭)
நீடக்கோர் நாளும் நினைந்தேத் திடும்வைகல்
மாடக்கோ யிற்குண் மதுரமே - பாடச்சீர் (௯௮)
வல்ல தமிழ்ப்புலவர் மன்னி வணங்குதிரு
நல்லமகிழ் இன்ப நவவடிவே - இல்லமயல் (௯௯)

ஆழம்பங் கென்ன வறிந்தோர் செறிந்தேத்தும்
கோழம்பம் வாழ்கருணைக் கொண்டலே - வீழும்போய் (௧00)

தீரா வடுவுடையார் சேர்தற் கருந்தெய்வச்
சீரா வடுதுறையெஞ் செல்வமே - போராக் (௧0௧)

கருத்திருத்தி யேத்துங் கருத்தர்க் கருள்செய்
திருத்துருத்தி இன்பச் செழிப்பே - வருத்துமயல் (௧0௨)

நாளு மெழுந்தூர் நவையறுக்கு மன்பருள்ளம்
நீளும் அழுந்தூர் நிறைதடமே - வேளிமையோர் (௧0௩)

வாயூரத் [21]தேமா மலர்சொரிந்து வாழ்த்துகின்ற
மாயூரத் தன்பர் மனோரதமே - தேயா (௧0௪)

வளநகரென் றெவ்வுலகும் வாழ்த்தப் படுஞ்சீர்
விளநகர்வா ழெங்கண் விருந்தே - இளமைச் (௧0௫)

செறியலூர் கூந்தல் திருவனையா ராடும்
பறியலூர் வாழ்மெய்ப் பரமே - நெறிகொண்டே (௧0௬)

அன்பள்ளி யோங்கு மறிவுடையோர் வாழ்த்துஞ்செம்
பொன்பள்ளி வாழ்ஞான போதமே - இன்புள்ளித் (௧0௭)

தெள்ளியார் போற்றித் திகழுந் திருநன்னிப்
பள்ளியார்ந் தோங்கும் பரசிவமே - எள்ளுறுநோய் (௧0௮)

ஏய வலம்புரத்தை யெண்ணுமெ லெண்ணுகின்றோர்
மேய வலம்புரத்து மேதகவே - தூயகொடி (௧0௯)

அங்காடு கோபுரம்வா னுற்றாடு கின்றதலைச்
சங்காடு மேவுஞ் சயம்புவே - பொங்குமிருட் (௧௧0)

கூறுதிரு வாக்கூர் கொடுப்பனபோற் சூழ்ந்துமதில்
வீறுதிரு வாக்கூர் விளக்கமே - மாறகற்றி (௧௧௧)

நன்கடையூர் பற்பலவு நன்றிமற வாதேத்தும்
தென்[22]கடையூர் ஆனந்தத் தேறலே - வன்மையிலாச் (௧௧௨)

சொற்கடவி மேலோர் துதித்தலொழி யாதோங்கு
நற்கடவூர் வீரட்ட நாயகனே - வற்கடத்தும் (௧௧௩)

---

21. தேமாமலர் என்பது சிறந்த கற்பகமலர் : தொ.வே.

22. கடவூர் என்பது கடையூரென மரீஇயது : தொ.வே.

வாட்டக் குடிசற்றும் வாய்ப்பதே யில்லையெனும்
வேட்டக் குடிமேவு மேலவனே - நாட்டமுற்ற (கக௪)
வாக்குந் தெளிச்சேரி மாதவத்தர்க் கின்பநலம்
ஆக்குந் தெளிச்சேரி அங்கணனே - நீக்கும் (கக௫)
கரும புரத்திற் கலவா தருள்செய்
தரும புரஞ்செய் தவமே - இருமையினும் (கக௬)
எள்ளாற்றின் மேவாத ஏற்புடையோர் சூழ்ந்திறைஞ்சு
நள்ளாற்றின் மேவியஎன் நற்றுணையே - தெள்ளாற்றின் (கக௭)
நீட்டாறு கொண்டரம்பை நின்று கவின்காட்டும்
கோட்டாறு மேவுங் குளிர்துறையே - கூட்டாக் (கக௮)
கருவம்பர் தம்மைக் கலவாத மேன்மைத்
திருவம்பர் ஞானத் திரட்டே - ஒருவந்தர் (கக௯)
மாகாளங் கொள்ள மதனைத் துரத்துகின்ற
மாகாளத் தன்பர் மனோலயமே - யோகாளக் (க௨௦)
காயச்சூர் விட்டுக் கதிசேர வேட்டவர்சூழ்
மீயச்சூர் தண்ணென்னும் வெண்ணெருப்பே - மாயக் (க௨க)
களங்கோயில் நெஞ்சக் கயவர் மருவா
இளங்கோயின் ஞான இனிப்பே - வளங்கோவை (க௨௨)
நாடுந் திலத நயப்புலவர் நாடோறும்
பாடுந் திலதைப் பதிநிதியே - ஆடுமயில் (க௨௩)
காம்புரங்கொள் தோளியர்பொற் காவிற் பயில்கின்ற
பாம்புரங்கொள் உண்மைப் பரம்பொருளே - ஆம்புவனம் (க௨௪)
துன்னும் பெருங்குடிகள் சூழ்ந்துவலஞ் செய்துவகை
மன்னுஞ் சிறுகுடிவாழ் மார்த்தமே - முன்னரசும் (க௨௫)
காழி மிழலையருங் கண்டுதொழக் காசளித்த
வீழி மிழலை விராட்டுருவே - ஊழிதொறும் (க௨௬)
மன்னியூர் மால்விடையாய் வானவர் வென்றுதொழ
வன்னியூர் வாழு மணிகண்டா - இந்நிமிடம் (க௨௭)
சிந்துங் கருவலியின் திண்மையென்று தேர்ந்தவர்கள்
முந்துங் கருவிலிவாழ் முக்கண்ணா - மந்தணத்தைக் (க௨௮)

காணு மருந்துறையிக் காமர்தல மென்றெவரும்
பேணு பெருந்துறையிற் பெம்மானே - ஏணுடன்கா (கஉகூ)

ஈட்டும் பெருநறையா றென்ன வயலோடி
நாட்டும் பெருநறையூர் நம்பனே - காட்டும் (கஙO)

பரிசிற் கரைப்புற்றோர் பாங்குபெற வோங்கும்
[23]அரிசிற் கரைப்புத்தூ ரானே - தரிசனத்தேக் (கஙக)

காலுஞ் சிவபுரத்தைக் காதலித்தோர் தங்கள்துதி
ஏலுஞ் சிவபுரத்தி லெம்மானே - மாலுங்கொள் (கஙஉ)

வெப்புங் கலையநல்லோர் மென்மதுரச் சொன்மாலை
செப்புங் கலயநல்லூர்ச் சின்மயனே - செப்பமுடன் (கஙங)

ஓங்குந் திருத்தொண்டர் உள்குளிர நல்லருளால்
தாங்குங் கருக்குடிவாழ் சங்கரனே - ஆங்ககனந் (கஙச)

தாஞ்[24]சியத்தை வேங்கைத் தலையாற் றடுக்கின்ற
வாஞ்சியத்தின் மேவு மறையோனே - ஆஞ்சியிலா (கஙரு)

திங்கிலத்தும் வானுதி யெங்கிலத்து மோங்குபெரு
நன்னிலத்து வாழ்ஞான நாடகனே - மன்னுமலர் (கஙசா)

வண்டீச் சுரம்பாடி வார்மதுவுண் டுள்களிக்குங்
கொண்டீச் சுரத்தமர்ந்த கோமானே - கண்டீச (கஙஎ)

நண்பனையூ ரன்புகழும் நம்பவென உம்பர்தொழத்
தண்பனையூர் மேவுஞ் சடாதரனே - பண்புடனே (கஙஅ)

எற்குடியா னங்கொண் டிருக்க மகிழ்ந்தளித்த
விற்குடியின் வீரட்ட மேயவனே - சொற்கொடிய (கஙகூ)

வன்புகலா நெஞ்சின் மருவும் ஒருதகைமைத்
தென்புகலூர் வாழ்மகா தேவனே - இன்பமறை (கச0)

அர்த்தமா நீக்கரிய வாதார மாகிநின்ற
வர்த்தமா னேச்சரத்து வாய்ந்தவனே - மித்தையுற்ற (கசக)

---

23. அரிசொன்னதிக்கரை என்பது அரிசிற்கரை யென மரீஇயது : தொ.வே.

24. சீயத்தை என்பது செய்யுள் விகாரத்தாற் குறுக்கும் வழி குறுக்கப்பட்டு சியத்தையென நின்றது : தொ.வே.

காமனதீ சங்கெடவே கண்பார்த் தருள்செய்த
ராமனதீ சம்பெறுநி ராமயனே - தோமுண் (கசஉ)

மயற்றார் பறித்த மனத்தில் விளைந்த
பயற்றார் திசையம் பரனே - இயற்றுஞ்சீர் (கசங)

ஆச்சிரமே வுஞ்செங்காட் டங்குடியி னங்கணப
தீச்சரம்வா ழுஞ்சந்த்ர சேகரனே - எச்சகல (கசச)

விண்மருவி ஞானை விடநீக்க நல்லருள்செய்
வண்மருகல் மாணிக்க வண்ணனே - திண்மைகொண்ட (கசரு)

மாத்தமங்கை யுள்ளம் மருவிப் பிரியாத
சாத்தமங்கைக் கங்கைச் சடாமுடியோய் - தூத்தகைய (கசசு)

பாகைக்கா ரென்னும் பணிமொழியார் வாழ்த்தோவா
நாகைக்கா ரோணம் நயந்தோனே - ஓகையுற (கசஎ)

விக்கல் வருங்கால் விடாய்தீர்த் துலகிடைநீ
சிக்கலெனுஞ் சிக்கல் திறலோனே - மிக்கமினுர் (கசஅ)

வாளூர் தடங்கண் வயல்காட்டி யோங்குங்கீழ்
வேளூரிற் செங்கண் விடையோனே - நீளுவகைப் (கசகூ)

பாவூ ரிசையிற் பயன்சுவையிற் பாங்குடைய
தேவூர் வளர்தேவ தேவனே - பூவினிடை (கரு0)

இக்கூடன் மைந்த வினிக்கூட லென்றுபள்ளி
முக்கூடன் மேவியமர் முன்னவனே - தக்கநெடுந் (கருக)

தேரூ ரணிவீதிச் சீரூர் மணிமாட
ஆரூரி லெங்கள் அருமருந்தே - நீரூர்ந்த (கருஉ)

காரூர் பொழிலுங் கனியீந் திளைப்பகற்றும்
ஆரூ ரரனெறிவே ளாண்மையே - ஏரார்ந்த (கருங)

மண்மண் டலிகர் மருவுமா ரூர்ப்பரவை
உண்[25]மண் டலிஎம் உடைமையே - திண்மைக் (கருச)

களமர் மகிழக் கடைசியர் பாடும்
விளமர் கொளுமெம் விருப்பே - வளமை (கருரு)

---

25. மண்டளி என்பது மண்டலியென லகார ளகார வொற்றுமைத் திரிபு: தொ.வே.

எருக்காவீ ரஞ்சே ரெழில்வேணி கொண்டு
திருக்காவீ ரஞ்சேர் சிறப்பே - உருக்க (கருசு)

வருவேளூர் மாவெல்லா மாவே ழுஞ் சோலைப்
பெருவேளூர் இன்பப் பெருக்கே - கருமை (கருஎ)

மிலையாலங் காட்டு மிடற்றுயென் றேத்தும்
தலையாலங் காட்டுத் தகவே - நிலைகொள் (கருஅ)

தடவாயில் வெண்மணிகள் சங்கங்க ளீனும்
குடவாயில் அன்பர் குறிப்பே - மடவாட்கோர் (கருகூ)

[26]கூறை யுவந்தளித்த கோவேயென் றன்பர்தொழச்
சேறை யுவந்திருந்த சிற்பரமே - வேறுபடாப் (கசுo)

பாலூர் நிலவிற் பணிலங்கள் தண்கதிர்செய்
நாலூரில் அன்பர்பெறு நன்னயமே - மேலூரும் (கசுக)

நோய்க்கரையுட் செய்யாத நோன்மையோர் சூழ்ந்தகடு
வாய்க்கரையுண் மேவுகின்ற வண்மையே - வாய்த்த (கசுஉ)

பெரும்பூகந் தெங்கிற் பிறங்க வளங்கொள்ளும்
இரும்பூளை மேவி யிருந்தோய் - விரும்பும் (கசுங)

விரதப் பெரும்பாழி விண்ணவர்க ளேத்தும்
அரதைப் பெரும்பாழி ஆர்ந்தோய் - சரதத்தால் (கசுச)

ஏதும் அவணிவணென் றெண்ணு தவரிறைஞ்சி
ஓதும் அவளிவணல் லூருடையோய் - கோதகன்ற (கசுரு)

நீட்டுஞ் சுருதி நியமத்தோர்க் கின்னருளை
நீட்டும் பரிதி நியமத்தோய் - காட்டியநந் (கசுசு)

தேவனூ ரென்று திசைமுகன்மால் வாழ்த்துகின்ற
பூவனூர் மேவும் புகழுடையோய் - பூவுலகாம் (கசுஎ)

ஈங்கும்பா தாளமுத லெவ்வுலகு மெஞ்ஞான்றுந்
தாங்கும்பா தாளேச் சரத்தமர்ந்தோய் - ஓங்குபுத்தி (கசுஅ)

மான்களரி லோட்டி மகிழ்வோ டிருந்தேத்தும்
வான்களரில் வாழு மறைமுடிபே - மேன்மைதரும் (கசுகூ)

---

26. மடவாட் கோர் கூற்றை யெனற்பாலது கூறையென இரண்டாவதன் முடிபேற்று நின்றது : தொ.வே.

முற்றேமம் வாய்ந்த முனிவர் தினம்பரவும்
சிற்றேமம் வாய்ந்த செழுங்கதிரே - கற்றவர்கள் (௧௭௦)

எங்குமுசாத் தான மிருங்கழக மன்றமுதல்
தங்குமுசாத் தானத் தனிமுதலே - பொங்குபவ (௧௭௧)

வல்லலிடும் பாவநத்த மட்டொளிசெய் கின்றதிரு
மல்லலிடும் பாவனத்து மாட்சிமையே - தொல்லைப் (௧௭௨)

படிக்குள் நோவாத பண்புடையோர் வாழ்த்தும்
கடிக்குளத் தன்பர் களிப்பே - கடிக்குளத்தின் (௧௭௩)

வண்டலைக்கத் தேனலரின் வார்ந்தோர் தடமாக்கும்
தண்டலைக்குள் நீனெறிச்சிந் தாமணியே - கொண்டலென (௧௭௪)

மன்கோட்டூர் சோலை வளர்கோட்டூர் தண்பழனத்
தென்கோட்டூர் தேவ சிகாமணியே - தென்கூட்டிப் (௧௭௫)

போய்வண் டுறைதடமும் பூம்பொழிலுஞ் சூழ்ந்தமரர்
ஆய்வெண் டுறைமாசி லாமணியே - தோய்வுண்ட (௧௭௬)

கள்ளம்பூ தாதிநிலை கண்டுணர்வு கொண்டவர்சூழ்
கொள்ளம்பூ தூர்வான் குலமணியே - வெள்ளிடைவான் (௧௭௭)

வாம்பே ரெயிற்சூழ்ந்த மாண்பாற் றிருநாமம்
ஆம்பே ரெயிலொப்பி லாமணியே - தாம்பேரா (௧௭௮)

வீட்டிலன்ப ரானந்தம் மேவச்செயுங்கொள்ளிக்
காட்டி லமர்ந்தஎன்கண் காட்சியே - நீட்டுமொளி (௧௭௯)

ஆங்கூ ரிலைவே லவனு தியர்சூழத்
தேங்கூரில் வாழ்தேவ சிங்கமே - ஓங்குமலை (௧௮௦)

வல்லிக்கா தார மணிப்புயவென் றன்பர்தொழ
நெல்லிக்கா வாழ்மெய்ந் நியமமே - எல்அல்கண் (௧௮௧)

சேட்டியத் தானே தெரிந்துசுரர் வந்தேத்து
நாட்டியத் தான்குடிவாழ் நல்வினமே - நாட்டுமொரு (௧௮௨)

நாறுயி லன்பர்தமை நோக்கி யருள்செய்திருக்
காறுயின் மேலோர் கடைப்பிடியே - வீறுகும் (௧௮௩)

இன்றுப்பூர் வந்தொட் டிருந்ததிவ்வூ ரென்னவுயர்
கன்றுப்பூர் பஞ்சாக் கரப்பொருளே - துன்றுசை (௧௮௪)

வெய்ய வலிவலத்தை வீட்டியன்பர்க் கின்னருள்செய்
துய்ய வலிவலத்துச் சொன்முடிபே - மையுமன (கஅரு)

மைச்சினத்தை விட்டோர் மனத்திற் சுவைகொடுத்துக்
கைச்சினத்தி னுட்கரையாக் கற்கண்டே - நெற்சுமக்க (கஅசு)

ஆளிலையென் றூரூர னூர்துதிக்கத் தந்தருளும்
கோளிலியின் அன்பர்குலங் கொள்ளுவப்பே - நீளுலகம் (கஅஎ)

காய்மூர்க்க ரேனுங் கருதிற் கதிகொடுக்கும்
வாய்மூர்க் கமைந்த மறைக்கொழுந்தே - நேயமுணத் (கஅஅ)

தேடெலியை மூவுலகுந் தோர்ந்துதொழச் செய்தருளும்
ஈடின்மறைக் காட்டிலென்றன் எய்ப்பில்வைப்பே - நாடுமெனை (கஅகூ)

நின்னகத்தி யான்பள்ளி நேர்ந்தேனென் றுட்கொண்ட
தென்னகத்தி யான்பள்ளிச் செம்பொன்னே - தொன்னெறியோர் ( )

நாடிக் குழக நலமருளென் றேத்துகின்ற
கோடிக் குழகருட் கோலமே - நீடுலகில் (ககூக)

நாட்டும் புகழீழ நாட்டிற் பவவிருளை[27]
வாட்டுந் திருக்கோண மாமலையாய் - வேட்டுலகின் (ககூஉ)

மூதீச் சரமென்று முன்னோர் வணங்குதிருக்
கேதீச் சரத்திற் கிளர்கின்றோய் - ஓதுகின்றோர் (ககூ௩)

பாலவாய் நிற்கும் பரையோடு வாழ்மதுரை[28]
ஆலவாய்ச் சொக்கழகா னந்தமே - சீலர்தமைக் (ககூச)

காப்பனூ ரில்லாக் கருணையா லென்றுபுகும்
ஆப்பனூர் மேவுசதா னந்தமே - மாப்புலவர் (ககூரு)

ஞானபரங் குன்றமென நண்ணிமகிழ் கூர்ந்தேத்த
வானபரங் குன்றலின்பா னந்தமே - வானவர்கோன் (ககூசு)

தேமே டகத்தனொடு சீதரனும் வாழ்த்துஞ்சீ
ராமே டகத்தறிவா னந்தமே - பூமீதில் (ககூஎ)

---

27. 192, 193-ஆம் கண்ணிகள் ஸ்ரீ சுவாமிகள் ஈழ நாட்டில் உள்ள திருக்கோண மலை, திருக்கேதீச்சரம் என்னும் திருப்பதிகளை வழிபட்டவை ஆகும்.

28. 194 முதல் 206 வரையிலுள்ள கண்ணிகள் ஸ்ரீ சுவாமிகள் பாண்டி நாட்டில் உள்ள சிவஸ்தலங்களை வழிபட்டவை ஆகும்.

நற்றவருங் கற்ற நவசித்த ரும்வாழ்த்தி
உற்றகொடுங் குன்றத்தெம் ஊதியமே - முற்றுகதிர் ௧௯௮)

இத்தூர மன்றி யினித்தூர மில்லையெனப்
புத்தூர் வருமடியார் பூரிப்பே - சித்தாய்ந்து (௧௯௯)

நாமீச ராகும் நலந்தருமென் றம்பர் [29]தொழும்
ராமீசம் வாழ்சிவ ரத்தினமே - பூமீது (௨௦௦)

நீடானை சூழும் நிலமன்னர் வாழ்த்துதிரு
வாடானை மேவுகரு ணாகரமே - சேடான (௨௦௧)

வானப்பே ராற்றை மதியை முடிசூடுங்
கானப்பேர் ஆனந்தக் காளையே - மோனருளே (௨௦௨)

பூவணமும் பூமணமும் போல வமர்ந்ததிருப்
பூவணத்தில் ஆனந்தப் பொக்கிஷமே - தீவணத்தில் (௨௦௩)

கண்சுழிய லென்று கருணையளித் தென்னுளஞ்சேர்
தண்சுழியல் வாழ்சிவ சாக்ஷியே - பண்செழிப்பக் (௨௦௪)

கற்றாலங் குண்மைக் கதிதருமென் றற்றவர்சூழ்
குற்றாலத் தன்பர் குதுகலிப்பே - பொற்றாம (௨௦௫)

நல்வேலி சூழ்ந்து நயன்பெறுமொண் செஞ்சாலி
நெல்வேலி உண்மை நிலயமே - வல்வேலை (௨௦௬)

நஞ்சைக் களத்துவைத்த நாதவெனத் தொண்டர்தொழ[30]
அஞ்சைக் களஞ்சேர் அருவுருவே - நெஞ்சடக்கி (௨௦௭)

ஆன்று நிறைந்தோர்க் கருளளிக்கும் புக்கொளியூர்த்[31]
தோன்றுமவி நாசிச் சுயம்புவே - சான்றவர்கள் (௨௦௮)

தம்முருகன் பூணுட் டலம்போல வாழ்கின்ற
எம்முருகன் பூண்டி இருநிதியே - செம்மையுடன் (௨௦௯)

அங்குன்று தோங்கு மணிகொள் கொடிமாடச்
செங்குன்றூர் வாழுஞ்சஞ் சீவியே - தங்குமன (௨௧௦)

---

29. தொழும் ராமீசம் என்பது வடநூன் முடிபு.

30. இது ஸ்ரீ சுவாமிகள் மலைநாட்டுச் சிவஸ்தலம் ஆகிய திரு அஞ்சைக் களத்தை வழிபட்டது.

31. 208 முதல் 214 வரையிலுள்ள கண்ணிகள் ஸ்ரீ சுவாமிகள் கொங்கு நாட்டில் உள்ள சிவஸ்தலங்களை வழிபட்டவை ஆகும்.

வஞ்சமாக் கூடல் வரையா தவர்சூழும்
வெஞ்சமாக் கூடல் விரிசுடரே - துஞ்சலிலனும் (உகக)

இன்ன லகற்ற இலங்குபவா னிக்கூடல்
என்னு நணுவினிடை இன்னிசையே - துன்னியருள் (உகஉ)

வேண்டிக் கொடுமுடியா மேன்மைபெறு மாதவர்சூழ்
பாண்டிக் கொடுமுடியிற் பண்மயமே - தீண்டரிய (உகங)

வெங்கருவூர் வஞ்ச வினைதீர்த் தவர்சூழ்ந்த
நங்கருவூர்ச் செய்யுள் நவரசமே - தங்களற்றின் (உகச)

தீங்கார் பிறதெய்வத் [32]தீங்குழியில் வீழ்ந்தவரைத்[33]
தாங்கா வரத்துறையில் தாணுவே - பூங்குழலார் (உகரு)

வீங்கானை மாடஞ்சேர் விண்ணெனன் றகல்கடந்தைத்
தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே - நீங்காது (உகசு)

நீடலை யாற்றார் நிழன்மணிக்குன் றோங்குதிருக்
கூடலை யாற்றூர்க் குணநிதியே - நாடியவான் (உகஎ)

அம்புலியூர் சோலை யணிவயல்க ளோங்கெருக்கத்
தம்புலியூர் வேத சமரசமே - நம்புவிடை (உகஅ)

ஆங்குந் தினையூர்ந் தருளாயென் றன்பர்தொழு
தோங்குந் தினையூர் உமாபதியே - தீங்குறுமொன் (உககூ)

[34]ஞர்புரத்தை வெண்ணகைத்தீ யாலழித்தா யென்றுதொழச்
[35]சோபுரத்தின் வாழ்ஞான தீவகமே - வார்கெடிலச் (உஉ0)

சென்னதிகை [36]யோங்கித் திலதவதி யார்பரவும்
மன்னதிகை வீரட்ட மாதவமே - பன்னரிதாம் (உஉக)

ஆவலூ ரெங்களுடை ஆரூர ரூரூரா
நாவலூர் ஞானியருண் ஞாபகமே - தேவகமாம் (உஉஉ)

---

32. தீக்குழி என்பது தீங்குழி யென்றாயது : தொ.வே.
33. 215 முதல் 236 வரையிலுள்ள கண்ணிகள் ஸ்ரீ சுவாமிகள் நடு நாட்டில் உள்ள சிவஸ்தலங்களை வழிபட்டவை ஆகும்.
34. ஆசிடை யெதுகை : தொ.வே.
35. செர்தொடை : தொ.வே.
36. ஓங்கி - பரவெனும் வேறு சினை வினைக் குறைகள் மன்னென்னு முதல் வினையோடு முடிந்தன : தொ.வே.

மன்ற மமர்ந்த வளம்போற் றிகழ்ந்தமுது
குன்ற மமர்ந்தஅருட் கொள்கையே - அன்றகத்தின் (உஉ௩)
நல்வெண்ணெ யுண்டொளித்த நாரணன்வந் தேத்துகின்ற
நெல்வெண்ணெய் மேவுசிவ நிட்டையே - சொல்வண்ணம் (உஉ௪)
நாவலர் போற்றி நலம்பெறவே யோங்குதிருக்
கோவலூர் வீரட்டங் கொள்பரிசே - ஆவலர்மா (உஉ௫)
தேவா இறைவா சிவனே யெனுமுழக்கம்
ஓவா அறையணிநல் லூருயர்வே - தாவாக் (உஉ௬)
கடையாற்றி னன்பர்தமைக் கல்லாற்றி னீக்கும்
இடையாற்றின் வாழ்நல் இயல்பே - இடையாது (உஉ௭)
சொல்லூரன் றன்னைத் தொழும்புகொளுஞ் சீர்வெண்ணெய்
நல்லூ ரருட்டுறையின் நற்பயனே-மல்லார்ந்து (உஉ௮)
மாசுந் துறையூர் மகிபன்முதல் மூவருஞ்சீர்
பேசுந் துறையூர்ப் பிறைசூடீ - நேசமுற (உஉ௯)
வேற்று வடுகூ ரிதயத்தி னூர்க்கென்றுந்
தோற்று வடுகூர்ச் சுயஞ்சுடரே - ஆற்றமயல் (உ௩0)
காணிக் குழிவீழ் கடையர்க்குக் காண்பரிய
மாணிக் குழிவாழ் மகத்துவமே - மாணுற்ற (உ௩௧)
பூப்பா திரிகொன்றை புன்னைமுதற் சூழ்ந்திலங்கும்
[37]ஏர்ப்பா திரிப்புலியூர் ஏந்தலே - சீர்ப்பொலியப் (உ௩உ)
பண்டீச் சுரனிப் பதியே விழைந்ததெனும்
முண்டீச் சுரத்தின் முழுமுதலே - பெண்தகையார் (உ௩௩)
ஏர்ப்பனங்காட் டூரென் றிருநிலத்தோர் வாழ்த்துகின்ற
சீர்ப்பனங்காட் டூர்மகிழ்நி க்ஷேபமே - சூர்ப்புடைத்த (உ௩௪)
தாமாத்தூர் வீழத் தடிந்தோன் கணேசனொடும்
ஆமாத்தூர் வாழ்மெய் அருட்பிழம்பே - யாமேத்தும் (உ௩௫)
உண்ணா முலையாள் உமையோடு மேவுதிரு
அண்ணா மலைவாழ் அருட்சுடரே - கண்ணார்ந்த (உ௩௬)

---

37. ஆசிடை யெதுகை : தொ. வே.

நாகம்ப ராந்தொண்ட நாட்டி லுயர்காஞ்சி[38]
ஏகம்ப மேவும்பே ரின்பமே - ஆகுந்தென் (உ௩எ)

காற்றளிவண் பூமணத்தைக் காட்டும் பொழிற்கச்சி
மேற்றளிவாழ் ஆனந்த வீட்டுறவே - நாற்றமலர்ப் (உ௩அ)

பூந்தண் டளிவிரித்துப் புக்கிசைக்குஞ் சீரோண
காந்தன் றளிஅருட்ப்ர காசமே - சேர்ந்தவர்க்கே (உ௩கூ)

இங்கா பதஞ்சற்று மில்லா தவனேக
தங்கா பதஞ்சேர் தயாநிதியே - மங்காது (உ௪௦)

மெச்சி நெறிக்கார்வ மேவிநின்றோர் சூழ்ந்ததிருக்
கச்சி நெறிக்காரைக் காட்டிறையே - முச்சகமும் (உ௪க)

ஆயுங் குரங்கணின்முட் டப்பெயர்கொண் டோங்குபுகழ்
ஏயுந் தலம்வா ழியன்மொழியே - தோயுமன (உ௪உ)

[39]யோகறலி லாத்தவத்தோ ருன்ன விளங்குதிரு
மாகறலில் அன்பரபி மானமே - ஓகையிலா (உ௪௩)

[40]வீத்தூர மாவோட மெய்த்தவர்கள் சூழ்ந்ததிரு
ஓத்தூரில் வேதாந்த உண்மையே - பூத்தவிசின் (உ௪௪)

ஆர்த்தான் பனகத் தவனிந் திரன்புகழ்வன்
பார்த்தான் பனங்காட்டூர் பாக்கியமே - பார்த்துலகில் (உ௪௫)

இல்ல மெனச்சென் றிரவா தவர்வாழும்
வல்லமதி மன்பர் வசித்துவமே - சொல்லரிக்குக் (உ௪௬)

காற்பேறு கச்சியின்முக் காற்பே றிவணென்னும்
மாற்பேற்றி னன்பர் மனோபலமே - ஏற்புடைவாய் (உ௪எ)

ஊற லடியா ருறத்தொழுது மேவுதிரு
ஊற லழியா உவகையே - மாறுபடு (உ௪அ)

தீது மிலம்பயங்கோட் டீரென் றடியர்புகழ்
ஓது மிலம்பயங்கோட் டூர்நலமே - தீதுடைய (உ௪கூ)

---

38. 237 முதல் 271 வரையிலுள்ள கண்ணிகள் ஸ்ரீ சுவாமிகள் தொண்ட நாட்டிலுள்ள சிவஸ்தலங்களை வழிபட்டவை ஆகும்.

39. யோகம் என்பது யோகென விகாரமாயிற்று : தொ. வே.

40. வீ என்பது மரணம் : தொ. வே.

பொற்கோலம் ஆமெயிற்குப் போர்க்கோலம் கொண்டதிரு
விற்கோலம் மேவுபர மேட்டிமையே - சொற்போரில் (உ௫0)

ஓலங்காட் டும்பழைய னூர்நீலி வாதடக்கும்
ஆலங்காட் டிற்சூழ் அருள்மயமே - ஞாலம்சேர் (உ௫க)

மாசூர் அகற்றும் மதியுடையோர் சூழ்ந்ததிருப்
பாசூரில் உண்மைப் பரத்துவமே - தேசூரன் (உ௫உ)

கண்பார்க்க வேண்டுமெனக் கண்டுன்று கோற்கொடுத்த
வெண்பாக்கத் தன்பர்பெறும் விருப்பே - பண்பார்க்கு (உ௫௩)

நள்ளிப் பதியே நலந்தருமென் றன்பர்புகுங்
கள்ளிற் பதிநங் கடப்பாடே - எள்ளலுறுங் (உ௫௪)

கோளத்தி நீக்குங் குணத்தோர்க் கருள்செய்திருக்
காளத்தி ஞானக் களஞ்சியமே - ஆள்அத்தா (உ௫௫)

வெற்றியூ ரென்ன வினையேன் வினைதவிர்த்த[41]
ஒற்றியூர் மேவியஎன் உள்ளன்பே - தெற்றிகளில் (உ௫௬)

பொங்குமணிக் கால்கள் பொலஞ்செய்திரு வொற்றிநகர்
தங்குஞ் சிவபோக சாரமே - புங்கவர்கள் (உ௫௭)

சேர்ந்துவலங் கொள்ளுந் திருவொற்றி யூர்க்கோயிற்
சார்ந்து மகிழ்அமுத சாரமே - தேர்ந்துலகர் (உ௫அ)

போற்றுந் திருவொற்றிப் பூங்கோயிற் குட்பெரியோர்
சாற்றும் புகழ்வேத சாரமே - ஊற்றுறுமெய் (உ௫௯)

அன்புமிகுந் தொண்டர்குழு ஆயும்வலி தாயத்தில்
இன்பமிகு ஞான இலக்கணமே - துன்பமற (உ௬0)

எல்லைவாயற் குள்மட்டும் ஏகில்வினை யேகுமெனும்
முல்லைவாயிற் குள்வைத்த முத்திவித்தே - மல்லல்பெறு (உ௬க)

வேற்காட்ட ரேத்துதிரு வேற்காட்டின் மேவியமுன்
நூற்காட் டுயர்வேத நுட்பமே - பாற்காட்டும் (உ௬உ)

ஆர்த்திபெற்ற மாதுமயி லாய்ப்பூசித் தார்மயிலைக்
கீர்த்திபெற்ற நல்வேத கீதமே - கார்த்திரண்டு (உ௬௩)

41. இக் கண்ணியில் ஸ்ரீ சுவாமிகள் தமக்குத் திரு ஒற்றியூரில் இறைவன் அருள் அளித்ததைக் கூறுவது காண்க.

வாவுகின்ற சோலை வளர்வான்மி யூர்த்தலத்தில்
மேவுகின்ற ஞான விதரணமே - தாவிமயில் (உ௬௪)

ஆடும் பொழிற்கச்சூ ராலக்கோ யிற்குளன்பர்
நீடுங் கனதூய நேயமே - ஈடில்லை (உ௬௫)

என்னுந் திருத்தொண்ட ரேத்து மிடைச்சுரத்தின்
மன்னுஞ் சிவானந்த வண்ணமே - நன்னெறியோர் (உ௬௬)

துன்னுநெறிக் கோர்துணையாந் தூயகழுக் குன்றினிடை
முன்னுமறி வானந்த மூர்த்தமே - துன்னுபொழில் (உ௬௭)

அம்மதுரத் தேன்பொழியும் அச்சிறுபாக் கத்துலகர்
தம்மதநீக் குஞ்ஞான சம்மதமே - எம்மதமும் (உ௬௮)

சார்ந்தால் வினைநீக்கித் தாங்குதிரு வக்கரையுள்
நேர்ந்தார் உபநிடத நிச்சயமே - தேர்ந்தவர்கள் (உ௬௯)

தத்த மதுமதியாற் சாரும் அரசிலியூர்
உத்தமமெய்ஞ் ஞான ஒழுக்கமே - பத்தியுள்ளோர் (உ௭௦)

எண்ணும் புகழ்கொள் இரும்பைமா காளத்து
நண்ணுஞ் சிவயோக நாட்டமே - மண்ணகத்துள் (உ௭௧)

கோபலத்திற் காண்பரிய கோகரணங் கோயில்கொண்ட[42]
மாபலத்து மாபலமா மாபலமே - தாபமிலாப் (உ௭௨)

பாகியற்சொல் மங்கையொடும் பாங்கார் பருப்பதத்தில்[43]
யோகியர்க ளேத்திடவாழ் ஒப்புரவே - போகிமுதல் (உ௭௩)

பாடியுற்ற நீலப் பருப்பதத்தில் நல்லோர்கள்
தேடிவைத்த தெய்வத் திலகமே - நீடுபவம் (உ௭௪)

தங்கா தவனேக தங்காபதஞ்சேர்ந்த
நங்காத லான நயப்புணர்வே - [44]சிங்காது (உ௭௫)

---

42. இது ஸ்ரீ சுவாமிகள் துளுவ நாட்டில் உள்ள திருக்கோகரணம் என்னும் திருப்பதியை வழிபட்டது.

43. 273 முதல் 279 வரையிலுள்ள கண்ணிகள் ஸ்ரீ சுவாமிகள் வடநாட்டில் உள்ள சிவஸ்தலங்களை வழிபட்டவை ஆகும்.

44. சிங்குதல் என்பது குறைதல்: தொ. வே.

தண்ணிறைந்து நின்றவர்தாஞ் சார்திருக்கே தாரத்திற்
பண்ணிறைந்த கீதப் பனுவலே - எண்ணிறைந்த (உஎசு)

சான்றோர் வணங்குகொடித் தான்மலையில் வாழ்கின்ற
தேன்றோய் அமுதச் செழுஞ்சுவையே - வான்றோய்ந்த (உஎஎ)

இந்திரரும் நாரணரும் எண்ணில் பிரமர்களும்
வந்திறைஞ்சும் வெள்ளி மலையானே - தந்திடுநல் (உஎஅ)

தாய்க்குங் கிடையாத தண்ணருள்கொண் டன்பருளம்
வாய்க்குங் கயிலை மலையானே - தூய்க்குமரன் (உஎகூ)

தந்தையே என்னருமைத் தந்தையே தாயேயென்[45]
சிந்தையே கோயில்கொண்ட தீர்த்தனே - சந்தமிகும் (உஅ0)

எண்டோ ளுடையாய் எனையுடையாய் மார்பகத்தில்
வண்டோ விடுங்கொன்றை மாலையாய் - தொண்டர்விழி (உஅக)

உண்ணீற் றெளியாய் உருத்திரன்மா லாதியர்தங்
கண்ணிற் கனவினிலுங் காண்பரியாய் - மண்ணுலகில் (உஅஉ)

என்போன் றவர்க்கும் இருள்நீக்கி இன்புதவும்
பொன்போன்ற மேனிப் புராதனனே - மின்போன்ற (உஅங)

செஞ்சடையாய் மூவருக்கும் தேவருக்கு மியாவருக்கும்
அஞ்சடையா வண்ணம் அளிப்போனே - விஞ்சுலகில் (உஅச)

எல்லோர்க்கு நல்லவனே எல்லாஞ்செய் வல்லவனே
எல்லார்க்கும் ஒன்றா யிருப்பவனே - தொல்லூழி (உஅரு)

ஆர்ந்த சராசரங்க ளெல்லா மடிநிழலில்
சேர்ந்தொடுங்க மாநடனஞ் செய்வோனே - சார்ந்துலகில் (உஅசு)

எத்தேவர் மெய்த்தேவ ரென்றுரைக்கப் பட்டவர்கள்
அத்தேவர்க் கெல்லாமுன் னானோனே - சத்தான (உஅஎ)

வெண்மைமுதல் ஐவணமு மேவிஐந்து தேவர்களாய்த்
திண்மைபெறும் ஐந்தொழிலுஞ் செய்வோனே - மண்முதலாம் (உஅஅ)

ஐந்தா யிருசுடரா யான்மாவாய் நாதமுடன்
விந்தாகி யெங்கும் விரிந்தோனே - அந்தணவெண் (உஅகூ)

---

45. 280 முதல் 290 வரையிலுள்ள கண்ணிகளில் ஸ்ரீசுவாமிகள் இறைவனைப் பொதுவில் வழிபட்டு விண்ணப்பித்துக்கொள்வது கண்டு மகிழ்க.

நீறுடையா யாறுடைய நீண்முடியாய் நேடரிய
வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம் - மாறுபட (௨௯0)

எள்ள லடியேன் எனக்குள் ஒளியாமல்[46]
உள்ள படியே யுரைக்கின்றேன் - விள்ளுறுமியான் (௨௯௧)

வன்சொ லுடன் அன்றி வள்ள லுன தன்பர்தமக்
கின்சொ லுடன்பணிந்தோன் றீந்ததில்லை - புன்சொலெனும் (௨௯௨)

பொய்யுரைக்க வென்றுற் புடையெழுவேன் அன்றியொரு
மெய்யுரைக்க வென்றும் விழைந்ததில்லை - வையகத்தில் (௨௯௩)

பொல்லா விரதத்தைப் போற்றியுவந் துண்பதல்லால்
கொல்லா விரதத்தைக் கொண்டதில்லை - அல்லாதார் (௨௯௪)

வன்புகழைக் கேட்க மனங்கொண்ட தல்லாமல்
நின்புகழைக் கேட்க நினைந்ததில்லை - வன்புகொண்டே (௨௯௫)

இன்னடிக்கு நுண்ணிடையார்க் கேவல்புரிந் தேனலதுன்
பொன்னடிக்குத் தொண்டு புரிந்ததில்லை - பண்ணுகின்ற (௨௯௬)

செக்குற்ற எள்ளெனவே சிந்தைநசிந் தேனலது
முக்குற்றந் தன்னை முறித்ததில்லை - துக்கமிகுந் (௨௯௭)

தாவில் வலங்கொண்டு சஞ்சரித்தேன் அல்லதுநின்
கோவில்வலங் கொள்ளக் குறித்ததில்லை - பூவுலகில் (௨௯௮)

வன்னிதியோர் முன்கூப்பி வாழ்த்தினேன் அன்றியுன்றன்
சன்னிதியிற் கைகூப்பித் தாழ்ந்ததில்லை - புன்னெறிசேர் (௨௯௯)

மிண்டரொடு கூடி வியந்ததல்லா லையாநின்
தொண்ட ரொடுங்கூடிச் சூழ்ந்ததில்லை - கண்டவரைக் (௩00)

கன்றுமுகங் கொண்டு கடுகடுத்துப் பார்ப்பதல்லால்
என்று முகமலர்ச்சி யேற்றதில்லை - நன்றுபெறு (௩0௧)

நன்னெஞ்ச ருன்சீர் நவில வதுகேட்டுக்
கன்னெஞ்சைச் சற்றுங் கரைத்ததில்லை - பின்னெஞ்சாப் (௩0௨)

---

46. 291 முதல் 370 வரையிலுள்ள கண்ணிகளில் ஸ்ரீ சுவாமிகள் சிவாநுபவத்திற்குத் தடையாக நிற்பனவற்றையெல்லாம் கணக்கெடுத்துத் தம்மேல் ஏற்றி மனம் கசந்து கூறுவது காண்க.

பண்ணீர்மை கொண்டதமிழ்ப் பாமாலை யாற்றுதித்துக்
கண்ணீர்கொண் டுன்பாற் கனிந்ததிலை - தண்ணீர்போல் (௱0௩)

நெஞ்சம் உருகி நினைக்குமன்பர் போலெனைநீ
அஞ்சலென நின்றாள் அடுத்ததிலை - விஞ்சுலகர் (௱0௪)

மெய்யடிய னென்றுரைக்க வித்தகநின் பொன்னடிக்குப்
பொய்யடிமை வேடங்கள் பூண்டதுண்டு - நையமிகு (௱0௫)

மையல் வினைக்குவந்த மாதர் புணர்ச்சியெனும்
வெய்ய வினைக்குழியில் வீழ்ந்ததுண்டு - துய்யர்தமை (௱0௬)

என்னொன்று மில்லா இயல்பாகப் பின்னொன்று
முன்னொன்று மாக மொழிந்ததுண்டு - மன்னுகின்ற (௱0௭)

மானஞ் செயாது மனநொந் திரப்போர்க்குத்
தானஞ்செய் வாரைத் தடுத்ததுண்டு - ஈனமிலா (௱0௮)

வாரமுரை யாது வழக்கி னிடையோர
வார முரைத்தே மலைந்ததுண்டு - ஈரமிலா (௱0௯)

நெஞ்ச ருடன்கூடி நேசஞ்செய் தும்மடியே
தஞ்சமெனத் தாழாது தாழ்ந்ததுண்டு - எஞ்சலிலாத் (௱௧0)

தாயனையா யுன்றனது சந்நிதிநேர் வந்துமொரு
நேயமுமிலா[47]தொதிபோல் நின்றதுண்டு - தீயவினை (௱௧௧)

மாளாக் கொடிய மனச்செல்வர் வாயிலிற்போய்க்
கேளாச் சிவநிந்தை கேட்டதுண்டு - மீளாத (௱௧௨)

பொல்லாப் புலையரைப்போற் புண்ணியரை வன்மதத்தால்
சொல்லா வசையெல்லாஞ் சொன்னதுண்டு - நல்லோரைப் (௱௧௩)

போற்றாது பொய்யுடம்பைப் போற்றிச் சிவபூசை
ஆற்றாது சோற்றுக் கலைந்ததுண்டு - தேற்றாமல் (௱௧௪)

ஈபத்தா என்றிங் கிரப்போர் தமைக்கண்டு
கோபத்தால் நாய்போற் குரைத்ததுண்டு - பாபத்தால் (௱௧௫)

சிந்தையொன்று வாக்கொன்று செய்கையொன்றாய்ப் போகவிட்டே
எந்தைநினை யேத்தா திருந்ததுண்டு - புந்தியிந்த (௱௧௬)

---

47. உதி ஒதியென மரீஇயது: தொ.வே.

சொல்லைக்கல் லென்றுநல்லோர் சொன்னபுத்தி கேளாமல்
எல்லைக்கல் லொத்தே யிருந்ததுண்டு - தொல்லைவினை (௩௧௭)

ஆழ்த்தா மயவுலகி லற்ப மகிழ்ச்சியினால்
வாழ்த்தாம லுன்னை மறந்ததுண்டு - தாழ்த்தாமற் (௩௧௮)

பூணா வெலும்பணியாய்ப் பூண்டோய்நின் பொன்வடிவங்
காணாது வீழ்நாள் கழித்ததுண்டு - மாணாத (௩௧௯)

காடுபோன் ஞாலக் கடுநடையி லேயிருகால்
மாடுபோல் நின்றுழைத்து வாழ்ந்ததுண்டு - நாடகன்ற (௩௨௦)

கள்ளிவா யோங்குபெருங் காமக் கடுங்காட்டிற்
கொள்ளிவாய்ப் பேய்போற் குதித்ததுண்டு - ஒள்ளியரால் (௩௨௧)

எள்ளுண்ட மாயா இயல்புறுபுன் கல்வியெலாங்
கள்ளுண்ட பித்தனைப்போற் கற்றதுண்டு - நள்ளுலகில் (௩௨௨)

சீராசை யெங்குஞ்சொற் சென்றிடவே வேண்டுமெனும்
பேராசைப் பேய்தான் பிடித்ததுண்டு - தீராவென் (௩௨௩)

சாதகமோ தீவினையின் சாதனையோ நானறியேன்
பாதகமென் றாலெனக்குப் பாற்சோறு - தீதகன்ற (௩௨௪)

தூய்மைநன் றாமென்கின்ற தொன்மையினார் வாய்க்கினிய
வாய்மையென்றால் என்னுடைய வாய்குமட்டுங் - காய்மைதரும் (௩௨௫)

கற்கு நிகராங் கடுஞ்சொலன்றி நன்மதுரச்
சொற்கும் எனக்கும்வெகு தூரங்காண் - பொற்புமிக (௩௨௬)

நண்ணியுனைப் போற்றுகின்ற நல்லோர்க் கினியசிவ
புண்ணியமென் றாலெனக்குப் போராட்டம் - அண்ணலுனை (௩௨௭)

நாளுரையா தேத்துகின்ற நல்லோர்மேல் இல்லாத
கோளுரையென் றாலெனக்குக் கொண்டாட்டம் - நீளநினை (௩௨௮)

நேசிக்கு நல்ல நெறியாஞ் சிவாகமநூல்
வாசிக்க வென்றாலென் வாய்நோகும் - காசிக்கு (௩௨௯)

நீடிக்கி லானாலு நேர்ந்தறிவ தல்லதுவீண்
வேடிக்கை யென்றால் விடுவதிலை - நாடயலில் (௩௩௦)

வீறா முனது விழாச்செயினும் அவ்விடந்தான்
ஆறா யிரங்காத மாங்கண்டாய் - மாறான (௩௩௧)

போகமென்று முள்ளமிகப் பூரிக்கும் அன்றிசிவ
யோகமென்று லென்னுடைய உண்ணடுங்கும் - சோகமுடன் (௩௩௨)

துள்ளலொழிந் தென்னெஞ்சஞ் சோர்ந்தழியுங் காலத்திற்
கள்ளமென்று முள்ளே களித்தெழும்பும் - அள்ளநெறி (௩௩௩)

செல்லென்றால் அன்றிச் சிவசிவா வென்றொருகால்
சொல்லென்றால் என்றனக்குத் துக்கம்வரும் - நல்லநெறி (௩௩௪)

வாம்பலன்கொண் டோர்கள் மறந்தும் பெறாக்கொடிய
சோம்பலென்ப தென்னுடைய சொந்தங்காண் - ஏம்பலுடன் (௩௩௫)

எற்றோ இரக்கமென்ப தென்றனைக்கண் டஞ்சியெனை
உற்றோ ரையுமுடன்விட் டோடுங்காண் - சற்றேனும் (௩௩௬)

ஆக்கமே சேரா தறத்துரத்து கின்றவெறுந்
தூக்கமே யென்றனக்குச் சோபனங்காண் - ஊக்கமிகும் (௩௩௭)

ஏறுடையாய் நீறணியா ஈனர்மனை யாயினும்வெண்
சோறுகிடைத் தாலதுவே சொர்க்கங்காண் - வீறுகின்ற (௩௩௮)

வாழ்வுரைக்கு நல்ல மனத்தர்தமை யெஞ்ஞான்றுந்
தாழ்வுரைத்தல் என்னுடைய சாதகங்காண் - வேள்விசெயுந் (௩௩௯)

தொண்டர் தமைத்துதியாத் துட்டரைப்போ லெப்பொழுதுஞ்
சண்டையென்ப தென்றனக்குத் தாய்தந்தை - கொண்டஎழு (௩௪0)

தாதாட ஓங்கித் தலையாட வஞ்சரொடு
வாதாட என்றாலென் வாய்துடிக்குந் - கோதாடச் (௩௪௧)

சிந்தை திரிந்துழலுந் தீயரைப்போல் நற்றரும
நிந்தையென்ப தென்பழைய நேசங்காண் - முந்தநினை (௩௪௨)

எண்ணென்றால் அன்றி யிடர்செய் திடுங்கொடிய[48]
பெண்ணென்றால் தூக்கம் பிடியாது - பெண்களுடன் (௩௪௩)

---

48. 343 முதல் நான்கு கண்ணிகளை, அறிவிழந்து, ஆண்பால் உணர்ச்சியை முடிந்த பொருளாகக் கொண்டு, பெண்பால் வேற்றுமையை நினைந்து நினைந்து, தன்னையும் பெண்பாலையும் ஆன்மாநுபவம் பெற ஒட்டாது நாசப்படுத்தும் இழிந்த ஆண்பால் மயக்கத்தை அறவே ஒழிப்பதற்காக, தனக்குத்தானே அந்தரங்கத்தில் சொல்லிக் கொண்ட—கனு நோய்க்குக் கனுமருந்து போன்ற—வெறுங்கற்பனை என்றல்லாது, வேறெந்த வகையிலும் கொள்ளற்க. ஆண்பால் வயப்பட்டுத் திகைத்துக் கெடும் இழிந்த பெண்பால் மயக்கத்துக்கும், இஃதொப்பதெனக் கொள்க.

புல்லென்றால் தேகம் புளகிக்கும் அன்றிவிட்டு
நில்லென்றால் என்கண்ணி னீரரும்பும் - புல்லரென்ற (௩௪௪)

பேர்க்கும்விருப் பெய்தாத பெண்பேய்கள் வெய்யசிறு
நீர்க்குழியே யான்குளிக்கு நீர்ப்பொய்கை - சீர்க்கரையின் (௩௪௫)

ஏறுப்பெண் மாத ரிடைக்கு ளளிந்தென்றும்
ஆறுப்புண் ணுக்கே யடிமைநான் - தேறாத (௩௪௬)

வெஞ்சலஞ்செய் மாயா விகாரத்தி னல்வரும்வீண்
சஞ்சலமெல் லாமெனது சம்பந்தம் - அஞ்செழுத்தை (௩௪௭)

நேர்ந்தார்க் கருள்புரியு நின்னடியர் தாமேயுஞ்
சார்ந்தா லதுபெரிய சங்கட்டம் - ஆர்ந்திடுமான் (௩௪௮)

காந்தும் விழிப்புலியைக் கண்டதுபோல் நல்லகுண
சாந்தமெனைக் கண்டால் தலைசாய்க்கும் - ஆந்தகையோர் (௩௪௯)

சேர மனத்திற் செறிவித் திடும்புருட
நீரமெனைக் கண்டாற் சிரிக்குங்காண் - கோரமதைக் (௩௫0)

காணி லுலகிற் கருத்துடையோர் கொள்ளுகின்ற
நாண மெனைக்கண்டு நாணுங்காண் - ஏணு லுலகில் (௩௫௧)

ஞானங் கொளாவெனது நாமமுரைத் தாலுமபி
மானம் பயங்கொண்டு மாய்ந்துவிடும் - ஆனவுன்றன் (௩௫௨)

கேண்மைக் குலத்தொண்டர் கீர்த்தி பெறக்கொண்ட
ஆண்மைக்கு நானென்றா லாகாது - வாண்மைபெறும் (௩௫௩)

ஐயநின்றாட் பூசிக்கு மன்பருள்ளத் தன்பிற்கும்
பொய்ய னெனக்கும் பொருத்தமிலை - வையகத்தோர் (௩௫௪)

இல்லெனினுஞ் சும்மாநீ யீகின்றே னென்றொருசொல்
சொல்லெனினுஞ் சொல்லத் துணிவுகொளேன் - நல்லையெமக் (௩௫௫)

ஈயென்பா ரன்றியன்னை யென்பயத்தா னின்சோற்றில்
ஈயென்ப தற்கு மிசையாள்காண் - ஈயென்பார்க் (௩௫௬)

கெண்ணுஞ் சிலர்மண் ணிடுவா ரெனக்கந்த
மண்ணுங் கொடுக்கமனம் வாராது - அண்ணுறுமென் (௩௫௭)

இல்லை யடைந்தே யிரப்பவருக் கெப்போதும்
இல்லையென்ப தென்வாய்க் கியல்புகாண் - தொல்லுலகை (௩௫௮)

ஆண்டானு மன்றி அயலார்புன் கிரைமணிப்
பூண்டானு மென்கண் பொறுக்காது - நீண்டஎழு (௩௫௯)
தீப முறுவோர் திசையோர்மற் றியாவர்க்குங்
கோப மதுநான் கொடுக்கினுண்டு - ஆபத்தில் (௩௬௦)
வீசங் கொடுத்தெட்டு வீச மெனப்பிறரை
மோசஞ் செயநான் முதற்பாதம் - பாசமுளோர் (௩௬௧)
கைக்குடைய வேயெழுதிக் கட்டிவைத்த இவ்வுலகப்
பொய்க்கதையே யான்படிக்கும் புத்தகங்கள் - மெய்ப்படுநின் (௩௬௨)
மந்திரத்தை உச்சரியா வாயுடையேன் என்போலத்
தந்திரத்தில் கைதேர்ந் தவரில்லை - எந்தைஇனி (௩௬௩)
ஏதென் றுரைப்பே னிருங்கடல்சூழ் வையகத்தில்
சூதென்ப தெல்லாமென் சுற்றங்காண் - ஓதுகின்ற (௩௬௪)
நஞ்சமெலாங் கூட்டி நவின்றிடினும் ஒவ்வாத
வஞ்சமெலா மென்கை வசங்கண்டாய் - அஞ்சவரும் (௩௬௫)
வீணவமாம் வஞ்ச வினைக்குமுத லாகிநின்ற
ஆணவமே என்காணி ஆட்சியதாம் - மாணிறைந்த (௩௬௬)
நல்லறிவே என்னைநெடு நாட்பகைத்த தன்றிமற்றைப்
புல்லறிவே என்னுட் பொருள்கண்டாய் - சொல்லவொணா (௩௬௭)
வேடருக்குங் கிட்டாத வெங்குணத்தா லிங்குழலும்
மூடருக்குள் யானே முதல்வன்காண் - வீடடுத்த (௩௬௮)
மேதையர்கள் வேண்டா விலங்காய்த் திரிகின்ற
பேதையென்ப தென்னுரிமைப் பேர்கண்டாய் - பேதமுற (௩௬௯)
ஓதுவதென் பற்பலவாய் உற்றதவத் தோர்நீத்த
தீதுகளெல் லாமெனது செல்வங்காண் - ஆதலினால் (௩௭௦)
பேயினையொத் திவ்வுலகில் பித்தாகி நின்றவிந்த
நாயினைநீ ஆண்டிடுதல் நன்கன்றே - ஆயினுமுன்[49] (௩௭௧)

---

49. 371 முதல் 386 வரையிலுள்ள கண்ணிகளில் ஸ்ரீ சுவாமிகள் அடியார்களுடைய குற்றங் குறைகளைப் பொருட்படுத்தாத இறைவன் பேருளை நினைவுபடுத்தி இறைஞ்சுவது காண்க.

மண்ணா ருயிர்களுக்கும் வானவர்க்குந் தானிரங்கி
உண்ணாக் கொடுவிடமும் உண்டனையே - எண்ணாமல் (௧௭௨)

வேய்த்தவள வெற்பெடுத்த வெய்யஅரக் கன்தனக்கும்
வாய்த்தவர மெல்லாம் வழங்கினையே - சாய்த்தமன (௧௭௩)

வீம்புடைய வன்முனிவர் வேள்விசெய்து விட்டகொடும்
பாம்பையெல்லாந் தோளிற் பரித்தனையே - நாம்பெரியர் (௧௭௪)

எஞ்சேமென் றுணவத்தா லேற்ற இருவரையும்
அஞ்சேலென் றாட்கொண் டருளினையே - துஞ்சுபன்றித் (௧௭௫)

தோயாக் குருளைகளின் துன்பம் பொறாதன்று
தாயாய் முலைப்பாலுந் தந்தனையே - வாயிசைக்குப் (௧௭௬)

பாண்டியன்முன் சொல்லிவந்த பாணன் பொருட்டடிமை
வேண்டி விறகெடுத்து விற்றனையே - ஆண்டொருநாள் (௧௭௭)

வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித்
தூய்முடிமேல் மண்ணுஞ் சுமந்தனையே - ஆய்துயர (௧௭௮)

மாவகஞ்சேர் மாணிக்க வாசகருக் காய்க்குதிரைச்
சேவகன்போல் வீதிதனில் சென்றனையே - மாவிசயன் (௧௭௯)

வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல் லால்எறிந்த
கல்லடிக்கும் உள்ளங் களித்தனையே - மல்லலுறும் (௧௮௦)

வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே - சொல்லகலின் (௧௮௧)

நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே - கோளகல (௧௮௨)

வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னைஉயர்
கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே - ஏச்சறுநல் (௧௮௩)

[50] ஆறடுத்த வாகீசர்க் காம்பசியைக் கண்டுகட்டுச்
சோறெடுத்துப் பின்னே சுமந்தனையே - கூறுகின்ற (௧௮௪)

தொன்மைபெருஞ் சுந்தரர்க்குத் தோழனென்று பெண்பரவை
நன்மனைக்குத் தூது நடந்தனையே - நன்மைபெற (௧௮௫)

---

50. ஆறு என்பது வழி : தொ.வே.

இற்றென்ற இற்றென்று எத்தனையோ பேர்கள்செய்த
குற்றங் குணமாகக் கொண்டனையே - பற்றுலகில்[51] (௩௮௬)

அன்புடைய தாயர்களோ ராயிரம்பே ரானாலும்
அன்புடையாய் நின்னைப்போ லாவாரோ - இன்பமுடன் (௩௮௭)

ஈண்டவரும் தந்தையர்கள் எண்ணிலரே ஆயினுமென்
ஆண்டவனே நின்னைப்போ லாவாரோ - பூண்டகைகொள் (௩௮௮)

ஏனுடைய நின்னையன்றி எந்தை பிரானேஉன்
ஆணைஎனக் குற்றதுணை யாருமில்லை - நாணமுளன் (௩௮௯)

ஆனேன் பிழைக ளனைத்தினையு மையாநீ
தானே பொறுக்கத் தருங்கண்டாய் - மேல்நோற்ற (௩௯௦)

மாற்றனுக்கு மெட்டா மலர்க்கழலோய் நீயென்னைக்
கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க - பாற்றவள (௩௯௧)

நந்தக் கடற்புவியில் நானின்னும் வன்பிறவிப்
பந்தக் கடலழுந்தப் பண்ணற்க - முந்தைநெறி (௩௯௨)

நின்றேயுன் பொற்றாள் நினையாதார் பாழ்மனையில்
சென்றே உடலோம்பச் செய்யற்க - நன்றேநின் (௩௯௩)

றோங்கு நெறியோர் உளத்தமர்ந்தோய் என்றன்னைத்
தீங்கு நெறியில் செலுத்தற்க - வீங்கடங்கி (௩௯௪)

வாழி யெனத்தான் வழுத்தினுமென் சொற்கடங்கா
ஏழை மனத்தா விளைக்கின்றேன் - வாழுமரக் (௩௯௫)

கோடேறும் பொல்லாக் குரங்கெனவே பொய்யுலகக்
காடேறு நெஞ்சாற் கலங்குகின்றேன் - பாடேறும் (௩௯௬)

உள்ளறியா மாயையெனு முட்பகையார் காமமெனும்
கள்ளறியா துண்டு கவல்கின்றேன் - தெள்ளூறுமென் (௩௯௭)

கண்ணணையாய் நின்தாள் கமலங் களைவழுத்தா
மண்ணணையார் பாற்போய் மயங்குகின்றேன் - திண்ணமிலாக் (௩௯௮)

---

51. 387 முதல் 417 வரையிலுள்ள கண்ணிகளில் ஸ்ரீசுவாமிகள் இறைவனது தனிப்பெருங் கருணையை முன்னிலைப்படுத்தி வீடுபேற்றிற்கு ஆகும் தம் கோரிக்கைகளை விவரித்து உள்நெகிழ்ந்து முறையிட்டுக் கொள்வதைக் கண்டுணர்க.

காதரவாந் துன்பக் கவலைக் கடல்வீழ்ந்தே
ஆதரவொன் றின்றி அலைகின்றேன் - ஓதுமறை (௩௯௯)

ஆத்த ரெனுமுன் அடியார் தமைக்கண்டு
நாத்திகஞ்சொல் வார்க்கு நடுங்குகின்றேன் - பாத்துண்டே (௪௦௦)

உய்வ தறியா உளத்தினே னுய்யும்வகை
செய்வ தறியேன் திகைக்கின்றேன் சைவநெறி (௪௦௧)

உண்ணிரம்பு நின்கருணை உண்டோ இலையோஎன்
றெண்ணியெண்ணி உள்ளம் இளைக்கின்றேன் - மண்ணினிடைக் (௪௦௨)

கொன்செய்கை கொண்டகொடுங் கூற்றன் குறுகிலதற்
கென்செய்வோ மென்றெண்ணி எய்க்கின்றேன் - முன்செய்வினை (௪௦௩)

ஆமறையா நோயா லகமெலிவுற் றையோநான்
தாமரையி னீர்போல் தயங்குகின்றேன் - தாமமுடி (௪௦௪)

வள்ளல் அருள்கொடுக்க வந்திலனே இன்னுமென
உள்ளமது நீரா யுருகுகின்றேன் - எள்ளலுறு (௪௦௫)

மாலைபாய்ந் தின்னுமென்ன வந்திடுமோ என்றுநெஞ்சம்
ஆலைபாய்ந் துள்ளம் அழிகின்றேன் - ஞாலமிசைக் (௪௦௬)

கோட்பார வாழ்க்கைக் கொடுஞ்சிறையி னின்றென்னை
மீட்பா ரிலாது விழிக்கின்றேன் - மீட்பாகும் (௪௦௭)

ஆற்றி லொருகாலும் அடங்காச் சமுசாரச்
சேற்றிலொருகாலும்வைத்துத் தேய்கின்றேன் - தோற்றுமயற் (௪௦௮)

பாகமுறு வாழ்க்கையெனும் பாலைவனத் துன்னருள்நீர்த்
தாகமது கொண்டே தவிக்கின்றேன் - மோகமதில் (௪௦௯)

போய்ப்படுமோர் பஞ்சப் பொறிகளால் வெம்பாம்பின்
வாய்ப்படுமோர் தேரையைப்போல் வாடுகின்றேன் - மாய்ப்பவரு (௪௧௦)

மீன்போலு மாதர் விழியால் வலைப்பட்ட
மான்போலுஞ் சோர்ந்து மடங்குகின்றேன் - கான்போல (௪௧௧)

வீற்று முலக விகாரப் பிரளயத்தில்
தோற்றுஞ் சுழியுட் சுழல்கின்றேன் - ஆற்றவுநான் (௪௧௨)

இப்பாரில் உன்மேலன் பில்லெனினும் அன்பனென
ஒப்பாரி யேனும் உடையேன்காண் - தப்பாய்ந்த (௪௧௩)

மட்டுவிடேன் உன்தாள் மறக்கினும்வெண் ணீற்றுநெறி
விட்டுவிடேன் என்றெனைக்கை விட்டுவிடேல் - தட்டனைய (சகச)

மாலுந் திசைமுகனும் வானவரும் வந்துதடுத்
தாலுஞ் சிறியேனைத் தள்ளிவிடேல் - சாலுலக (சகரு)

வாதனைகொண் டோமென்று மற்றெவரா னாலும்வந்து
போதனைசெய் தாலுமெனைப் போக்கிவிடேல் - நீதயவு (சகசு)

சூழ்ந்திடுக என்னையுநின் தொண்டருடன் சேர்த்தருள்க
வாழ்ந்திடுக நின்தாள் மலர்.[52] (சகஎ)

திருச்சிற்றம்பலம்

உ. விண்ணப்பக் கலிவெண்பா

முற்றிற்று.

---

52. இவ்விண்ணப்பக் கலிவெண்பாவை ஒருமையுடன் ஓதும் அடியார்கள் உளம் நெகிழ்ச்சியுற்று ஆன்மானுபவம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவகணபதி துணை

நெஞ்சறிவுறுத்தல்[53]

காப்பு

குறள்வெண்பா

திருச்சிற்றம்பலம்

சீர்சான்ற முக்கட் சிவகளிற்றைச் சேர்ந்திடிலாம்
பேர்சான்ற இன்பம் பெரிது. (க)

ஆறு முகத்தான் அருளடையின் ஆம்எல்லாப்
பேறு மிகத்தான் பெரிது. (உ)

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மலைபோல் பொலிவுற் றசையாமல்[54]
எந்நாளும் வாழியநீ என்னெஞ்சே - பின்னுன (க)

இப்பிறப்பி னோடிங் கெழுபிறப்பும் அன்றியெனை
எப்பிறப்பும் விட்டகலா என்னெஞ்சே - செப்பமுடன் (உ)

செவ்வொருசார் நின்று சிறியேன் கிளக்கின்ற
இவ்வொருசொல் கேட்டிடுக என்னெஞ்சே - எவ்வெவ் (ந)

உலகும் பரவும் ஒருமுதலாய் எங்கும்[55]
இலகும் சிவமாய் இறையாய் - விலகும் (ச)

உருவாய் உருவில் உருவாய் உருவுள்
அருவாய் அருவில் அருவாய் - உருஅருவாய் (ரு)

---

53. நெஞ்சறிவுறுத்தல் என்னும் இவ்வரும் பெருநூலுக்கு நம் பெருமான் இராமலிங்க அடிகளாருடைய கையெழுத்துப் பிரதி இதுகாறும் கிடைக்க வில்லை. அடிகளாரக்கு ஆட்பட்ட அன்பராகிய திரு. தருமலிங்கம் பிள்ளை அவர்களது கையெழுத்து ஏட்டுப் பிரதி ஒன்றே கிடைத்தது. இதனோடு திரு. தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் 1867-இல் அச்சிற் பதித்த நூலுமே இங்கு மேற்கொண்டிருக்கும் மூலம் ஆகும்.

54. முதல் மூன்று கண்ணிகளில் நம் பெருமான் இன்சொல் கூறித் தமது நெஞ்சை முன்னிலைப்படுத்தியிருப்பது காண்க.

55. 4 முதல் 39 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவன் எது எதுவாய் எவ்வெவ்வனம் திகழ்கிறான் என்பதை விளக்கவைத்திருப்பது கண்டு மகிழ்க.

நித்தியமாய் நிர்க்குணமாய் நிற்சலமாய் நின்மலமாய்ச்
சத்தியமாய்ச் சத்துவமாய்த் தத்துவமாய் - முத்தியருள் (சு)

ஒன்றாய்ப் பலவாய் உயிராய் உயிர்க்குயிராய்
நன்றாய் நவமாய் நடுநிலையாய் - நின்றோங்கும் (எ)

வேதமாய் வேதாந்த வித்தாய் விளங்குபர
நாதமாய் நாதாந்த நாயகமாய் - ஓதும் (அ)

செறிவாய்த் திரமாய்ச் சிதாகாச மாய்ச்சொல்
அறிவாய் அறிவுள் அறிவாய் - நெறிமேவு (கூ)

காலமாய்க் காலம் கடந்த கருத்தாய்நற்
சீலமாய்ச் சிற்பரமாய்ச் சின்மயமாய் - ஞாலம் (கo)

பொருந்தாப் பொருளாய்ப் பொருந்தும் பொருளாய்ப்
பெருந்தா ரகஞ்சூழ்ந்த பேறாய்த் - திருந்தாத (கக)

போக்கும் வரத்துமிலாப் பூரணமாய்ப் புண்ணியர்கள்
நோக்குந் திறத்தெழுந்த நுண்ணுணர்வாய் - நீக்கமிலா (கஉ)

ஆதியாய் ஆதிநடு அந்தமாய் ஆங்ககன்ற
சோதியாய்ச் சோதியாச் சொற்பயனாய் - நீதியாய் (கங)

ஆங்கார நீக்கும் அகார உகாரமதாய்
ஓங்கார மாய்அவற்றின் உட்பொருளாய்ப் - பாங்கான (கச)

சித்தமாய்ச் சித்தாந்த தேசாய்த் திகம்பரமாய்ச்
சத்தமாய்ச் சுத்த சதாநிலையாய் - வித்தமாய் (கரு)

அண்டமாய் அண்டத் தணுவாய் அருளகண்டா
கண்டமாய் ஆனந்தா காரமதாய் - அண்டத்தின் (கசு)

அப்பாலாய் இப்பாலாய் அண்மையாய்ச் சேய்மையதாய்
எப்பாலாய் எப்பாலும் இல்லதுமாய்ச் - செப்பாலும் (கஎ)

நெஞ்சாலும் காய நிலையாலும் அந்நிலைக்குள்
அஞ்சாலுங் காண்டற் கரும்பதமாய் - எஞ்சாப் (கஅ)

பரமாய்ப் பகாப்பொருளாய்ப் பாலாய்ச் சுவையின்
தரமாய்ப் பரப்பிரமம் தானாய் - வரமாய (ககூ)

ஒன்பான் வடிவாய் ஒளியெண் குணக்கடலாய்
அன்பாய் அகநிலையாய் அற்புதமாய் - இன்பாய் (உo)

அகமாய்ப் புறமாய் அகம்புறமாய் நீங்கும்
சகமாய்ச் சகமாயை தானாய் - சகமாயை (உக)

இல்லாதாய் என்றும் இருப்பதாய் யாதொன்றும்
சொல்லாதார்க் கின்பம் கொடுப்பதாய் - எல்லார்க்கும் (உஉ)

நண்ணுவதாய் நண்ணாதாய் நல்வினையாய் அல்வினையாய்
எண்ணுவதாய் எண்ணின் இயலாதாய் - எண்ணுகின்ற (உந)

வானாய் நிலனாய் வளியாய் அனலாய்நீர்
தானாய் வழிபடுநான் தான்தானாய் - வானாதி (உச)

ஒன்றிடத்தும் ஒன்றாதாய் ஒன்றுவதாய் ஆனந்தம்
மன்றிடத்தில் என்றும் வதிவதாய் - ஒன்றியதோர் (உரு)

ஐந்நிறமாய் அந்நிறத்தின் ஆமொளியாய் அவ்வொளிக்குள்
எந்நிறமும் வேண்டா இயனிறமாய் - முந்நிறத்தில் (உசு)

பூப்பதுவாய்க் காப்பதுவாய்ப் போக்குவதாய்த் தேக்குவதாய்
நீப்பதுவாய்த் தன்னுள் நிறுத்துவதாய்ப் - பூப்பதின்றி (உஎ)

வாளா திருப்பதுவாய் வாதனா தீதமாய்
நீளாது நீண்ட நிலையினதாய் - மீளாப் (உஅ)

பெரிதாய்ச் சிறிதாய்ப் பெரிதும் சிறிதும்
அரிதாய் அரிதில் அரிதாய்த் - துரிய (உகூ)

வெளியாய்ப் பரவெளியாய் மேவுபர விந்தின்
ஒளியாய்ச் சிவானந்த ஊற்றாய்த் - தெளியாதி (நO)

கற்பமாய்க் காணுஞ்சங் கற்ப விகற்பமாய்
நிற்பதா கார நிருவிகற்பாய்ப் - பொற்புடைய (நக)

முச்சுடராய் முச்சுடர்க்கும் முன்னொளியாய்ப் பின்னொளியாய்
எச்சுடரும் போதா இயற்சுடராய் - அச்சில் (நஉ)

நிறைவாய்க் குறைவாய் நிறைகுறை வில்லாதாய்
மறைவாய் வெளியாய் மனுவாய் - மறையாத (நந)

சச்சிதா னந்தமதாய்த் தன்னிகரொன் றில்லாதாய்
விச்சையால் எல்லாம் விரிப்பதுவாய் - மெச்சுகின்ற (நச)

யோகமாய் யோகியர் யோகத் தெழுந்தசிவ
போகமாய்ப் போகியாய்ப் போகமருள் - ஏகமாய்க் (நரு)

கேவலமாய்ச் சுத்த சகலமாய்க் கீழ்ச்சகல
கேவலங்கள் சற்றும் கிடையாதாய் - மாவலத்தில் (௩௬)

காட்சியாய்க் காண்பானாய்க் காணப் படுபொருளாய்ச்
சூட்சியாய்ச் சூட்சியால் தோய்வரிதாய் - மாட்சிபெறச் (௩௭)

செய்பவனாய்ச் செய்தொழிலாய்ச் செய்பொருளாய்ச் செய்தொழிலால்
உய்பவனாய் உய்விக்கும் உத்தமனாய் - மொய்கொள் (௩௮)

அதுவாய் அவளாய் அவனாய் அவையும்
கதுவாது நின்ற கணிப்பாய்க் - கதுவாமல் (௩௯)

ஐயம் திரிபோ டறியாமை விட்டகற்றிப்[56]
பொய்யென்ப தொன்றும் பொருந்தாராய்ச் - செய்யென்ற (௪௦)

ஓர்வினையில் இன்பமுமற் றோர்வினையில் துன்பமுமாம்
சார்வினைவிட் டோங்கும் தகையினராய்ப் - பார்வினையில் (௪௧)

ஓர்பால் வெறுப்புமற்றை ஓர்பால் விருப்புமுறும்
சார்பால் மயங்காத் தகையினராய்ச் - சார்பாய (௪௨)

ஓரிடத்தில் தண்மையுமற் றோரிடத்தில் வெஞ்சினமும்
பாரிடத்தில் கொள்ளாப் பரிசினராய் - நீரிடத்தில் (௪௩)

தண்மைநிக ராதென்றும் சாந்தம் பழுத்துயர்ந்த
ஒண்மையுடன் ஒன்றை உணர்ந்தவராய் - வெண்மையிலா (௪௪)

ஒன்றும் அறிவின் உதயாதி ஈறளவும்
என்றும் இரண்டென்ப தில்லவராய் - மன்றவொளிர் (௪௫)

அம்மூன்றி னுள்ளே அடுக்கிவரும் ஒன்றகன்ற
மும்மூன்றின் மூன்றும் முனிந்தவராய்த் - தம்மூன்றி (௪௬)

வீடாது நின்றும் விரிந்தும் விகற்பநடை
நாடாது நான்கும் நசித்தவராய் - ஊடாக (௪௭)

எஞ்சாமல் அஞ்சின் இடமாய் நடமாடும்
அஞ்சாதி அஞ்சும் அறுத்தவராய் - எஞ்சாமல் (௪௮)

ஈண்டாண் டருளும் இறையோர் தமையாறில்
ஆண்டாண்டு கண்டா றகன்றவராய் - ஈண்டாது (௪௯)

---

56. 40 முதல் 52 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவன் திருவடிக்கு ஆட்பட்ட அடியார்களுடைய சிறப்பியல்புகள் இன்னவென விவரித்திருப்பது கண்டுணர்க.

வாழியுற்ற வானோரும் வந்து தமக்கிரண்டோ
டேழியற்ற ஏழும் இகந்தவராய் - ஊழியற்றக் (ரு0)

கட்டிநின்றுட் சோதியொன்று காணத் தொடங்குகின்றோர்
எட்டுகின்ற எட்டின்மேல் எய்தினராய்க் - கட்டுகின்ற (ருக)

தேன்தோய் கருணைச் சிவங்கலந்து தேக்குகின்ற
சான்றோர்தம் உள்ளம் தணவாதாய் - மான்றமலத்[57] (ருஉ)

தாக்கொழிந்து தத்துவத்தின் சார்பாம் தனுவொழிந்து[58]
வாக்கொழிந்து மாறு மனமொழிந்து - ஏக்கமுற (ருங)

வாய்க்கும் சுகமொழிந்து மண்ணொழிந்து விண்ணொழிந்து
சாய்க்கும் இராப்பகலும் தானொழிந்து - நீக்கொழிந்து (ருச)

நானுமொழி யாதொழிந்து ஞானமொழி யாதொழிந்து
தானும் ஒழியாமற் றானொழிந்து - மோனநிலை (ருரு)

நிற்கும் பிரம நிரதிசயா னந்தமதாய்
நிற்கும் பரம நிருத்தனெவன் - தற்பரமாய் (ருசு)

நின்றான் எவனன்பர் நேயமனத் தேவிரைந்து[59]
சென்றான் எவன்சர்வ தீர்த்தனெவன் - வன்தீமை (ருஎ)

இல்லான் எவன்யார்க்கும் ஈசன் எவன்யாவும்
வல்லான் எவனந்தி வண்ணனெவன் - கல்லாவில் (ருஅ)

சுட்டகன்ற ஞான சுகாதீதம் காட்டிமுற்றும்
விட்டகன்ற யோக விநோதனெவன் - மட்டகன்ற (ருகூ)

அண்டங்கள் எல்லாம் அணுவில் அடைத்தருளித்[60]
திண்டங்கு மாறிருத்தும் சித்தனெவன் - பண்டங்கு (சு0)

---

57. மான்ற மலத்தாக்கு என்பது மயக்குதலைச் செய்கின்ற மலத்தினெதிரீடு எனக் கொள்க : தொ.வே.

58. 53 முதல் நான்கு கண்ணிகளில் இறைவன் பரம நிருத்தனாக நிற்கும் இறும்பூதினை இயம்புவது காண்க.

59. 57 முதல் மூன்று கண்ணிகளில் இறைவனுடைய கல்யாண குணங்கள் கண்டிருப்பது காண்க.

60. 60 முதல் 99 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவன் ஒரு சர்வசித்தனே போல் செய்தருளும் அதி அற்புதங்கள் அமைந்திருப்பதை மனமுவந்து காண்க.

வியாச் சிறுபெண் விளையாட்டுள் அண்டமெலாம்
தேயாது கூட்டுவிக்கும் சித்தனெவன் - யாயாதும் (௬௧)

வேண்டாமை வேண்டுவது மேவாத சித்தர்தமைத்
தீண்டாது தீண்டுகின்ற சித்தனெவன் - ஈண்டோது (௬௨)

பற்றுருவாய்ப் பற்றுப் பரவணுவின் உள்விளங்கும்
சிற்றுருவாய் உள்ளொளிக்குஞ் சித்தனெவன் - மற்றுருவின் (௬௩)

வையாது வைத்துலகை மாவிந் திரசாலம்
செய்யாது செய்விக்கும் சித்தனெவன் - நையாமல் (௬௪)

அப்பிடைவைப் பாருலகில் ஆருயிரை மாயையெனும்
செப்பிடைவைத் தாட்டுகின்ற சித்தனெவன் - ஒப்புறவே (௬௫)

நில்லாத காற்றை நிலையாக் கடத்தடைத்துச்
செல்லாது வைக்கின்ற சித்தனெவன் - பொல்லாத (௬௬)

வெம்பாம்பை மேலணிந்தோர் வெம்புற்றின் உள்ளிருந்தே
செம்பாம்பை ஆட்டுகின்ற சித்தனெவன் - தம்பாங்கர் (௬௭)

ஒண்கயிற்றான் ஒன்றின்றி உண்ணின் றுயிர்களையூழ்த்
திண்கயிற்றான் ஆட்டுகின்ற சித்தனெவன் - வண்கையுடைத் (௬௮)

தானசைந்தால் மற்றைச் சகமசையும் என்றுமறை
தேனசையச் சொல்லுகின்ற சித்தனெவன் - ஊனமின்றிப் (௬௯)

பேர்த்துயிர்க ளெல்லாம்ஓர் பெண்பிள்ளை யின்வசமாய்ச்
சேர்த்து வருவிக்கும் சித்தனெவன் - போர்த்துமிக (௭௦)

அல்லிரவுங் காலை அகிலமெலாம் தன்பதத்தோர்
சில்லிரவில் சேர்க்கின்ற சித்தனெவன் - பல்வகையாய்க் (௭௧)

கைகலந்த வண்மைக் கருப்பா சயப்பையுள்
செய்கருவுக் கூட்டுவிக்கும் சித்தனெவன் - உய்கருவை (௭௨)

மெய்வைத்த வேர்வையினும் வீழ்நிலத்தும் அண்டத்தும்
செய்வித்தங் கூட்டுவிக்குஞ் சித்தனெவன் - உய்விக்கும் (௭௩)

வித்தொன்றும் இன்றி விளைவித் தருளளிக்கும்
சித்தென்றும் வல்லவொரு சித்தனெவன் - சத்துடனே (௭௪)

உற்பத்தி யாயுலகில் ஒன்பதுவாய்ப் பாவைகள்செய்
சிற்பத் தொழில்வல்ல சித்தனெவன் - பற்பலவாம் (௭௫)

காரா ழிகளைக் கரையின்றி எல்லையிலாச்
சேருழி நிற்கவைத்த சித்தனெவன் - போராத (எசு)

நீர்மேல் நெருப்பை நிலையுறவைத் தெவ்வுலகும்
சீர்மே வுறச்செய்யும் சித்தனெவன் - பாராதி (எஎ)

ஐந்திலைந்து நான்கொருமூன் றுமிரண்டொன் றுய்முறையே
சிந்தையுற நின்றருளும் சித்தனெவன் - பந்தமுற (எஅ)

ஆண்பெண்ணைப் பெண்ணை அண்மை தனைவானின்
சேண்பண்ண வல்லவொரு சித்தனெவன் - மாண்பண்ணைப் (எகூ)

பேடாணைப் பெண்ணைப் பெண்ணண் பெரும்பேடாய்ச்
சேடாகச் செய்யவல்ல சித்தனெவன் - சேடாய (அ0)

வெண்மை கிழமாய் விருத்தமந்த வெண்மையதாய்த்
திண்மை பெறச்செய்யும் சித்தனெவன் - ஒண்மையிலா (அக)

ஓட்டினைச்செம் பொன்னை யுயர்செம்பொன் ஓடாகச்
சேட்டையறச் செய்கின்ற சித்தனெவன் - காட்டிலுறு (அஉ)

காஞ்சிரத்தைக் கற்பகமாய்க் கற்பகத்தைக் காஞ்சிரமாய்த்
தேஞ்சிவணச் செய்கின்ற சித்தனெவன் - வாஞ்சையுற (அங)

நாரணன்சேய் நான்முகனை நான்முகன்சேய் நாரணனைச்
சீரணவச் செய்யவல்ல சித்தனெவன் - பேரணவக் (அச)

கொம்மை பெறுங்கோடா கோடியண்டம் எல்லாமோர்
செம்மயிர்க்கால் உட்புகுத்தும் சித்தனெவன் - செம்மையிலா (அரு)

வெம்புலியை வெண்பால் விளைபசுவாய் அப்பசுவைச்
செம்புலியாய்ச் செய்யவல்ல சித்தனெவன் - அம்புலியை (அசு)

அங்கதிரோன் செங்கதிராய் அம்புலியாய்ப் பம்புகின்ற
செங்கதிரைச் செய்யவல்ல சித்தனெவன் தூங்கமுறு (அஎ)

ஓரணுவோர் மாமலையாய் ஓர்மா மலையதுவோர்
சீரணுவாய்ச் செய்யவல்ல சித்தனெவன் - வீரமுடன் (அஅ)

முன்னகையா நின்றதொரு முப்புரத்தை அன்றொருகால்
சின்னகையால் தீமடுத்த சித்தனெவன் - முன்னயன்மால் (அகூ)

மற்றிருந்த வானவரும் வாய்ந்தசைக்கா வண்ணமொரு
[61]சிற்றுரும்பை நாட்டிநின்ற சித்தனெவன் - மற்றவர்போல் (கூ0)

61. சில்-துரும்பு எனப்பிரித்து அற்பமாகிய துரும்பெனப் பொருள் கொள்க : தொ.வே.

அல்லா அயனும் அரியும் உருத்திரனும்
செல்லா நெறிநின்ற சித்தனெவன் - ஒல்லாத (௯௧)
கல்லிற் சுவையாய்க் கனியிற் சுவையிலதாய்ச்
செல்லப் பணிக்கவல்ல சித்தனெவன் - அல்லலறப் (௯௨)
பார்க்கின்ற யாவர்கட்கும் பாவனா தீதனெனச்
சீர்க்கின்ற மெய்ஞ்ஞானச் சித்தனெவன் - மார்க்கங்கள் (௯௩)
ஒன்றென்ற மேலவரை ஒன்றென் றுரைத்தவர்பால்
சென்றூன்றி நிற்கின்ற சித்தனெவன் - அன்றொருநாள் (௯௪)
கல்லானை தின்னக் கரும்பளித்துப் பாண்டியன்வீண்
செல்லா தளித்தமகா சித்தனெவன் - சொல்லாத (௯௫)
ஒன்றே இரண்டேமேல் ஒன்றிரண்டே என்பவற்றுள்
சென்றே நடுநின்ற சித்தனெவன் - சென்றேறும் (௯௬)
அத்திரத்தை மென்மலராய் அம்மலரை அத்திரமாய்ச்
சித்திரத்தைப் பேசுவிக்கும் சித்தனெவன் - எத்தலத்தும் (௯௭)
[62]சங்கமதே தாபரமாய்த் தாபரமே சங்கமதாய்ச்
செங்கைவிடா தாற்றவல்ல சித்தனெவன் - தங்குகின்ற (௯௮)
சத்தெல்லாம் ஆகிச் சயம்புவாய் ஆனந்தச்
சித்தெல்லாம் வல்லசிவ சித்தனெவன் - தத்தெல்லாம் (௯௯)
நீட்டாது நெஞ்சம் நிலைத்தவர்க்கும் தன்னுண்மை[63]
காட்டாது காட்டிநிற்கும் கள்வனெவன் - பாட்டோடு (௧௦௦)
வண்டாலுங் கொன்றை மலரோய் எனமறைகள்
கண்டாலும் காணாத கள்வனெவன் - தொண்டாக (௧௦௧)
அள்ளம் செறியார்க்கே அன்றி அறிவார்க்குக்
கள்ளம் செறியாத கள்வனெவன் - எள்ளலறக் (௧௦௨)
கொண்டவெலாந் தன்பால் கொடுக்குமவர் தம்மிடத்தில்
கண்டவெலாம் கொள்ளைகொளுங் கள்வனெவன் - கொண்டுளத்தில் (௧௦௩)

---

62. சங்கமம் என்பது சங்கமென விகாரமாயிற்று: தொ.வே.

63. 100 முதல் ஒன்பது கண்ணிகளில் இறைவன் ஒரு கள்வனேபோல் மறைந்து நின்று தொழிற்படுதலை மொழிந்துவைத்திருப்பது கண்டு மகிழ்க.

தன்னையொளிக் கின்றோர்கள் தம்முளொளித் துள்ளவெலாம்
கன்னமிடக் கைவந்த கள்வனெவன் - மண்ணுலகைச் (க0ச)

சற்பனைசெய் கின்றதிரோ தானமெனும் சத்தியினால்
கற்பனைசெய் தேமயக்கும் கள்வனெவன் - முற்படுமித் (க0ரு)

தொண்டுலகில் உள்ளஉயிர் தோறுமொளித் தாற்றலெலாம்
கண்டுலவு கின்றதொரு கள்வனெவன் - விண்டகலா (க0சா)

மண்மயக்கும் பொன்மயக்கும் மாதர் மயக்குமெனும்
கண்மயக்கம் காட்டிநிற்கும் கள்வனெவன் - உண்மயக்கு (க0எ)

மாசு பறிக்கும் மதியுடையோர் தம்முடைய
காசு பறிக்கின்ற கள்வனெவன் - ஆசகன்ற (க0அ)

பெண்ணால் எவையும் பிறப்பித்து மற்றைநுதற்
கண்ணால் அழிக்கின்ற கள்வனெவன் - எண்ணாது (க0கூ)

நானென்று நிற்கின் நடுவேயந் நானுணத்[64]
தானென்று நிற்கும் சதுரனெவன் - மானென்ற (கக0)

மாயைதனைக் காட்டி மறைப்பித்தம் மாயையிற்றன்
சாயைதனைக் காட்டும் சதுரனெவன் - நேயமுடன் (ககக)

நான்மறையும் நான்முகனும் நாரணனும் நாடொறும்
தான்மறையும் மேன்மைச் சதுரனெவன் - வான்மறையாம் (ககஉ)

முன்னை மறைக்கும் முடிப்பொருளென் றுய்பவர்க்கும்
தன்னை மறைக்கும் சதுரனெவன் - உன்னுகின்றோர் (ககங)

சித்தத்திற் சுத்த சிதாகாசம் என்றொருசிற்
சத்தத்திற் காட்டும் சதுரனெவன் - முத்தரென (ககச)

யாவர் இருந்தார் அவர்காண வீற்றிருக்கும்[65]
தேவர் புகழ்தலைமைத் தேவனெவன் - யாவர்களும் (ககரு)

இவ்வணத்தன் இவ்விடத்தன் இவ்வியலன் என்றறியாச்
செவ்வணத்தன் ஆம்தலைமைத் தேவனெவன் - மெய்வணத்தோர் (ககசா)

---

64. 110 முதல் ஐந்து கண்ணிகளில் இறைவனைத் தந்திரம் கைதேர்ந்த ஒருவன்போல் இயங்குவதாக இயம்பியிருப்பது காண்க.

65. 115 முதல் 129 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவனை ஒரு தேவனே போல் தொழிற்படுவதாகச் சொல்லியிருப்பது காண்க.

தாம்வாழ அண்ட சராசரங்கள் தாம்வாழ
நாம்வாழத் தன்னுரையாம் நான்மறைகள் - தாம்வாழச் (கக௭)

சாருருவின் நல்லருளே சத்தியாய் மெய்யறிவின்
சீருருவே ஒருருவாம் தேவனெவன் - ஈருருவும் (கக௮)

ஒன்றென் றுணர உணர்த்தி அடியருளம்
சென்றங் கமர்ந்தருளும் தேவனெவன் - என்றென்றும் (கக௯)

தற்சகசம் என்றே சமயம் சமரசமாம்
சிற்சபையில் வாழ்கின்ற தேவனெவன் - பிற்படுமோர் (க௨0)

பொய்விட்டு மெய்ந்நெறியைப் போற்றித்தற் போதத்தைக்[66]
கைவிட் டுணர்வே கடைப்பிடித்து - நெய்விட்ட (க௨க)

தீப்போற் கனலும் செருக்கறவே செங்கமலப்
பூப்போலும் தன்தாள் புணைபற்றிக் - காப்பாய (க௨௨)

வெண்ணீ றணிந்து விதிர்விதிர்த்து மெய்பொடிப்பக்
கண்ணீர் அருவி கலந்தாடி உண்ணீர்மை (க௨௩)

என்புருகி உள்ளுருகி இன்பார் உயிருருகி
அன்புருகி அன்புருவம் ஆகிப்பின் - வன்பகன்று (க௨௪)

புண்ணியா திங்கட் புரிசடையாய் பொன்னிதழிக்
கண்ணியா எங்கள் களைகண்ணே - எண்ணியாங் (க௨௫)

கன்பர்க் கருளும் அரசே அமுதேபேர்
இன்பக் கடலே எமதுறவே - மன்பெற்று (க௨௬)

மாற்றுரையாப் பொன்னே மணியேஎம் கண்மணியே
ஏற்றுவந்த மெய்ப்பொருளே என்றுநிதம் - போற்றிநின்றால் (க௨௭)

உள்ளூறி உள்ளத் துணர்வூறி அவ்வுணர்வின்
அள்ளூறி அண்ணித் தமுதூறித் - தெள்ளூறும் (க௨௮)

வான்போல் பரவி மதிபோல் குளிர்ந்துயர்கோல்
தேன்போல் மதுரிக்கும் தேவனெவன் - வான்போனூர் (க௨௯)

---

66. 121 முதல் ஒன்பது கண்ணிகளில் பத்திமையுடைய அடியார்களது தன்மையையும் அவர்கள் அடையும் அநுபவத்தையும் அறிவித்திருப்பது கண்டு மகிழ்க.

மாண்கொடுக்கும் தெய்வ மடந்தையர்க்கு மங்கலப்பொன்[67]
நாண்கொடுக்க நஞ்சுவந்த நாதனெவன் - நாண்மலர்பெய் (௧௫௦)

தார்த்தியாய்த் தேவர் அரகரவென் றேத்தஅட்ட
மூர்த்தியாய் நின்ற முதல்வனெவன் - சீர்த்திபெற (௧௫௧)

ஈண்டற் புதவடிவாய் எத்தேவ ரேனுநின்று
காண்டற் கரிதாம் கணேசனெவன் - வேண்டுற்றுப் (௧௫௨)

பூமியெங்கும் வாழ்த்திப் புகழ்வார் விரும்புமிட்ட
காமியங்கள் ஈயும் கணேசனெவன் - நாமியங்க (௧௫௩)

ஏண வருமிடையூ றெல்லாம் அகற்றியருள்
காணஎமக் கீயும் கணேசனெவன் - மாணவரு (௧௫௪)

மூந்த மறையின் முழுப்பொருளை நான்முகற்குத்
தந்த அருட்கடலாம் சாமியெவன் - தந்தமக்காம் (௧௫௫)

வாதகற்றி உண்மை மரபளித்து வஞ்சமலக்
கோதகற்றும் நெஞ்சக் குகேசனெவன் - தீதகற்றித் (௧௫௬)

தங்கும் உலகங்கள் சாயாமற் செஞ்சடைமேல்
கங்கைதனைச் சேர்த்த கடவுளெவன் - எங்குறினும் (௧௫௭)

கூம்பா நிலைமைக் குணத்தோர் தொழுகின்ற
பாம்பா பரணப் பரமனெவன் - கூம்பாது (௧௫௮)

போற்றுரைத்து நிற்கும் புனிதன்மேல் வந்தகொடுங்
கூற்றுதைத்த செந்தாள் குழகனெவன் - ஆற்றலுறு (௧௫௯)

வையம் துதிக்கும் மகாலிங்க மூர்த்திமுதல்
ஐயைந்து மூர்த்தியெனும் ஐயனெவன் - ஐயந்தீர் (௧௬௦)

வல்லார்சொல் வண்ணமெந்த வண்ணமந்த வண்ணங்கள்
எல்லாம் உடைய விதத்தனெவன் - எல்லார்க்கும் (௧௬௧)

தாம்தலைவ ராகத்தம் தாள்தொழுமெத் தேவர்க்கும்
ஆந்தலைமை ஈந்தபர மார்த்தனெவன் - போந்துயிர்கள் (௧௬௨)

எங்கெங் கிருந்துமனத் தியாது விழைந்தாலும்
அங்கங் கிருந்தளிக்கும் அண்ணலெவன் - புங்கமிகும் (௧௬௩)

---

67. 130 முதல் 160 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவன் சிவமூர்த்தம் சம்பந்தமாகப் போற்றப்பட்டிருப்பது காண்க.

அண்ணல் திருமலர்க்கை ஆழிபெறக் கண்ணிடந்த
கண்ணற் கருளியமுக் கண்ணனெவன் - மண்ணிடத்தில் (கசச)

ஓயாது சூல்முதிர்ந்த ஓர்பெண் தனக்காகத்
தாயாகி வந்த தயாளனெவன் - சேயாக (கசரு)

வேல்பிடித்த கண்ணப்பன் மேவுமெச்சில் வேண்டுமிதத்
தாற்பொசித்து நேர்ந்த தயாளனெவன் - பாற்குடத்தைத் (கசசு)

தான்தந்தை என்றெறிந்தோன் தாளெறிந்த தண்டிக்குத்
தான்தந்தை ஆன தயாளனெவன் - தான்கொண்டு (கசஎ)

சம்பு நறுங்கனியின் தன்விதையைத் தாள்பணிந்த
சம்புமுனிக் கீயும் தயாளனெவன் - அம்புவியில் (கசஅ)

ஆண்டவனென் றேத்தப்பொன் னம்பலத்தில் ஆனந்தத்
தாண்டவம்செய் கின்ற தயாளனெவன் - காண்தகைய (கசகூ)

முத்துச் சிவிகையின்மேல் முன்காழி ஓங்குமுழு
முத்தைத் தனிவைத்த முத்தனெவன் - பத்திபெறு (கரு0)

நாவொன் றரசர்க்கு நாம்தருவேம் நல்லூரில்
வாஎன்று வாய்மலர்ந்த வள்ளலெவன் - பூவொன்று (கருக)

நன்றொண்டர் சுந்தரரை நாம்தடுக்க வந்தமையால்
வன்றொண்டன் நீஎன்ற வள்ளலெவன் - நன்றொண்டின் (கருஉ)

காணிக்கை யாகக் கருத்தளித்தார் தம்மொழியை
மாணிக்கம் என்றுரைத்த வள்ளலெவன் - தாணிற்கும் (கருங)

தன்னன்பர் தாம்வருந்தில் சற்றுந் தரியாது
மன்னன் பருளளிக்கும் வள்ளலெவன் - முன்னன்பில் (கருச)

சால்புடைய நல்லோர்க்குத் தண்ணருள்தந் தாட்கொளவோர்
மால்விடைமேல் வந்தருளும் வள்ளலெவன் - மான்முதலோர் (கருரு)

தாமலையா வண்ணம் தகையருளி ஓங்குவெள்ளி
மாமலைவாழ் கின்றஅருள் வள்ளலெவன் - ஆமவனே (கருசு)

நம்மைப் பணிகொண்டு நாரணனும் நாடரிதாம்
செம்மைக் கதியருள்நம் தெய்வங்காண் - எம்மையினும் (கருஎ)

நாடக் கிடைத்தல் நமக்கன்றி நான்முகற்கும்
தேடக் கிடையாநம் தெய்வங்காண் - நீடச்சீர் (கருஅ)

நல்வந் தனைசெய்யும் நம்போல்வார்க் கோர்ஞானச்
செல்வந் தருநமது தெய்வம்காண் - சொல்வந்த (௧௫௯)

எண்மைபெறும் நாமுலகில் என்றும் பிறந்திறவாத்
திண்மை அளித்தருள் நம் தெய்வம்காண் - வண்மையுற (௧௬0)

முப்பாழ் கடந்த முழுப்பாழுக் கப்பாலைச்[68]
செப்பாது செப்புறுநம் தேசிகன்காண் - தப்பாது (௧௬௧)

தீரா இடும்பைத் திரிபென்பதி யாதொன்றும்
சேரா நெறியருள் நம் தேசிகன்காண் - ஆராது (௧௬௨)

நித்தம் தெரியா நிலைமே வியநமது
சித்தம் தெளிவிக்கும் தேசிகன்காண் - வித்தரென (௧௬௩)

யாதொன்றும் தேரா திருந்தநமக் கிவ்வுலகம்
தீதென் றறிவித்த தேசிகன்காண் - கோதின்றி (௧௬௪)

ஓசை பெறுகடல்சூ ழுற்ற வுலகினம்மை[69]
ஆசை யுடனீன்ற அப்பன்காண் - மாசுறவே (௧௬௫)

வன்பாய் வளர்க்கின்ற மற்றையர்போ லல்லாமல்
அன்பாய் நமைவளர்க்கும் அப்பன்காண் - இன்பாக (௧௬௬)

இப்பாரில் சேயார் இதயம் மலர்ந்தம்மை
அப்பா எனும்நங்கள் அப்பன்காண் - செப்பாமல் (௧௬௭)

எள்ளித் திரிந்தாலும் [70]இந்தாஎன் றின்னமுதம்
அள்ளிக் கொடுக்குநம தப்பன்காண் - உள்ளிக்கொண் (௧௬௮)

டின்றே அருள்வாய் எனத்துதிக்கில் ஆங்குநமக்
கன்றே அருளுநம தப்பன்காண் - நன்றேமுன் (௧௬௯)

---

68. 161 முதல் நான்கு கண்ணிகளில் இறைவனை ஞானோபதேசம் செய்யும் தேசிக மூர்த்தியாக வருணித்திருப்பது காண்க.

69. 165 முதல் பத்துக் கண்ணிகளில் இறைவனைத் தந்தையாகப் போற்றியிருத்தலைக் காண்க.

70. இந்தா என்பது மரூஉச் சொல். அது, 'இதனைத் தரப்பெற்றுக்கொள்' என்னும் பொருட்டு. அல்லதூஉம் 'இங்கு வா' என்னும் எளிமை கண்ணிய ஏவலுமாம் : தொ.வே.

[71]காதரவு செய்துநலம் கற்பித்துப் பின்பெரிய
ஆதரவு செய்யுநங்கள் அப்பன்காண் - கோதுறுமா (௧௭0)
வஞ்சமலத் தால்வருந்தி வாடுகின்ற நந்தமையே
அஞ்சலஞ்ச லென்றருளும் அப்பன்காண் - துஞ்சலெனும் (௧௭௧)
நச்சென்ற வாதனையை நாளுமெண்ணி நாமஞ்சும்
அச்சம் கெடுத்தாண்ட அப்பன்காண் - [72]நிச்சலுமிங் (௧௭௨)
கேயிரவும் எல்லும் எளியேம் பிழைத்தபிழை
ஆயிரமும் தான்பொறுக்கும் அப்பன்காண் - சேயிரங்கா (௧௭௩)
முன்னம் எடுத்தணைத்து முத்தமிட்டுப் பாலருத்தும்
அன்னையினும் அன்புடைய அப்பன்காண் - மன்னுலகில் (௧௭௪)
வன்மை யறப்பத்து மாதம் சுமந்துநமை[73]
நன்மை தரப்பெற்ற நற்றாய்காண் - இம்மைதனில் (௧௭௫)
அன்றொருநாள் நம்பசிகண் டந்தோ தரியாது
நன்றிரவில் சோறளித்த நற்றாய்காண் - என்றுமருட் (௧௭௬)
செம்மை இலாச்சிறிய தேவர்கள்பால் சேர்க்காது
நம்மை வளர்க்கின்ற நற்றாய்காண் - சும்மையென (௧௭௭)
மூளும் பெருங்குற்றம் முன்னிமேல் மேற்செயினும்
நாளும் பொறுத்தருளும் நற்றாய்காண் - மூளுகின்ற (௧௭௮)
வன்னெறியிற் சென்றாலும் வாவென் றழைத்துநமை
நன்னெறியிற் சேர்க்கின்ற நற்றாய்காண் - செந்நெறியின் (௧௭௯)
நாம்தேடா முன்னம் நமைத்தேடிப் பின்புதனை
நாம்தேடச் செய்கின்ற நற்றாய்காண் - ஆம்தோறும் (௧௮0)
காலம் அறிந்தே கனிவோடு நல்லருட்பால்
ஞாலம் மிசையளிக்கும் நற்றாய்காண் - சாலவுறு (௧௮௧)
வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கை யுந்துயரும்
நம்பசியும் தீர்த்தருளும் நற்றாய்காண் - அம்புவியில் (௧௮௨)

---

71. காதரவு செய்தல் என்பது அச்சுறுத்தல் : தொ.வே.

72. நிச்சல் என்பது நாடோறும் : தொ.வே.

73. 175 முதல் 186 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவனைத் தாயாகப் போற்றியிருத்தலையும், 176, 186 - இல் அடிகளார் தாம் நேரில் கண்டனுபவித்த கருணையை உவகையோடு உரைத்தலையும் காண்க.

வெந்நீரில் ஆட்டிடிலெம் மெய்நோகும் என்றருளாம்
நன்னீரில் ஆட்டுகின்ற நற்றாய்காண் - எந்நீரின் (௧௮௩)

மேலாய் நமக்கு வியனுலகில் அன்புடைய
நாலா யிரந்தாயில் நற்றாய்காண் - ஏலாது (௧௮௪)

வாடியழு தாலெம் வருத்தம் தரியாது
நாடி எடுத்தணைக்கும் நற்றாய்காண் - நீடுலகில் (௧௮௫)

தான்பாடக் கேட்டுத் தமியேன் களிக்குமுன்னம்
நான்பாடக் கேட்டுவக்கும் நற்றாய்காண் - வான்பாடும் (௧௮௬)

ஞானமணம் செய்யருளாம் நங்கைதனைத் தந்துநமக்[74]
கானமணம் செய்விக்கும் அம்மான்காண் - தேனினொடும் (௧௮௭)

இன்பால் அமுதாதி ஏக்கமுற இன்னருள்கொண்
டன்பால் விருந்தளிக்கும் அம்மான்காண் - வன்பாவ (௧௮௮)

ஆழ்கடல்வீழ்ந் துள்ளம் அழுந்தும் நமையெடுத்துச்
சூழ்கரையில் ஏற்றும் துணைவன்காண் - வீழ்குணத்தால் (௧௮௯)

இன்பம் எனைத்தும் இதுவென் றறியாநம்
துன்பம் துடைக்கும் துணைவன்காண் - வன்பவமாம் (௧௯0)

தீநெறியிற் சென்று தியங்குகின்ற நந்தமக்குத்
தூநெறியைக் காட்டும் துணைவன்காண் - மாநிலத்தில் (௧௯௧)

இன்றுதொட்ட தன்றி யியற்கையாய் நந்தமக்குத்
தொன்றுதொட்டு வந்தவருட் சுற்றங்காண் - தொன்றுதொட்டே (௧௯௨)

ஆயுமுடற் கன்புடைத்தாம் ஆருயிரிற் றன்சிறந்த
நேயம்வைத்த நம்முடைய நேசன்காண் - பேயரென (௧௯௩)

வாங்காது நாமே மறந்தாலும் நம்மைவிட்டு
நீங்காத நம்முடைய நேசன்காண் - தீங்காக (௧௯௪)

ஈட்டுகின்ற ஆபத்தில் இந்தா எனஅருளை
நீட்டுகின்ற நம்முடைய நேசன்காண் - கூட்டுலகில் (௧௯௫)

புல்லென்ற மாயையிடைப் போந்தோறும் நம்மையிங்கு
நில்லென் றிருத்துகின்ற நேசன்காண் - சில்லென்றேன் (௧௯௬)

---

74. 187 முதல் 207 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவனை அம்மானாகவும் தோழனாகவும் சுற்றமாகவும் நண்பனாகவும் அரசனாகவும் செல்வமாகவும் ஆண்டானாகவும் விவரித்திருப்பதுகண்டு தெளிக.

உட்டுவும் தன்னைமறந் துண்டாலும் மற்றதற்கு
நிட்டூரம் செய்யாத நேசன்காண் - நட்டூர்ந்து[75] (௧௯௭)

வஞ்சமது நாமெண்ணி வாழ்ந்தாலும் தான்சிறிதும்
நெஞ்சிலது வையாத நேசன்காண் - எஞ்சலிலாப் (௧௯௮)

பார்நின்ற நாம்கிடையாப் பண்டமெது வேண்டிடினும்
நேர்நின் றளித்துவரு நேசன்காண் - ஆர்வமுடன் (௧௯௯)

ஆர்ந்தநமக் கிவ்விடத்தும் அவ்விடத்தும் எவ்விடத்தும்
நேர்ந்தஉயிர் போற்கிடைத்த நேசன்காண் - சேர்ந்துமிகத் (௨௦௦)

தாபஞ்செய் குற்றம் தரினும் பொறுப்பதன்றிக்
கோபஞ் செயாநமது கோமான்காண் - பாபமற (௨௦௧)

விள்ளுமிறை நாமன்பு மேவலன்றி வேற்றரசர்
கொள்ளுமிறை வாங்காநம் கோமான்காண் - உள்ளமுற (௨௦௨)

உண்டளிக்கும் ஊணுடை பூண் ஊரா திகள்தானே
கொண்டுநமக் கிங்களிக்கும் கோமான்காண் - மண்டலத்தில் (௨௦௩)

ஒன்றாலும் நீங்கா துகங்கள் பலபலவாய்ச்
சென்றாலும் செல்லாநம் செல்வம்காண் - முன்தாவி (௨௦௪)

நாடிவைக்கும் நல்லறிவோர் நாளும் தவம்புரிந்து
தேடிவைத்த நம்முடைய செல்வம்காண் - மாடிருந்து (௨௦௫)

நாமெத் தனைநாளும் நல்கிடினும் தானுலவாச்
சேமித்த வைப்பின் திரவியம்காண் - பூமிக்கண் (௨௦௬)

ஈங்குறினும் வானாதி யாங்குறினும் விட்டகலா
தோங்கருளால் நம்மை உடையவன்காண் - ஆங்கவன்தன் (௨௦௭)

கங்கைச் சடையழகும் காதன்மிகும் அச்சடைமேல்[76]
திங்கட் கொழுந்தின் திருவழகும் - திங்கள்தன்மேல் (௨௦௮)

சார்ந்திலங்கும் கொன்றைமலர்த் தாரழகும் அத்தார்மேல்
ஆர்ந்திலங்கும் வண்டின் அணியழகும் - தேர்ந்தவர்க்கும் (௨௦௯)

---

75. நட்டு - ஊர்ந்து எனப் பிரித்து நேசித்துச் சென்று எனப் பொருள் கொள்க : தொ.வே.

76. 208 முதல் 233 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவனுடைய வடிவத்தின் பேரழகு வருணிக்கப்பட்டிருப்பது கண்டு மகிழ்க.

நோக்கரிய நோக்கழகும் நோக்கார் நுதலழகும்
போக்கரிய கன்னுதலில் பொட்டழகும் - தேக்குதிரி (௨௧௦)

புண்டரத்தின் நல்லழகும் பொன்னருள்தான் தன்னெழிலைக்
கண்டவர்பால் ஊற்றுகின்ற கண்ணழகும் - தொண்டர்கள்தம் (௨௧௧)

நேசித்த நெஞ்சமலர் நீடு மணமுகந்த
நாசித் திருக்குமிழின் நல்லழகும் - தேசுற்ற (௨௧௨)

முல்லை முகையாம் முறுவலழ கும்பவள
எல்லை வளர்செவ் விதழழகும் - நல்லவரை (௨௧௩)

தேவென்ற தீம்பாலில் தேன்கலந்தாற் போலினிக்க
வாவென் றருளுமலர் வாயழகும் - பூவொன்றும் (௨௧௪)

கோன்பரவும் சங்கக் குழையழகும் அன்பர்மொழித்
தேன்பரவும் வள்ளைச் செவியழகும் - நான்பரவி (௨௧௫)

வேட்டவையை நின்றாங்கு விண்ணப்பம் செய்யவது
கேட்டருளும் வார்செவியின் கேழழகும் - நாட்டிலுயர் (௨௧௬)

சைவம் முதலாய்த் தழைக்க அருள்சுரக்கும்
தெய்வ முகத்தின் திருவழகும் - தெய்வமுகத் (௨௧௭)

துள்ளம் குளிர உயிர்குளிர மெய்குளிரக்
கொள்ளும் கருணைக் குறிப்பழகும் - உள்ளறிவின் (௨௧௮)

எள்ளாத மேன்மையுல கெல்லாம் தழைப்பவொளிர்
தெள்ளார் அமுதச் சிரிப்பழகும் - உள்ளோங்கும் (௨௧௯)

சீல அருளின் திறத்துக் கிலச்சினையாம்
நீல மணிமிடற்றின் நீடழகும் - மாலகற்றி (௨௨௦)

வாழ்ந்தொளிரும் அன்பர் மனம்போலும் வெண்ணீறு
சூழ்ந்தொளிகொண் டோங்குதிருத் தோளழகும் - தாழ்ந்திலவாய்த் (௨௨௧)

தானோங்கும் அண்டமெலாம் சத்தமுறக் கூவுமொரு
மானோங்கும் செங்கை மலரழகும் - ஊனோங்கும் (௨௨௨)

ஆணவத்தின் கூற்றை அழிக்க ஒளிர்மழுவைக்
காணவைத்த செங்கமலக் கையழகும் - நாணமுற்றே (௨௨௩)

ஏங்கும் பரிசுடைய எம்போல்வார் அச்சமெலாம்
வாங்கும் அபய மலரழகும் - தீங்கடையாச் (௨௨௪)

சீர்வரவும் எல்லாச் சிறப்பும் பெறவுமருள்
சார்வரத வொண்கைத் தலத்தழகும் - போரவப் (உஉரு)

பூணிலங்க வெண்பொற் பொடியிலங்க என்பணித்தார்
மாணிலங்க மேவுதிரு மார்பழகும் - சேணிலத்தர் (உஉசு)

மேலுடுத்த ஆடையெலாம் வெஃக வியாக்கிரமத்
தோலுடுத்த ஒண்மருங்கில் துன்னழகும் - பாலடுத்த (உஉஎ)

கேழ்க்கோல மேவுதிருக் கீளழகும் அக்கீளின்
கீழ்க்கோ வணத்தின் கிளரழகும் - கீட்கோலம் (உஉஅ)

ஒட்டிநின்ற மெய்யன்பர் உள்ள மெலாஞ்சேர்த்துக்
கட்டிநின்ற வீரக் கழலழகும் - எட்டிரண்டும் (உஉகூ)

சித்திக்கும் யோகியர்தம் சிந்தைதனில் தேன்போன்று
தித்திக்கும் சேவடியின் சீரழகும் - சத்தித்து (உ௩0)

மல்வைத்த மாமறையும் மாலயனும் காண்பரிய
செல்வத் திருவடியின் சீரழகும் - சொல்வைத்த (உ௩க)

செம்மை மணிமலையைச் சேர்ந்த மரகதம்போல்
அம்மையொரு பால்வாழ்ந் தருளழகும் - அம்மமிகச் (உ௩உ)

சீர்த்திநிகழ் செம்பவளச் செம்மே னியினழகும்
[77]பார்த்திருந்தால் நம்முட் பசிபோங்காண் - தீர்த்தருளம் (உ௩௩)

கொண்டிருந்தான் பொன்மேனிக் கோலமதை நாம்தினமுங்
கண்டிருந்தால் அல்லலெலாம் கட்டறுங்காண்-தொண்டடைந்து (உ௩ச)

பாட்டால் அவன்புகழைப் பாடுகின்றோர் பக்கநின்று
கேட்டால் வினைகள்விடை கேட்குங்காண் - நீட்டாமல் (உ௩ரு)

ஒன்னார் புரம்பொடித்த உத்தமனே என்றொருகால்
சொன்னா லுலகத் துயரறுங்காண் - எந்நாளும் (உ௩சு)

பன்னுமுள்ளத் துள்ளாம் பரசிவமே என்றொருகால்
உன்னுமுன்னம் தீமையெலாம் ஓடுங்காண் - அன்னவன்றன் (உ௩எ)

---

77. 233 முதல் ஐந்து கண்ணிகளில் இறைவனது கண்கவரும் வனப்பில் திளைப்பதனால் உண்டாகும் பெரும்பயனைக் கூறுவது கண்டு தெளிக.

ஆட்டியல்காற் பூமாட் டடையென்றால் அங்கேதாமுன்[78]
நீட்டியகால் பின்வாங்கி நிற்கின்றாய் - ஊட்டுமவன் (௨௩௮)

மாற்கடவு ளாமோர் மகவலறக் கண்டுதிருப்
பாற்கடலை யீந்தவருட் பான்மைதனை - நூற்கடலின் (௨௩௯)

மத்தியில்நீ கேட்டும் வணங்குகிலாய் அன்படையப்
புத்தியுளோர்க் கிதொன்றும் போதாதோ - முத்திநெறி (௨௪௦)

மாணா அரக்கன் மலைக்கீழ் இருந்தேத்த
[79]வாணாள் வழங்கியதோர் வண்மைதனை - நாணாளும் (௨௪௧)

நண்ணி உரைத்தும் நயந்திலைநீ அன்புகொளப்
புண்ணியருக் கிதொன்றும் போதாதோ - புண்ணியராம் (௨௪௨)

சுந்தரர்க்குக் கச்சூரில் தோழமையைத் தான்தெரிக்க
வந்திரப்புச் சோறளித்த வண்மைதனை - முந்தகத்தில் (௨௪௩)

பேதமறக் கேட்டும் பிறழ்ந்தனையே அன்படையப்
போதமுளோர்க் கிதொன்றும் போதாதோ - போதவும்நெய் (௨௪௪)

அங்கோர் எலிதான் அருந்தவகல் தூண்டவதைச்
செங்கோலன் ஆக்கியவச் சீர்த்திதனை - இங்கோதச் (௨௪௫)

சந்ததம்நீ கேட்டுமவன் தாள்நினையாய் அன்படையப்
புந்தியுளோர்க் கிதொன்றும் போதாதோ - முந்தவரும் (௨௪௬)

நற்றுணையென் றேத்துமந்த நாவரசர்க் கன்றுகடற்
[80]கற்றுணையோர் தெப்பமெனக் காட்டியதை - இற்றெனநீ (௨௪௭)

மாவுலகில் கேட்டும் வணங்குகிலாய் அன்படையப்
பூவுலகர்க் கிதொன்றும் போதாதோ - தாவுநுதல் (௨௪௮)

கண்சுமந்தான் அன்பன் கலங்கா வகைவைகை
மண்சுமந்தான் என்றுரைக்கும் வாய்மைதனைப் - பண்புடையோர் (௨௪௯)

---

78. 238 முதல் 268 வரையிலுள்ள கண்ணிகளில் இறைவன் அருள் தன்மையை வியந்தும் நெஞ்சின் ஈரமில்லாத பாழுந்தன்மைக்காக வருந்தியும் விவரித்திருப்பது காண்க.

79. வாழ்நாள் வாணாள் என மரீஇயது : தொ.வே.

80. கற்றூணை என்பது கற்றுணை எனக் குறுகி நின்றது ; தொ.வே.

மாணவுரைப் பக்கேட்டும் வாய்ந்தேத்தாய் மெய்யன்பு
பூணவென்றால் ஈதொன்றும் போதாதோ - நீணரகத் (௨௫0)
தீக்குறுமா பாதகத்தைத் தீர்த்தோர் மறையவனைப்
பாங்கடையச் செய்தஅருட் பண்பதனை - ஈங்குலகர் (௨௫௧)
துங்கம் உறஉரைத்துஞ் சூழ்கின் றிலையன்பு
பொங்கவென்றால் ஈதொன்றும் போதாதோ - தங்கியஇப் (௨௫௨)
பாரறியாத் தாயாகிப் பன்றிக் குருளைகட்கு
ஊரறிய நன்முலைப்பால் ஊட்டியதைச் - சீரறிவோர் (௨௫௩)
சொல்லிநின்றார் கேட்டும் துதிக்கின் றிலையன்பு
புல்லஎன்றால் ஈதொன்றும் போதாதோ - நல்லதிருப் (௨௫௪)
பாத மலர்வருந்தப் பாணன் தனக்காளாய்க்
கோதில்விற கேற்றுவிலை கூறியதை - நீதியுளோர் (௨௫௫)
சாற்றிநின்றார் கேட்டுமவன் தாள்நினையாய் மெய்யன்பில்
போற்றவென்றால் ஈதொன்றும் போதாதோ - போற்றுகின்ற (௨௫௬)
ஆடும் கரியும் அணிலும் குரங்குமன்பு
தேடுஞ் சிலம்பியொடு சிற்றெறும்பும் - நீடுகின்ற (௨௫௭)
பாம்பும் சிவார்ச்சனைதான் பண்ணியதென் றால்பூசை
ஓம்புவதற் கியார்தா முவவாதார் - சோம்புறுநீ (௨௫௮)
வன்பென்ப தெல்லாம் மறுத்தவன்தாள் பூசிக்கும்
அன்பென்பதி யாதோ அறியாயே - அன்புடனே (௨௫௯)
செஞ்சடைகொள் நம்பெருமான் சீர்கேட் டிரையருந்தா
தஞ்சடக்கி யோகம் அமர்ந்துலகின் - வஞ்சமற (௨௬0)
நாரையே முத்தியின்பம் நாடியதென் றால்மற்றை
யாரையே நாடாதார் என்றுரைப்பேன் - ஈரமிலாய் (௨௬௧)
நீயோ சிறிதும் நினைந்திலைஅவ் வின்பமென்னை
யேயோநின் தன்மை இருந்தவிதம் - ஓயாத (௨௬௨)
அன்புடையார் யாரினும்பேர் அன்புடையான் நம்பெருமான்
நின்புடையான் நித்தம் நிகழ்த்துகின்றேன் - உன்புடையோர் (௨௬௩)
அன்பவன்மேல் கொண்ட தறியேன் புறச்சமயத்
தின்புடையா ரேனும் இணங்குவரே - அன்புடனே (௨௬௪)

தாவென்றால் நல்லருள்இந் தாவென்பான் நம்பெருமான்
ஆஉன்பால் ஓதி அலுக்கின்றேன் - நீவன்பால் (உசரு)

நின்றாய் அலதவனை நேர்ந்துநினை யாய்பித்தர்
என்றாலும் என்சொற் கிணங்குவரே - குன்றாது (உசசு)

பித்தா எனினும் பிறப்பறுப்பான் நம்முடையான்
[81]அத்தோ உனக்கீ தறைகின்றேன் - சற்றேனும் (உசஎ)

கேள்வியிலார் போலதனைக் கேளாய் கெடுகின்றாய்
வேள்வியிலார் கூட்டம் விழைகின்றாய் - வேள்வியென்ற (உசஅ)

வேலைவருங் காலொளித்து மேவுகின்றாய் நின்தலைக்கங்[82]
கோலைவருங் காலிங் கொளிப்பாயே - மாலையுறும் (உசகூ)

இப்பார் வெறும்பூ இதுநயவேல் என்றுனக்குச்
செப்பா முனம்விரைந்து செல்கின்றாய் - அப்பாழில் (உஎ0)

செல்லாதே சைவநெறி செல்லென்றால் என்னுடனும்
சொல்லாது போய்மயக்கம் தோய்கின்றாய் - பொல்லாத (உஎக)

[83]அஞ்சருந்தென் றாலமுதி னார்கின்றாய் விட்டிடென்றால்
நஞ்சருந்தென் றாற்போல் நலிகின்றாய் - வஞ்சகத்தில் (உஎஉ)

ஓடுகின்றாய் மீளாமல் உன்னிச்சை யின்வழியே
ஆடுகின்றாய் மற்றங் கயர்கின்றாய் - நீடுலகைச் (உஎங)

சூழ்கின்றாய் வேறொன்றில் சுற்றுகின்றாய் மற்றொன்றில்
வீழ்கின்றாய் மேலொன்றில் மீள்கின்றாய் - தாழ்வொன்றே (உஎச)

ஈகின்றாய் வன்னெறியில் என்னை வலதழிக்கப்
போகின்றாய் மீட்டும் புகுகின்றாய் - யோகின்றி (உஎரு)

---

81. அந்தோ என்பது அத்தோ என வலிக்கும் வழி வலித்தது : தொ.வே.

82. 269 முதல் 286 வரையிலுள்ள கண்ணிகள் மனத்தின் கேடுகெட்ட தன்மையை அதாவது விலங்குகட்கும் கீழ்ப்பட்ட தன்மையை விளக்கு கின்றன.

83. ஐந்து என்பது அஞ்சு என மருவிற்று. அஃது ஈண்டு ஆகு பெயராய்ச் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தாசைகளைக் குறித்து நின்றது : தொ.வே.

ஒன்றைமறைக் கின்றாய்மற் றொன்றைநினைக் கின்றாயென்
நன்றைமறைக் கின்றாய் நலிகின்றாய் - வென்றிபெறும் (உஎசு)

சேவிற் பரமன்தாள் சேரென்றால் மற்றொருசார்
மேவிப் பலவாய் விரிகின்றாய் - பாவித்துக் (உஎஎ)

குன்றும் உனக்கனந்தம் கோடிதெண்ட னிட்டாலும்
ஒன்றும் இரங்காய் உழல்கின்றாய் - நன்றாருகாக் (உஎஅ)

கல்லென்பேன் உன்னைக் கரணம் கலந்தறியாக்
கல்லென்றால் என்சொல் கடவாதே - புல்லநினை (உஎகூ)

வல்லிரும்பென் பேன்அந்த வல்லிரும்பேல் கூடத்தில்
கொல்லன் குறிப்பைவிட்டுக் கோணாதே - அல்லமெல்லாம் (உஅ0)

கூட்டுகின்ற வன்மைக் குரங்கென்பேன் அக்குரங்கேல்
ஆட்டுகின்றேன் சொல்வழிவிட் டாடாதே - நீட்டுலகர் (உஅக)

ஏசுகின்ற பேயென்பேன் எப்பேயும் அஞ்செழுத்தைப்
பேசுகின்றோர் தம்மைப் பிடியாதே - கூசுகிறபக் (உஅஉ)

கண்டோரைக் கவ்வுங் கடுஞ்சுணங்கன் என்பனது
கொண்டோரைக் கண்டால் குலையாதே - அண்டார்க்கும் (உஅங)

பூவில் அடங்காப் புலியென்பேன் எப்புலியும்
மேவில்வயப் பட்டால் எதிராதே - கோவியற்றி (உஅச)

வீறுகின்ற மும்மதமால் வெற்பென்பேன் ஆங்கதுவும்
[84]ஏறுகின்றேன் சொல்வழிவிட் டேறாதே - சீறுகின்ற (உஅரு)

[85]வென்னடைசேர் மற்றை விலங்கென்பேன் எவ்விலங்கும்
மன்னவன்சேர் நாட்டில் வழங்காதே - நின்னையினி (உஅசு)

என்னென்பேன் என்மொழியை ஏற்றனையேல் மாற்றுயர்ந்த[86]
பொன்னென்பேன் என்வழியில் போந்திலையே - கொன்னுறநீ (உஅஎ)

---

84. ஏறுதல் என்பது ஈண்டொழுக்கத்தின் மேனின்றது : தொ.வே.

85. வெல் - நடை எனப் பிரித்துக் கொள்க. அற்றேல் கொடு நடை எனப் பொருள் கொள்ளின் வெந்நடை எனப் பொதுநகரமாக்கிக் கொள்க : தொ.வே.

86. 287 - ஆம் கண்ணியில் நெஞ்சுக்கு இனிய சொல் சொல்லப்படுகிறது.

போம்வழியும் பொய்நீ புரிவதுவும் பொய்அதனால்[87]
ஆம்விளைவும் பொய்நின் னறிவும்பொய் - தோம்விளைக்கும் (உஅஅ)

நின்னுடலும் பொய்யிங்கு நின்தவமும் பொய்நிலையா
நின்னிலையும் பொய்யன்றி நீயும்பொய் - என்னிலிவண் (உஅகூ)

ஏதும் உணர்ந்திலையே இம்மாய வாழ்க்கையெனும்
வாதிலிழுத் தென்னை மயக்கினையே - தீதுறுநீ (உகூ0)

வன்னோர் விடங்காணின் வண்பெயரின் முன்பொருகிற்
றென்னே அறியாமல் இட்டழைத்தேன் - கொன்னேநீ (உகூக)

[88]நோவ தொழியா [89]நொறிற்காம வெப்பினிடை
ஆவ தறியா தழுந்தினையே - மேவுமதில் (உகூஉ)

உள்ளெரிய மேலாம் உணர்வும் கருகவுடல்
நள்ளெரிய நட்பின் நலம்வெதும்ப - விள்வதின்றி (உகூங)

வாடிப் பிலஞ்சென்று வான்சென் றொளித்தாலும்
தேடிச் சுடுங்கொடிய தீக்கண்டாய் - ஓடிஅங்கு (உகூச)

பேர்ந்தால் அலது பெருங்காமத் தீநின்னைச்
சேர்ந்தா ரையுஞ்சுடும்செந் தீக்கண்டாய் - சார்ந்தாங்கு (உகூரு)

சந்தீ யெனவருவார் தம்மைச் சுடுங்காமஞ்
செந்தீ யையுஞ் சுடுமோர் தீக்கண்டாய் - வந்தீங்கு (உகூசா)

---

87. 288 முதல் நான்கு கண்ணிகளில் மனத்தின் பொய்யும் சர்ப்பனையும் வாய்ந்த குணம் கூறப்படுகிறது.

88. 292 முதல் 396 வரையிலுள்ள கண்ணிகளில் ஒருவனுக்குப் பால் மயக்கத்தால் விளைகிற பேரிழிவினையும் பெருங்கேட்டினையும் விவரித்து, அம்மயக்கம் அறவே தெளிதற்பொருட்டு, ஒருவன் தன் மனத்திற்கு அந்தரங்கத்தில் சமயத்துக்குப் பொருத்தமாகச் சொல்லிக்கொண்ட — வெறுங்கற்பனைகள் மேற்கொண்ட — உபதேசங்கள் உரைத்திருப்பது காண்க. ஒருத்திக்கு நேரிடக்கூடிய பால் மயக்கத்துக்கும் இங்ஙனமே கொள்க. 48-ஆம் அடிக்குறிப்பில் கண்டிருக்கும் உண்மையினை இங்கும் மேற்கொண்டமைக. நம் அடிகளார் இறைவனை எங்கெங்கும் தனித்தாயாகப் போற்றுவதையும், தம்மைக் காதலியாகக் கொண்டு இறைவன்பால் ஆரா அன்பு செலுத்தி ஆன்மாநுபவம் அடைவதையும் ஒருமையுடன் கூர்ந்துணரின், அவர்களுடைய உள்நோக்கம் தெள்ளிதின் விளங்கும் என்க.

89. நொறில் என்பது விரைவு : தொ.வே.

மண்ணில் தனைக்காணு வண்ணம் நினைத்தாலும்
நண்ணித் தலைக்கேறு நஞ்சங்காண் - எண்ணற்ற (உ௯எ)

போருறுமுட் காமப் புதுமயக்கம் நின்னுடைய
பேரறிவைக் கொள்ளைகொளும் பித்தங்காண் - சோரறிவில் (௯அஉ)

கள்ளடைக்கும் காமக் கடுமயக்கம் மெய்ந்நெறிக்கோர்
முள்ளடைக்கும் பொல்லா முரண்கண்டாய் - அள்ளனுற (உ௯௯)

ஏதமெலாம் தன்னுள் இடுங்காமம் பாதகத்தின்
பேதமெலாம் ஒன்றிப் பிறப்பிடங்காண் - ஆதலினால் (௩௦௦)

வெம்மால் மடந்தையரை மேவவொணா தாங்கவர்கள்
தம்மாசை இன்னும் தவிர்ந்திலையே - இம்மாய (௩௦௧)

மன்ற வணங்கினர்செவ் வாய்மடவார் பேதையர்கள்
என்றகொடுஞ் சொற்பொருளை எண்ணிலையே - தொன்றுலகில் (௩௦௨)

பெண்ணென் றுரைப்பிற் பிறப்பேழும் ஆந்துயரம்
எண்ணென்ற நல்லோர்சொல் எண்ணிலையே - பெண்ணிங்கு[90] (௩௦௩)

மாமாத் திரையின் வருத்தனமென் றெண்ணினை அங்
காமார்த்தம் ஆசையென நாடிலையே - யாமார்த்தம் (௩௦௪)

மந்திரத்தும் பூசை மாபினுமற் றெவ்விதமாம்
தந்திரத்தும் சாயாச் சழக்கன்றோ - மந்திரத்தில் (௩௦௫)

பேய்பிடித்தால் தீர்ந்திடுமிப் பெண்பேய் விடாதேசெந்
நாய்பிடித்தால் போலுமென்று நாடிலையே - ஆய்விலுன்றன் (௩௦௬)

ஏழைமைஎன் னென்பேன் இவர்மயக்கம் வல்நரகின்
தோழைமையென் றந்தோ துணிந்திலையே - ஊழமைந்த (௩௦௭)

காரிருளில் செல்லக் கலங்குகின்றாய் மாதர்குழல்
பேரிருளில் செல்வதனைப் பேர்த்திலையே - பாரிடையோர் (௩௦௮)

எண்வாள் எனிலஞ்சி ஏகுகின்றாய் ஏந்திழையார்
கண்வாள் அறுப்பக் கனிந்தனையே - மண்வாழும் (௩௦௯)

---

90. பெண்ணிங்கு மாமாத்திரையின் வருத்தனமென் றெண்ணினை - என்பதற்குப் பேண் என்று பொருள் கொண்டனை என்பது பொருள் : தொ.வே.

ஓரானை யைக்கண்டால் ஓடுகின்றாய் மாதர்முலை
ஈரானை யைக்கண் டிசைந்தனையே - சீரான (௩௧௦)

வெற்பென்றால் ஏற விரைந்தறியாய் மாதர்முலை
வெற்பென்றால் ஏற விரைந்தனையே - பொற்பொன்றும் (௩௧௧)

சிங்கமென்றால் வாடித் தியங்குகின்றாய் மாதரிடைச்
சிங்கமெனில் காணத் திரும்பினையே - இங்குசிறு (௩௧௨)

பாம்பென்றால் ஓடிப் பதுங்குகின்றாய் மாதரல்குல்
பாம்பென்றால் சற்றும் பயந்திலையே - ஆம்பணைக் (௩௧௩)

கீழ்க்கடலில் ஆடென்றால் கேட்கிலைநீ மாதரல்குல்
பாழ்க்கடலில் கேளாது பாய்ந்தனையே - கீழ்க்கதுவும் (௩௧௪)

கல்லென்றால் பின்னிடுவாய் காரிகையார் காற்சிலம்பு
கல்லென்றால் மேலெழும்பக் கற்றனையே - அல்அளகம் (௩௧௫)

மையோ கருமென் மணலோஎன் பாய்மாறி
ஐயோ நரைப்ப தறிந்திலையோ - பொய்யோதி (௩௧௬)

ஒண்பிறையே ஒண்ணுதலென் றுன்னுகின்றாய் உள்ளெலும்பாம்
வெண்பிறையன் றேயதனை விண்டிலையே - கண்புருவம் (௩௧௭)

வில்லென்றாய் வெண்மயிராய் மேவி உதிர்ந்திடுங்கால்
சொல்லென்றால் சொல்லத் துணியாயே - வல்லம்பில் (௩௧௮)

கட்கு வளைஎன்றாய்க் கண்ணீர் உலர்ந்துமிக
உட்குழியும் போதில் உரைப்பாயே - கட்குலவு (௩௧௯)

மெய்க்குமிழே நாசியென வெஃகினையால் வெண்மலத்தால்
உய்க்குமிழுஞ் சிந்த லுளதேயோ - எய்த்தலிலா (௩௨௦)

வள்ளையென்றாய் வார்காது வள்ளைதனக் குட்புழையோ
டுள்ளுநரம் பின்பனவும் உண்டேயோ - வெள்ளைநகை (௩௨௧)

முல்லையென்றாய் முல்லை முறித்தொருகோல் கொண்டுநிதம்
ஒல்லை அழுக்கெடுப்ப துண்டேயோ - நல்லதொரு (௩௨௨)

கொவ்வை யெனஇதழைக் கொள்கின்றாய் மேல்குழம்பும்
செவ்வை இரத்தமெனத் தேர்ந்திலையே - செவ்வியகண் (௩௨௩)

ணாடி யெனக்கவுட்கே ஆசைவைத்தாய் மேல்செழுந்தோல்
வாடியக்கால் என்னுரைக்க மாட்டுவையே - கூடியதோர் (௩௨௪)

அந்த மதிமுகமென் றாடுகின்றாய் எழ்துளைகள்
எந்தமதிக் குண்டதனை எண்ணிலையே - நந்தெனவே (௯௨௫)
கண்டமட்டும் கூறினைஅக் கண்டமட்டும் அன்றியுடல்
கொண்டமட்டும் மற்றதன்மெய்க் கூறன்றோ - விண்டவற்றைத் (௯௨௬)
தோளென் றுரைத்துத் துடிக்கின்றாய் அவ்வேய்க்கு
மூளொன்று வெள்ளெலும்பின் மூட்டுண்டே - நாளொன்றும் (௯௨௭)
செங்காந்தள் அங்கையெனச் செப்புகின்றாய் அம்மலர்க்குப்
பொங்காப் பல்விரலின் பூட்டுண்டே - மங்காத (௯௨௮)
செவ்விளநீர் கொங்கையெனச் செப்பினைவல் ஊன்றடிப்பிங்
கெவ்விளநீர்க் குண்டதனை எண்ணிலையே - செவ்வைபெறும் (௯௨௯)
செப்பென் றனைமுலையைச் சீசீ சிலந்தியது
துப்பென் றவர்க்கியாது சொல்லுதியே - [91]வப்பிறுகச் (௯௩௦)
சூழ்ந்தமுலை மொட்டென்றே துள்ளுகின்றாய் கீழ்த்துவண்டு
வீழ்ந்தமுலைக் கென்ன விளம்புதியே - தாழ்ந்தஅவை (௯௩௧)
மண்கட்டும் பந்தெனவே வாழ்ந்தாய் முதிர்ந்துடையாப்
புண்கட்டி என்பவர்வாய்ப் [92]பொத்துவையே - திண்கட்டும் (௯௩௨)
அந்நீர்க் குரும்பை அவையென்றாய் மேலெழும்பும்
செந்நீர்ப் புடைப்பென்பார் தேர்ந்திலையே - அந்நீரார் (௯௩௩)
கண்ணீர் தரும்பருவாய்க் கட்டுரைப்பார் சான்றாக
வெண்ணீர் வரல்கண்டும் வெட்கிலையே - தண்ணீர்மைச் (௯௩௪)
சாடியென்பாய் நீ அயலோர் தாதுக் கடத்திடுமேன்
மூடியென்பார் மற்றவர்வாய் மூடுதியோ - [93]மேடதனை (௯௩௫)
ஆலிலையே என்பாய் அடர்குடரோ டீருளொடும்[94]
தோலிலையே ஆலிலைக்கென் சொல்லுதியே - நூலிடைதான் (௯௩௬)
உண்டோ இலையோஎன் றுட்புகழ்வாய் கைதொட்டுக்
[95]கண்டோர்பூட் டுண்டென்பார் கண்டிலையே - விண்டோங்கும் (௯௩௭)

---

91. வம்பு - வப்பென விகாரமாயிற்று : தொ.வே.
92. பொத்துதல் என்பது மூடுதல் : தொ.வே.
93. மேடு என்பது வயிறு : தொ.வே.
94. ஈருள் என்பது ஈரல் என மரீஇ வழங்கியது : தொ.வே.
95. பூட்டு என்பது ஈண்டு உடற்பொருத்து : தொ.வே.

ஆழ்ங்கடலென் பாய்மடவார் அல்குலினைச் சிற்சிலர்கள்
பாழ்ங்கிணறென் பாரதனைப் பார்த்திலையே - தாழ்ங்கொடிஞ்சித் (௩௩௮)

தேராழி என்பாயச் சிக்குழியை அன்றுசிறு
நீராழி என்பவர்க்கென் [96]நேருதியே - ஆராப்புன் (௩௩௯)

நீர்வழியை ஆசை நிலையென்றாய் வன்மலம்தான்
சோர்வழியை என்னென்று சொல்லுதியே - சார்முடைதான் (௩௪௦)

ஆறாச் சிலைநீர்கான் ஆறாய் ஒழுக்கிடவும்
வீறுப்புண் என்று விடுத்திலையே - ஊறாக்கி (௩௪௧)

மூலை எறும்புடன்ஈ மொய்ப்பதஞ்சி மற்றதன்மேல்
சீலையிடக் கண்டும் தெரிந்திலையே - மேலையுறு (௩௪௨)

மோநரகம் என்றால் விதிர்ப்புறுநீ மாதரல்குல்
கோநரகம் என்றால் குலைந்திலையே - ஊனமிதைக் (௩௪௩)

கண்டால் நமதாசை கைவிடுவார் என்றதனைத்
தண்டா தொளித்திடவும் சார்ந்தனையே - அண்டாது (௩௪௪)

போதவிடா யாகிப் புலம்புகின்றாய் மற்றதன்பால்
மாதவிடாய் உண்டால் மதித்திலையே - மாதரவர் (௩௪௫)

தங்குறங்கை மெல்லரம்பைத் தண்டென்றாய் தண்டுன்றி
வெங்குரங்கின் மேவுங்கால் விள்ளுதியே - நன்கிலவாய் (௩௪௬)

ஏய்ந்தமுழந் தாளைவரால் என்றாய் புலாற்சிறிதே
வாய்ந்துவராற் றோற்கு மதித்திலையே - சேந்தவடி (௩௪௭)

தண்டா மரையென்றாய் தன்மை விளர்ப்படைந்தால்
வெண்டா மரையென்று மேவுதியோ - வண்டாரா (௩௪௮)

மேனாட்டுஞ் சண்பகமே மேனியென்றாய் தீயிடுங்கால்
தீநாற்றம் சண்பகத்தில் தேர்ந்தனையோ - வானாட்டும் (௩௪௯)

[97]மின்றேர் வடிவென்றாய் மேல்நீ உரைத்தவுளீ
தொன்றே ஒருபுடையாய் ஒத்ததுகாண் - ஒன்றாச்சொல் (௩௫௦)

---

96. நேர்தல் என்பது ஈண்டு விடை கொடுத்தல் என்னும் பொருட்டு : தொ.வே.

97. ஈண் டொருபுடை ஒத்தமை தோற்றியாங் கழியு நிலையின்மையான் என்று கொள்க ; தொ.வே.

வேள்வா கனமென்றாய் வெய்யநமன் விட்டிடுந்தூ
தாள்வா கனமென்றால் ஆகாதோ - வேளானேன்[98] (௩௫௧)

காகளமாய் இன்குரலைக் கட்டுரைத்தாய் காலனென்போன்
காகளமென் பார்க்கென் கழறுதியே - நாகளவும் (௩௫௨)

சாயைமயில் என்றே தருக்குகின்றாய் சார்பிரம[99]
சாயையஃ தென்பார்க்கென் சாற்றுதியே - சேயமலர் (௩௫௩)

அன்ன நடைஎன்பாய் அஃதன் றருந்துகின்ற
அன்னநடை என்பார்க்கென் ஆற்றுதியே - அன்னவரை (௩௫௪)

ஓரோ வியமென்பாய் ஓவியமேல் ஆங்கெழுபத்
தீரா யிரநாடி யாண்டுடைத்தே - பாரார்ந்த (௩௫௫)

முன்னுமலர்க் கொம்பென்பாய் மூன்றொருடரைக் கோடியெனத்
துன்னு முரோமத் துவாரமுண்டே - இன்னமுதால் (௩௫௬)

செய்தவடி வென்பாயச் செய்கைமெய்யேல் நீயவர்கள்
வைதிடினும் மற்றதனை வையாயே - பொய்தவிராய் (௩௫௭)

ஒள்ளிழையார் தம்முருவோர் உண்கரும்பென் றாய்சிறிது
கிள்ளியெடுத் தால்இரத்தங் கீழ்வருமே - கொள்ளுமவர் (௩௫௮)

ஈடில்பெயர் நல்லார் எனநயந்தாய் நாய்ப்பெயர்தான்
கேடில்பெருஞ் சூரனென்பர் கேட்டிலையோ - நாடிலவர் (௩௫௯)

மெல்லியலார் என்பாய் மிகுகருப்ப வேதனையை
வல்லியலார் யார்பொறுக்க வல்லார்காண் - வில்லியல்பூண் (௩௬0)

வேய்ந்தால் அவர்மேல் விழுகின்றாய் வெந்தீயில்
பாய்ந்தாலும் அங்கோர் பலனுண்டே - வேய்ந்தாங்கு (௩௬௧)

சென்றால் அவர்பின்னர்ச் செல்கின்றாய் வெம்புலிப்பின்
சென்றாலும் அங்கோர் திறனுண்டே - சென்றாங்கு (௩௬௨)

நின்றால் அவர்பின்னர் நிற்கின்றாய் கண்மூடி
நின்றாலும் அங்கோர் நிலையுண்டே - ஒன்றாது (௩௬௩)

---

98. வேளானேன்காகளம் என்பது குயில் : தொ.வே.

99. பிரமசாயை என்பது பிரமசத்தி : தொ.வே.

கண்டால் அவருடம்பைக் கட்டுகின்றாய்[100] கல்லணைத்துக்
கொண்டாலும் அங்கோர் குணமுண்டே - பெண்டானார் (௩௬௪)

வைதாலும் தொண்டு வலித்தாய் பிணத்தொண்டு
செய்தாலும் அங்கோர் சிறப்புளதே - கைதாவி (௩௬௫)

மெய்த்தாவும் செங்கோல் மினுக்கால் மயங்கினைநீ
செத்தாலும் அங்கோர் சிறப்புளதே - வைத்தாடும் (௩௬௬)

மஞ்சள் மினுக்கால் மயங்கினைநீ மற்றொழிந்து
துஞ்சுகினும் அங்கோர் சுகமுளதே - வஞ்சியரைப் (௩௬௭)

பார்த்தாடி ஓடிப் படர்கின்றாய் வெங்நரகைப்
பார்த்தாலும் அங்கோர் பலனுண்டே - சேர்த்தார்கைத் (௩௬௮)

தொட்டால் களித்துச் சுகிக்கின்றாய் வன்பூதம்
தொட்டாலும் அங்கோர் துணையுண்டே - நட்டாலும் (௩௬௯)

தெவ்வின்மட வாரைத் திளைக்கின்றாய் தீவிடத்தை
வவ்வுகினும் அங்கோர் மதியுண்டே - செவ்விதழ்நீர் (௩௭௦)

உண்டால் மகிழ்வாய்நீ ஒண்சிறுவர் தம்சிறுநீர்
உண்டாலும் அங்கோ ருரனுண்டே - கண்டாகக் (௩௭௧)

கவ்வுகின்றாய் அவ்விதழைக் கார்மதுகம் வேம்பிவற்றைக்
கவ்வுகினும் அங்கோர் கதியுண்டே - அவ்விளையர் (௩௭௨)

மென்றீயும் மிச்சில் விழைகின்றாய் நீவெறும்வாய்
மென்றாலும் அங்கோர் விளைவுண்டே - முன்றானை (௩௭௩)

பட்டால் மகிழ்வு பதிந்தாய் பதைக்கவம்பு
பட்டாலும் அங்கோர் பலனுண்டே - கிட்டாமெய்த் (௩௭௪)

தீண்டிடிலுள் ளோங்கிச் சிரிக்கின்றாய் செந்தேள்முன்
தீண்டிடினும் அங்கோர் திறனுண்டே - வேண்டியவர் (௩௭௫)

வாய்க்கிடயா தானுமொன்று வாங்குகின்றாய் மற்றதையோர்
நாய்க்கிடினும் அங்கோர் நலனுண்டே - தாக்கவர்க்காய்த் (௩௭௬)

தேட்டாண்மை செய்வாயத் தேட்டாண்மை யைத்தெருவில்
போட்டாலும் அங்கோர் புகழுண்டே - வாட்டாரைக் (௩௭௭)

---

100. கட்டுதல் என்பது ஈண்டுத் தழுவுதல் என்னும் பொருட்டு : தொ. வே.

கொண்டா ருடனுணவு கொள்கின்றாய் குக்கலுடன்
உண்டாலும் அங்கோர் உறவுண்டே - மிண்டாகும் (௩௭௮)

இங்கிவர்வாய்ப் பாகிலையை ஏற்கின்றாய் புன்மலத்தை
நுங்கினுமங் கோர்நல் நொறிலுண்டே[101] - மங்கையர்தம் (௩௭௯)

ஏத்தா மனைகாத் திருக்கின்றாய் ஈமமது
காத்தாலும் அங்கோர் கனமுண்டே - பூத்தாழ்வோர் (௩௮௦)

காட்டாக் குரல்கேட்பாய் கர்த்தபத்தின் பாழ்ங்குரலைக்
கேட்டாலும் அங்கோர் கிளருண்டே - கோட்டாவி (௩௮௧)

ஆழ்ந்தா ருடன்வாழ ஆதரித்தாய் ஆழ்ங்கடலில்
வீழ்ந்தாலும் அங்கோர் விரகுண்டே - வீழ்ந்தாருள் (௩௮௨)

விட்டால் முலையுமெதிர் விட்டால் முகமுமுறக்
காட்டாநின் றார்கண்டும் காய்ந்திலையே - கூட்டாட்குச் (௩௮௩)

செய்கை யிடும்படிதன் சீமான் தனதுபணப்
பைகையிடல் கண்டும் பயந்திலையே - சைகையது (௩௮௪)

கையால் ஒருசிலர்க்கும் கண்ணால் ஒருசிலர்க்கும்
செய்யா மயக்குகின்றார் தேர்ந்திலையே - எய்யாமல் (௩௮௫)

ஈறிகந்த இவ்வகையாய் இம்மடவார் செய்கையெலாம்
கூறுவனேல் அம்ம குடர்குழம்பும் - கூறுமிவர் (௩௮௬)

வாயொருபால் பேச மனமொருபால் செல்லவுடல்
ஆயொருபால் செய்ய அழிவார்காண் - ஆயஇவர் (௩௮௭)

நன்றறியார் தீதே நயப்பார் சிவதலத்தில்
சென்றறியார் பேய்க்கே சிறப்பெடுப்பார் - இன்றிவரை (௩௮௮)

வஞ்சமென்கோ வெவ்வினையாம் வல்லியமென் கோபவத்தின்
புஞ்சமென்கோ மாநரக பூமியென்கோ - அஞ்சுறுமீர் (௩௮௯)

வாளென்கோ வாய்க்கடங்கா மாயமென்கோ மண்முடிவு
நாளென்கோ வெய்ய நமனென்கோ - கோளென்கோ (௩௯௦)

சாலமென்கோ வானிந்த்ர சாலமென்கோ வீறுல
காலமென்கோ நின்பொல்லாக் காலமென்கோ - ஞாலமதில் (௩௯௧)

---

101. நொறில் என்பது அடக்கம் : தொ. வே.

பெண்என்றால் யோகப் பெரியோர் நடுங்குவரேல்
மண்நின்றார் யார்நடுங்க மாட்டார்காண் - பெண்என்றால் (௩௯௨)

பேயும் இரங்குமென்பார் பேய்ஒன்றோ தாம்பயந்த
சேயும் இரங்குமவர் தீமைக்கே - ஆயுஞ்செம் (௩௯௩)

பொன்னால் துகிலால் புனையா விடிலவர்மெய்
என்னாகும் மற்றிதைநீ எண்ணிலையே - இன்னாமைக் (௩௯௪)

கொத்தென்ற அம்மடவார் கூட்டம் எழுமைக்கும்
வித்தென் றறிந்துமதை விட்டிலையே - தொத்தென்று (௩௯௫)

பாச வினைக்குட் படுத்துறும்அப் பாவையர்மேல்
ஆசையுனக் கெவ்வா றடைந்ததுவே[102] - நேசமிலாய் (௩௯௬)

நின்னாசை என்னென்பேன் நெய்வீழ் நெருப்பெனவே[103]
பொன்னாசை மேன்மேலும் பொங்கினையே - பொன்னாசை (௩௯௭)

வைத்திழந்து வீணே வயிறெரிந்து மண்ணுலகில்
எத்தனைபேர் நின்கண் எதிர்நின்றார் - தத்துகின்ற (௩௯௮)

பொன்னுடையார் துன்பப் புணரியொன்றே அல்லதுமற்
றென்னுடையார் கண்டிங் கிருந்தனையே - பொன்னிருந்தால் (௩௯௯)

ஆற்றன்மிகு தாயுமறி யாவகையால் வைத்திடவோர்
ஏற்றவிடம் வேண்டுமதற் கென்செய்வாய் - ஏற்றவிடம் (௪௦௦)

---

102. 292-ஆம் கண்ணிமுதல் இக்கண்ணிவரையில் நம் பெருமான் அவர்கள், பால் உணர்ச்சியை வெறுக்குமாறு கூறியிருக்கிறார்கள். இல்லறத்தின் பால் படாத துறவிகளுக்கும் யோகநெறி நிற்பார் தமக்கும் பால்மயக்கம் கூடாததொன்று என்பதை வலியுறுத்தும்பொருட்டு இங்ஙனம் கூறப் பெரியோர்கள் ஒருப்படுகிறார்கள் என்பது தேவார திருவாசகங்களிலும் திருமந்திரத்திலும் பட்டினத்து அடிகளார் தாயுமான அடிகளார் அருளிச் செய்த திருப்பாடல்களிலும் அருணகிரிநாதருடைய தெய்வத் திருப்புகழ் பாடல்களிலும் பிற ஆன்றோர் நூல்களிலும் காணக்கிடக் கிறது. ஆண்பால் முகத்தான் கூறியிருக்கும் இவை இருபாலுக்கும் வேண்டற்பாலதாகிய பொதுநெறியை உள்ளடக்கி இருக்கிறது எனக் கண்டு தெளிந்து அமைக. 48, 88-ஆம் அடிக் குறிப்புகளில் உரைத் திருப்பதையும் இதனோடு பொருத்தம்படக் கொள்க.

103. 397 முதல் 417 வரையிலுள்ள கண்ணிகளில் இந்த நில உலகினை ஆட்டிவைக்கும் செல்வத்தின் மீதுள்ள பற்றினைக் குறித்துப் பகர்ந் திருப்பது காண்க. செல்வம் நிலையாமை குறித்து நாலடியார் திரு மந்திரம் மணிமேகலை முதலிய பெருநூல்கள் பார்க்க.

வாய்த்தாலும் அங்கதனை வைத்தவிடம் காட்டாமல்
ஏய்த்தால் சிவசிவமற் றென்செய்வாய் - ஏய்க்காது (௪௦௧)
நின்றாலும் பின்னதுதான் நீடும் கரியான
தென்றால் அரகரமற் றென்செய்வாய் - நன்றாக (௪௦௨)
ஒன்றொருசார் நில்லென்றால் ஓடுகின்ற நீஅதனை
என்றும் புரப்பதனுக் கென்செய்வாய் - வென்றியொடு (௪௦௩)
பேர்த்துப் புரட்டிப் பெருஞ்சினத்தால் மாற்றலர்கள்
ஈர்த்துப் பறிக்கிலதற் கென்செய்வாய் - பேர்த்தெடுக்கக் (௪௦௪)
கைபுகுத்தும் காலுட் கருங்குளவி செங்குளவி
எய்புகுத்தக் கொட்டிடின்மற் றென்செய்வாய்-பொய்புகுத்தும் (௪௦௫)
பொன்காவல் பூதமது போயெடுக்கும் போதுமறித்
தென்காவல் என்றால்மற் றென்செய்வாய் - பொன்காவல் (௪௦௬)
வீறுங்கால் ஆணவமாம் வெங்கூளி நின்தலைமேல்
ஏறுங்கால் மற்றதனுக் கென்செய்வாய் - மாறும்சீர் (௪௦௭)
உன்நேயம் வேண்டி உலோபம் எனும்குறும்பன்
இன்னே வருவனதற் கென்செய்வாய் - முன்னேதும் (௪௦௮)
இல்லா நமக்குண்டோ இல்லையோ என்னுநலம்
எல்லாம் அழியுமதற் கென்செய்வாய் - நில்லாமல் (௪௦௯)
ஆய்ந்தோர் சிலநாளில் ஆயிரம்பேர் பக்கலது
பாய்ந்தோடிப் போவதுநீ பார்த்திலையே - ஆய்ந்தோர்சொல் (௪௧௦)
கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற் போலுமென்ற
சீர்த்தாட் குறள்மொழியும் தேர்ந்திலையே[104] - பேர்த்தோடும் (௪௧௧)
நாட்கொல்லி என்றால் நடுங்குகின்றாய் நாளறியா
ஆட்கொல்லி என்பரிதை ஆய்ந்திலையே - கீழ்க்கொல்லைப் (௪௧௨)

---

104. இக்கண்ணியில் நம் அடிகளார் போற்றியிருக்கும் திருக்குறள் பின்வருமாறு:

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று."

பச்சிலையால் பொன்னைப் படைப்பாரேல் மற்றதன்மேல்[105]
இச்சையுனக் கெவ்வா றிருந்ததுவே - இச்சையிலார் (சகங)

இட்டமலம் பட்டவிடம் எல்லாம்பொன் னாமென்றால்
இட்டமதை விட்டற்[106] கிசைந்திலையே - முட்டகற்றப் (சகச)

பொன்னடப்ப தன்றியது போனகமே யாதியவாய்
என்னடுத்த தொன்றுமிஃ தெண்ணிலையே - இந்நிலத்தில் (சகரு)

நீண்மயக்கம் பொன்முன் னிலையாய் உலகியலாம்
வீண்மயக்கம் என்றதனை விட்டிலையே - நீண்வலயத் (சகசு)

திச்செல்வ மின்றி இயலாதேல் சிற்றுயிர்கள்[107]
எச்செல்வம் கொண்டிங் கிருந்தனவே - வெச்சென்ற (சகஎ)

மண்ணாசை கொண்டனைநீ மண்ணாளும் மன்னரெலாம்[108]
மண்ணால் அழிதல் மதித்திலையே - எண்ணாது (சகஅ)

---

105. இங்ஙனம் படைத்தருளும் பெரியோர்கள் நம் நாட்டில் இக்காலத்தும் உண்டு. இதற்குரிய தமிழ் நூல்கள் மறைமுகமான புதைபொருள் கொண்ட எளிய பேச்சுவகையில் அமைந்திருக்கின்றன. இவற்றுள் தலைசிறந்தது நம் பொய்யாமொழிப் புலவர் பெயரால் வழங்கிவரும் "ஞான வெட்டியான்" என்பது. கொல்லாமையையும் உயிர் இரக்கத்தையும் போற்றிவரும் நம்நாடு சித்தர்கணம் நிறைந்த சிவலோகமே ஆகும். மேற்சொன்ன படைத்தற் சுதந்தரம் தெய்வத் திருஅருளால் குருமுகமாகப் பெறற்குரிய மக்கட்பிறப்பின் பேறு. நம் பெருமான் அவர்கள் இதைத் தொடக்கப் பேறெனை உபதேசித்திருக்கிறார்கள். திருஅருட்பா இவ்வாசிரியர் பதிப்பு 4-ஆம் புத்தகம் உபதேசப்பகுதி பார்த்து உணர்க.

106. விடற்கு என்பது விட்டற்கென விகாரமாயிற்று : தொ. வே.

107. செல்வத்தைப் பற்றிய சன்மார்க்கச் சார்பான ஆராய்ச்சி என்று கருதக்கூடிய ஒன்றனை ருஷ்யநாட்டு ஆன்றோரான லியோ டால்ஸ்டாய் பிரபு அவர்கள் (Count Leo Tolstoy) "இனி என்ன செய்வது?" (What must we do ?) என்ற தலைப்பின்கீழ் 1886-இல் வெளியிட்டிருக்கிறார்கள். அது படிக்கப் பெரும்பயன் தருவது. அதன் 16-ஆம் உட்பிரிவினை "ஆன்ம உருக்கம் ஈன்ற அறநிலை" என்ற தலைப்போடு இந்நூல் பதிப்பாசிரியர் "பருந்தும் நிழலும்" என்ற நூலில் தமிழில் மொழிபெயர்த்து 1926-இல் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அதனைக் காண விரும்புவோர் காண்க.

108. 418 முதல் 431 வரையிலுள்ள கண்ணிகளில் மண்ணாசையைக் குறித்து மொழிந்திருப்பது காண்க.

மண்கொண்டார் மாண்டார்தம் மாய்ந்தவுடல் வைக்கவயல்
மண்கொண்டார் தம்மிருப்பில் வைத்திலரோ - திண்கொண்ட (சகக)

விண்ணோருங் காலங்கு வேண்டுமென ஈண்டுபிடி
மண்ணேனுங் கொண்டேக வல்லாரோ - மண்நேயம் (சஉo)

என்னதென்றான் முன்னொருவன் என்னதென்றான் பின்னொருவன்
இன்னதுநீ கேட்டிங் கிருந்திலையோ - மன்னுலகில் (சஉக)

கண்காணி யாய்நீயே காணியல்லாய் நீயிருந்த
மண்காணி என்று மதித்தனையே - கண்காண (சஉஉ)

மண்காணி வேண்டி வருந்துகின்றாய் நீமேலை
விண்காணி வேண்டல் வியப்பன்றே - எண்காண (சஉங)

அந்தரத்தில் நின்றாய்நீ அந்தோ நினைவிடமண்
அந்தரத்தில் நின்ற தறிந்திலையே - தந்திரத்தில் (சஉச)

மண்கொடுப்பேன் என்றுரைக்கில் வைவார் சிறுவர்களும்
மண்கொடுக்கில் நீதான் மகிழ்ந்தனையே - வண்கொடுக்கும் (சஉரு)

வீடென்றேன் மற்றதைமண் வீடென்றே நீநினைந்தாய்
வீடென்ற சொற்பொருளை விண்டிலையே - நாடொன்றும் (சஉசு)

மண்ணால் மரத்தால் வனைகின்ற வீடனைத்தும்
கண்ணாரக் கட்டழிதல் கண்டிலையோ - மண்ணான (சஉஎ)

மேல்வீடும் அங்குடைய வேந்தர்களும் மேல்வீட்டப்
பால்வீடும் பாழாதல் பார்த்திலையோ - மேல்வீட்டில் (சஉஅ)

ஏறுவனே என்பாய் இயமன் கடாமிசைவந்
தேறுவனேல் உன்னசை என்னாமோ - கூறிடும்இம் (சஉகூ)

மண்ணளித்த வேதியனும் மண்விருப்பம் கொள்ளானேல்
எண்ணமுனக் கெவ்வா றிருந்ததுவே - மண்ணிடத்தில் (சஙo)

ஆகாத் துரும்பிடத்தும் ஆசைவைத்தாய் - என்னினுன்றன்
ஏகாப் பெருங்காமம் என்சொல்கேன் - போகாத (சஙக)

பாபக் கடற்கோர் படுகடலாம் பாழ்வெகுளிக்[109]
கோபக் கடலில் குளித்தனையே - தாபமுறச் (சஙஉ)

109. 432 முதல் 445 வரையிலுள்ள கண்ணிகளில் வீடு பேற்றிற்குத் தடங்கலாக நிற்கும் கோபம், கொலை, பொய்ம்மை முதலிய இழிகுணங்களை விவரித்திருப்பது காண்க.

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே[110] - மல்லல்பெறத் (சஙௗ)

தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப்
பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே[111] - துன்னி (சஙச)

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்
திகழ்வாய் மையுந்நீ தெளியாய்[112] - இகழ்வாரை (சஙரு)

எவ்வண்ணம் நம்மை இகழ்வார் அறிவோமென்
றிவ்வண்ணம் என்னைவெளி யிட்டனையே - தெவ்வென்ன (சஙசு)

ஓரா வெகுளி யுடையான் தவமடையான்
தீராவென் பாரதுவும் தேர்ந்திலையே - பேராநின் (சஙஎ)

வெவ்வினைக்கி டாகஅரன் வெம்மைபுரி வானென்றால்
இவ்வெகுளி யார்மாட் டிருத்துவதே - செவ்வையிலாய் (சஙஅ)

ஏய்ந்தனையன் போரிடத்தில் இன்னாமை செய்தவரைக்
காய்ந்தனைமற் றென்னபலன் கண்டனையே - வாய்ந்தறிவோர் (சஙகூ)

எல்லா நலமும் இஃதேயென் றேத்துகின்ற
கொல்லா நலஞ்சிறிதும் கொண்டிலையே[113] - பொல்லாத (சச0)

வன்போ டிருக்கு மதியிலிநீ மன்னுயிர்க்கண்
அன்போ டிரக்கம் அடைந்திலையே - இன்போங்கு (சசக)

---

110. இக்கண்ணியில் நம் அடிகளார் ஆண்டுகொண்டிருக்கும் திருக்குறள் பின்வருமாறு:
"செல்லா இடத்துச் சினந்தீது; செல்லிடத்தும்
இல்அதனில் தீய பிற."

111. இக்கண்ணியில் மேற்கொண்டிருக்கும் திருக்குறளாவது:
"தன்னைத்தான் காக்கில் சினம்காக்க; காவாக்கால்,
தன்னையே கொல்லும் சினம்."

112. இக்கண்ணியில் மேற்கொண்டிருக்கும் திருக்குறளாவது:
"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

113. இக்கண்ணியொடு பின்வரும் திருக்குறளினை ஒப்புநோக்குக:
"அறவினை யாதெனில் கொல்லாமை: கோறல்
பிறவினை எல்லாம் தரும்."

தூய்மையென்ப தெல்லாம் துணையாய் அணைவதுதான்
வாய்மையென்ப தொன்றே மதித்திலையே[114] - தூய்மையிலாய் (சசஉ)

மானொருகை ஏந்திநின்ற வள்ளலன்பர் தங்களுளே
நானொருவன் என்று நடித்தனையே - ஆனமற்றைப் (சசங)

பாதகங்க ளெல்லாம் பழகிப் பழகியதில்
சாதகஞ்செய் வோரில் தலைநின்றாய் - பாதகத்தில் (சசச)

ஓயா விகார உணர்ச்சியினால் இவ்வுலக
மாயா விகாரம் மகிழ்ந்தனையே - சாயாது (சசரு)

நீஇளமை மெய்யாய் நினைந்தாய் நினைப்பெற்ற
தாயிளமை எத்தனைநாள் தங்கியதே[115] - ஆயிளமை (சசசு)

மெய்கொடுத்த தென்பாய் விருத்தர்கட்கு நின்போல்வார்
கைகொடுத்துப் போவதனைக் கண்டிலையோ - மெய்கொடுத்த (சசஎ)

கூனொடும்கைக் கோலூன்றிக் குந்தி நடைதளர்ந்து
கானடுங்க நிற்பவரைக் கண்டிலையோ - ஊனொடுங்க (சசஅ)

ஐயநட வென்றே அரும்புதல்வர் முன்செலப்பின்
பைய நடப்பவரைப் பார்த்திலையோ - வெய்யநமன் (சசகூ)

நாடழைக்கச் சேனரி நாயழைக்க நாறுசுடு
காடழைக்க மூத்துநின்றார் கண்டிலையோ - பீடடைந்த (சரு0)

மெய்யுலர்ந்து நீரின் விழியுலர்ந்து வாயுலர்ந்து
கையுலர்ந்து நிற்பவரைக் கண்டிலையோ - மெய்யுலர்ந்தும் (சருக)

சாகான் கிழவன் தளர்கின்றான் என்றிவண்நீ
ஓகாளம் செய்வதனை ஓர்ந்திலையோ - ஆகாத (சருஉ)

---

114. இக்கண்ணியொடு பின்வரும் திருக்குறட் பாவினைப் பார்க்க:

“தூஉய்மை என்ப(து) அவாவின்மை; மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.”

115. 446 முதல் 460 வரையிலுள்ள கண்ணிகள் இளமை நிலையாமையை விளக்குவன ஆகும். இது குறித்து நாலடியார் திருமந்திரம் முதலிய நூல்கள் பார்க்க.

கண்டமிது பொல்லாக் கடுநோய் எனுங்குமர[116]
கண்டமிஃ தென்பவரைக் கண்டிலையோ - கொண்டவுடல் (௪௫௩)

குட்டமுறக் கைகால் குறுக்குமிது பொல்லாத
குட்டமென நோவார் குறித்திலையோ - துட்டவினை (௪௫௪)

மாலையினும் காலையினும் மத்தியினும் குத்துமிது
சூலையென நோவாரைச் சூழ்ந்திலையோ - சாலவுமித் (௪௫௫)

தேக மதுநலியச் செய்யுங்காண் உய்வரிதாம்
மேகமிஃ தென்பாரை மேவிலையோ - தாகமுறச் (௪௫௬)

சித்தநோய் செய்கின்ற சீதநோய் வாதமொடு
பித்தநோய் கொண்டவர்பால் பேர்ந்திலையோ - மெத்தரிய (௪௫௭)

கைப்பிணியும் காற்பிணியும் கட்பிணியோ டெண்ணரிய
மெய்ப்பிணியும் கொண்டவரை விண்டிலையோ - எய்ப்புடைய (௪௫௮)

முட்டுறும் கைகால் முடங்கூன் முதலாய
எட்டுறுங் கொண்டவரை எண்ணிலையோ - தட்டுறிங் (௪௫௯)

கெண்ணற்ற துண்டேல் இளமை ஒருபொருளாய்
எண்ணப் படுமோவென் றெண்ணிலையோ - எண்ணத்தில் (௪௬௦)

பொய்யென் றறவோர் புலம்புறவும் இவ்வுடம்பை[117]
மெய்யென்று பொய்ம்மயக்கம் மேவினையே[118] - கைநின்று (௪௬௧)

---

116. 446 முதல் ஏழு கண்ணிகள் மூப்பினைக் குறிக்க, 453 முதல் ஏழு கண்ணிகள் உடற்குறும் நோயினைக் குறிப்பனவாகும். அலெக்ஸிஸ் கார்ரெல் (Alexis Carrel) என்பவர் மேல்நாட்டு விஞ்ஞானிகளில் தலைசிறந்த நிபுணர். ஓர் பேரறிவாளர். "மக்கட்பிறப்பின் அறிவறியாச் சிறப்பு" ("Man the Unknown") என்னும் தம் நூலில் உடம்பு மனம் உயிர் என்பனவற்றைக் குறித்த ஆயிரக்கணக்கான, அறிதற்கரிய, மிக நுட்பமான பேர் உண்மைகளைக் குறளேபோல் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்கள். மக்கட்பிறப்பினரின் துன்பங்கள் அடிப்படையில் நோயைப் பொறுத்தனவன்றி மூப்பினைப் பொறுத்தன அல்ல என்றும், மூப்பின் துன்பங்கள் வரவரக் குறைந்து நீங்கும் காலம் விரைவில் வரும் என்றும் கூறுகிறார்கள். உலகப் பெரு நூல்களுள் ஒன்றாகிய இதைத் தமிழ் மக்கள் கற்றுணர்ந்தால் பெரும் பயன் பெறுவர்.

117. 461 முதல் 524 வரையிலுள்ள கண்ணிகளில் உடம்பும் உடம்பைச் சார்ந்தெழுந்த பெற்றோர் முதல் எண்ணப்பட்ட உறவினர் தொடர்பும் பயன்படாது வெம்பி வீழ்வது விளக்கியிருக்கிறது.

118. யாக்கை நிலையாமை குறித்துத் திருமந்திரம் நாலடியார் முதலிய நூல்கள் பார்த்துணர்க.

கூகா எனமடவார் கூடி அழல்கண்டும்
நீகாதல் வைத்து நிகழ்ந்தனையே - மாகாதல் (௪௬௨)

பெண்டிருந்து மாழ்கப் பிணங்கொண்டு செல்வாரைக்
கண்டிருந்தும் அந்தோ கலங்கிலையே - பண்டிருந்த (௪௬௩)

ஊரார் பிணத்தின் உடன்சென்று நாம்மீண்டு
நீராடல் சற்றும் நினைந்திலையே - சீராக (௪௬௪)

இன்றிருந்தார் நாளைக் கிருப்பதுபொய் என்றறவோர்
நன்றிருந்த வார்த்தையும்நீ நாடிலையே[119] - ஒன்றி (௪௬௫)

உறங்குவது போலுமென்ற ஒண்குறளின் வாய்மை
மறங்கருதி அந்தோ மறந்தாய்[120] - கறங்கின் (௪௬௬)

நெருநல் உளனொருவன் என்னும் நெடுஞ்சொல்
மருவும் குறட்பா மறந்தாய்[121] - தெருவில் (௪௬௭)

இறந்தார் பிறந்தா ரிறந்தா ரெனுஞ்சொல்
மறந்தாய் மறந்தாய் மறந்தாய் - இறந்தார் (௪௬௮)

பறையோசை அண்டம் படீரென் றொலிக்க
மறையோசை யன்றே மறந்தாய் - இறையோன் (௪௬௯)

புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை மாயா
மலமொன்றி அந்தோ மறந்தாய்[122] - நிலனொன்றி (௪௭௦)

---

119. பின்வரும் பட்டினத்தடிகள் திருப்பாட்டினைக் காண்க:
"இன்றிருந்து நாளை இறக்கும் தொழிலுடைய
புன்றலைய மாக்கள் புகழ்வரோ—வென்றிமழு
வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை
ஆளுடையான் செம்பொன் அடி."

120. இக்கண்ணியில் மேற்கொண்டிருக்கும் திருக்குறளாவது:
"உறங்குவது போலும்சாக் காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு."

121. இக்கண்ணியில் மேற்கொண்டிருக்கும் திருக்குறளாவது:
"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."

122. இக்கண்ணியில் போற்றப்பட்ட திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பின்வருமாறு:
"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்(டு) ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என்(று) அருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழைஎன்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே."

விக்குள் எழநீர் விடுமி னெனஅயலோர்
நெக்குருகல் அந்தோ நினைந்திலையே - மிக்கனலில் (சஎக)

நெய்விடல்போல் உற்றவர்கண் ணீர்விட் டழவுயிர்பல்
மெய்விடலும் கண்டனைநீ விண்டிலையே - செய்வினையின் (சஎஉ)

வாள்கழியச் செங்கதிரோன் வான்கழிய நம்முடைய[123]
நாள்கழிதற் கந்தோ நடுங்கிலையே - கோள்கழியும் (சஎங)

நாழிகையோர் நாளாக நாடினையே நாளைஒரு
நாழிகையாய் எண்ணி நலிந்திலையே - நாழிகைமுன் (சஎச)

நின்றார் இருந்தார் நிலைகுலைய வீழ்ந்துயிர்தான்[124]
சென்றார் எனக்கேட்டும் தேர்ந்திலையே - பின்றாது (சஎரு)

தொட்டார் உணவுடனே தும்மினார் அம்மஉயிர்
விட்டார் எனக்கேட்டும் வெட்கிலையே - தட்டாமல் (சஎசா)

உண்டார் படுத்தார் உறங்கினார் பேருறக்கம்
கொண்டார் எனக்கேட்டும் கூசிலையே[125] - வண்தாரார் (சஎஎ)

நேற்று மணம்புரிந்தார் நீறானார் இன்றென்று
சாற்றுவது கேட்டும் தணிந்திலையே[126] - வீற்றுறுதேர் (சஎஅ)

ஊர்ந்தார் தெருவில் உலாப்போந்தார் வானுலகம்
சேர்ந்தார் எனக்கேட்டும் தேர்ந்திலையே - சேர்ந்தாங்கு (சஎகூ)

---

123. இதனோடு பின்வரும் திருக்குறட் பாவினைப் பார்க்க:
"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள(து) உணர்வார்ப் பெறின்."

124. இக்கண்ணியொடு பின்வரும் நாலடியாரின் அருஞ் சொற்கள் காண்க.
—" இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச் சென்றான்."

125. இக்கண்ணியோடு பின்வரும் திருமந்திரப் பாவினை ஒத்துணர்க:
"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார் ;
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார் ;
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார் ;
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே."

126. "வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள்."
என்று பட்டினத்து அடிகளாரும்
" இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்(று)
எண்ணவோ திடமில்லையே."
என்று தாயுமான அடிகளாரும் கூறி வருந்துவது காண்க.

என்னே இருந்தார் இருமினார் ஈண்டிறந்தார்
அன்னே எனக்கேட்டும் ஆய்ந்திலையே - கொன்னே (சஅ0)

மருவும் கருப்பைக்குள் வாய்ந்தே முதிராக்[127]
கருவும் பிதிர்ந்துதிரக் கண்டாய் - கருவொன் (சஅக)

றொருதிங்கள் ஐயைந்தில்[128] ஒவ்வொன்றில் அந்தோ
கெடுகின்ற தென்றதுவும் கேட்டாய் - படுமிந் (சஅஉ)

நிலைமுற்ற யோனி நெருக்கில் உயிர்போய்ப்
பலனற்று வீழ்ந்ததுவும் பார்த்தாய் - பலனுற்றே (சஅந)

காவென்று வீழ்ந்தக் கணமே பிணமாகக்
கோவென் றழுவார் குறித்திலையோ - நோவின்றிப் (சஅச)

பாலனென்றே அன்னைமுலைப் பாலருந்தும் காலையிலே
காலன் உயிர்குடிக்கக் கண்டிலையோ - மேலுவந்து (சஅரு)

பெற்றார் மகிழ்வெய்தப் பேசிவிளை யாடுங்கால்
அற்றாவி போவ தறிந்திலையோ - கற்றாயப் (சஅசா)

பள்ளியிடுங் காலவனைப் பார நமன்வாயில்
அள்ளியிடும் தீமை அறிந்திலையோ - பள்ளிவிடும் (சஅஎ)

காளைப் பருவமதில் கண்டார் இரங்கிட அவ்
ஆளைச் சமன்கொள்வ தாய்ந்திலையோ - வேளைமண (சஅஅ)

மாப்பிள்ளை ஆகி மணமுடிக்கும் அன்றவனே[129]
சாப்பிள்ளை யாதலெண்ணிச் சார்ந்திலையே - மேற்பிள்ளை (சஅகூ)

மாடையேர்ப் பெண்டுடனில் வாழுங்கால் பற்பலர்தாம்
பாடைமேல் சேர்தலினைப் பார்த்திலையோ - வீடலிஃ (சகூ0)

---

127. 481, 482-ஆம் கண்ணிகளொடு நம் மணிவாசகப் பெருமானார் போற்றித் திருஅகவலில் இவை குறித்துத் திருவாய்மலர்ந்திருப்பது கண்டு தெளிக.

128. ஐயைந்து என்பதனை ஐந்தும் ஐந்தும் என உம்மைத்தொகையாகக் கொள்க : தொ.வே.

129. "மன்றங் கறங்க மணப்பறை ஆயின
அன்றவற்(கு) ஆங்கே பிணப்பறையாய்—பின்றை
ஒலித்தலும் உண்டாம்."
என்னும் நாலடியாரையும்
"மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணிஇழையார் வாழ்த்தொலிபோய் அழுகைஒலி யாய்க்கழிய"
என்னும் திருவிளையாடல் புராணத்தையும் இக்கண்ணியொடு பார்க்க.

இக்கணமோ மேல்வந் திடுங்கணமோ அன்றிமற்றை
எக்கணமோ என்றுர்நீ எண்ணிலையே - தொக்குறுதோல் (௪௯௧)

கூடென்கோ இவ்வுடம்பைக் கோள்வினைநீர் ஓட்டில்விட்ட
ஏடென்கோ நீர்மேல் எழுத்தென்கோ - காடென்கோ (௪௯௨)

பாழென்கோ ஒன்பதுவாய்ப் பாவையென்கோ வன்பிறவி
ஏழென்கோ கன்மமதற் கீடென்கோ - தாழ்மண்ணின் (௪௯௩)

பாண்டமென்கோ வெஞ்சரக்குப் பையென்கோ பாழ்ங்கரும
காண்டமென்கோ ஆணவத்தின் கட்டென்கோ - கோண்தகையார் (௪௯௪)

மெய்யென்கோ மாய விளைவென்கோ மின்னென்கோ
பொய்யென்கோ மாயப் பொடியென்கோ - மெய்யென்ற (௪௯௫)

மங்கலத்தை மங்கலத்தால் வாஞ்சித் தனருலகர்
அங்கவற்றை எண்ணா தலைந்தனையே - தங்குலகில் (௪௯௬)

மற்றிதனை ஓம்பி வளர்க்க உழன்றனைநீ
கற்றதனை எங்கே கவிழ்த்தனையே - அற்றவரை (௪௯௭)

இக்கட் டவிழ்த்திங் கெரிமூட் டெனக்கேட்டும்
முக்கட்டும் தேட முயன்றனையே - இக்கட்டு (௪௯௮)

மண்பட்டு வெந்தீ மரம்பட் டிடக்கண்டும்
வெண்பட் டுடுக்க விரைந்தனையே - பண்பட்ட (௪௯௯)

ஐயா அரைநாண் அவிழுமெனக் கேட்டுநின்றும்
மெய்யா பரணத்தின் மேவினையே - எய்யாமல் (௫௦௦)

காதிற் கடுக்கன் கழற்றுமெனக் கேட்டுநின்றும்
ஏதிற் பணியினிடத் தெய்தினையே - தாதிற்குத் (௫௦௧)

துற்கந்த மாகச் சுடுங்கால் முகர்ந்திருந்தும்
நற்கந்தத் தின்பால் நடந்தனையே - புற்கென்ற (௫௦௨)

வன்சுவைத்தீ நாற்ற மலமாய் வரல்கண்டும்
இன்சுவைப்பால் எய்தி யிருந்தனையே - முன்சுவைத்துப் (௫௦௩)

பாறுண்ட காட்டில் பலர்வெந் திடக்கண்டும்
சோறுண் டிருக்கத் துணிந்தனையே - மாறுண்டு (௫௦௪)

கூம்புலகம் பொய்யெனநான் கூவுகின்றேன் கேட்டுமிரு
சோம்பலுடன் தூக்கந் தொடர்ந்தனையே - ஆம்பலனோர் (௫௦௫)

நல்வாழ்வை எண்ணி நயந்தோர் நயவாத
இல்வாழ்வை மெய்யென் றிருந்தனையே - சொல்லாவி (ருoசு)

ஈன்றோன் தனைநாளும் எண்ணுமல் இவ்வுடம்பை
ஈன்றோரை ஈன்றோரென் றெண்ணினையே - ஈன்றோர்கள் (ருoஎ)

நொந்தால் உடனின்று நோவார் வினைப்பகைதான்
வந்தால் அதுநீக்க வல்லாரோ - வந்தாடல் (ருoஅ)

உற்றசிறர் நம்மடையா தோட்டுகிற்பார் தென்றிசைவாழ்
மற்றவன்வந் தால்தடுக்க வல்லாரோ - சிற்றுணவை (ருoகூ)

ஈங்கென்றால் வாங்கி யிடுவார் அருளமுதம்
வாங்கென்றால் வாங்கியிட வல்லாரோ - தீங்ககற்றத் (ருகo)

தூண்டா மனையாதிச் சுற்றமெலாம் சுற்றியிட
நீண்டாய் அவர்நன் னெறித்துணையோ - மாண்டார்பின் (ருகக)

கூடி அழத்துணையாய்க் கூடுவார் வன்னரகில்
வாடியழும் போது வருவாரோ - நீடியநீ (ருகஉ)

இச்சிவர் தன்துணையோ ஈங்கிவர்கள் நின்துணையோ
சிச்சீ இதென்ன திறங்கண்டாய் - இச்சிவர் (ருகங)

நின்னைவைத்து முன்சென்றால் நீசெய்வ தென்னவர்முன்
இந்நிலத்தில் நீசென்றால் என்செய்வர் - நின்னியல்பின் (ருகச)

எத்தனைதாய் எத்தனைபேர் எத்தனையூர் எத்தனைவாழ்[130]
வெத்தனையோ தேகம் எடுத்தனையே - அத்தனைக்கும் (ருகரு)

அவ்வவ் விடங்கடொறும் அவ்வவரை ஆண்டாண்டிங்
கெவ்வெவ் விதத்தால் இழந்தனையோ - அவ்விதத்தில் (ருகசு)

ஒன்றேனும் நன்றாய் உணர்ந்திருந்தி யேலிவரை
இன்றே அறத்தற் கிசையாயோ - நின்றோரில் (ருகஎ)

தாயார் மனையார் தனயரார் தம்மவரார்
நீயார் இதனை நினைந்திலையே - சேயேகில் (ருகஅ)

ஏங்குவரே என்றாய் இயமன்வரின் நின்னுயிரை
வாங்கிமுடி யிட்டகத்தில் வைப்பாரோ - நீங்கியிவண் (ருககூ)

---

130. "அன்னை எத்தனை எத்தனை அன்னையோ!
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ!"
என்னும் நம் பட்டினத்தடிகளார் திருப்பாடலை இக்கண்ணியொடு காண்க.

உன்தந்தை தன்றனக்கிங் கோர்தந்தை நாடுவனீ[131]
என்தந்தை என்றுரைப்ப தெவ்வாறே - சென்றுபின்னின் (௫௨௦)

தன்மனையாள் மற்றொருவன் தன்மனையாள் ஆவளெனில்
என்மனையாள் என்பதுநீ எவ்வணமே - நன்மைபெறும் (௫௨௧)

நட்பமைந்த நன்னெறிநீ நாடா வகைதடுக்கும்
உட்பகைவர் என்றிவரை ஓர்ந்திலையே - நட்புடையாய் (௫௨௨)

எம்மான் படைத்தஉயிர் இத்தனைக்குட் சில்லுயிர்பால்
இம்மால் அடைந்ததுநீ என்னினைந்தோ - வம்மாறில் (௫௨௩)

எம்பந்த மேநினக்கிங் கில்லையென்றால் மற்றையவர்
தம்பந்தம் எவ்வாறு தங்கியதே - சம்பந்தர் (௫௨௪)

அற்றவருக் கற்றசிவ னாமெனுமப் பொன்மொழியை[132]
மற்றைமொழி போன்று மறந்தனையே[133] - சிற்றுயிர்க்குக் (௫௨௫)

கற்பனையில் காய்ப்புளதாய்க் காட்டும் பிரபஞ்சக்
கற்பனையை மெய்யென்று கண்டனையே - பற்பலவாம் (௫௨௬)

தூரியத்தில்[134] தோன்றொலிபோல் தோன்றிக் கெடுமாயா
காரியத்தை மெய்யெனநீ கண்டனையே - சீரியற்றும் (௫௨௭)

---

131. "எனக்குத்தாய் ஆகியாள் என்னைஈங்(கு) இட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்."
என்னும் நாலடியாரை இக்கண்ணியொடு காண்க.

132. 525 முதல் 612 வரையிலுள்ள கண்ணிகளில் மேலே வகுத்துரைத்த இழிகுணங்களும் தாழ்ந்த ஒழுக்கங்களும் ஒருவனுடைய நெஞ்சின் உயர்ந்த தன்மைக்கு அழகல்ல என்பதை வற்புறுத்தியிருக்கிறது.

133. இக்கண்ணியில் போற்றியிருக்கும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பின்வருமாறு :

"வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன்
வெள்ளைநீ றணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி யாய குலச்சிறை
குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன் உலகினில்
இயற்கையை ஒழித்திட்(டு)
அற்றவர்க்(கு) அற்ற சிவன்உறை கின்ற ஆலவாய்
ஆவதும் இதுவே."

134. தூரியம் என்பது பறை : தொ.வே.

ஆடகத்தில் பித்தளையை ஆசித் திடுங்கபட
நாடகத்தை மெய்யென்று நம்பினையே - நீடகத்தில் (௫௨௮)

காயவித்தை யாலக் கடவுள் இயற்றுமிந்த
மாயவித்தை மெய்யெனநீ வாழ்ந்தனையே - வாயவித்தை (௫௨௯)

இப்படக மாயை யிருள்தமமே என்னுமொரு
முப்படகத் துள்ளே முயங்கினையே - ஒப்பிறைவன் (௫௩௦)

ஆனவொளி யிற்பரையாம் ஆதபத்தி னால்தோன்றும்
கானலினை நீராய்க் களித்தனையே - ஆனகிரி (௫௩௧)

யாசத்தி யென்றிடுமோர் அம்மைவிளை யாட்டெனுமிப்
பாசத்தி னுள்ளே படர்ந்தனையே - நேசத்தின் (௫௩௨)

பொய்யொன்றுண் மெய்யிற் புகும்பால லீலைதனை
மெய்யென்று வீணில் விரிந்தனையே - பொய்யென்று (௫௩௩)

மீட்டுநின்ற லீலா விநோத மெனுங்கதையைக்
கேட்டுநின்றும் அந்தோ கிளர்ந்தனையே - ஈட்டிநின்ற (௫௩௪)

காலத்தை வீணில் கழிக்கும் படிமேக
சாலத்தை மெய்யாய்த் தருக்கினையே - சாலத்தில் (௫௩௫)

கண்மையகன் றோங்குமந்த காரத்தில் செம்மாப்புற்
றுண்மையொன்றுங் காணா துழன்றனையே - வண்மையிலாய் (௫௩௬)

இங்கு நினைப்பெரியோர் என்னினைப்பார் ஏமாப்பில்
கங்கு லினைப்பகலாய்க் கண்டனையே - தங்குறுமித் (௫௩௭)

தேகாதி பொய்யெனவே தேர்ந்தார் உரைக்கவும்நீ
மோகாதிக் குள்ளே முயல்கின்றாய் - ஓகோநும் (௫௩௮)

கோமுடிக்கண் தீப்பற்றிக் கொண்டதென்றால் மற்றதற்குப்
பூமுடிக்கத் தேடுகின்றோர் போன்றனையே - மாமுடிக்கும் (௫௩௯)

வாழ்வுநிலை யன்றிமைப்பில் மாறுகின்ற தென்றுரைத்தும்
வீழ்வுகொடு[135] வாளா விழுகின்றாய் - தாழ்வுறநும் (௫௪௦)

விண்டுறுங்கை வீடனலால் வேகின்ற தென்னவுட்போய்
உண்டுறங்கு கின்றோரை ஒத்தனையே - தொண்டுலகங் (௫௪௧)

---

135. வீழ்வு என்பது விருப்பம் : தொ.வே.

கானமுயற் கொம்பாய்க் கழிகின்ற தென்கின்றேன்
நீநயமுற் றந்தோ நிகழ்கின்றாய் - ஆனநம்மூர் (௫௪௨)

வெள்ளத்தி னால்முழுகி விட்டதென்றால் சென்றுகடை
கொள்ளத் திரிபவர்போல் கூடினையே - கொள்ளவிங்கு (௫௪௩)

கண்டனவெல் லாம்நிலையாக் கைதவமென் கின்றேன்நீ
கொண்டவைமுற் சேரக் குறிக்கின்றாய் - உண்டழிக்க (௫௪௪)

ஊழிவெள்ளம் வந்ததென்றால் உண்பதற்கும் ஆடுதற்கும்
ஊழிநன்னீ[136] ரோவென்பார் ஒத்தனையே - ஏழியற்றும் (௫௪௫)

தற்புவனம் போகம் தனுகரணம் என்கின்ற
சொற்பனத்தில் அந்தோ துவன்றினையே - பற்பகலும் (௫௪௬)

உண்டனவே உண்கின்றாய் ஓர்ந்தனவே ஓர்கின்றாய்
கண்டனவே கண்டு களிக்கின்றாய் - கொண்டனவே (௫௪௭)

கொண்டியங்கு கின்றாய் குறித்தனவே பிற்குறித்துப்
பண்டறியார் போலப் படர்கின்றாய் - பண்டறிந்து (௫௪௮)

சொல்லாடி நின்றனவே சொல்கின்றாய் மற்றிதனை
நல்லோர்கள் கண்டால் நகையாரோ - செல்லான (௫௪௯)

காலம்போல் இங்குநிகழ் காலமுங்காண் கின்றியெதிர்
காலமற்றும் அத்திறம்மேற் காண்குவையேல் - சாலவுமுன் (௫௫௦)

போதுசெலா முன்னமனு பூதியைநீ நாடாமல்
யாதுபயன் எண்ணி இளைகின்றாய் - தீதுசெயும் (௫௫௧)

வீணவத்தை யெல்லாம் விளைக்கும் திறல்மூல
ஆணவத்தி னாலே அழிந்தனையே - ஆணவத்தில் (௫௫௨)

நீயார் எனஅறியாய் நின்னெதிரில் நின்றவரை
நீயார் எனவினவி நீண்டனையே - ஓயாமல் (௫௫௩)

ஊனின்ற ஒன்றின் உளவறியாய் அந்தோநீ
நானென்று சொல்லி நலிந்தனையே - நானென்று (௫௫௪)

சொல்லுதியோ சொல்லாயோ துவ்வாமை பெற்றொருநீ
அல்லலுறுங் காலத் தறைகண்டாய் - அல்லலெலாம் (௫௫௫)

136. ஊழி என்பது கடல் : தொ.வே.

நீஇங்கே நான்அங்கே நிற்கநடு வேகுதித்தால்
நீஎங்கே நான்எங்கே நின்றறிகாண் - நீஇங்கு (௫௫௬)

ஒன்றெடுக்கச் சென்றுமற்றை ஒன்றெடுக்கக் காண்கின்றேன்
இன்றடுத்த நீஎங் கிருந்தனையே - மன்றடுத்த (௫௫௭)

தாளா தரித்தேநின் றன்னைமறந் துய்யாது
வாளா மதத்தின் மலிகின்றாய் - கேளாயிச் (௫௫௮)

சார்பிலொன்று விட்டொழிந்தால் சாலமகிழ் கிற்பேனான்[137]
சோர்புகொண்டு நீதான் துயர்கின்றாய் - சார்புபெருந் (௫௫௯)

தூவென்று நாணிவணஞ் சும்மா இருந்தாலும்
வாவென் றெனையும் வலிக்கின்றாய் - ஓவுன்றன் (௫௬௦)

சூழ்ச்சியறி யேன்நீ சுழல்கின்ற போதெல்லாம்
சூழ்ச்சியிலே நானும் சுழல்கின்றேன் - நீட்சியில்நீ (௫௬௧)

காலசைத்தால் யானும் கடிதில் தலையசைப்பேன்
மாலசைத்த நின்புணர்ப்பின் வாறெதுவோ - வானுமண்டக் (௫௬௨)

கூவத்தில் யானோர் குடநீ கயிற்றோடும்
ஏவல் கொளுமேழை என்கேனோ - பாவத்தில் (௫௬௩)

சுற்றுண்ட நீகடலில் தோன்றுசுழி யாகஅதில்
எற்றுண்ட நான்திரணம் என்கேனோ - பற்றிடுநீ (௫௬௪)

சங்கற்ப மாஞ்சூறை தானாக நானாடும்
அங்கட் சருகென் றறைகேனோ - பொங்குற்ற (௫௬௫)

சேலைவிரா யோர்தறியில் செல்குழைநீ பின்தொடரும்
நூலிழைநான் என்று நுவல்கேனோ - மாவிடுநீ (௫௬௬)

துள்ளுறுப்பின் மட்பகைஞன் சுற்றாழி யாகவதின்
உள்ளுறுப்பே நானென் றுரைக்கேனோ - எள்ளுறுநீ (௫௬௭)

பாழலைவா னேகும் பருந்தாக அப்பருந்தின்
நீழலைநான் என்று நினைகேனோ - நீழலுறா (௫௬௮)

நின்வசம்நான் என்றுலகு நிந்தைமொழி கின்றதலால்
என்வசம்நீ என்ப திலைகண்டாய் - என்வசம்நீ (௫௬௯)

---

137. இக்கண்ணியோடு பின்வரும் திருக்குறட் பாவினை ஒத்துணர்க.
"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்."

ஆனால் எளியேனுக் காகாப் பொருளுளவோ
வானாடர் வந்து வணங்காரோ - ஆனாமல்[138] (௫௭0)

எண்ணுதற்கும் பேசுதற்கும் எட்டாப் பரஞ்சோதி
கண்ணுதலும் அங்கைக் கனியன்றோ - எண்ணுமிடத் (௫௭௧)

தென்செய்வே னோர்கணமும் என்சொல்வழி நில்லாமல்
கொன்செய்வேன் என்று குதிக்கின்றாய் - வன்செய்யும் (௫௭௨)

சிந்தோடும்[139] ஓர்வடவைத் தீயும் கரத்தடைப்பர்
அந்தோ உனையார் அடக்குவரே - வந்தோடும் (௫௭௩)

கச்சோதம்[140] என்னக் கதிரோன் தனையெடுப்பர்
அச்சோ உனையார் அடக்குவரே - வைச்சோங்கு (௫௭௪)

மூவுலகும் சேர்த்தொருதம் முன்றானை யின்முடிவர்
ஆவுனையும் இங்கார் அடக்குவரே - மேவுபல (௫௭௫)

தேசமென்றும் காலமென்றும் திக்கென்றும் பற்பலவாம்
வாசமென்றும் அவ்வவ் வழக்கென்றும் - மாசுடைய (௫௭௬)

போகமென்றும் மற்றைப் புலனென்றும் பொய்அகலா
யோகமென்றும் பற்பலவாம் யூகமென்றும் - மேகமென்றும் (௫௭௭)

வானென்றும் முந்நீர் மலையென்றும் மண்ணென்றும்
ஊனென்றும் மற்றை உறவென்றும் - மேல்நின்ற (௫௭௮)

சாதியென்றும் வாழ்வென்றும் தாழ்வென்றும் இவ்வுலக
நீதியென்றும் கன்ம நெறியென்றும் - ஓதரிய (௫௭௯)

அண்டமென்றும் அண்டத் தசைவும் அசைவுமலாப்
பண்டமென்றும் சொல்பவெலாம் பன்முகங்கள் - கொண்டிருந்த (௫௮0)

உன்நினைவி னுள்ளே உதித்திட் டுலவிநிற்ப
எந்நினைவு கொண்டோமற் றிவ்வுலகர் - எந்நவையும் (௫௮௧)

தந்தோன் எவனோ சதுமுகனுண் டென்பார்கள்
அந்தோநின் செய்கை அறியாரே - அந்தோநான் (௫௮௨)

---

138. ஆனாமை என்பது விட்டு நீங்காமை : தொ.வே.

139. சிந்து என்பது கடல் : தொ.வே.

140. கச்சோதம் என்பது மின்மினிப் பூச்சி : தொ.வே.

ஆமென்றால் மற்றதனை அல்லவென்பாய் அல்லவென்றால்[141]
ஆமென்பாய் என்னை அலைக்கின்றாய் - நாம்அன்பாய் (ருஅ௩)

என்றும் பிறந்திறவா இன்பம் அடைதுமென்றால்
நன்றென் றொருப்படுவாய் நண்ணுங்கால் - தொன்றெனவே[142] (ருஅ௪)

செல்கிற்பாய் செல்லாச் சிறுநடையில் தீமையெலாம்
நல்கிற்பாய் என்னேநின் நட்புடைமை - சொல்கிற்பில் (ருஅரு)

ஆவதுவும் நின்னால் அழிவதும்நின் னாலெனயான்
நோவதுவும் கண்டயலில் நோக்கினையே - தாவுமெனக் (ருஅ௬)

காணவலம் பெண்ணவலம் ஆகும் பொருளவலம்
ஊணவலம் உற்றாரோ டாவலம் - பூணவலம் (ருஅ௭)

ஊன்அவலம் அன்றியும்என் உற்றதுணை யாம்நீயும்
தான்அவலம் என்றாலென் சாற்றுவதே - நான்இவணம் (ருஅஅ)

இன்பமெது கண்டேமால் இச்சையெலாம் துன்பமதில்
துன்பம் பிறப்பென்றே சோர்கின்றேன் - வன்புடைய (ருஅ௯)

இப்பிறவித் துன்பத்தி னும்திதியில் துன்பமது
செப்பரிதாம் என்றே திகைக்கின்றேன் - செப்பிறப்பின் (ரு௯0)

ஓயாத துன்பம் உரைக்க உடம்பெல்லாம்
வாயாகி னும்போத மாட்டாதேல் - ஏஏநாம் (ரு௯௧)

செய்வதென்னோ என்று தியங்குகின்றேன் இவ்வணம்நான்
நைவதெல்லாம் கண்டும் நடந்தனையே - கைவருமிவ் (ரு௯௨)

இல்லிக் குடமுடைந்தால் யாதாமென் றுன்னுடன்யான்
சொல்லித் திரிந்துமெனைச் சூழ்ந்திலையே - வல்இயமன் (ரு௯௩)

நாளையோ இன்றோ நடக்கின்ற நாட்களிலெவ்
வேளையோ தூது விடில்அவர்கள் - கேளையோ (ரு௯௪)

நல்லோம் எனினும் நடவார் நடவார்நாம்
செல்லோம் எனினுமது செல்லாதே - வல்லீர்யாம் (ரு௯ரு)

---

141. இக்கண்ணியொடு "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்னும் நம் தாயுமானப் பெருமானார் திருப்பாடல் பார்க்க.

142. தொன்று என்பது பழமை : தொ.வே.

இன்சொலினோம் இன்றிங் கிருந்துவரு வோமெனயாம்
என்சொலினும் அச்சொலெலாம் ஏலாதே - மன்சொலுடைத் (௫௯௬)

தாமரையோன் மான்முதலோர் தாம்அறையா ராயிலன்று
நாமறைவோம் என்றல் நடவாதே - நாமிவணம் (௫௯௭)

அந்நாள் வருமுன்னர் ஆதி அருளடையும்
நன்னாள் அடைதற்கு நாடுதுங்காண் - என்னாநின் (௫௯௮)

னோதுகின்றேன் கேட்டும் உணார்போன் றுலகியலில்
போதுகின்றாய் யாது புரிகிற்பேன் - தீதுநன்றோ (௫௯௯)

டேற்றவடி நாள்உறவாம் என்னைவிட்டுத் தாமதமா
நேற்றையுற வோடுறவு நேர்ந்தனையே - சாற்றுமந்த (௬௦௦)

தாமதமே ஓரவித்தை தாமதமே ஆவரணம்
தாமதமே மோக சமுத்திரம்காண் -, தாமதமென் (௬௦௧)

றையோ ஒருநீ அதனோடு கூடினையால்
பொய்யோநாம் என்று புகன்றதுவே - கையாமல் (௬௦௨)

ஒன்னலர்போல் கூடுவா ரோடொருநீ கூடுங்கால்
என்னைநினை யாயென்சொ லெண்ணுதியோ - பன்னுறுநின் (௬௦௩)

தீதெல்லாம் நானாதி சேடர்பல ராய்ப்பிரமன்
போதெல்லாம் சொல்லிடினும் போதாதே - ஆதலினால் (௬௦௪)

வைகின்றேன் வாழ்த்தாய் மதித்தொருநீ செய்வதெல்லாம்
செய்கின்றாய் ஈதோர் திறமன்றே - உய்கிற்பான் (௬௦௫)

வாடுகின்றேன் நின்னை மதித்தொருநான் நீமலத்தை
நாடுகின்றாய் ஈதோர் நலமன்றே - கூடுகின்ற (௬௦௬)

ஈண்டோர் அணுவாய் இருந்தநீ எண்டிசைபோல்
நீண்டாய் இஃதோர் நெறியன்றே - வேண்டாநீ (௬௦௭)

மற்றவர்போல் அன்றே மனனேநின் வண்புகழை
முற்றுமிவண் ஆர்தான் மொழிவாரே - சுற்றிமனம் (௬௦௮)

தானடங்கின் எல்லாச் சகமும் அடங்குமொரு
மானடங்கொள் பாத மலர்வாய்க்கும் - வானடங்க (௬௦௯)

எல்லா நலமும் இதனால் எனமறைகள்
எல்லாம்நின் சீரே எடுத்தியம்பும் - எல்லார்க்கும் (௬௧௦)

மாகமங்கொண் டுற்ற மனேலயமே வான்கதியென்
ருகமங்கள் நின்சீர் அறைந்திடுங்காண் - ஆகுமிந்த (சுகக)

நன்மை பெறுமேன்மை நண்ணியநீ நின்னுடைய
தன்மைவிடல் அந்தோ சதுரலஇப் - புன்மையெலாம் (சுகஉ)

விட்டொழித்து நான்மொழியும் மெய்ச்சுகத்தை நண்ணுதிநீ
இட்டிழைத்த அச்சுகந்தான் யாதென்னில்[143] - கட்டழித்த (சுகங)

வேடம் சுகமென்றும் மெய்யுணர்வை யின்றிநின்ற
மூடம் சுகமென்றும் முன்பலவாம் - தோடம்செய் (சுகச)

போகம் சுகமென்றும் போகம் தரும்கரும
யோகம் சுகமென்றும் உண்டிலையென் - ருகஞ்செய் (சுகரு)

போதம் சுகமென்றும் பொன்றல்சுகம் என்றும்விந்து
நாதம் சுகமென்றும் நாம்பொருளென் - ருேதலஃ (சுகசு)

தொன்றே சுகமென்றும் உட்கண் டிருக்குமந்த
நன்றே சுகமென்றும் நாம்புறத்தில் - சென்றேகண் (சுகஎ)

டாற்றல் சுகமென்றும் அன்பறியாச் சூனியமே
ஏற்ற சுகமென்றும் இவ்வண்ணம் - ஏற்றபடி (சுகஅ)

வெல்லுகின்ருேர் போன்று விரிநீர் உலகிடையே
சொல்லுகின்ருேர் சொல்லும் சுகமன்று - சொல்லுகின்ற (சுகசு)

வாணுதி தத்துவங்கள் மாய்த்தாண் டுறுகின்ற
நாணுதி மூன்றிலொன்று நாடாமல் - ஆணுமை (சுஉ0)

எள்ளும் பகலும் இரவுமிலா ஓரிடத்தில்
உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் - வள்ளலெனு (சுஉக)

வாழும் பரசிவத்தின் வன்னிவெப்பம் போலமுற்றும்
சூழும் சுகமே சுகம்கண்டாய் - சூழ்வதனுக் (சுஉஉ)

கெவ்வா றிருந்தால் இயலும் எனிலம்ம
இவ்வா றிருந்தால் இயலாதால்[144] - செவ்வாற்றில் (சுஉங)

---

143. 613 முதல் 622 வரையிலுள்ள கண்ணிகளில் ஆன்மாநுபவம் இத் தன்மையது என்று உணர்த்தியிருப்பது கண்டுகொள்க.

144. 623 முதல் 703 வரையிலுள்ள கண்ணிகளில் ஆன்மாநுபவம் அடையும் சன்மார்க்கம் உபதேசித்திருப்பது கண்டு மகிழ்க.

பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டுமது
பற்றற்றால் அன்றிப் பலியாதால்[145] - பற்றற்றல் (௩௨௪)

வேதனையால் ஈங்கு விரியும் சகப்பழக்க
வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால் - வாதனையும் (௩௨௫)

ஈனமந்தோ இவ்வுலகம் என்றருளை நாடுகின்ற
ஞானம்வந்தால் அன்றி நலியாதால் - ஞானமது (௩௨௬)

போகமுற்றும் பொய்யெனவே போதும் அனித்தியவி
வேகமுற்றால் அன்றி விளங்காதால் - ஆகவஃ (௩௨௭)

துண்ணவந்தால் போலுமிவண் உற்றுவிசா ரித்திடுமோர்
எண்ணம்வந்தால் அன்றி இசையாதால் - எண்ணமது (௩௨௮)

பங்கமடைந் தார்அவையைப் பாராது சாதுக்கள்
சங்கமடைந் தாலன்றிச் சாராதால் - இங்கதனால் (௩௨௯)

வீழ்முகத்த ராகிநிதம் வெண்ணீ றணிந்தறியாப்
பாழ்முகத்தோர் தம்பால் படர்ந்துறையேல் - பாழ்முகத்தில் (௩௩0)

பேயாட உள்ளறியாப் பித்தாட நின்னுடனே
வாயாடு வோர்பால் மருவிநில்லேல் - நீயாடிப் (௩௩௧)

பேதித் திடவும் பிறழ்ந்திடவும் நின்னுடனே
வாதித் திடுவோர்பால் வாய்ந்துறையேல் - சாதித்துச் (௩௩௨)

சைவமெங்கே வெண்ணீற்றின் சார்பெங்கே மெய்யான[146]
தெய்வமெங்கே என்பவரைச் சேர்ந்துறையேல்-உய்வதெங்கே (௩௩௩)

தீராச் சிவநிந்தை செய்துசிறு தேவர்களை
நேராய்ப் பிதற்றுவர்பால் நேர்ந்துறையேல் - ஓராமல் (௩௩௪)

எள்ளென்றும் தெய்வமென்ப தில்லை இதுதெளிந்து
கொள்ளென்றும் துள்ளுகின்றோர் கூட்டமுறேல்-நள்ளொன்று (௩௩௫)

---

145. இக்கண்ணியோடு பின்வரும் திருக்குறட்பாவை ஒத்துணர்க:
“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.”

146. இக்கண்ணியோடு நமது அடிகளாருடைய வைத்தியநாதர் பதிகப் பாடல்களை ஒத்துணர்க. திருஅருட்பா இப் பதிப்பாசிரியர் பதிப்பு 6-ஆம் புத்தகம் தனிப்பாசுரப் பகுதி பார்க்க.

நாமென்றும் நம்மையன்றி நண்ணும் பிரமமில்லை
ஆமென்றும் சொல்பவர்பால் ஆர்ந்துறையேல் - தாமொன்ற (௯௩௬)

எல்லா அறிவும் எமதறிவே என்றுரைக்கும்
பொல்லா வலக்காரர் பொய்உகவேல் - புல்லாக (௯௩௭)

அற்பமே மற்றவெலாம் ஆயிலழி[147] யாக்காய
கற்பமே வத்துவென்பார் கண்ணடையேல் - சிற்சிலவாம் (௯௩௮)

சித்திகளே வத்துவென்போர்ச் சேர்ந்துறையேல் பன்மாயா
சத்திகளே வத்துவென்போர் சார்படையேல் - பொத்தியஇச் (௯௩௯)

சன்மமே தோற்றும் தரமாம் திரமணித்த
கன்மமே வத்துவென்போர் கண்ணுறையேல் - கன்மமிரு (௯௪௦)

மாகம் கதியென்பார் மாட்டுறையேல் பல்போக
யோகம் பொருளென்பா ரூடுறையேல் - ஏகம்கொள் (௯௪௧)

மண்ணென்பார் வானென்பார் வாய்முச் சுடரென்பார்
பெண்ணென்பார் மற்றவர்தம் பேருரையேல் - மண்ணின்பால் (௯௪௨)

மன்னுரையாச் சில்லோர் மரங்கெதய்வம் என்பார்மற்
றென்னுரையார் ஈண்டவர்பால் எய்தியிடேல் - மன்நலங்கள் (௯௪௩)

பூத்தால் சிறுவர்களும் பூசா பலம்என்பார்
தேற்றார் சிவபூசை செய்யாராய்ப் - பூத்தாவி (௯௪௪)

வீறுகின்ற பூசையிலென் வீண்என்று வீண்பாழ்வாய்க்
கூறுகின்ற பேயர்கள்பால் கூடியுறேல் - மாறுகின்ற (௯௪௫)

நீட்கோல வாழ்க்கையெலாம் நீத்திடுவோன் பொன்அறைக்குத்
தாட்கோல் இடுவாரைச் சார்ந்துறையேல் - நீட்கோல (௯௪௬)

மெய்யொழுக்கத் தார்போல் வெளிநின் றகத்தொழியாப்
பொய்யொழுக்கத் தார்பால் பொருந்தியுறேல்[148] - பொய்யொழுக்கில் (௯௪௭)

பொய்ந்நூல் பதறிப் புலம்புகின்ற பித்தர்கள்பால்
அந்நூல் விரும்பி அடைந்தலையேல் - கைந்நேர்ந்து (௯௪௮)

---

147. ஆயில் என்பது ஆராயுங்கால் எனக் கொள்க: தொ.வே.

148. இக்கண்ணியோடு பின்வரும் திருக்குறட்பாவை ஒத்துணர்க:
"பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்(று),
ஏதம் பலவும் தரும்."

கோடாது கோடி கொடுத்தாலும் சைவநெறி
நாடா தவரவையை நண்ணியிடேல் - கோடாது (கூசகூ)

கொல்லா விரதமது கொள்ளாரைக் காணிலொரு
புல்லாக எண்ணிப் புறம்பொழிக[149] - எல்லாமும் (கூ௫0)

ஆகநவில் கின்றதென் நம் ஐயனுக்கன் பில்லாரை[150]
நீகனவி லேனும் நினையற்க - ஏகனடிக் (கூ௫க)

கன்பே வடிவாய் அருளே உயிராய்ப்பேர்
இன்பே உணர்வாய் இசைந்தாரும் - அன்பாகிக் (கூ௫உ)

கண்டிகையே பூணிற் கலவையே வெண்ணீறாய்க்
கொண்டிகவாச் சார்பு குறித்தாரும் - தொண்டுடனே (கூ௫௩)

வாய்மலரால் மாலை வகுத்தலொடு நம்மிறைக்குத்
தூய்மலரால் மாலை தொடுப்பாரும் - சார்மலரோன் (கூ௫௪)

ஏர்நந்த னப்பணிகண் டிச்சையுற நம்மிறைக்குச்
சீர்நந்த னப்பணிகள் செய்வோரும் - நார்நந்தாத் (கூ௫௫)

தீயின்மெழு காச்சிந்தை சேர்ந்துருகி நம்மிறைவாழ்
கோயில்மெழு கா நின்ற கொள்கையரும் - மேயினரைத் (கூ௫கூ)

தாயில் வளர்க்கும் தயவுடைய நம்பெருமான்
கோயில் விளக்கும் குணத்தோரும் - தூயஅருள் (கூ௫எ)

இன்புடனே தீபமுதல் எல்லாச் சரியைகளும்
அன்புடனே செய்தங் கமர்வாரும் - அன்புடனே (கூ௫அ)

அண்ணியமேல் அன்பர்க் கமுதீத லாதிசிவ
புண்ணியமே நாளும் புரிவோரும் - புண்ணியமாம் (கூ௫கூ)

---

149. இக்கண்ணியோடு பின்வரும் தாயுமான அடிகளாரது பராபரக்கண்ணியை ஒத்துணர்க :

“கொல்லா விரதம் குவலயம்எல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவ(து)என் இச்சை பராபரமே.”

150. இக்கண்ணியொடு நம் அருந்தமிழ் ஞான நூலாகிய சிவஞான சித்தியாரின் தெள்ளிய பால்போன்ற பொன் உரையை ஒத்துணர்க :

“ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்
பேசுவது என் ?”

தேனே அமுதே சிவமே சிவமேஎம்[151]
மானேஎன் றேத்தி மகிழ்வாரும் - வானான (௬௬௦)

மன்னே அருட்கடலே மாணிக்க மோங்கள்
அன்னேஎன் றுன்னி அமர்வோரும் - நன்னேயப் (௬௬௧)

பண்ணீர் மொழியால் பரிந்தேத்தி ஆனந்தக்
கண்ணீர்கொண் டுள்ளம் களிப்போரும் - உண்ணீரில் (௬௬௨)

பண்டுகண்டும் காணாப் பரிசினராய்ப் பொன்மேனி
கண்டுகண்டு நாளும் களிப்போரும் - தொண்டடையும் (௬௬௩)

பொற்பதிகம் என்றெண்ணிப் போற்றிஒரு மூவர்களின்
சொற்பதிகம் கொண்டு துதிப்போரும் - சொற்பனத்தும் (௬௬௪)

மாசகத்தில் சேர்க்காத மாணிக்கம் என்றதிரு
வாசகத்தை வாயால் மலர்வோரும் - வாசகத்தின் (௬௬௫)

மன்னிசைப்பால் மேலோர் வகுத்தேத்தி நின்றதிரு
இன்னிசைப்பா ஆதி இசைப்போரும் - மன்னிசைப்பின் (௬௬௬)

நல்வாழ் வருளுகின்ற நம்பெருமான் மான்மியங்கள்
சொல்வோரும் கேட்டுத் தொழுவோரும் - சொல்வாய்ந்த (௬௬௭)

தாதாவென் றன்புடனே சாமகீ தங்கள்முதல்
வேதாக மங்கள் விரிப்போரும் - வேதாந்தம் (௬௬௮)

சேர்ந்தோர்க் கருளும் சிவமே பொருளென்று
தேர்ந்தே சிவபூசை செய்வோரும் - ஆர்ந்தேத்தி (௬௬௯)

நன்னெஞ்சே கோயிலென நம்பெருமான் தன்னைவைத்து
மன்னும் சிவநேயம் வாய்ந்தோரும் - முன்அயன்றன் (௬௭௦)

அஞ்செழுத்தெல் லாம்கேட்கில் அஞ்செழுத்தாம் எம்பெருமான்
அஞ்செழுத்தால் அர்ச்சித் தமர்வோரும் - அஞ்செனவே (௬௭௧)

---

151. இக்கண்ணியொடு பின்வரும் தெய்வத் திருவாசகத் தீஞ்சொற்களையும் அவற்றில் பொதிந்துள்ள கருத்தினையும் அக்கருத்தினை ஊடுருவிப் பொலியும் உணர்ச்சியினையும் ஒத்துணர்ந்து மகிழ்க:

“யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந்(து) உறுமாறே”

விஞ்சும் பொறியின் விடயமெலாம் நம்பெருமான்
செஞ்சுந் தரப்பதத்தில் சேர்த்தோரும் - வஞ்சம்செய் (கூஎஉ)

பொய்வே தனைநீக்கும் புண்ணியன்பால் தம்முயிரை
நைவே தனமாக்கும் நல்லோரும் - செய்வேலை (கூஎங)

நீட நடத்தலொடு நிற்றல்முதல் நம்பெருமான்
ஆடல் அடித்தியானம் ஆர்ந்தோரும் - வாடலறத் (கூஎச)

தூய நனவிற் சுழுத்தியொடு நம்பெருமான்
நேயம் நிகழ்த்தும் நெறியோரும் - மாயமுறு (கூஎரு)

மானதுவாய் நின்ற வயம்நீக்கித் தானற்றுத்
தானதுவாய் நிற்கும் தகையோரும் - வானமதில் (கூஎசு)

வானங்கண் டாடும் மயில்போன்று நம்பெருமான்
தானங்கண் டாடும் தவத்தோரும் - மோனமொடு (கூஎஎ)

தாழ்சடையும் நீறும் சரிகோவ ணக்கீளும்
வாழ்சிவமும் கொண்டு வதிவோரும் - ஆழ்நிலைய (கூஎஅ)

வாரியலை போன்றசுத்த மாயையினால் ஆம்பூத
காரியங்க ளாதியெலாம் கண்டொழித்து - ஊர்இயங்கத் (கூஎகூ)

தஞ்சம் தருமலரோன் தத்துவமாம் பூதங்கள்
ஐஞ்சும் பொறியஞ்சும் அஞ்சறிவும் - அஞ்செனுமோர் (கூஅ0)

வாக்குமுதல் ஐஞ்சுமற்று மாலோன்தன் தத்துவமாம்
ஊக்கும் கலைமுதலாம் ஓரேழும் - நீக்கிஅப்பால் (கூஅக)

மேவி விளங்குசுத்த வித்தைமுதல் நாதமட்டும்
தாவி வயங்குசுத்த தத்துவத்தில் - மேவிஅகன் (கூஅஉ)

றப்பால் அருள்கண் டருளால் தமைத்தாம்கண்
டப்பால் பரவெளிகண் டப்பாலுக் - கப்பாலும் (கூஅங)

தீராச் சுயமாய்ச் சிதானந்த மாம்ஒளியைப்
பாரா இருந்த படியிருந்து - பேராது (கூஅச)

கண்டதுவென் றொன்றும் கலவாது தாம்கலந்து
கொண்டசிவ யோகியராம் கொற்றவரும் - அண்டரிய (கூஅரு)

சத்துவத்தில் சத்துவமே தம்முருவாய்க் கொண்டுபர
தத்துவத்தின் நிற்கும் தகவோரும் - அத்துவத்தில் (கூஅசு)

தீதும் சுகமும் சிவன்செயலென் றெண்ணிவந்த
யாதும் சமமா இருப்போரும் - கோதுபடக் (கூஅஎ)

கூறும் குறியும் குணமும் குலமுமடி
ஈறும் கடையும் இகந்தோரும் - வீறுகின்ற (கூஅஅ)

சேந்தி னடைந்தவெலாஞ் சீரணிக்கச் சேர்சித்த
சாந்தி யுடனே சரிப்போரும் - சாந்திபெறத் (கூஅகூ)

தம்மையுறும் சித்தெவையும் தாமுவத்தல் செய்யாமல்
செம்மையுடன் வாழும் திறலோரும் - எம்மையினும் (கூகூ0)

ஆராமை ஓங்கும் அவாக்கடல்நீர் மான்குளம்பின்
நீராக நீந்தி நிலைத்தோரும்[152] - சோராது (கூகூக)

தம்பொருளைக் கண்டே சதானந்த வீட்டினிடைச்
செம்பொருளைச் சார்ந்த திறத்தோரும் - மண்பொருள்போய்த் (கூகூஉ)

தாயர் எனமாதர் தம்மையெண்ணிப் பாலர்பித்தர்
பேயரென நண்ணும் பெரியோரு[153] - மீயதனின் (கூகூங)

எய்ப்பரிசாம் ஓர்திரணம் எவ்வுலகும் செய்தளிக்க
மெய்ப்பரிசுஞ் செய்யவல்ல வித்தகரும் - மெய்ப்படவே (கூகூச)

யாவும் அறிந்தும் அறியார்போன் றெப்பொழுதும்
சாவும் பிறப்பும் தவிர்ந்தோரும் - ஓவலின்றி (கூகூரு)

வைதிடினும் வாழ்களென வாழ்த்தி உபசாரம்
செய்திடினும் தன்மை திறம்பாரும் - மெய்வகையில் (கூகூசா)

தேரு வுலகம் சிவமயமாய்க் கண்டெங்கும்
ஏரு திழியா திருப்போரும் - மாறுது (கூகூஎ)

---

152. இக்கண்ணியோடு பின்வரும் திருக்குறட்பாவை ஒத்துப்பார்த்துணர்க:
“ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.”

153. இக்கண்ணியோடு பின்வரும் பட்டினத்தடிகளாருடைய திருப்பாடலை ஒத்துணர்க:

“பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்(து)இட்ட பிச்சைஎல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல் உழன்றுநன் மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மைசொல்லிச்
சேய்போல் இருப்பர்கண் டீர்உண்மை ஞானம் தெளிந்தவரே.”

மோனந்தான் கொண்டு முடிந்தவிடத் தோங்குபர
மானந்தா தீதத் தமர்ந்தோரும் - தாம்நந்தாச் (௬௯௮)

சாதுக்கள் ஆமவர்தம் சங்க மகத்துவத்தைச்
சாதுக்க ளன்றியெவர் தாமறிவார் - நீதுக்கம் (௬௯௯)

நீங்கிஅன்னோர் சங்கத்தில் நின்றுமகிழ்ந் தேத்திநிதம்
ஆங்கவர்தாட் குற்றேவல் ஆய்ந்தியற்றி - ஓங்குசிவ (௭00)

பஞ்சாட் சரத்தைப் பகருளே நாவாக
எஞ்சாப் பரிவுடனே எண்ணியருள் - செஞ்சோதித் (௭0௧)

தாதொன்று தும்பைமுடித் தாணுஅடி யொன்றிமற்றை
யாதொன்றும் நோக்கா தமைந்திடுக - தீதென்ற (௭0௨)

பாழ்வாழ்வு நீங்கப் பதிவாழ்வில் எஞ்ஞான்றும்
வாழ்வாய்என் னோடும் மகிழ்ந்து.[154] (௭0௩)

திருச்சிற்றம்பலம்

௫. நெஞ்சறிவுறுத்தல்

முற்றிற்று.

---

154. "நெஞ்சறிவுறுத்தல்" என்னும் இப்பெரு நூலினைப் பயின்று பயன் பெற விரும்பும் சன்மார்க்க அன்பர்களும் பிறரும் இது நம் பெருமானார் இராமலிங்க அடிகளாருடைய திரு நெறியின் முதற் கூறாகிய சிவசிந்தனையின் இன்றியமையாமையைத் தெள்ளிதில் விளக்க எழுந்ததாகும் என்று உணராதிரார்.

இந்த அரிய தெய்வநூல், சன்மார்க்க சாதகர்கட்கே அன்றி, நம் செந்தமிழ்ப் புலவர் மாணவர் பலர்க்கும் தமிழ் விருந்தாக விளங்குகிறது. ஈண்டுத்தமிழ் என்னும் செஞ்சொல்லுக்கு "அதிசுலபமாகச் சுத்த சிவாநுபூதியைக் கொடுப்பது" என்னும் ஒரு பெரும் பொருளுண்மையையும் கண்டு தெளிக. இது குறித்து, திருஅருட்பா இவ்வாசிரியர் பதிப்பு 3-ஆம் புத்தகம் வியாக்கியானப் பகுதி பார்க்க.

இதைச் சார்ந்த அடிக் குறிப்புகளில் கண்டிருக்கும் மேற்கோள் முதலியவை நம் அடிகளார் எங்ஙனம் ஆன்றோர்களின் கருத்துக்களையும் சொற்களையும் சுவைத்து அநுபவித்திருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுகளாக இங்கும் அங்கும் கூறியிருக்கின்றனவன்றி, இந்நூல் முழுமைக்கும் ஆராய்ந்து உரைத்தனவாகக் கொள்ளற்க. அங்ஙனம் விரிக்க வேறு சமயம் உண்டு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவகணபதி துணை

௪. சிவநேச வெண்பா[155]

காப்பு[156]

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தாய்மெய்ச் சுகத்தவனே - என்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண். (க)

வீறுடையாய் வேலுடையாய் விண்ணுடையாய் வெற்புடையாய்
நீறுடையாய் நேயர்கடந் நெஞ்சுடையாய் - கூறு
முதல்வானூர் ஆறு முகவா முக்கண்ணன்
புதல்வாநின் தாளென் புகல். (உ)

---

155. சிவநேசவெண்பா என்னும் இத்தெள்ளிய நூலுக்கு—காப்புச்செய்யுட்கள் இரண்டிற்கும் தவிர—நம் பெருமானார் இராமலிங்க அடிகளாருடைய கைஎழுத்துப் பிரதி இதுவரையில் கிடைக்கவில்லை. அடிகளாரொடு தொண்டு செய்திருந்த அன்பர் திரு. தருமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிய எட்டுப்பிரதியும் வேறு இரு பிரதிகளும் கிடைத்திருக்கின்றன. இவையும் திரு. தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் 1867-இல் முதன்முதல் அச்சிற் பதிப்பித்த நூலுமே இங்கு மேற்கொண்டிருக்கும் மூலம் ஆகும். பிள்ளை அவர்களுடைய பிரதியின் தலைப்பேட்டில் "சிவ கணபதி துணை, எனது சற்குருவாகிய சிதம்பரம் இராமலிங்க தேசிகர் திருவாய்மலர்ந்தருளிய சிவநேச வெண்பா. திருச்சிற்றம்பலம்" என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

156. இந்த இரண்டு காப்புச் செய்யுட்களும் நம் பெருமான் அவர்கள் கைஎழுத்தில் உள்ள திருஒற்றியூர் பாடல்கள் கொண்ட எட்டுச்சுவடியில் உள்ளபடி இங்கு அச்சிட்டிருக்கின்றன.

திருச்சிற்றம்பலம்

சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொருபப்[157]
பேர்சான்ற உண்மைப் பிரமமே - நேர்சான்றோர்
நாடும் பரசிவமே நாயேனுக் கன்புநின்பால்
நீடும் படிநீ நிகழ்த்து.[158] (க)

நினைப்பித்தா நித்தா நிமலா எனநீ
நினைப்பித்தால் ஏழை நினைப்பேன் - நினைப்பின்
மறப்பித்தால் யானும் மறப்பேன் எவையும்
பிறப்பித்தாய் என்னாலென் பேசு. (உ)

உருவாய் உருவில் உருவாகி ஓங்கி
அருவாய் அருவில் அருவாய் - ஒருவாமல்
நின்றாயே நின்ற நினைக்காண்ப தெவ்வாறோ
என்தாயே என்தந்தை யே. (ங)

வெஞ்சஞ் சலமா விகாரம் எனும்பேய்க்கு
நெஞ்சம் பறிகொடுத்து நிற்கின்றேன் - அஞ்சலென
எண்தோள் இறையே எனையடிமை கொள்ளமனம்
உண்டோ இலையோ உரை. (ச)

அப்பாலுன் சித்தம் அறியேன் எனக்கம்மை[159]
அப்பாநின் தாளன்றி யார்கண்டாய் - இப்பாரில்
சாதிஉரு வாக்குந் தளைஅவிழ்த்துத் தன்மயமாம்
சோதிஉரு வாக்குந் துணை. (ரு)

---

157. இந்நூல் சிவநேசம் கைகூடுவதற்காகும் பல்வகைய அறிவுரைகளையும் உள்ளுணர்வுகளையும் எளிதில் விவரித்திருப்பதை ஒவ்வொரு வெண்பாவையும் கூர்ந்துணர்ந்து காண்க.

158. இம் முதல் வெண்பாவொடு
"அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கி"
என்பதுபோன்ற பெருவாரியான தேவார திருவாசக அநுபவ மொழிகளை ஒத்துணர்க.

159. 5-ஆம் வெண்பாவில் உலகியல் நடைமுறையில் உள்ள சாதிப்பற்றும் சாதிவேற்றுமையும் ஆன்மாநுபவத்திற்குத் தடையாக நிற்பன என்றுணர்த்தியிருப்பது காண்க.
"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை"
என்னும் தெய்வத் திருவாசகம் போன்ற பேர்அடியார்களின் பொய்யா மொழிகளை ஒப்புநோக்கி உணர்க.

பேரறிவால் கண்டும் பெரியோர் அறியாரேல்
யாரறிவார் யானோ அறிகிற்பேன் - சீர்கொள்
வெளியாய் வெளிக்குள் வெளியாய் ஒளிக்குள்
ஒளியாகி நின்ற உனை. (௬)

வந்தித்தேன் பிட்டுகந்த வள்ளலே நின்னடியான்[160]
சிந்தித்தேன் என்றல் சிரிப்பன்றோ - பந்தத்தாஞ்
சிந்துசிந்திப் பித்தெனது சிந்தையுணின் பொன்னருளே
வந்துசிந்திப் பித்தல் மறந்து. (௭)

தேனென்ற இன்சொல் தெரிந்துநினைப் பாடுகின்றேன்[160]
நானென் றுரைத்தல் நகைஅன்றோ - வான்நின்ற
ஒண்பொருணீ உள்ளம் உவந்தருளால் இன்சொல்லும்
வண்பொருளும் ஈதல் மறந்து. (௮)

அண்டங்க ளோஅவ்ற்றின் அப்பாலோ இப்பாலோ
பண்டங்க ளோசிற் பரவெளியோ - கண்தங்க
வெம்பெருமால் நீத்தவர்தம் மெய்யுளமோ தையலொடும்
எம்பெருமான் நீவாழ் இடம். (௯)

பூதமெங்கே மற்றைப் புலனெங்கே பல்லுயிரின்
பேதமெங்கே அண்டமெனும் பேரெங்கே - நாதமெங்கே
மன்வடிவ மெங்கே மறையெங்கே வான்பொருணீ
பொன்வடிவம் கொள்ளாத போது. (௧௦)

பேருருவோ சோதிப் பிழம்பாகும் சின்மயத்தின்
சீருருவோ தேவர் திருவுருவம் - நேருருவில்
சால்புறச்சேர் அண்ட சராசரங்கள் எல்லாம்நும்
கால்விரற்பால் நின்றொடுங்குங் கால். (௧௧)

இன்றோ பகலோ இரவோ வருநாளில்
என்றோ அறியேன் எளியேனே - மன்றோங்கும்
தாயனையாய் நின்னருளாம் தண்ணமுதம் உண்டுவந்து
நாயனையேன் வாழ்கின்ற நாள். (௧௨)

மண்ணாசை வெற்பே மறிகடலே பொன்னாசை
பெண்ணாசை ஒன்றேஎன் பேராசை - நண்ணாசை
விட்டார் புகழும் விடையாய்நான் பொய்யாசைப்
பட்டால் வருமே பதம். (௧௩)

---

160. 158-ஆம் அடிக்குறிப்பினைக் காண்க. அது இவ்வெண்பாவிற்கும் பொருந்தும்.

தந்தையாய் என்னுடைய தாயாய்த் தகைசான்ற
சிந்தையாய் என்னருமைத் தேசிகனாய் - முந்தையாய்
நீடு மறைமுதலாய் நின்றாயென் னேநெஞ்சம்
வாடுமெனை ஆட்கொள்ளா வாறு. (கச)

ஊட்டுகின்ற வல்வினையாம் உட்கயிற்றால் உள்ளிருந்தே
ஆட்டுகின்ற நீதான் அறிந்திலையோ - வாட்டுகின்ற
அஞ்சுபுல வேடர்க் கறிவைப் பறிகொடுத்தென்
னெஞ்சுபுலர்ந் தேங்கு நிலை. (கரு)

ஆமோ அலவோ அறியேன் சிறியேனான்
தாமோ தரனும் சதுமுகனும் - தாமே
அடியா தரிக்கும் அரசேநின் ஏவல்
அடியார்குற் றேவலடி யன். (கசு)

உன்னால் எனக்காவ துண்டதுநீ கண்டதுவே[161]
என்னால் உனக்காவ தேதுளது - சொன்னால்யான்
தந்தார்வத் தோடும் தலைமேற்கொண் டுய்கிற்பேன்
எந்தாயிங் கொன்றுமறி யேன். (கஎ)

சென்றுரைப்பார் சொல்லில் சிறியான் பயமறியான்
என்றுரைப்பார் ஆங்கதுமற் றென்னளவே - மன்றகத்தோய்
அஞ்சேல் விழியாரை அந்தகனென் பார்மொழியை
அஞ்சேன் சிறிதும் அறிந்து. (கஅ)

எந்தாய்நின் அன்பர்தமக் கின்னமுதம் இட்டேத்திச்[162]
சிந்தா நலமொன்றுஞ் செய்தறியேன் - நந்தாச்
சுவருண்ட மண்போலும் சோறுண்டேன் மண்ணில்
எவருண் டெனைப்போல் இயம்பு. (கக)

---

161. 17-ஆம் வெண்பாவொடு

"தந்த(து)உன் தன்னைக் கொண்ட(து)என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்"

என்னும் மணிவாசகத் தெய்வத் திருவாக்கினை ஒத்துணர்க.

162. 19 முதல் 33 வரையிலுள்ள வெண்பாக்களில் நம் புற உறுப்புக்களும் அக உறுப்புக்களும் எங்ஙனம் அதன் அதன் அளவில் முழுவதும் சிவ நேசத்தில்' ஒருங்கே தோய்ந்திருத்தல் வேண்டும் என்பதை விளக்கி யிருப்பது காண்க.

உப்பிருந்த ஓடோ ஒதியோ உலாப்பிணமோ
வெப்பிருந்த காடோ வினைச்சுமையோ - செப்பறியேன்
கண்ணப்ப ருக்குக் கனியனையாய் நிற்பணியா
துண்ணப் பருக்கும் உடம்பு. (உ0)

ஏலார் மனைதொறும்போய் ஏற்றெலும்புந் தேயநெடுங்
காலாய்த் திரிந்துழலுங் கால்கண்டாய் - மாலாகித்
தொண்டே வலஞ்செய்கழல் தோன்றலே நின்கோயில்
கண்டே வலஞ்செய்யாக் கால். (உக)

ஏசும் பிறர்மனையில் ஏங்கஅவர் ஈயுமரைக்
காசும் பெறவிரிக்கும் கைகண்டாய் - மாசுந்த
விண்டுஞ் சிரங்குனிக்கும் வித்தகனே நின்தலத்தைக்
கண்டுஞ் சிரங்குவியாக் கை. (உஉ)

வெங்கோடை ஆதபத்தின் வீழ்நீர் வறந்துலர்ந்து
மங்கோடை யாதல் வழக்கன்றோ - எங்கோநின்
சீர்சிந்தாச் சேவடியின் சீர்கேட்டும் ஆனந்த
நீர்சிந்தா வன்கண் நிலை. (உங)

வாயன்றேல் வெம்மலஞ்செல் வாய்அன்றேல் மாநரக
வாயன்றேல் வல்வெறிநாய் வாயென்பாம் - தாயென்றே
ஊழ்த்தாதா ஏத்தும் உடையாய் சிவஎன்றே
வாழ்த்தாதார் நாற்றப்பாழ் வாய். (உச)

வீட்டார் இறைநீ விடைமேல் வரும்பவனி
காட்டா தடைத்த கதவன்றோ - நாட்டாதி
நல்லத் துளையா நதிச்சடையாய் என்னுஞ்சீர்ச்
செல்லத் துளையாச் செவி. (உரு)

புல்லங் கணநீர்ப் புழையென்கோ புற்றென்கோ
சொல்லும் பசுமட் டுளையென்கோ - சொல்லுஞ்சீர்
வீயாத பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தின் நல்லிசைதான்
தோயாத நாசித் துளை. (உசு)

தோற்றமிலாக் கண்ணுஞ் சுவையுணரா நாவுநிகழ்
நாற்றம் அறியாத நாசியுமோர் - மாற்றமுந்தான்
கேளாச் செவியுங்கொள் கீழ்முகமே நீற்றணிதான்
மூளாது பாழ்த்த முகம். (உஎ)

மான்றும் உலக வழக்கின் படிமதித்து
மூன்று வகிர்ந்தே முடைநாற - ஊன்று
மலக்கூடை ஏற்றுகினு மாறாதே தென்பால்
தலக்கூடல் தாழாத் தலை. (உஅ)

கல்லென்கோ நீரடைக்குங் கல்லென்கோ கான்கொள்கருங்
கல்லென்கோ காழ்வயிரக் கல்லென்கோ - சொல்லென்கோ
இன்று லெனிலோ எடுத்தாளெம் மீன்றுணோர்
நின்தாள் நினையாத நெஞ்சு. (உகூ)

சொல்லுகின்ற உள்ளுயிரைச் சோர்வுற் றிடக்குளிர்ந்து
கொல்லுகின்ற நஞ்சில் கொடிதன்றே - ஒல்லுமன்றந்
தெம்மானின் தாட்கமல மெண்ணாது பாழ்வயிற்றில்
சும்மா அடைக்கின்ற சோறு. (௩௦)

சோர்படைத்துச் சோறென்றால் தொண்டைவிக்கிக் கொண்டுநடு
மார்படைத்துச் சாவுகினும் மாநன்றே - சீர்படைக்க
எண்ணுவார் எண்ணும் இறைவாநின் தாளேத்தா
துண்ணுவார் உண்ணும் இடத்து. (௩௧)

ஓகோ கொடிதே உறும்புலையர் இல்லினிடத்
தேகோ வதைத்துண் செயலன்றே - வாகோர்தம்
வாழ்மனையில் செல்லாது வள்ளனினை ஏத்தாதார்
பாழ்மனையில் சென்றுண் பது. (௩௨)

வீயுமிடு காட்டகத்துள் வேம்பிணத்தின் வெந்தசையைப்
பேயுமுடன் உண்ணஉண்ணும் பேறன்றே - தோயுமயல்
நீங்கஅருள் செய்வோய்வெண் ணீறணியார் தீமனையில்
ஆங்கவரோ டுண்ணு மது. (௩௩)

கண்குழைந்து வாடும் கடுநரகின் பேருரைக்கில்[163]
ஒண்குழந்தை யேனுமுலை உண்ணாதால் - தண்குழைய
பூண்டாதார்க் கொன்றைப் புரிசடையோய் நின்புகழை
வேண்டாதார் வீழ்ந்து விரைந்து. (௩௪)

---

163. 34 முதல் 39 வரையிலுள்ள வெண்பாக்களில் சிவநேசம் அற்ற உலகியலாளருடைய இழிந்ததும் தீயதும் ஆன நிலையை உணர்த்தி யிருப்பது காண்க.

கண்ணுதலே நின்தாள் கருதாரை நேசிக்க
எண்ணுதலே செய்யேன்மற் றெண்ணுவனேல் - மண்ணுலகில்
ஆமிடத்து நின்னடியார்க் காசையுரைத் தில்லையென்பார்
போமிடத்தில் போவேன் புலர்ந்து. (௩௫)

அங்கணனே நின்னடிக்கோர் அன்பிலரைச் சார்ந்தோர்தம்
வங்கணமே வைப்பதினுன் வைத்தேனேல் - அங்கணத்தில்
நீர்போல் எனது நிலைகெடுக நிற்பழிசொற்
றூர்போ லழிக தளர்ந்து. (௩௬)

பூவைவிட்டுப் புல்லெடுப்பார் போலுன் திருப்பாதத்
தேவைவிட்டு வெம்பிறவித் தேவர்களைக் - கோவைவிட்டுக்
கூவுவார் மற்றவரைக் கூடியிடேன் கூடுவனேல்
ஓவுவா ராவ லுனை. (௩௭)

யாதோ கனற்கண் யமதூதர் காய்க்சுகருந்
தாதோ தழற்பிழம்போ தானறியேன் - மீதோங்கு
நாட்டாதார்க் கொன்றை நதிச்சடையோய் அஞ்செழுத்தை
நாட்டாதார் வாய்க்கு நலம். (௩௮)

என்னெஞ்சோர் கோயில் எனக்கொண்டோய் நின்னினையார்
தன்னெஞ்சோ கல்லாமச் சாம்பிணத்தார் - வன்னெஞ்சில்
சார்ந்தவர்க்கும் மற்றவரைத் தானோக்கி வார்த்தைசொல
நேர்ந்தவர்க்கும் கல்லாகும் நெஞ்சு. (௩௯)

வெள்ளமுதும் தேனும் வியன்கரும்பும் முக்கனியின்[164]
உள்ளமுதும் தெள்ளமுதும் ஒவ்வாதால் - கள்ளமிலா
நின்னன்பர் தம்புகழின் நீள்மதுரந் தன்னை இனி
என்னென்ப தையா இயம்பு. (௪௦)

பண்ணுலுன் சீரினைச்சம் பந்தர்சொல வெள்ளெலும்பு
பெண்ணான தென்பார் பெரிதன்றே - அண்ணாஅச்
சைவவடி வாஞான சம்பந்தர் சீருரைக்கில்
தெய்வவடி வாஞ்சாம்பர் சேர்ந்து. (௪௧)

164. 40 முதல் 47 வரையிலுள்ள வெண்பாக்களில், இறைவன் திருவடிக்கு ஆட்பட்ட அடியார்களுடைய செயற்கரிய செயலையும் பெருந்திறனையும் பேரின்பத்தையும் நம் பெருமானார் உள்ளுணர்வோடு உரைத்திருப்பது கண்டு மகிழ்க.

எங்கோவே யான்புகலி எம்பெருமான் தன்மணத்தில்
அங்கோர் பொருட்சுமையாள் ஆனேனேல் - இங்கேநின்
தாள்வருந்த வேண்டேன் தடைபட்டேன் ஆதலினிந்
நாள்வருந்த வேண்டுகின்றேன் நான். (சஉ)

பூவுக் கரையரும்வான் புங்கவரும் போற்றுதிரு
நாவுக் கரையரெனு நன்முனை - மேவுற்ற
தொண்டர்க்கு நீகட்டுச் சோறெடுத்தாய் என்றறிந்தோ
தொண்டர்க்குத் தொண்டனென்பார் சொல். (சங)

எம்பரவை யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனார்
தம்பரவை வீட்டுத் தலைக்கடையாய் - வெம்பளையாய்
வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே
மாயப்பெயர் நீண்ட மால். (சச)

நண்ணித் தலையால் நடக்கின்றோம் என்பதெங்கள்
மண்ணில் பழைய வழக்கங்காண் - பண்ணிற்சொல்
அம்மையார் வாமத்தோய் ஆயினுமுன் காரைக்கால்
அம்மையார் போனடந்தார் ஆர். (சரு)

வேத முடிவோ விளங்கா கமமுடிவோ
நாத முடிவோ நவில்கண்டாய் - வாதமுறு
மாசகர்க்குள் நில்லா மணிச்சுடரே மாணிக்க
வாசகர்க்கு நீஉரைத்த வாறு. (சசு)

ஆர்கொண்டார் சேய்க்கறியிட் டாரே சிறுத்தொண்டப்
பேர்கொண்டார் ஆயிடினும் பெம்மானே - ஓர்தொண்டே
நாய்க்குங் கடைப்பட்ட நாங்களென்பேம் எங்கள்முடை
வாய்க்கிங் கிஃதோர் வழக்கு. (சஎ)

கோள்கொண்ட நஞ்சங் குடியேனோ கூர்கொண்ட[165]
வாள்கொண்டு வீசி மடியேனோ - கீள்கொண்ட
அங்கோவ ணத்தழகா அம்பலவா நின்புகழை
இங்கோதி வாழ்த்தாத யான். (சஅ)

165. 48-ஆம் வெண்பாவொடு
"அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்(கு)
ஆர்கி லேன்திரு அருள்வகை அறியேன்"
என்பதுபோன்ற பல திருவாசகத் தெய்வத் தமிழ் முறையீடுகளை ஒப்புநோக்கி உணர்க.

ஆயாக் கொடியேனுக் கன்புடையாய் நீ அருளிங்[166]
கீயாக் குறையே இலைகண்டாய் - மாயாற்கும்
விள்ளாத் திருவடிக்கீழ் விண்ணப்பம் யான்செய்து
கொள்ளாக் குறையே குறை. (சகூ)

பெற்றிடுதாய் போல்வதுநின் பெற்றியென்பேன் பிள்ளையது
மற்றழுதால் கேட்டும் வராதங்கே - சற்றிருக்கப்
பெற்றாள் பொறுப்பள் பிரானீ பொறுக்கினுநின்
பொற்றாள் பொறாளெம் புலம்பு. (ருo)

பொன்போல் பொறுமையுளார் புந்திவிடாய் நீஎன்பார்
என்போல் பொறுமையுளார் யார்கண்டாய் - புன்போக
அல்லாம் படிசினங்கொண் டாணவஞ்செய் இன்னுமை
எல்லாம் பொறுக்கின்றேன் யான். (ருக)

முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில் கொண்டதுபோல்[167]
என்மணத்தில் நீவந் திடாவிடினும் - நின்கணத்தில்
ஒன்றும் ஒருகணம்வந் துற்றழைக்கில் செய்ததன்றி
இன்றும் ஒருமணஞ்செய் வேன். (ருஉ)

செய்யார் அழலேநின் செம்மேனி என்னினும்என்
அய்யாநின் கால்பிடித்தற் கஞ்சேன்காண் - மெய்யாஇஞ்
ஞான்றுகண்டு நான்மகிழ நந்தொண்டன் என்றெனையும்
ஏன்றுகொண்டால் போதும் எனக்கு. (ருங)

என்பாலோ என்பால் இராதோடு கின்றமனத்
தின்பாலோ அம்மனத்தைச் சேர்மாயை - தன்பாலோ
யார்பால் பிழையுளதோ யானறியேன் என்னம்மை
ஓர்பால் கொளநின்றோய் ஓது. (ருச)

நாணவத்தி னேன்றனையோ நாயேனை மூடிநின்ற
ஆணவத்தை யோநான் அறியேனே - வீணவத்தில்
தீங்குடையாய் என்னஇவண் செய்பிழையை நோக்கிஅருட்
பாங்குடையாய் தண்டிப் பது. (ருரு)

166. 49, 50-ஆம் வெண்பாக்களில் தயாவடிவினனான இறைவனுடைய எளிமை போற்றியிருப்பது காண்க.

167. நம் வன்தொண்டப் பெருமானார் இருந்த பேர் இருப்பையும் எய்திய பேரின்பத்தையும் இராமலிங்க அடிகளார் எவ்வெவ் வகையிலோ பேசிப்பேசி அறிந்தறிந்து உணர்ந்துணர்ந்து இன்புறுகின்றார்கள் என்கிற உண்மையைத் திருஅருட்பாவினைப் பயிலும் அன்பர்கள் உணராதிரார்.

எச்சம் பெறுமுலகோர் எட்டிமர மாறனும்
பச்செனன் றிருக்கப் பகர்வார்காண் - வெச்சென்ற
நஞ்சனையேன் குற்றமெலாம் நாடாது நாதனை
அஞ்சனையேல் என்பாய் அமர்ந்து. (ருசு)

கற்றறியேன் நின்னடிச்சீர் கற்றுர் கழகத்தில்
உற்றறியேன் உண்மை உணர்ந்தறியேன் - சிற்றறிவேன்
வன்செய்வேல் நேர்விழியார் மையலினேன் மாதேவா
என்செய்வேன் நின்னருளின் றேல். (ருஎ)

மெய்தான் உடையோர் விரும்புகின்ற நின்அருளென்[168]
செய்தால் வருமோ தெரியேனே - பொய்தாவு
நெஞ்சினேன் மன்றுள் நிருத்தா நினைக்கேட்க
அஞ்சினேன் அன்பின்மை யால். (ருஅ)

மாதேவா ஓவா மருந்தேவா மாமணிஇப்[169]
போதேவா என்றே புலம்புற்றேன் - நீதாவா
யானுலுன் சித்த மறியேன் உடம்பொழிந்து
போனலென் செய்வேன் புகல். (ருகூ)

---

168. 58-ஆம் வெண்பாவொடு
" காணும தொழிந்தேன் நீஇனி வரினும் காணவும் நாணுவனே "
என்பது போன்ற மணிவாசகத் தீஞ்சொற்களை ஒப்பு நோக்கி உணர்க.

169. 59-ஆம் வெண்பாவொடு
" உடம்பார் அழியில் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார் "
என்பதுபோன்ற திருமந்திரக் கட்டளைகளையும்
" கண்ணகல் நிலத்துநான் உள்ளபொழுதே அருட்
ககனவட் டத்தினின்று
காலூன்றி நின்றுபொழி ஆனந்த முகிலொடு
கலந்துமதி அவசமுறவே
பண்ணுவது நன்மைஇந் நிலைபதியு மட்டுமே
பதியாய் இருந்ததேகப்
பவுரிகுலையாமலே கௌரிகுண் டலிஆயி
பண்ணவிதன் அருளினாலே
விண்ணிலவு மதிஅமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவேன் உமதடிமைநான் "
என்பதுபோன்ற நம் தாயுமானப் பெருந்தகையாருடைய பெருமறை மொழிகளையும்
" யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் (கு)என்கடவேன்! "
என்பதுபோன்ற நம் தெய்வத் திருவாசகத் தேன் பிலிற்றுதல்களையும் ஒப்புநோக்கி உணர்ந்து தெளிக.

கொன்செய்தாற் கேற்றிடுமென் குற்றமெலாம் ஐயனை
என்செய்தால் தீர்ந்திடுமோ யானறியேன் - முன்செய்தோய்
நின்பால் எனைக்கொடுத்தேன் நீசெய்க அன்றிஇனி
என்பால் செயலொன் றிலை. (சுO)

எண்ணிலெளி யேன்தவிர எல்லா உயிர்களுநின்[170]
தண்ணிலகுந் தாணீழல் சார்ந்திடுங்காண் - மண்ணில்வருந்
தீங்கென்ற எல்லாமென் சிந்தையிசைந் துற்றனமற்
றுங்கொன்றும் இல்லாமை யால். (சுக)

தாரம்விற்றுஞ் சேய்விற்றுந் தன்னைவிற்றும் பொய்யாத[171]
வாரம்வைத்தான் முன்னிங்கோர் மன்னனென்பர் - நாரம்வைத்த
வேணிப் பிரானதுதான் மெய்யாமேல் அன்றெனைநீ
ஏணில் பிறப்பித்த தில். (சுஉ)

உள்ளொன்ற நின்னடிக்கன் புற்றறியேன் என்னுளத்தின்[172]
வெள்ளொன்ற வன்மை விளங்காதோ - நள்ளொன்ற
அச்சங்கொண் டேனைநினக் கன்பனென்பர் வேழத்தின்
எச்சங்கண் டாற்போல வே. (சுங)

நீத்தாடுஞ் செஞ்சடையாய் நீள்வேடங் கட்டிவஞ்சக்
கூத்தாடு கின்றேனைக் கொண்டுசிலர் - கூத்தாநின்
பத்தனென்பர் என்னே பகல்வேடத் தார்க்குமிங்கு
வித்தமிலா நாயேற்கும் வேறு. (சுச)

---

170. 61-ஆம் வெண்பாவொடு

"ஆணிலே பெண்ணிலே என்போலே ஒருபேதை
அகிலத்தின் மிசைஉள்ளதோ !"

என்பதுபோன்ற நம் தாயுமானுர் அமுதச் சொற்களை ஒப்புநோக்கி உணர்க.

171. 62-ஆம் வெண்பாவொடு

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

என்னும் நம் தெய்வப் புலவர் பெருமானுர் குறளினை ஒத்துணர்க.

172. 63, 64-ஆம் வெண்பாக்களொடு

"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன் "

என்பதுபோன்ற தெய்வத் தமிழ் மறைகளை ஒப்புநோக்கி உணர்க.

அன்புடையார் இன்சொல் அமுதேறுநின்செவிக்கே[173]
இன்புடையாய் என்பொய்யும் ஏற்குங்கொல் - துன்புடையேன்
பொய்யுடையேன் ஆயினுநின் பொன்னருளை வேண்டுமொரு
மெய்யுடையேன் என்கோ விரைந்து. (௬௫)

என்னு ருயிர்க்குயிராம் எம்பெருமான் நின்பதத்தை
உன்னார் உயிர்க்குறுதி உண்டோதான் - பொன்னகத்
தார்க்கும் சதுமுகர்க்கும் தானத்த வர்க்குமற்றை
யார்க்கும் புகலுன் அருள். (௬௬)

வெள்ளைப் பிறைஅணிந்த வேணிப் பிரானேநான்
பிள்ளைப் பிராயத்தில் பெற்றாளை - எள்ளப்
பொறுத்தாள்அத் தாயில் பொறுப்புடையோய் நீதான்
வெறுத்தால் இனிஎன்செய் வேன். (௬௭)

ஆயிரமன் றேநூறும் அன்றேஈ ரைந்தன்றே
ஆயிரம்பேர் எந்தைஎழுத் தைந்தேகாண் - நீஇரவும்
எல்லு நினைத்தியென எத்துகினும் எந்தாய்வீண்
செல்லுமனம் என்செய்கேன் செப்பு. (௬௮)

வஞ்சந் தருங்காம வாழ்க்கையிடைச் சிக்கியஎன்
நெஞ்சந் திருத்தி நிலைத்திலையே - எஞ்சங்
கரனே மழுக்கொள் கரனே அரனே
வரனே சிதம்பரனே வந்து. (௬௯)

தாழ்விக்கும் வஞ்சச் சகமால் ஒழித்தென்னை
வாழ்விக்கும் நல்ல மருந்தென்கோ - வீழ்விக்கும்
ஈங்கான மாயை இகந்தோர்க் கருள்வோய்நின்
பாங்கான செம்பொற் பதம். (௭௦)

---

173. 65-ஆம் வெண்பாவொடு
"அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே"
என்பதுபோன்ற திருவாசகத் தீந்தமிழை ஒத்துணர்க.

ஏசொலிக்கு மானிடனாய் என்பிறந்தேன் தொண்டர்கடந்[174]
தூசொலிப்பான் கல்லாகத் தோன்றிலனே - தூசொலிப்பான்
கல்லாகத் தோன்றுவனேல் காளகண்டா நாயேனுக்
கெல்லா நலமுமுள தே. (எக)

குற்றம் பலசெயினுங் கோபஞ் செயாதவருள்
சிற்றம் பலமுறையுஞ் சிற்பரனே - வெற்றம்பல்
பொய்விட்டால் அன்றிப் புரந்தருளேன் என்றெனைநீ
கைவிட்டால் என்செய்கேன் காண். (எஉ)

தீக்குணத்தார் யாவருமென் சீடரெனில் என்னுடைய
தீக்குணத்தின் எல்லைஎவர் தேர்கிற்பார் - ஊக்கமிகு
நல்லோர்க் களிக்கு நதிச்சடையோய் எற்கருளில்
எல்லோர்க்கும் ஐயுறவா மே. (எங)

இன்படையான் றன்புடையான் என்றேழை யேன்தலைமேல்
அன்புடையாய் நீயமைப்பித் தாயிதற்கு - வன்படையா
தெவ்வண்ணம் நின்னெஞ் சிசைந்ததோ அந்நாளில்
இவ்வண்ணம் என்றறிகி லேன். (எச)

ஏய்ப்பிறப்பொன் றில்லாதோய் என்பிறப்பின் ஏழ்மடங்கோர்
பேய்ப்பிறப்பே நல்ல பிறப்பந்தோ - வாய்ப்புலகம்
வஞ்சமெனத் தேக மறைத்தடிமண் வையாமல்
அஞ்சிநின்னோ டாடும் அது. (எரு)

---

174. 71-ஆம் வெண்பா தொண்டர்கள்தம் தொடர்புடைய உயிரற்றபொருள் என்று கருதுகிறவைகூடத் தூயமேம்பாடுடையன என்னும் பேருண்மையை விளக்குகிறது. அருள்உருவமான நம் ஏசு அடிகளாருடைய திருமேனியில் போர்த்திருந்த போர்வையை, அவ்வடிகளார்பால் நிறைந்த நம்பிக்கையும் பத்திமையும் ஆரா அன்பும்கொண்ட ஒரு பெண் தொட்டமாத்திரத்திலேயே அவளை வருத்திய கொடிய நோய் நீங்கப் பெற்ற வரலாற்றையும் இந்நிகழ்ச்சியைக் குறித்த ஏசு அடிகளாரின் தெய்வ வியன் மொழியையும் விவிலிய நூலில் கண்டு தெளிக.

கோடும் பிறைச்சடையோய் கோளுங் குறும்புஞ்சாக்[175]
காடும் பிணிமூப்புங் காணார்காண் - நீடுநினைக்
கண்டார் அடிப்பொடியைக் கண்டார் திருவடியைக்
கண்டார் வடிவுகண்டார் கள். (௭௬)

மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே இந்திரன்செங்
கோலெங்கே வானோர் குடியெங்கே - கோலஞ்சேர்
அண்டமெங்கே அவ்வவ் வரும்பொருளெங் கேநினது
கண்டமங்கே நீலமுறாக் கால். (௭௭)

எவ்வேளை யோவருங்கூற் றெம்பாலென் றெண்ணுகின்ற
அவ்வேளை தோறும் அழுங்குற்றேன் - செவ்வேளை
மிக்களித்தோய் நின்கழற்கால் வீரத்தை எண்ணுதொறும்
எக்களித்து வாழ்கின்றேன் யான். (௭௮)

துற்சங்கத் தோர்கணமுந் தோயாது நின்னடியர்[176]
சற்சங்கத் தென்றனைநீ தான்கூட்டி - நற்சங்கக்
காப்பான் புகழுன் கழற்புகழைக் கேட்பித்துக்
காப்பாய் இஃதென் கருத்து. (௭௯)

என்னமுதே முக்கண் இறையே நிறைஞான
இன்னமுதே நின்னடியை ஏத்துகின்றோர் - பொன்னடிக்கே
காதலுற்றுத் தொண்டுசெயக் காதல்கொண்டேன் எற்கருணை
காதலுற்றுச் செய்தல் கடன். (௮௦)

ஆரா அமுதே அருட்கடலே நாயேன்றன்
போராத வஞ்சப் பிழைநோக்கி - யாரேனு
நின்போல்வார் இல்லாதோய் நீயே புறம்பழித்தால்
என்போல்வார் என்சொல்லார் ஈங்கு. (௮௧)

---

175. 76-ஆம் வெண்பாவில், இறைவனுடைய வழி அடியார்கள், பிணி மூப்புச் சாக்காடு என்னும் இந்நில உலகப் பிறப்பின் பெருங் குறைபாடு களுக்கு, உட்படார் என்பது கூறியிருப்பது காண்க.
“மருளார் மனத்தோ(டு) உனைப்பிரிந்து வருந்துவேனை வாவென்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல் செத்தேபோனால் சிரியாரோ?”
என்பதுபோன்ற திருவாசக மறைமொழிகளையும் ஒப்புநோக்கி உய்த் துணர்க.

176. 79, 80-ஆம் வெண்பாக்களில் இறைவனுடைய தொண்டர்க்குத் தொண்டர் ஆம் திருவிளையாடல் கூறியிருப்பது காண்க.

மெய்யாக நின்னைவிட வேறோர் துணையில்லேன்
ஐயா அதுநீ அறிந்ததுகாண் - பொய்யான
தீதுசெய்வேன் தன்பிழையைச் சித்தங் குறித்திடில்யான்
யாதுசெய்வேன் அந்தோ இனி. (அஉ)

திண்ணம் அறியாச் சிறியேன் உளத்திருக்கும்[177]
எண்ணம் அறிந்தாய் இரங்குகிலாய் - அண்ணலுன்பால்
நித்தம் இரங்காஎன் நெஞ்சமர்ந்த தாலோநின்
சித்தம் இரங்காச் செயல். (அங)

கொன்னஞ்சேன் தன்பிழையைக் கூர்ந்துற்று நானினைக்கில்
என்நெஞ்சே என்னை எரிக்குங்காண் - மன்னுஞ்சீர்
எந்தாய் நின் சித்தத்திற் கேதாமோ நானறியேன்
சிந்தா குலனென்செய் வேன். (அச)

நின்னன்பர் தம்பால் நிறுத்துதியோ அன்றிஎனைப்
பொன்னன்பர் தம்பால் புணர்த்துதியோ - பொன்னன்பர்
வைவமே என்னும் வறியேன் அறியேனென்
தெய்வமே நின்றன் செயல். (அரு)

என்சிறுமை நோக்கா தெனக்கருளல் வேண்டுமென்றே
நின்பெருமை நோக்கிஇங்கு நிற்கின்றேன் - என்பெரும
யாதோநின் சித்தம் அறியேன் அடியேற்கெப்
போதோ அருள்வாய் புகல். (அசு)

எந்தாயென் குற்றமெலாம் எண்ணுங்கால் உள்நடுங்கி
நொந்தா குலத்தின் நுழைகின்றேன் - சிந்தாத
காள மகிழ்நின் களக்கருணை எண்ணுதொறும்
மீளமகிழ் கின்றேன் விரைந்து. (அஎ)

எள்ளலே என்னினுமோர் ஏத்துதலாய்க் கொண்டருளெம்
வள்ளலே என்றனைநீ வாழ்வித்தால் - தள்ளலே
வேண்டுமென யாரே விளம்புவார் நின்னடியார்
காண்டுமெனச் சூழ்வார் களித்து. (அஅ)

177. 83-ஆம் வெண்பாவில் இறைவன் தம் உளத்தில் அமர்ந்திருக்கும் அழகினை அடிகளார் வியந்து எதிர்மறையாக உரைத்திருக்கிறார்கள்.

வேணிக்க மேவைத்த வெற்பே விலையில்லா
மாணிக்க மேகருணை மாகடலே - மாணிக்கு
முன்பொற் கிழியளித்த முத்தேஎன் ஆருயிர்க்கு
நின்பொற் கழலே நிலை. (அகூ)

முத்தேவர் போற்று முதற்றேவ நின்னையன்றி
எத்தேவர் சற்றே எடுத்துரைநீ - பித்தேன்செய்
குற்றமெலாம் இங்கோர் குணமாகக் கொண்டென்னை
அற்றமிலா தாள்கின் றவர். (கூ0)

கங்கைச் சடையாய்முக் கண்ணுடையாய் கட்செவியாம்
அங்கச் சுடையாய் அருளுடையாய் - மங்கைக்
கொருகூ றளித்தாய் உனைத்தொழுமிந் நாயேன்
இருகூ றளித்தேன் இடர்க்கு. (கூக)

பேசத் தெரியேன் பிழையறியேன் பேதுறினும்
கூசத் தெரியேன் குணமறியேன் - நேசத்தில்
கொள்ளுவார் உன்னடிமைக் கூட்டத்தார் அல்லாதார்
எள்ளுவார் கண்டாய் எனை. (கூஉ)

ஊனே உடையேஎன் றுட்கருதி வெட்கமிலேன்
வீணே நன்னாளை விடுகின்றேன் - காணேனின்
செம்பாத மேஎன்றுந் தீராப் பொருளென்று
நம்பாத நாயடியேன் நான். (கூங)

சிவமே சிவஞானச் செல்வமே அன்பர்[178]
நவமே தவமே நலமே - நவமாம்
வடிவுற்ற தேவேநின் மாக்கருணை யன்றோ
படிவுற்ற என்னுட் பயன். (கூச)

கோளாக்கிக் கொள்ளுங் கொடியே னையுநினக்கோர்
ஆளாக்கிக் கொள்ளற் கமைவாயேல் - நீளாக்குஞ்
செங்கேச வேணிச் சிவனேஎன் ஆணவத்திற்
கெங்கே இடங்காண் இயம்பு. (கூரு)

---

178. 94-ஆம் வெண்பாவில் எப்பொருளுக்கும் எல்லார்க்கும் உடலுக்குடலாய் உயிருக்குயிராய் அறிவுக்கறிவாய் உணர்வுக்குணர்வாய் அகம் புறமும் விளங்கும் இறைவனுடைய வடிவம் பேர் இரக்கம் என்பதை விளக்கியிருப்பது கண்டு மகிழ்க.

திண்ணஞ்சற் றீந்திடநின் சித்தம் இரங்காத
வண்ணஞ்சற் றேதெரிய வந்ததுகாண் - எண்ணெஞ்சில்
இத்தனையு மென்வினைகள் நீங்கில் இருக்கஅண்டம்
எத்தனையும் போதாமை என்று. (௯௬)

இண்டைச் சடையோய் எனக்கருள எண்ணுதியேல்
தொண்டைப் பெறுமென் துயரெல்லாம் - சண்டைக்கிங்
குஞ்சேமெனஓடும் ஓட்டத்திற் கென்னுடைய
நெஞ்சே பிறகிடுங்காண் நின்று. (௯௭)

கண்ணு ணிழுதைகள்பாற் காட்டிக் கொடுக்கிலெனை[179]
அண்ணு அருளுக் கழகன்றே - உண்ணூடு
நின்னடியார் கூட்டத்தில் நீரிவனைச் சேர்த்திடுமின்
என்னடியான் என்பாய் எடுத்து. (௯௮)

கண்ணப்பன் ஏத்துநுதற் கண்ணப்ப மெய்ஞ்ஞான[180]
விண்ணப்ப நின்றனக்கோர் விண்ணப்பம் - மண்ணிற்சில்
வானவரைப் போற்றும் மதத்தோர் பலருண்டு
நானவரைச் சேராமல் நாட்டு. (௯௯)

பொன்னின் றொளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்
பின்னொன் றறியேன் பிழைநோக்கி - என்னை
அடித்தாலு நீயே அணைத்தாலு நீயே
பிடித்தேனுன் பொற்பாதப் பேறு. (௧௦௦)

---

179. 98-ஆம் வெண்பாவொடு நம் தாயுமானப் பெருமானார் சித்தர்கணத்தை முன்னிட்டுக் கூறும் கீழ்க்கண்டதை ஒத்துணர்க:

"இத்தமிழையே
சொன்னவ னியாவன் அவன் முத்திசித் திகள்எலாம்
தோய்ந்தநெறி யேபிடித்தீர்
சொல்லுமென அவர்நீங்கள் சொன்னஅவை யில்சிறிது
தோய்ந்தகுண சாந்தன் எனவே
மின்னல்பெற வேசொல்ல அச்சொல்கேட்(டு) அடிமைமனம்
விகசிப்ப தென்த நாளோ."

180. 99-ஆம் வெண்பாவில் கொலை விரும்புவதாகவும் புலை நுகர்வதாகவும் எண்ணும் பற்பல சிறு தெய்வங்களைப் போற்றும் சிறுமையை வெறுத்துக் கூறியிருத்தல் காண்க.

துற்குணத்தில் வேறு தொடர்வேன் எனினுமற்றை[181]
நற்குணத்தில் உன்சீர் நயப்பேன்காண் - சிற்குணத்தோய்
கூற்றுதைத்த நின்பொற் குரைகழற்பூந் தாளறிக
வேற்றுரைத்தே னில்லை விரித்து. (கoக)

இப்பாரில் என்பிழைகள் எல்லாம் பொறுத்தருள்ளேன்[182]
அப்பாநின் தாட்கே அடைக்கலங்காண் - இப்பாரில்
நானினது தாணீழல் நண்ணுமட்டும் நின்னடியார்
பானினது சீர்கேட்கப் பண். (கoஉ)

திருச்சிற்றம்பலம்

௫. சிவநேச வெண்பா[183]

முற்றிற்று.

---

181. 101-ஆம் வெண்பாவொடு

"ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே"
என்பது போன்ற திருவாசகத் தெய்வத்தமிழினை ஒப்பு நோக்கி உணர்க.

182. 102-ஆம் வெண்பாவிலும் இதற்குமுன் போந்த பல வெண்பாக்களி லும் இறைவனுக்கு ஆட்பட்ட அடியார் திருக்கூட்டத்தில் வதியும் பேற்றினையும் பெரும்பயனையும் நம் பெருமானார் பல வகையாகப் போற்றி விவரித்திருப்பது காண்க. இவற்றோடு பின்வரும் திருவாசகத் தேனினை மாந்திக் களிக்க :

"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்(து)எம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே."

183. இந்நூலினை ஒருமுகமாய்ப் பயின்று பயின்று அநுபவிப்பவர் பெரும் பயன் அடைவர் என்பதற்கு ஐயமில்லை. அங்ஙனம் பயின்று அநுபவித் தப் பயன் பெற்ற பெரியார் ஒருவரை இப்பதிப்பாசிரியர் அறிவர். 154-ஆம் அடிக்குறிப்பில் நெஞ்சறிவுறுத்தல் சார்பாக மேற்கோள் முதலியவைபற்றி உணர்த்தியிருப்பது இந்நூலுக்கும் பொருந்தும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
சிவகணபதி துணை

ரு. மஹா தேவமாலை[184]

காப்பு[185]

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கருணைநிறைந் தகம்புறமும் துளும்பிவழிந்
துயிர்க்கெல்லாம் களைகண் ஆகித்
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய் சிதையா ஞானப்
பொருள்நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய் பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கல் பாறையும்உட்
கசிந்துருக்கும் வடிவத் தோயே.

---

184. மஹாதேவ மாலை என்னும் இத்தெய்வநூலினை ஆழ்ந்த பத்திமையொடும் பேர்ஆர்வத்தொடும் பெரு வியப்பொடும் பேர்ஒளியொடும் பயிலாத பொதுநெறித் திருவாளர்களே அருள்விளங்கும் நம் நாட்டில் இல்லை என்னலாம். தேவாரப் பெருமறையின்கண் திருத்தாண்டகம் பொலிவதுபோல், இந்நூல் திருஅருட்பாவில் பொலிந்து விளங்குகிறது. இறைவனை, "வேதங்கள் ஐயா என, ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!" என்றழைக்கும் தெய்வத் திருவாசகத்தின் உட்கிடையையும் அநுபவத்தையும் உணர்ந்துணர்ந்து நுகர்ந்து நுகர்ந்து தத்துவங்களெல்லாம் ஒருங்கே சுவைத்துச் சுவைத்து இன்புறுவது போன்று இருக்கிறது, நம் பெருமானார் இராமலிங்க அடிகளார் தம்மை மறந்து அருளமுதம் உண்டு தேக்கித் தெய்வத் தீந்தமிழில் தமிழ்நாட்டின் தவப்பயனாகத் திருவாய் மலர்ந்தருளிய இந்நூல்.

இவ்வரும்பெரு நூல், திருஅருளால் அரிதில் கிடைத்த நம் பெருமான் இராமலிங்க அடிகளார் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திருஏட்டில் உள்ளவாறு இங்கு அச்சிட்டிருக்கிறது. நம் அடிகளார் திருக்கரம் தாங்கிய சுவடியின் முதல் ஏட்டில், "உ. சிவமயம். கணபதி துணை. சண்முகன்றுணை. மஹாதேவ மாலை" என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அன்பர் திரு. தருமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிய ஏட்டுப் பிரதியின் தலைப்பேட்டில் "ஓம் சிவாய நம. என்து சற்குருவாகிய சிதம்பரம் இராமலிங்க தேசிகர் திருவாய் மலர்ந்தருளிய மஹாதேவ மாலை" என்று குறித்திருக்கிறது. இவை தவிர இந்நூலுக்கு வேறு மூன்று பிரதிகளும் கிடைத்திருக்கின்றன.

185. காப்புச் செய்யுளில், பெருங்கருணையும் பேரறிவும் எப்பாங்கரும் என்ஞான்றும் எவ்வுயிரினிடத்தும் பொங்கித் ததும்பும் இறைவனுடைய பேரருள் வடிவத்தை, நம் பெருமானார், தாம் கண்டு அநுபவித்தவாறு, ஏழைஎளியோம் ஆகிய நம் பொருட்டு ஓர் ஓவியமாகத் தேன்வழியும் அமுதச் சொற்களால் போன்போடும் பேருவகையோடும் சாயல் பெறத் தீட்டியிருத்தல் கண்டு மகிழ்க.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகனைத்தும் முழுதாகி ஆங்காங் குள்ள[186]
உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதான் ஆகிக்
கலகமிலா அறியாத காட்சி ஆகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி
இலகுசிதா காசமதாய்ப் பரமா காச
இயல்பாகி இணையொன்றும் இல்லா தாகி
அலகில்அறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி அமர்ந்த தேவே. (க)

உலகமெலாந் தனிநிறைந்த உண்மை யாகி
யோகியர்தம் அநுபவத்தின் உவப்பாய் என்றும்
கலகமுறா உபசாந்த நிலைய தாகிக்
களங்கமற்ற அருண்ஞானக் காட்சி யாகி
விலகலுறா நிபிடஆ னந்த மாகி
மீதானத் தொளிர்கின்ற விளக்க மாகி
இலகுபரா பரமாய்ச்சிற் பரமாய் அன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே. (உ)

வித்தாகி முளையாகி விளைவ தாகி
விளைவிக்கும் பொருளாகி மேலு மாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவி லாத

---

186. 1 முதல் 68 வரையிலுள்ள அருட்பாக்களானவை—இறைவனைக் குறிக்கும் உணர்தற்கரிய உவமையற்ற பேர் உண்மையானது ஒவ்வொரு பாவிலும் ஒவ்வொரு தன்மையாகவும், எனினும், நீலவானில் தவழும் நிறைமதிபோல், ஓரோர் முழுமையாகவும், அவற்றைப் பேரன்போடும் ஒருமையோடும் ஓதும் அடியார்கள்பால், ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உவப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் பேரருள் வண்ணமாகவும் விளங்க—நம் பெருமான் அவர்களால் இணையற்ற தீந்தமிழ் ஓவியங்களாகத் திருஉருவம் கொண்டிருக்கின்றன என்பது புலனும்.

இவற்றைச் சிற்றறிவின் பாகுபாட்டியக்கம் இல்லாமல் இறைவன்பால் இயங்கும் பேரன்போடும் உளக்காட்சியோடும் ஓதி உணர்ந்து, கறந்த பால் கன்னலொடு தேன்கலந்தாற் போன்றதோர் ஆன்ம இன்பம் அடைவோமாக.

சத்தாகிச் சித்தாகி இன்ப மாகிச்
சதாநிலையாய் எவ்வுயிர்க்குஞ் சாட்சி யாகி
முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே. (௩)

வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனுதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்
மவுனவியோ மத்தினிடை வயங்குந் தேவே. (௪)

தோன்றுதுவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்றசுத்தாத் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்று மிலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்
ஈன்றருளுந் தாயாகித் தந்தை யாகி
எழிற்குருவாய்த் தெய்வதமாய் இலங்குந் தேவே. (௫)

பரமாகிச் சூக்குமமாய்த் தூல மாகிப்
பரமார்த்த நிலையாகிப் பதத்தின் மேலாம்
சிரமாகித் திருஅருளாம் வெளியாய் ஆன்ம
சிற்சத்தி யாய்ப்பரையின் செம்மை யாகித்
திரமாகித் தற்போத நிவிர்த்தி யாகிச்
சிவமாகிச் சிவாநுபவச் செல்வ மாகி
அரமாகி ஆனந்த போத மாகி
ஆனந்தா தீதமதாய் அமர்ந்த தேவே. (௬)

இந்தியமாய்க் கரணாதி அனைத்து மாகி
இயல்புருட னாய்க்கால பரமு மாகிப்
பந்தமற்ற வியோமமாய்ப் பரமாய் அப்பால்
பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி

வந்தஉப சாந்தமதாய் மவுன மாகி
மகாமவுன நிலையாகி வயங்கா நின்ற
அந்தமில்தொம் பதமாய்த்தற் பதமாய் ஒன்றும்
அசிபதமாய் அதீதமாய் அமர்ந்த தேவே. (எ)

நின்மயமாய் என்மயமாய் ஒன்றுங் காட்டா
நிராமயமாய் நிருவிகற்ப நிலையாய் மேலாம்
தன்மயமாய்த் தற்பரமாய் விமல மாகித்
தடத்தமாய்ச் சொரூபமாய்ச் சகச மாகிச்
சின்மயமாய்ச் சிற்பரமாய் அசல மாகிச்
சிற்சொலித மாய்அகண்ட சிவமாய் எங்கும்
மன்மயமாய் வாசகா தீத மாகி
மனாதீத மாய்அமர்ந்த மவுனத் தேவே. (அ)

அளவிறந்த நெடுங்காலம் சித்தர் யோகர்
அறிஞர்மலர் அயன்முதலோர் அனந்த வேதம்
களவிறந்தும் காணாகி இறந்தும் செய்யும்
கடுந்தவத்தும் காண்பரிதாம் கடவு ளாகி
உளவிறந்த எம்போல்வார் உள்ளத் துள்ளே
ஊறுகின்ற தெள்ளமுத ஊற லாகிப்
பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந் தானாய்ப்
பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய தேவே. (கூ)

வாயாகி வாயிறந்த மவுன மாகி
மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக்
கருவிகா ணாதிகளின் கலப்பாய்ப் பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித்
தானாகி நானாகிச் சகல மாகி
ஓயாத சத்தியெலாம் உடைய தாகி
ஒன்றாகிப் பலவாகி ஓங்கும் தேவே. (கo)

அண்டங்கள் பலவாகி அவற்றின் மேலும்
அளவாகி அளவாத அதீத மாகிப்
பிண்டங்கள் அனந்தவகை யாகிப் பிண்டம்
பிறங்குகின்ற பொருளாகிப் பேதந் தோற்றும்

பண்டங்கள் பலவாகி இவற்றைக் காக்கும்
பதியாகி ஆனந்தம் பழுத்துச் சாந்தம்
கொண்டெங்கும் நிழல்பரப்பித் தழைந்து ஞானக்
கொழுங்கடவுள் தருவாகிக் குலவுந் தேவே. (கக)

பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி அகமாகிப் புனித மாகி
மண்ணாகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி எங்கும்
மின்னாகிப் பரவிஇன்ப வெள்ளந் தேக்க
வியன்கருணை பொழிமுகிலாய் விளங்குந் தேவே. (கஉ)

அரிதாகி அரியதினும் அரிய தாகி
அநாதியாய் ஆதியாய் அருள தாகிப்
பெரிதாகிப் பெரியதினும் பெரிய தாகிப்
பேதமாய் அபேதமாய்ப் பிறங்கா நின்ற
கரிதாகி வெளிதாகிக் கலைக ளாகிக்
கலைகடந்த பொருளாகிக் கரணா தீதத்
தெரிதான வெளிநடுவில் அருளாம் வண்மைச்
செழுங்கிரணச் சுடராகித் திகழுந் தேவே. (கங)

உருவாகி உருவினில்உள் உருவ மாகி
உருவத்தில் உருவாகி உருவுள் ஒன்றாய்
அருவாகி அருவினில்உள் அருவ மாகி
அருவத்தில் அருவாகி அருவுள் ஒன்றாய்க்
குருவாகிச் சத்துவசிற் குணத்த தாகிக்
குணரகிதப் பொருளாகிக் குலவா நின்ற
மருவாகி மலராகி வல்லி யாகி
மகத்துவமாய் அணுத்துவமாய் வயங்குந் தேவே. (கச)

சகலமாய்க் கேவலமாய்ச் சுத்த மாகிச்
சராசரமாய் அல்லவாய்த் தானே தானாய்
அகலமாய்க் குறுக்கமாய் நெடுமை யாகி
அவையனைத்தும் அணுகாத அசல மாகி

இகலுறுத் துணையாகித் தனிய தாகி
எண்குணமாய் எண்குணத்தெம் இறையாய் என்றும்
உகலிலாத் தண்ணருள்கொண் டுயிரை யெல்லாம்
ஊட்டிவளர்த் திடுங்கருணை ஓவாத் தேவே. (கரு)

வாசகமாய் வாச்சியமாய் நடுவாய் அந்த
வாசகவாச் சியங்கடந்த மவுன மாகித்
தேசகமாய் இருளகமாய் இரண்டுங் காட்டாச்
சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும் பந்த
பாசமுறாப் பதியாகிப் பசுவு மாகிப்
பாசநிலை யாகிஒன்றும் பகரா தாகி
நாசமிலா வெளியாகி ஒளிதா னாகி
நாதாந்த முடிவில்நடம் நவிற்றும் தேவே. (கசு)

சகமாகிச் சீவனாய் ஈச னாகிச்
சதுமுகனாய்த் திருமாலாய் அரன்றா னாகி
மகமாயை முதலாய்க்கூ டத்த னாகி
வான்பிரம மாகிஅல்லா வழக்கு மாகி
இகமாகிப் பதமாகிச் சமய கோடி
எத்தனையு மாகிஅவை எட்டா வான்கற்
பகமாகிப் பரமாகிப் பரம மாகிப்
பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியும் தேவே. (கஎ)

விதியாகி அரியாகிக் கிரீச னாகி
விளங்குமகேச் சுரனாகி விமல மான
நிதியாகுஞ் சதாசிவனாய் விந்து வாகி
நிகழ்நாத மாய்ப்பரையாய் நிமலா னந்தப்
பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப்
பக்கமிரண் டாயிரண்டும் பகரா தாகிக்
கதியாகி அளவிறந்த கதிக ளெல்லாம்
கடந்துநின்று நிறைந்தபெருங் கருணைத் தேவே. (கஅ)

மானாகி மோகினியாய் விந்து மாகி
மற்றவையால் காணாத வான மாகி
நானாகி நானல்ல னாகி நானே
நானாகும் பதமாகி நான்றான் கண்ட

தானாகித் தானல்ல னாகித் தானே
தானாகும் பதமாகிச் சகச ஞான
வானாகி வான்நடுவில் வயங்கு கின்ற
மவுனநிலை யாகியெங்கும் வளருந் தேவே. (ககூ)

மந்திரமாய்ப் பதமாகி வன்ன மாகி
வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவன மாகிச்
சந்திரனாய் இந்திரனாய் இரவி யாகித்
தானவராய் வானவராய்த் தயங்கா நின்ற
தந்திரமாய் இவையொன்றும் அல்ல வாகித்
தானாகித் தனதாகித் தானாய் காட்டா
அந்தரமாய் அப்பாலாய் அதற்கப் பாலாய்
அப்பாலுக் கப்பாலாய் அமர்ந்த தேவே. (உ0)

மலைமேலும் கடன்மேலும் மலரின் மேலும்
வாழ்கின்ற மூவுருவின் வயங்கும் கோவே
நிலைமேலும் நெறிமேலும் நிறுத்து கின்ற
நெடுந்தவத்தோர் நிறைமேலும் நிகழ்த்தும் வேதக்
கலைமேலும் எம்போல்வார் உளத்தின் மேலும்
கண்மேலும் தோள்மேலும் கருத்தின் மேலும்
தலைமேலும் உயிர்மேலும் உணர்வின் மேலும்
தருமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே. (உக)

பொற்குன்றே அகம்புறமும் பொலிந்து நின்ற
பூரணமே ஆரணத்துட் பொருளே என்றும்
கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பே தான
கற்பகமே கற்பகத்திங் கனியே வாய்மைச்
சொற்குன்றா நாவகத்துள் மாறா இன்பம்
தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதி யேவிண்
நிற்கின்ற சுடரேஅச் சுடருள் ஓங்கும்
நீளொளியே அவ்வொளிக்குள் நிறைந்த தேவே. (உஉ)

தேசுவிரித் திருளகற்றி என்றும் ஓங்கித்
திகழ்கின்ற செழுங்கதிரே செறிந்த வாழ்க்கை
மாசுவிரித் திடுமனத்தில் பயிலாத் தெய்வ
மணிவிளக்கே ஆனந்த வாழ்வே எங்கும்

காசுவிரித் திடுமொளிபோல் கலந்து நின்ற
காரணமே சாந்தமெனக் கருதா நின்ற
தூசுவிரித் துடுக்கின்றோர் தம்மை நீங்காச்
சுகமயமே அருட்கருணை துலங்கும் தேவே. (உ௩)

கோவேஎண் குணக்குன்றே குன்று ஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்த மோனக்
காவேமெய் அறிவின்ப மயமே என்றன்
கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத்
தேவேஅத் தேவுக்குந் தெளிய ஒண்ணாத்
தெய்வமே வாடாமல் திகழ்சிற் போதப்
பூவேஅப் பூவினுறு மணமே எங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தேவே. (உச)

வானேஅவ் வானுலவும் காற்றே காற்றின்
வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரில்
தானேயும் புவியேஅப் புவியில் தங்கும்
தாபரமே சங்கமமே சாற்று கின்ற
ஊனேநல் உயிரேஉள் ஒளியே உள்ளத்
துணர்வேஅவ் வுணர்வுகலந் தூறு கின்ற
தேனேமுக் கனியேசெங் கரும்பே பாகின்
தீஞ்சுவையே சுவையனைத்தும் திரண்ட தேவே. (உரு)

விண்ணேவிண் உருவேவிண் முதலே விண்ணுள்
வெளியேஅவ் வெளிவிளங்கு வெளியே என்றன்
கண்ணேகண் மணியேகண் ஒளியே கண்ணுட்
கலந்துநின்ற கதிரேஅக் கதிரின் வித்தே
தண்ணேதண் மதியேஅம் மதியில் பூத்த
தண்ணமுதே தண்ணமுத சார மேசொல்
பண்ணேபண் ணிசையேபண் மயமே பண்ணின்
பயனேமெய்த் தவர்வாழ்த்திப் பரவும் தேவே. (உ௬)

மாணேயத் தவருளத்தே மலர்ந்த செந்தா
மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப்
பூணேமெய்ப் பொருளேஅற் புதமே மோனப்
புத்தமுதே ஆனந்தம் பொலிந்த பொற்பே

ஆணோபெண் உருவமே அலியே ஒன்றும்
அல்லாத பேரொளியே அனைத்துந் தாங்குந்
தாணேசிற் சுகமேஅச் சுகமேல் பொங்குஞ்
சொரூபானந் தக்கடலே சோதித் தேவே. (உஎ)

பூதமே அவைதோன்றிப் புகுந்தொ டுங்கும்
புகலிடமே இடம்புரிந்த பொருளே போற்றும்
வேதமே வேதத்தின் விளைவே வேத
வியன்முடிவே அம்முடிவின் விளங்கும் கோவே
நாதமே நாதாந்த நடமே அந்த
நடத்தினையுள் நடத்துகின்ற நலமே ஞான
போதமே போதமெலாம் கடந்து நின்ற
பூரணமே யோகியருள் பொலிந்த தேவே. (உஅ)

ஞாலமே ஞாலமெலாம் விளங்க வைத்த
நாயகமே கற்பமுதல் நவிலா நின்ற
காலமே காலமெலாம் கடந்த ஞானக்
கதியேமெய்க் கதியளிக்குங் கடவு ளேசிற்
கோலமே குணமேஉட் குறியே கோலங்
குணங்குறிகள் கடந்துநின்ற குருவே அன்பர்
சீலமே மாலறியா மனத்திற் கண்ட
செம்பொருளே உம்பர்பதஞ் செழிக்கும் தேவே. (உகூ)

தத்துவமே தத்துவா தீத மேசிற்
சயம்புவே எங்குநிறை சாட்சி யேமெய்ச்
சத்துவமே சத்துவத்தின் பயனும் இன்பம்
தந்தருளும் பெருவாழ்வாம் சாமி யேஎம்
சித்தநிலை தெளிவிக்கும் ஒளியே சற்றும்
தெவிட்டாத தெள்ளமுதே தேனே என்றும்
சுத்தநெறி திறம்பாதார் அறிவில் தோய்ந்த
சுகப்பொருளே மெய்ஞ்ஞானம் துலங்கும் தேவே. (௩0)

யோகமே யோகத்தின் பயனே யோகத்
தொருமுதலே யோகத்தின் ஓங்குந் தூய
போகமே போகத்தின் பொலிவே போகம்
புரிந்தருளும் புண்ணியமே புனித ஞான

யாகமே யாகத்தின் விளைவே யாகத்
திறையேஅவ் விறைபுரியும் இன்பே அன்பர்
மோகமே மோகமெலாம் அழித்து வீறு
மோனமே மோனத்தின் முளைத்த தேவே. (௩௧)

காட்சியே காண்பதுவே ஞேய மேஉள்
கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே ஓங்கும்
மாட்சியே உண்மையறி வின்ப மென்ன
வயங்குகின்ற வாழ்வேமா மவுனக் காணி
ஆட்சியே ஆட்சிசெயும் அரசே சுத்த
அறிவேமெய் அன்பேதெள் ளமுதே நல்ல
சூட்சியே[187] சூட்சியெலாம் கடந்து நின்ற
துரியமே துரியமுடிச் சோதித் தேவே. (௩௨)

மறைமுடிக்குப் பொருத்தமுறு மணியே ஞான
வாரிதியே அன்பர்கடம் மனத்தே நின்ற
குறைமுடிக்கும் குணக்குன்றே குன்ற மோனக்
கோமளமே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே துளவ மாலைப்
பெம்மானே செங்கமலப் பிரானே இந்த
இறைமுடிக்கு மூவர்கட்கு மேலாய் நின்ற
இறையேஇவ் வுருவுமின்றி இருந்த தேவே. (௩௩)

கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழும்
குருவேசண் முகங்கொண்ட கோவே வஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியில் ஊறும்
வானமுதே ஆனந்த மழையே மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்கு ஞான
வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த
செல்வமே எல்லையிலாச் சீர்மைத் தேவே. (௩௪)

அருளருவி வழிந்துவழிந் தொழுக ஓங்கும்
ஆனந்தத் தனிமலையே அமல வேதப்
பொருளளவு நிறைந்தவற்றின் மேலும் ஓங்கிப்
பொலிகின்ற பரம்பொருளே பூரண மாகி

187. எதுகை நயம்பற்றி நின்றது : தொ.வே.

இருளறுசிற் பிரகாச மயமாஞ் சுத்த
ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே
தெருளளவும் உளமுழுதுங் கலந்து கொண்டு
தித்திக்குஞ் செழுந்தேனே தேவ தேவே. (௩௫)

அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை
அறிவையெலாங் கடந்துகடந் தமல யோகர்
உளவையெலாங் கடந்துபதங் கடந்து மேலை
ஒன்றுகடந் திரண்டுகடந் துரைச் சூழ்ந்த
களவையெலாங் கடந்தண்ட பிண்ட மெல்லாம்
கடந்துநிறை வானசுகக் கடலே அன்பர்
வளவையெலாம் இருளகற்றும் ஒளியே மோன
வாழ்வேஎன் உயிர்க்குயிராய் வதியும் தேவே. (௩௬)

வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கள்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
என்புகலந் தூன்கலந்து புலன்க ளோடும்
இந்திரிய மவைகலந்துள் இயங்கு கின்ற
அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்
ஆன்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி
இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி
எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே. (௩௭)

தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்
தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல் வீச
எண்ணமுதப் பளிக்குநிலா முற்றத் தேஇன்
இசைவீசத் தண்பனிநீர் எடுத்து வீசப்
பெண்ணமுதம் அனையவர்விண் ணமுதம் ஊட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக்
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்தும் இன்பங்
கலந்துகொளத் தருங்கருணைக் கடவுள் தேவே. (௩௮)

சுழியாத அருட்கருணைப் பெருக்கே என்றுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதி யேவான்
ஒழியாது கதிர்பரப்புஞ் சுடரே அன்பர்க்
கோவாத இன்பருளும் ஒன்றே விண்ணோர்

விழியாலும் மொழியாலும் மனத்தி னாலும்
விழைதருமெய்த் தவத்தாலும் விளம்பும் எந்த
வழியாலும் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த
மவுனவெளி யூடிருந்து வயங்கும் தேவே. (௩௯)

சொல்லொழியப் பொருளொழியக் கரண மெல்லாம்
சோர்ந்தொழிய உணர்வொழியத் துளங்கா நின்ற
அல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற
ஆனந்த அநுபவமே அதீத வாழ்வே
நெல்லொழியப் பதர்கொள்வார் போல இன்ப
நிறைவொழியக் குறைகொண்மத நெறியோர் நெஞ்சக்
கல்லொழிய மெய்யடியர் இதய மெல்லாங்
கலந்துகலந் தினிக்கின்ற கருணைத் தேவே. (௪௦)

அலைகடலும் புவிவரையும் அனல்கால் நீரும்
அந்தரமும் மற்றைஅகி லாண்டம் யாவும்
நிலைகுலையா வண்ணம்அருள் வெளியி னூடு
நிரைநிரையா நிறுத்திஉயிர் நிகழும் வண்ணம்
தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதை யென்னும்
தனியாணை நடத்திஅருள் தலத்தில் என்றும்
மலைவறவீற் றிருந்தருளும் அரசே முத்தி
வழித்துணையே விழித்துணையுள் மணியாம் தேவே. (௪௧)

வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியில் இன்ப
வளம்பழுத்த பெருவாழ்வே வானோர் தங்கள்
சிரம்பழுத்த பதப்பொருளே அறிவா னந்தச்
சிவம்பழுத்த அநுபவமே சிதாகா சத்தில்
பரம்பழுத்த நடத்தரசே கருணை என்னும்
பழம்பழுத்த வான்தருவே பரம ஞானத்
திரம்பழுத்த யோகியர்தம் யோகத் துள்ளே
தினம்பழுத்துக் கனிந்தஅருட் செல்வத் தேவே. (௪௨)

அண்டமெலாம் கண்ணாகக் கொளினும் காண்டற்
கணுத்துணையுங் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கும் ஒன்றே

கண்டவடி வாய்அகண்ட மயமாய் எங்கும்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேஎம்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டும்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே. (சங)

பேதமுறு மெய்ப்போத வடிவ மாகிப்
பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச்
சீதமிகுந் தருள்கனிந்து கனிந்து மாறுச்
சின்மயமாய் நின்மலமே மணந்து நீங்கா
ஆதரவோ டியன்மவுனச் சுவைமேன் மேற்கொண்
டானந்த ரசமொழுக்கி அன்பால் என்றும்
சேதமுறு தறிஞருளந் தித்தித் தோங்கும்
செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே. (சச)

உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க
உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே
கடலனைய பேரின்பம் துளும்ப நாளும்
கருணைமலர்த் தேன்பொழியும் கடவுட் காவே
விடலரிய எம்போல்வார் இதயந்தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதம்
தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே. (சரு)

கிரியைநெறி அகற்றிமறை முடிவில் நின்று
கேளாமல் கேட்கின்ற கேள்வி யேசொற்
கரியவறை விடுத்துநவ நிலைக்கு மேலே
காணமற் காண்கின்ற காட்சி யேஉள்
அரியநிலை ஒன்றிரண்டின் நடுவே சற்றும்
அறியாமல் அறிகின்ற அறிவே என்றும்
உரியசதா நிலைநின்ற உணர்ச்சி மேலோர்
உன்னமல் உன்னுகின்ற ஒளியாம் தேவே. (சசா)

சொற்போதற் கரும்பெரிய மறைகள் நாடித்
தொடர்ந்துதொடர்ந் தயர்ந்திளைத்துத் துளங்கி ஏங்கிப்
பிற்போத விரைந்தன்பர் உளத்தே சென்ற
பெருங்கருணைப் பெருவாழ்வே பெயரா தென்றும்

தற்போத ஒழிவினிடை நிறைந்து பொங்கித்
 ததும்பிவழிந் தோங்கியெல்லாந் தானே யாகிச்
சிற்போதத் தகம்புறமும் கோத்து நின்ற
 சிவானந்தப் பெருக்கேமெய்ச் செல்வத் தேவே. (சஎ)

பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
 புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
 கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாந்
 தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
 செய்யவல்ல கடவுளே தேவ தேவே. (சஅ)

வான்காணா மறைகாணா மலரோன் காணான்
 மால்காணான் உருத்திரனும் மதித்துக் காணான்
நான்காணா இடத்ததனைக் காண்பேம் என்று
 நல்லோர்கள் நவில்கின்ற நலமே வேட்கை
மான்காணா உளக்கமல மலர்த்தா நின்ற
 வான்சுடரே ஆனந்த மயமே ஈன்ற
ஆன்காணா இளங்கன்றாய் அலமந் தேங்கும்
 அன்பர்தமைக் கலந்துகொளும் அமலத் தேவே. (சகூ)

மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறிக் கேள்வி
 மீதேறித் தெளிந்திச்சை விடுதல் ஏறி
அஞ்ஞான மற்றபடி ஏறி உண்மை
 அறிந்தபடி நிலைஏறி அதுநான் என்னும்
கைஞ்ஞானங் கழன்றேறி மற்ற எல்லாம்
 கடந்தேறி மவுனவியற் கதியில் ஏறி
எஞ்ஞானம் அறத்தெளிந்தோர் கண்டுங் காணேம்
 என்கின்ற அநுபவமே இன்பத் தேவே. (ருo)

பற்றறியா முத்தர்தமை எல்லாம் வாழைப்
 பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
 பெருமானே ஆனந்தப் பேற்றின் வாழ்வே

உற்றறியா தின்னுமின்னும் மறைக ளெல்லாம்
ஓலமிட்டுத் தேடநின்ற ஒன்றே ஒன்றும்
கற்றறியாப் பேதையேன் தனக்கும் இன்பம்
கனிந்தளித்த அருட்கடலே கருணைத் தேவே. (௫க)

மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்
பொய்யுணர்ந்த எமைப்போல்வார் தமக்கும் இன்பம்
புரிந்தருளும் கருணைவெள்ளப் பொற்பே அன்பர்
கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளம்
கரைந்துகரைந் துருகஅவர் கருத்தி னூடே
உய்யுநெறி ஒளிகாட்டி வெளியும் உள்ளும்
ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத் தேவே. (௫உ)

ஒலிவடிவு நிறஞ்சுவைகள் நாற்றம் ஊற்றம்
உறுதொழில்கள் பயன்பலவே றுளவாய் எங்கும்
மலிவகையாய் எவ்வகையும் ஒன்றாய் ஒன்றும்
மாட்டாதாய் எல்லாமும் வல்ல தாகிச்
சலிவகையில் லாதமுதற் பொருளே எல்லாம்
தன்மயமாய் விளங்குகின்ற தனியே ஆண்பெண்
அலிவகையல் லாதவகை கடந்து நின்ற
அருட்சிவமே சிவபோகத் தமைந்த தேவே. (௫௩)

பேராய அண்டங்கள் பலவும் பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்
வாராய பலபொருளும் கடலும் மண்ணும்
மலையுளவும் கடலுளவும் மணலும் வானும்
ஊராத வான்மீனும் அணுவும் மற்றை
உள்ளனவும் அளந்திடலாம் ஓகோ உன்னை
ஆராலும் அளப்பரிதென் றனந்த வேதம்
அறைந்திளைக்க அதிதூர மாகுந் தேவே. (௫௪)

கற்பங்கள் பலகோடி செல்லத் தீய
கனலினடு ஊசியின்மேல் காலை ஊன்றிப்
பொற்பறமெய் உணவின்றி உறக்க மின்றிப்
புலர்ந்தெலும்பு புலப்படஐம் பொறியை ஓம்பி

நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்து யோக
 நீண்முனிவர்க் கொளித்தமரர்க் கொளித்து மேலாம்
சிற்பதத்தில் சின்மயமாய் நிறைந்து ஞானத்
 திருவாளர் உட்கலந்த தேவ தேவே. (௫௫)

மட்டகன்ற நெடுங்காலம் மனத்தால் வாக்கால்
 மதித்திடினும் புலம்பிடினும் வாரா தென்றே
கட்டகன்ற மெய்யறிவோர் கரணம் நீக்கிக்
 கலையகற்றிக் கருவியெலாம் கழற்றி மாயை
விட்டகன்று கருமமல போதம் யாவும்
 விடுத்தொழித்துச் சகசமல வீக்கம் நீக்கிச்
சுட்டகன்று நிற்கஅவர் தம்மை முற்றும்
 சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத் தேவே. (௫௬)

உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற
 உருஅருவ மொன்றும்இவை உடன்மேல் உற்ற
ஒருநான்கும் இவைகடந்த ஒன்று மாய்அவ்
 வொன்றினடு வாய்நடுவுள் ஒன்றாய் நின்றே
இருநான்கும் அமைந்தவரை நான்கி னோடும்
 எண்ணான்கின் மேலிருத்தும் இறையே மாயைக்
கருநான்கும் பொருணான்கும் காட்டு முக்கட்
 கடவுளே கடவுளர்கள் கருதுந் தேவே. (௫௭)

பாங்குளநாம் தெரிதுமெனத் துணிந்து கோடிப்
 பழமறைகள் தனித்தனியே பாடிப்பாடி
ஈங்குளதென் றாங்குளதென் றோடி யோடி
 இளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுந் தோறும்
வாங்குபர வெளிமுழுதும் நீண்டு நீண்டு
 மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே எங்கும்
தேங்குபர மானந்த வெள்ள மேசச்
 சிதானந்த அருட்சிவமே தேவ தேவே. (௫௮)

எழுத்தறிந்து தமையுணர்ந்த யோகர் உள்ளத்
 தியலறிவாம் கருவினில்அன் பெனுமோர் உச்சி
பழுத்தளிந்து மவுனநறுஞ் சுவைமேற் பொங்கிப்
 பதம்பொருந்த அநுபவிக்கும் பழமே மாயைக்

கழுத்தரிந்து கருமமலத் தலையை வீசும்
கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணை காட்டி
விழுத்துணையாய் அமர்ந்தருளும் பொருளே மோன
வெளியினிறை ஆனந்த விளைவாந் தேவே. (ருகூ)

உருத்திரர்நா ரணர்பிரமர் விண்ணோர் வேந்தர்
உறுகருடர் காந்தருவர் இயக்கர் பூதர்
மருத்துவர்யோ கியர்சித்தர் முனிவர் மற்றை
வானவர்கள் முதலோர்தம் மனத்தால் தேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்
களைவினவ மற்றவையுங் காணேம் என்று
வருத்தமுற்றுங் கவரோடு புலம்ப நின்ற
வஞ்சவெளி யேஇன்ப மயமாம் தேவே. (கூ0)

பாயிரமா மறைஅனந்தம் அனந்தம் இன்னும்
பார்த்தளந்து காண்டும்எனப் பல்கால் மேவி
ஆயிரமா யிரமுகங்க ளாலும் பன்னாள்
அளந்தளந்தோர் அணுத்துணையும் அளவு காணா
தேயிரங்கி அழுதுசிவ சிவவென் றேங்கித்
திரும்பஅருட் பரவெளிவாழ் சிவமே ஈன்ற
தாயிரங்கி வளர்ப்பதுபோல் எம்போல் வாரைத்
தண்ணருளால் வளர்த்தென்றுந் தாங்குந் தேவே. (கூக)

அந்தரமிங் கறிவோமற் றதனில் அண்டம்
அடுக்கடுக்காய் அமைந்தஉள வறிவோம் ஆங்கே
உந்துறும்பல் பிண்டநிலை அறிவோஞ் சீவன்
உற்றநிலை அறிவோமற் றனைத்து நாட்டும்
எந்தைநின தருள்விளையாட் டந்தோ அந்தோ
எள்ளளவும் அறிந்திலோம் என்னே என்று
முந்தனந்த மறைகளெலாம் வழுத்த நின்ற
முழுமுதலே அன்பர்குறை முடிக்குந் தேவே (கூஉ)

தோன்றுபர சாக்கிரமும் கண்டோம் அந்தச்
சொப்பனமும் கண்டோம்மேல் சுழுத்தி கண்டோம்
ஆன்றபர துரியநிலை கண்டோம் அப்பால்
அதுகண்டோம் அப்பாலாம் அதுவும் கண்டோம்

என்றஉப சாந்தநிலை கண்டோம் அப்பால்
இருந்தநிலைக் காண்கிலோம் என்னே என்று
சான்றவுப நிடங்களெலாம் வழுத்த நின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே. (௬௩)

பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோம் மேலைப்
பாவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாசம்
எரிக்கும்இயற் பரநாத நிலைக்கண் மெல்ல
எய்தினோம் அப்பாலும் எட்டிப் போனோம்
தெரிக்கரிய வெளிமூன்றும் தெரிந்தோம் எங்கும்
சிவமேநின் சின்மயம்ஓர் சிறிதும் தேறோம்
தரிக்கரிதென் றாகமங்க ளெல்லாம் போற்றத்
தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே. (௬௪)

மணக்குமலர்த் தேனுண்ட வண்டே போல
வளர்பரமா னந்தமுண்டு மகிழ்ந்தோர் எல்லாம்
இணக்கமுறக் கலந்துகலந் ததீத மாதற்
கியற்கைநிலை யாததுதான் எம்மாற் கூறும்
கணக்குவழக் கினைத்தினையும் கடந்த தந்தோ
காண்பரிதிங் கெவர்க்கும்எனக் கலைக ளெல்லாம்
பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்ற
பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே. (௬௫)

பொதுவென்றும் பொதுவில்நடம் புரியா நின்ற
பூரணசிற் சிவமென்றும் போதா னந்த
மதுவென்றும் பிரமமென்றும் பரமமென்றும்
வகுக்கின்றோர் வகுத்திடுக அதுதான் என்றும்
இதுவென்றும் சுட்டவொணா ததனால் சும்மா
இருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின் றோரை
விதுவென்ற[188] தண்ணளியால் கலந்து கொண்டு
விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே. (௬௬)

அருமறையா கமங்கள்முதல் நடுவீ றெல்லாம்
அமைந்தமைந்து மற்றவைக்கும் அப்பா லாகிக்
கருமறைந்த உயிர்கள்தொறுங் கலந்து மேவிக்
கல்வாமல் பன்னெறியும் கடந்து ஞானத்

188. விது என்பது சந்திரன். ஈண்டு இரண்டன் உருபு விரிக்க: தொ.வே.

திருமணிமன் றகத்தின்ப உருவாய் என்றும்
திகழ்கருணை நடம்புரியும் சிவமே மோனப்
பெருமலையே பரமஇன்ப நிலையே முக்கட்
பெருமானே எத்திறத்தும் பெரிய தேவே. (கூஎ)

என்னுயிர்நீ என்னுயிர்க்கோர் உயிரும் நீஎன்
இன்னுயிர்க்குத் துணைவனீ என்னை ஈன்ற
அன்னைநீ என்னுடைய அப்ப னீஎன்
அரும்பொருள்நீ என்னிதயத் தன்பு நீஎன்
நன்னெறிநீ எனக்குரிய உறவு நீஎன்
நற்குருநீ எனைக்கலந்த நட்பு நீஎன்
தன்னுடைய வாழ்வுநீ என்னைக் காக்குந்
தலைவன்நீ கண்மூன்று தழைத்த தேவே. (கூஅ)

தானாகித் தானல்ல தொன்று மில்லாத்[189]
தன்மையனாய் எவ்வெவைக்குந் தலைவ னாகி
வானாகி வளியனலாய் நீரு மாகி
மலர்தலைய உலகாகி மற்று மாகித்
தேனாகித் தேனினறுஞ் சுவைய தாகித்
தீஞ்சுவையின் பயனாகித் தேடு கின்ற
நானாகி என்னிறையாய் நின்றோய் நின்னை
நாயடியேன் எவ்வாறு நவிற்று மாறே. (கூகூ)

ஆனேறும் பெருமானே அரசே என்றன்[190]
ஆருயிருக் கொருதுணையே அமுதே கொன்றைத்
தேனேறு மலர்ச்சடைஎஞ் சிவனே தில்லைச்
செழுஞ்சுடரே ஆனந்தத் தெய்வ மேஎன்

---

189. 69-ஆம் பாவில் நம் பெருமானார் மேற்போந்த 68 பாக்களில் இறைவனுடைய அளப்பருந்தன்மையை ஒருவாறு உரைத்து உரைத்து வியந்து வியந்து ஆனந்தமயமாய் இருப்பவர்கள் தாம் உரைக்குமாறு எவ்வாற்றாலும் எஞ்ஞான்றும் நிறைவுறுமா றில்லை என்று கருதியும் இன்புறுவது கண்டு மகிழ்க.

190. 70 முதல் 100 வரையிலுள்ள பாக்களில் நம் அடிகளார், மெய்யடியார்களுடைய ஆநந்தாநுபவத்தைச் சுட்டித் தனிப்பெருங் கருணையாளனை இறைவன் அந்தப் பேரின்பத்தைத் தமக்கும் உதவி அருளும்படி உடலும் உயிரும் உள்ளமும் உணர்வும் நெகிழ்ந்து நெகிழ்ந்து கனிந்து கனிந்து இன்தமிழ் மொழிகளில் இரங்கி இரங்கி முறையிட்டுக் கொள்ளுவது காண்க.

ஊனேறும் உயிர்க்குள்நிறை ஒளியே எல்லாம்
உடையானே நின்னடிச்சீர் உன்னி அன்பர்
வானேறு கின்றார்நான் ஒருவன் பாவி
மண்ணேறி மயக்கேறி வருந்து கின்றேனே.[191] (எ0)

செஞ்சடைஎம் பெருமானே சிறுமான் ஏற்ற[192]
செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து
மஞ்சடையும் மதிற்றில்லை மணியே ஒற்றி
வளர்மருந்தே என்னுடைய வாழ்வே வேட்கை
அஞ்சடைய வஞ்சியர்மால் அடைய வஞ்சம்
அடையநெடுந் துயரடைய அகன்ற பாவி
நெஞ்சடைய நினைதியோ நினைதி யேல்மெய்ந்
நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே. (எக)

அன்னையினும் பெரிதினிய கருணை ஊட்டும்[193]
ஆரமுதே என்னுறவே அரசே இந்த
மன்னுலகில் அடியேனை என்னே துன்ப
வலையிலகப் படஇயற்றி மறைந்தாய் அந்தோ
பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்தல் ஆற்றேன்
என்னைஉளங் கொள்ளுதியோ கொள்கி லாயோ
என்செய்வேன் என்செய்வேன் என்செய் வேனே. (எஉ)

---

191. 70-ஆம் பாவொடு பின்வரும் திருவாசகத் தெள்ளமுதை ஒத்துணர்க:
"அறவே பெற்றார் நின்அன்பர் அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே."

192. 71-ஆம் பாவொடு பின்வரும் திருவாசகத் தெய்வ வியன்மொழியை நினைவுகூர்ந்து உணர்க:
"புகவே தகேன்உனக்(கு) அன்பருள் யான்என்பொல் லாமணியே
தகவே எனைஉனக்(கு) ஆட்கொண்ட தன்மைஎப் புன்மையரை
மிகவே உயர்த்திவிண் ணோரைப்ப ணித்திஅண் ணாஅமுதே
நகவே தகும்எம்பி ரான்என்னை நீசெய்த நாடகமே."

193. 72-ஆம் பாவொடு கீழ்க்கண்ட திருவாசகத் தீந்தமிழை ஒத்து நோக்குக:
"தாயாய் முலையைத் தருவானே தாரா தொழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன் தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய் நான்றான் வேண்டாவோ."

படித்தேன்பொய் உலகியனூல் எந்தாய் நீயே[194]
படிப்பித்தாய் அன்றியும்அப் படிப்பில் இச்சை
ஒடித்தேன்நான் ஒடித்தேனோ ஒடிப்பித் தாய்பின்
உன்னடியே துணையெனநான் உறுதி யாகப்
பிடித்தேன்மற் றதுவும்நீ பிடிப்பித் தாய்இப்
பேதையேன் நின்னருளைப் பெற்றோர் போல
நடித்தேன்எம் பெருமானீ தொன்றும் நானே
நடித்தேனோ அல்லதுநீ நடிப்பித் தாயோ. (எந)

மத்தேறி அலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை[195]
மயலேறி விருப்பேறி மதத்தி னோடு
பித்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ
பேயேறி நலிகின்ற பேதை யானேன்
வித்தேறி விளைவேறி மகிழ்கின் றோர்போல்
மேலேறி அன்பரெலாம் விளங்கு கின்றார்
ஒத்தேறி உயிர்க்குயிராய் நிறைந்த எங்கள்
உடையானே இதுதகுமோ உணர்கி லேனே. (எச)

மதியணிந்த முடிக்கனியே மணியே எல்லாம்[196]
வல்லஅருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக்
கதியணிந்தார் அன்பரெலாம் அடியேன் ஒன்றும்
கண்டறியேன் கருமத்தால் கலங்கி அந்தோ

---

194. 73-ஆம் பாவொடு அடியிற் குறித்த மணிவாசகப் பெருமறையினை ஒத்துணர்க:
"வேண்டத் தக்க(து) அறிவோய்நீ வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்(கு) அரியோய்நீ வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா(து) அருள்செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரி(சு)ஒன்(று) உண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே."

195. 74-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசகத் தேனை மாந்துக:
"கூடிக் கூடி உன்அடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழியற்றேன் வற்றன் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு கலந்(து)உள் ளுருகிப் பெருகி நெக்(கு)
ஆடி ஆடி ஆனந்தம் அதுவே ஆக அருள் கனிந்தே."

196. 75-ம் பாவோடு பின்வரும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரப் பெரு மறை பார்த்து மகிழ்க:
"உண்டியில் பட்டினி நோயில் உறக்கத்தில் உம்மை ஐவர்
கொண்டியில் பட்டு மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே."

பொதியணிந்து திரிந்துழலும் ஏறு போலப்
பொய்யுலகில் பொய்சுமந்து புலம்பா நின்றேன்
துதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ
இன்றெனிலிப் பாவியேன் சொல்வ தென்னே. (எரு)

என்னரசே என்னுயிரே என்னை ஈன்ற[197]
என்தாயே என்குருவே எளியேன் இங்கே
தன்னரசே செலுத்திஎங்கும் உழலா நின்ற
சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி அந்தோ
மின்னரசே பெண்ணமுதே என்று மாதர்
வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே எண்ணி
கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே
குப்புறுகின் றேன்மயலில் கொடிய னேனே. (எசு)

அல்விலங்கு செழுஞ்சுடராய் அடியார் உள்ளத்[198]
தமர்ந்தருளும் சிவகுருவே அடியேன் இங்கே
இல்விலங்கு மடந்தையென்றே எந்தாய் அந்த
இருப்புவிலங் கினைஒழித்தும் என்னே பின்னும்
மல்விலங்கு பரத்தையர்தம் ஆசை என்னும்
வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்றேன்
புல்விலங்கும் இதுசெய்யா ஓகோ இந்தப்
புலைநாயேன் பிழைபொறுக்கில் புதிதே அன்றே. (எஎ)

வன்கொடுமை மலநீக்கி அடியார் தம்மை[199]
வாழ்விக்குங் குருவேநின் மலர்த்தாள் எண்ண
முன்கொடுசென் றிடுமடியேன் தன்னை இந்த
மூடமனம் இவ்வுலக முயற்சி நாடிப்

---

197. 76-ஆம் பாவொடு பின்வரும் திருவாசகத்தை நினைவுகூர்க:
"பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்."

198. 77-ஆம் பாவொடு பின்வரும் வன்தொண்டப் பெருமான் தேவாரத் திருமறை பார்க்க:
"மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயும் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே."

199. 78-ஆம் பாவொடு பின்வரும் திருவாசகத் தெய்வப்பெருமித மொழியை ஒத்துணர்க:
"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருஅருளே சேரும் வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவா(று) ஆர்பெறுவார் அச்சோவே."

பின்கொடுசென் றலைத்திழுக்கு[200] தந்தோ நாயேன்
பேய்பிடித்த பித்தனைப்போல் பிதற்றா நின்றேன்
என்கொடுமை என்பாவம் எந்தாய் எந்தாய்
என்னுரைப்பேன் எங்குறுவேன் என்செய் வேனே. (எஅ)

உய்குவித்து[201] மெய்யடியார் தம்மை எல்லாம்
உண்மைநிலை பெறஅருளும் உடையாய் இங்கே
மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கில் ஆழ்ந்து
வருந்துகின்றேன் அல்லால்உன் மலர்த்தாள் எண்ணிக்
கைகுவித்துக் கண்களில்நீர் பொழிந்து நானோர்
கணமேனும் கருதிநினைக் கலந்த துண்டோ
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கி லாயோ
திருவுளத்தை அறியேன்என் செய்கு வேனே. (எகூ)

அருள்வெளியில் ஆனந்த வடிவி னால்நின்
றாடுகின்ற பெருவாழ்வே அரசே இந்த
மருள்வலையில் அகப்பட்ட மனத்தால் அந்தோ
மதிகலங்கி மெய்ந்நிலைக்கோர் வழிகா ணாதே
இருள்நெறியில் கோலிழந்த குருட்டு மன்போல்
எண்ணாதெல் லாம்எண்ணி ஏங்கி ஏங்கி
உருள்சகடக் கால்போலுஞ் சுழலா நின்றேன்
உய்யும்வகை அறியேனிவ் வொதிய னேனே. (அ0)

கற்றவனோ தனக்கும்உண வளிக்கும் உன்றன்[202]
கருணைநிலை தனைஅறியேன் கடையேன் இங்கே
எற்றவனோ எறும்பேபோல் திரிந்து நாளும்
இளைத்துநின தருள்காணா தெந்தாய் அந்தோ

200. இழுக்குது என்பது மரூஉ வழக்கு. அல்லதூஉம், ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய 'கடிசொல்லில்லை' என்பதனால் கோடலுமாம். இங்ஙனமாதல், "இனியே தெமக்குனருள் வருமோ எனக்கருதி ஏங்குதே நெஞ்சம்" எனத் தாயுமானார் முதலிய பிற சான்றோர் செய்யுட்களாலும் உணர்க என்க : தொ.வே.

201. உய்குவித்து என்பதனுள் "கு" சாரியை : தொ.வே.

202. 81-ஆம் பாவொடு பின்வரும் வன்தொண்டப் பெருந்தகையாருடைய தோழமைத் திருவிளையாடல் குறிக்கும் தேவாரம் காண்க :
"குழைத்துவந் தோடிக் கூடுதி நெஞ்சே
குற்றேவல் நாள்தொறும் செய்வான்
இழைத்தநாள் கடவார் அன்பிலரேனும்
எம்பெரு மான்என்றெப் போதும்
அழைத்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத்
தடிகள்தா மியாதுசொன் னாலும்
பிழைத்தது பொறுத்தொன் றீகில ராகில்
இவரலா தில்லையோ பிரானார்."

பெற்றவளைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின் றேன்செய்யும் பிழையை நோக்கி
இற்றவளைக்[203] கேள்விடல்போல் விடுதி யேல்யான்
என்செய்வேன் எங்குறுவேன் என்சொல் வேனே. (அக)

அடிமைசெயப் புகுந்திடும்எம் போல்வார் குற்றம்[204]
ஆயிரமும் பொறுத்தருளும் அரசே நாயேன்
கொடுமைசெய் மனத்தாலே வருந்தி அந்தோ
குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்
கடுமைசெயப் பிறர்துணிந்தால் அடிமை தன்னைக்
கண்டிருத்தல் அழகன்றே கருணைக் கெந்தாய்
செடிமையுளப் பாதகனேன் என்செய் வேன்நின்
திருவுளத்தை அறிந்திலேன் திகைக்கின் றேனே. (அஉ)

கூம்பாத மெய்ந்நெறியோர் உளத்தே என்றும்[205]
குறையாத இன்பளிக்கும் குருவே ஆசைத்
தாம்பாலே யாப்புண்டு வருந்தி நாயேன்
தையலார் மையலெனும் சலதி ஆழ்ந்து
ஓம்பாமல் உவர்நீருண் டுலங்கு கின்றேன்
உன்னடியர் அக்கரைமேல் உவந்து நின்றே
தீம்பாலுஞ் சருக்கரையுந் தேனும் நெய்யும்
தேக்குகின்றார் இதுதகுமோ தேவ தேவே. (அங)

---

203. இற்றவள் என்பது மனையறங் காப்போள் : தொ.வே.

204. 82-ஆம் பாவொடு பின்வரும் வன்தொண்டப் பெருமானார் தேவாரத் திருமறை காண்க :

" மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன்
செற்றமீ தோடும் திரிபுரம் எரித்த
திருமுல்லை வாயிலா யடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே."

205. 83-ஆம் பாவொடு 191, 195-ஆம் அடிக்குறிப்புக்களைப் பார்க்க. அவை இதற்கும் பொருந்தும்.

வெள்ளமணி சடைக்கனியே மூவ ராகி[206]
விரிந்தருளும் ஒருதனியே விமல னேனைக்
கள்ளமனக் குரங்காட்டும் ஆட்ட மெல்லாம்
கண்டிருந்தும் இரங்கிலையேல் கவலை யாலே
உள்ளமெலிந் துழல்கின்ற சிறியேன் பின்னர்
உய்யும்வகை எவ்வகையீ துன்னுந் தோறும்
பொள்ளெனமெய் வியர்க்கஉளம் பதைக்கச் சோபம்
பொங்கிவழி கின்றதுநான் பொறுக்கி லேனே. (௮௪)

எனையறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட[207]
என்னரசே என்குருவே இறையே இன்று
மனையறியாப் பிழைகருது மகிழ்நன் போல
மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே
தனையறியா முகத்தவர்போல் இருந்தாய் எந்தாய்
தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய்
அனையறியாச் சிறுகுழவி யாகி இங்கே
அடிநாயேன் அரற்றுகின்றேன் அந்தோ அந்தோ. (௮௫)

---

206. 84-ஆம் பாவொடு பின்வரும் தாயுமானார் திருப்பாடலினை ஒத்துணர்க:

"வாயில்ஓர் ஐந்தில் புலன்எனும் வேடர்
வந்தெனை ஈர்த்துவெங் காமத்
தீயிலே வெதுப்பி உயிரொடுந் தின்னச்
சிந்தைநைந் துருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன்
தாயினும் கருணையாம் மன்றுள்
நாயக மாகி ஒளிவிடும் மணியே
நாதனே ஞானவா ரிதியே."

207. 85-ஆம் பாவொடு பின்வரும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரப் பேரின்ப மொழியினை ஒத்துணர்க :

"சொன்மாலை பயில்கின்ற குயில்இனங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முடிவிளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலம்உண்(டு) இகழ்வானே."

தீவினைநல் வினையெனும்வன் கயிற்றால் இந்தச்[208]
சீவர்களை ஆட்டுகின்ற தேவே நாயேன்
ஏவினைநேர் கண்மடவார் மையற் பேயால்
இடருழந்தும் சலிப்பின்றி என்னே இன்னும்
நாவினைஎன் பால்வருந்திக் கரண்டு கின்ற
நாய்க்கும்நகை தோன்றநின்று நயக்கின் றேனான்
ஆவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லும்
அறிவிலிக்கும் அறிவிலியேன் ஆன ஆறே. (அசு)

எம்பெருமான் நின்விளையாட் டென்சொல் கேன்நான்
ஏதுமறி யாச்சிறியேன் எனைத்தான் இங்கே
செம்புனலால் குழைத்தபுலால் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டில் இருட்டறையில் சிறைசெய் தந்தோ
கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த அந்தக்
கரணமுதல் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி அரட்டர் எல்லாம்
மடிபிடித்து வருத்தவென்றோ வளர்த்தாய் எந்தாய். (அஎ)

அம்பரத்தே ஆனந்த வடிவால் என்றும்
ஆடுகின்ற மாமணியே அரசே நாயேன்
இம்பரத்தம் எனும்உலக நடையில் அந்தோ
இடருழந்தேன் பன்னெறியில் எனைஇழுத்தே
பம்பரத்தின் ஆடியலைப் படுத்தும் இந்தப்
பாவிமனம் எனக்குவயப் படுவ தில்லை
கொம்பரற்ற இளங்கொடிபோல் தளர்ந்தேன் என்னைக்
குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ. (அஅ)

---

208. 86-ஆம் பாவொடு பின்வரும் தேவாரத் திருவாசக மெய்ம்மொழியைப் பார்க்க:

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்என(து)என்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே."

" ஆரூரில் அம்மானை ஆர்வச் செற்றக்குரோதம்
தட்டானைச் சாராதே தவம்இருக்க அவம்செய்து தருக்கினேனே."

கண்ணுடைய நுதற்கரும்பே மன்றில் ஆடும்[209]
காரணகா ரியங்கடந்த கடவு ளேநின்
தண்ணுடைய மலரடிக்கோர் சிறிதும் அன்பு
சார்ந்தேனே செம்மரம்போல் தணிந்த நெஞ்சேன்
பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேன்என்
பேதைமையை என்புகல்வேன் பேய னேனைப்
புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளென் கேனே
புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலைய னேனே. (அகூ)

பொன்னுடையார் இடம்புகவோ அவர்கட் கேற்கப்
பொய்ம்மொழிகள் புகன்றிடவோ பொதிபோல் இந்தக்
கொன்னுடையா உடல்பருக்கப் பசிக்குச் சோறு
கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச
மின்னிடையார் முடைச்சிறுநீர்க் குழிக்கண் அந்தோ
வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்க வோதான்
என்னுடையாய் என்னுடையாய் என்னை இங்கே
எடுத்துவளர்த் தனைஅறியேன் என்சொல் வேனே. (கூ0)

வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த[210]
மலக்கூடென் றறிஞரெலாம் வருந்தக் கேட்டும்
அருகணைத்துக் கொளப்பெண்பேய் எங்கே மேட்டுக்
கடைத்திடவெண் சோறெங்கே ஆடை யெங்கே

---

209. 89-ஆம் பாவொடு
"தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனை"
என்பது போன்ற திருவாசக முறையீடுகளையும்,
"செறிவிலேன் சிந்தையுள்ளே சிவனடி தெரிய மாட்டேன்"
என்பது போன்ற தேவார முறையீடுகளையும் ஒத்துணர்க.

210. 91-ஆம் பாவொடு
"நேற்றுளார் இன்றுமாளா நின்றனர் அதனைக் கண்டும்
போற்றிலேன் நின்னை அந்தோ போக்கினேன் வீணேகாலம்"
என்னும் தாயுமானப் பெருமானர் திருப்பாடலையும்,
"மகாக் குழையாய் மணக் கோலமதே
பிணக் கோலமதாம் பிறவி இதுதான்,
அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய்
அடியேன் உய்யப் போவதோர் சூழல்சொல்லே"
என்னும் வன்தொண்டப் பெருந்தகையார் தேவாரப் பெருமறை யினையும் பார்க்க.

இருகணுக்கு வியப்பெங்கே வசதி யான
இடமெங்கே என்றுதிரிந் திளைத்தேன் அல்லால்
ஒருகணத்தும் உனைநினைந்த துண்டோ என்னை
உடையானே எவ்வகைநான் உய்யும் ஆறே. (௯௧)

பொன்மலையோ சிறிதெனப்பே ராசை பொங்கிப்[211]
புவிநடையில் பற்பலகால் போந்து போந்து
நென்மலையோ நிதிமலையோ என்று தேடி
நிலைகுலைந்த தன்றிஉனை நினைந்து நேடி
மன்மலையோ மாமணியோ மருந்தோ என்று
வழுத்தியதே இல்லைஇந்த வஞ்ச நெஞ்சம்
கன்மலையோ இரும்போசெம் மரமோ பாறைக்
கருங்கல்லோ பராய்முருட்டுக் கட்டை யேயோ. (௯௨)

தம்மைமறந் தருளமுதம் உண்டு தேக்கும்[212]
தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து நாயேன்
வெம்மையெலாம் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டில் என்றும்
செம்மையெலாம் தரும்மௌன அணைமேற் கொண்டு
செறிஇரவு பகலொன்றும் தெரியா வண்ணம்
இம்மையிலே எம்மையினும் காணாச் சுத்த
இன்பநிலை அடைவேனோ ஏழை யேனே. (௯௩)

அடியனேன் பிழையனைத்தும் பொறுத்தாட் கொண்ட[213]
அருட்கடலே மன்றோங்கும் அரசே இந்நாள்
கொடியனேன் செய்பிழையைத் திருவுள் ளத்தே
கொள்ளுதியோ கொண்டுகுலங் குறிப்ப துண்டோ

---

211. 92-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசக மறைமொழியினைப் பார்க்க:
"முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை இரும்புகன் மனம்செவி இன்னதென்(று)
அறியேனே."

212. 93-ஆம் பாவொடு
"சித்தந் தெளிந்தோர் தெளிவில் தெளிவான
சுத்த சுகக்கடலுள் தோயுநாள் எந்நாளோ"
என்பது போன்ற நம் தாயுமானப் பெருமானார் அமுதச் சொற்களை ஒத்துணர்க.

213. 94-ஆம் பாவொடு 206, 207-ஆம் அடிக்குறிப்புக்களைப் பார்க்க. அவை இதற்கும் பொருந்தும்.

நெடியனே முதற்கடவுட் சமுகத் தோர்தம்
    நெடும்பிழைகள் ஆயிரமும் பொறுத்து மாயை
ஒடியநோர் நின்றபெருங் கருணை வள்ளல்
    எனமறைகள் ஓதுவதிங் குனைத்தா னன்றே. (கூச)

கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதில்[214]
    கருத்தறியாச் சிறுவனைஓர் கடுங்கா னத்தே
உண்மயக்கம் கொளவிடுத்தே ஒருவன் பின்போம்
    ஒருதாய்போல் மாயைஇருள் ஓங்கும் போதின்
மண்மயக்கம் பெறும்விடயக் காட்டில் அந்தோ
    மதியிலேன் மாழாந்து மயங்க நீதான்
வண்மையுற்ற நியதியின்பின் என்னை விட்டே
    மறைந்தனையே பரமேசின் வண்மை என்னே. (கூரு)

நற்றாயும் பிழைகுறிக்கக் கண்டோம் இந்த[215]
    நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே
பற்றாயும் அவர்தமைநாம் பற்றோம் பற்றில்
    பற்றாத பற்றுடையார் பற்றி உள்ளே

---

214. 95-ஆம் பாவொடு பின்வருவது போன்ற மணிவாசகப் பெருமறையினைப் பார்க்க :

"கெடுவேன் கெடுமா கெடுகின்றேன் கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாம்நான் பட்டால் பின்னைப் பயன்என்னே
கொடுமா நரகத்(து) அழுந்தாமே காத்தாட் கொள்ளும் குருமணியே
நடுவாய் நில்லா(து) ஒழிந்தக்கால் நன்றோ எங்கள் நாயகமே."

215. 96-ஆம் பாவொடு

"பிழைஉளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம்என் கண் மறைப்பித்தாய்"
என்பது போன்ற நம் வன்தொண்டப் பெருமானுடைய தோழமைச் சொற்களையும்,

"உய்யும் படிக்குன் திருக்கருணை ஒன்றைக் கொடுத்தால் உடையாய்பாழ்ம்
பொய்யும் அவாவும் அழுக்காறும் புடைபட் டோடும் நன்னெறியாம்
மெய்யும் அறிவும் பெறும்பேறும் விளங்கும் எனக்குன் அடியார்பால்
செய்யும் பணியும் கைகூடும் சிந்தைத் துயரும் தீர்ந்திடுமே"
என்பது போன்ற நம் தாயுமானப் பெருந்தகையாரின் திருப்பாடலையும் ஒத்துணர்க.

உற்றாயுஞ் சிவபெருமான் கருணை ஒன்றே
    உறுபிழைகள் எத்துணையும் பொறுப்ப தென்றுன்
பொற்றாளை விரும்பியது மன்று ளாடும்
    பொருளேஎன் பிழையனைத்தும் பொறுக்க வன்றே (கக)

எண்ணியநம் எண்ணமெலாம் முடிப்பான் மன்றுள்[216]
    எம்பெருமான் என்றுமகிழ்ந் திறுமாந் திங்கே
நண்ணியமற் றையர்தம்மை உறாமை பேசி
    நன்குமதி யாதிருந்த நாயி னேனைத்
தண்ணியநல் அருட்கடலே மன்றில் இன்பத்
    தாண்டவஞ்செய் கின்றபெருந் தகையே எங்கள்
புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி யாயில்
    பொய்யனேன் எங்குற்றென் புரிவேன் அந்தோ. (கஎ)

அன்பர்திரு உளங்கோயி லாகக் கொண்டே[217]
    அற்புதச்சிற் சபையோங்கும் அரசே இங்கு
வன்பரிடைச் சிறியேனை மயங்க வைத்து
    மறைந்தனையே ஆனந்த வடிவோய் நின்னைத்
துன்பவடி வுடைப்பிறரில் பிரித்து மேலோர்
    தூரியவடி வினனென்று சொன்ன வெல்லாம்
இன்பவடி வடைந்தன்றே எந்தாய் அந்தோ
    என்னளவென் சொல்கேனிவ் வேழை யேனே. (கஅ)

புற்றோங்கும் அரவமெல்லாம் பணியாக் கொண்டு[218]
    பொன்மேனி தனில்அணிந்த பொருளே மாயை
உற்றோங்கு வஞ்சமனக் கள்வ னேனை
    உளங்கொண்டு பணிகொள்வ தனக்கே ஒக்கும்

---

216. 97-ஆம் பாவொடு
"இறுமாந் திருப்பன்கொலோ—ஈசன் பல்கணத்(து) எண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்(கு) இறுமாந் திருப்பன்
கொலோ"
என்னும் தேவாரத் தெய்வமறை போன்றவற்றை ஒத்துப் பார்க்க.

217. 98-ஆம் பாவொடு
"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்(பு) ஆலயம்"
என்னும் திருமந்திரம் போன்றவற்றை ஒத்துணர்க.

218. 99-ஆம் பாவொடு
"சிவனெம் பிரான்என்னை ஆண்டுகொண் டான்என் சிறுமைகண்டும்"
என்னும் திருவாசக மெய்ம்மொழி போன்றவற்றை ஒத்துணர்க.

மற்றோங்கும் அவரெல்லாம் பெருமை வேண்டும்
வன்மனத்தர் எனைவேண்டார் வள்ள லேநான்
கற்றோங்கும் அறிவறியேன் பலவாச் சொல்லும்
கருத்தறியேன் எனக்கருளக் கருது வாயே. (௯௯)

அருளுடைய பரம்பொருளே மன்றி லாடும்[219]
ஆனந்தப் பெருவாழ்வே அன்பு ளோர்தம்
தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட
சிவமேமெய் அறிவுருவாம் தெய்வ மேஇம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்
இருளுடைய பவக்கடல்விட் டேறேன் என்னை
ஏற்றுவதற் கெண்ணுகஎன் இன்பத் தேவே. (௧00)

திருச்சிற்றம்பலம்

௫. மஹா தேவமாலை[220]

முற்றிற்று.

---

219. 100-ஆம் பாவொடு பின்வரும் தெய்வத் திருவாசகத் தேன்மொழியை ஒத்துணர்க:

“ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்ம்மை யேன்என் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்பர் அன்புஎ னக்கும் ஆக வேண்டுமே.”

220. 154-ஆம் அடிக்குறிப்பில் நெஞ்சறிவுறுத்தல் சார்பாக மேற்கோள் முதலியவைபற்றி உரைத்திருப்பது இந்நூலுக்கும் பொருந்தும். மேலும், இந்நூலில் எடுத்துக்காட்டியிருக்கும் மேற்கோள்கள், அந்தந்த அருட்பாவில் நிறைந்துள்ள பல கருத்துக்களில் ஓரோர் பெருங்கருத்தினைச் சார்ந்து எழுந்திருக்கின்றன என்பதும் புலனாம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவகணபதி துணை

சா. திருஅருண் முறையீடு[221]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

துனியால் உளந்தளர்ந் தந்தோ துரும்பில் சுழலுகின்றேன்[222]
இனியா யினும்இரங் காதோநின் சித்தம்எந் தாய்இதென்ன
அனியாய மோஎன் அளவின்நின் பால்தண் அருளிலையோ
சனியாம்என் வல்வினைப் போதனை யோஎன்கொல் சாற்றுவதே. (க)

---

221. திருஅருண் முறையீடு என்னும் இவ்வருள் நூலில், நம் பெருமான் இராமலிங்க அடிகளார், தம் குற்றம் குறைகளை எடுத்தெடுத்துப் பகுத்துப் பகுத்து விரித்து விரித்து, தம்மை நொந்து வருந்தியும், உலகியலானது ஒருவனை மாயை வயப்படுத்தி, உயிர்களுக்குள் வேற்றுமையையும் வெறுப்பையும் கற்பித்து, நெஞ்சைக் கல்லாக்கி, கொலைபுலைக்கு ஆளாக்கி, இழிவுபடுத்தி, அழித்துவிடுகிற தென்று இரங்கியும், வழி அடியார்களுடைய என்புருகும் பேரன்பையும் அளப்பரும் திறலையும் அகம்நெகிழ்ந்து பெருமிதம் கொண்டு பேசியும், தமக்கு இறைவனைத் தவிர வேறு பற்றுக்கோடு இல்லை என்பதைப் பல வழியில் மெய்ப்பித்தும், மெய்யடியார்களுடைய குற்றங்குறைகளைப் பொருட்படுத்தாமல் அவர்களை ஆட்கொண்டருளும் இறைவனுடைய அருட்பூரணத்தை வியந்து வியந்து போற்றியும், தம்மையும் அங்ஙனம் ஆட்கொண்டருளுமாறு, உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகிக் கல்லும் கனிந்துருகுமாறு, இறைவன் திருத்தாளில் மீண்டும் மீண்டும் முறையிட்டுக் கொள்வதைக் காணலாம்.

எல்லாப் பொருள்களையும் எல்லா உயிர்களையும் ஊடுருவி இயங்கும் இறைவனிடம் இடையறாத பத்திமை பூண்டவரும், மெய்யறிவாற்றல் நிரம்பியவரும், பெண்மக்களை எல்லாம் தாய் எனக் கருதி வழிபட்டவரும், பச்சிளங் குழந்தைகளை ஒத்த பால்போன்ற உள்ளம் உடையவரும், நாட்டில் மறம் தொலைந்து அறம் தழைத்தோங்குமாறு ஒல்லும் வகை எல்லாம் உழைத்தவரும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரும், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரும், பழ அடியார்களுடைய தன்மையை ஒத்துத் தூய்மையும் கருணையும் நிறைந்தவரும், திரு அருட்பாவைத் தீங்கனி எனத் தேனெனத் தத்துவங்களெல்லாம் குழைய நுகர்ந்து நுகர்ந்து ஆன்ம அமைதி அடைந்தவரும், இப்பதிப்பாசிரியரின் அகஇன ஆன்ம நேயப் பெருந்தகையாரும் ஆன திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், இவ்வருள் நூலை இடைவிடாது ஓதுமாறு தம்மைச் சார்ந்த அன்பர்களுக்குப் பல்கால் எடுத்தோதுவதை இப்பதிப்பாசிரியர் கண்ணாரக் கண்டும் செவியாரக் கேட்டும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்ததுண்டு.

என்னை முறையுண் டெனில்கேள்வி உண்டென்பர் என்னளவில்
இன்னே சிறிதும் இலையேநின் பால்இதற் கென்செய்குவேன்
மன்னேமுக் கண்ணுடை மாமணி யேஇடை வைப்பரிதாம்
பொன்னேமின் னேர்சடைத் தன்னே ரிலாப்பரி பூரணனே. (உ)

---

221 (தொடர்ச்சி). இந்நூல், நம்பெருமான் இராமலிங்க அடிகளார் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூல ஏட்டினைக் கொண்டு, அதில் உள்ளவாறு இங்கு அச்சிட்டிருக்கிறது. இந்நூலுக்கு வேறு ஓர் ஏட்டுப்பிரதியும் கிடைத்திருக்கிறது.

222. நம் பெருமானர், இறைவனை, முதற்கண், பால்மணம் அருத இளங் குழவியே போன்று, "எந்தாய்" என்றழைத்து, "அழுமதுவே அன்றி மற்றென் செய்கேன் பொன்னம்பலத் தரைசே" என்ற மணிவாசகம் ஒப்ப, அலறித் தேம்பி, உடம்பெல்லாங் கண்ணாய் ஊற்றெடுத் தோட, உளையா அன்பு என்புருக ஓலமிட்டு, அலைகடல் திரையின் ஆர்த் தார்த்து ஓங்க, இறைவன் திருத்தாளில் மீண்டும் மீண்டும் இடை யருது முறையோ! முறையோ!! எனக் கதறிப் பெருவாரியாக வாய் விட்டழுதல் இம்முதற் பாவொடு பின்வரும் பாக்களையும் உணரும் அன்பராவார் எல்லார் அகப்புறக் கண்களுக்கும் புலனும்.
இம்முறையீடுகளொடு,

"துஞ்சும் போதும் துற்றும் போதும் சொல்லுவன் உன்திறமே
தஞ்ச மில்லாத் தேவர் வந்துன் தாளிணைக் கீழ்ப்பணிய
நஞ்சை உண்டாய்க்(கு) என்செய் கேனோ நாளும்நி னைந்தடியேன்
வஞ்சம் உண்டென்(று) அஞ்சு கின்றேன் வலிவலம் மேயவனே"

"செடியேன் தீவினையில் தடுமாறக் கண்டாலும்
அடியான் ஆவஎன(்று) ஒழிதல் தகவாமே"

என்பன போன்ற நம் திருஞானசம்பந்த மூர்த்திகள், வன்தொண்டப் பெருந்தகையார் முறையீடுகளையும்,

"உள்ளத் தையும்இங் கெனையும்நின் கையினில் ஒப்பு வித்தும்
கள்ளத்தைச் செய்யும் வினையால் வருந்தக் கணக்கும் உண்டோ"

"யாதேனும் அறியாவெறும்
துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ"

"பொல்லாத சேயெனில் தாய்தள்ளல் நீதமோ
புகலிடம் பிறிது முண்டோ"

"ஆனாலும் என்கொடுமை அநியாயம் அநியாயம்
ஆர்பால் எடுத்து மொழிவேன்"

என்பன போன்ற நம் தாயுமானப் பெருமானரின் கல்லுங் கசிந் துருகும் முறையீடுகளையும் ஒப்பு நோக்கி உணர்க.

தண்டாத சஞ்சலங் கொண்டேன் நிலையைஇத் தாரணியில்
கண்டார் இரங்குவர் கேட்டார் உருகுவர் கங்கைதிங்கள்
துண்டார் மலர்ச்சடை எந்தாய் இரங்கிலை தூய்மையிலா
அண்டார் பிழையும் பொறுப்போய் இதுநின் அருட்கழகே. (௩)

பொய்யாம் உலக நடைநின்று சஞ்சலம் பொங்கமுக்கண்
ஐயாஎன் உள்ளம் அழலார் மெழுகொத் தழிகின்றதால்
மையார் அரவ மதிச்சடை யாய்செம் பவளநிறச்
செய்யாய் எனக்கருள் செய்யாய் எனில்என்ன செய்குவனே. (௪)

விடமிலை யோர்மணி கண்டாநின் சைவ விரதஞ்செய்யத்
திடமிலை யேஉட் செறிவிலை யேஎன்றன் சித்தத்துநின்
நடமிலை யேஉன்றன் நண்பிலை யேஉனை நாடுதற்கோர்
இடமிலை யேஇதை எண்ணிலை யேசற் றிரங்கிலையே. (௫)

விண்ணுடை யாய்வெள்ளி வெற்புடை யாய்மதி மேவுசடைக்
கண்ணுடை யாய்நெற்றிக் கண்ணுடை யாய்அருட் கண்ணுடையாய்
பண்ணுடை யாய்திசைப் பட்டுடை யாய்இடப் பாலில்அருட்
பெண்ணுடை யாய்வந்திப் பிட்டுடை யாய்என் பெருஞ்செல்வமே. (௬)

விடையுடை யாய்மறை மேலுடை யாய்நதி மேவியசெஞ்
சடையுடை யாய்கொன்றைத் தாருடை யாய்கரம் தாங்குமழுப்
படையுடை யாய்அருட் பண்புடை யாய்பெண் பரவையின்பால்
நடையுடை யாய்அருள் நாடுடை யாய்பதம் நல்குகவே. (௭)

கீளுடை யாய்பிறைக் கீற்றுடை யாய்எங் கிளைத்தலைமேல்
தாளுடை யாய்செஞ் சடையுடை யாய்என் தனையுடையாய்
வாளுடை யாய்மலை மானுடை யாய்கலை மானுடையாய்
ஆளுடை யாய்மன்றுள் ஆட்டுடை யாய்என்னை ஆண்டருளே. (௮)

நான்படும் பாடு சிவனே உலகர் நவிலும்பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோஎண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியின் மான்படு மாறு கலங்கிநின்றேன்
ஏன்படு கின்றனை என்றிரங் காய்என்னில் என்செய்வனே. (௯)

பொய்யோ அடிமை உரைத்தல்எந் தாய்என்னுட் போந்திருந்தாய்
ஐயோநின் உள்ளத் தறிந்ததன் றோஎன் அவலமெல்லாம்
கையோட வல்லவர் ஓர்பதி னாயிரங் கற்பநின்று
மெய்யோ டெழுதினுந் தான்அடங் காத வியப்புடைத்தே.[223] (௧௦)

தேன்சொல்லும் வாயுமை பாகாநின் தன்னைத் தெரிந்தடுத்தோர்[224]
தான்சொல்லுங் குற்றங் குணமாகக் கொள்ளுந் தயாளுவென்றே
நான்சொல்வ தென்னைபொன் நாண்சொல்லும் வாணிதன் நாண்சொல்லும்அவ்
வான்சொல்லும் எம்மலை மான்சொல்லும் கைம்மலை மான்சொல்லுமே. (௧௧)

வென்றே முதலையும் மூர்க்கரும் கொண்டது மீளவிடார்
என்றே உரைப்பரிங் கென்போன்ற மூடர்மற் றில்லைநின்பேர்
நன்றே உரைத்துநின் றன்றே விடுத்தனன் நாணில்என்மட்
டின்றேயக் கட்டுரை இன்றேஎன் சொல்வ திறைபவனே. (௧௨)

கைக்கின்ற காயும் இனிப்பாம் விடமும் கனஅமுதாம்
பொய்க்கின்ற கானலும் நீராம்வன் பாவமும் புண்ணியமாம்
வைக்கின்ற ஓடுஞ்செம் பொன்னாம்என் கெட்ட மனதுநின்சீர்
துய்க்கின்ற நல்ல மனதாவ தில்லைஎன் சொல்லுவனே. (௧௩)

வீணே பொழுது கழிக்கின்ற நான்உன் விரைமலர்த்தாள்
காணேன்கண் டாரையுங் கண்டின்றி லேன்சற்றும் காணற்கன்பும்
பூணேன் தவமும் புரியேன் அறமும் புகல்கின்றிலேன்
நாணேன் விலங்கிழி யாணே எனுங்கடை நாயினனே. (௧௪)

---

223. 10-ஆம் பாவொடு எம் தாயுமானாரின் கசிந்துருகும் உள்ளத்தினின்று விம்மி வெளிவரும் கன்னித்தண் தமிழ் காண்க:
"உள்ளத்தின் உள்ளே ஒளித்திருந்தென் கள்ளம்எலாம்
வள்ளல்அறிந் தால்எனக்கு வாயும்உண்டோ பைங்கிளியே."

224. 11-ம் பாவொடு
"நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்
குற்றம் செய்யினும் குணம்எனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே"
என்பது போன்ற நம் சுந்தரமூர்த்தி நாயனாரின் உளங்கனிந்த முறையீடுகளை ஒத்துணர்க.

நானோர் எளிமை அடிமையென் றோநல்லன் அல்லனென்று[225]
தானோநின் அன்பர் தகாதென்பர் ஈதென்று தானினைத்தோ
ஏனோநின் உள்ளம் இரங்கிலை இன்னு மிரங்கிலையேல்
கானோடு வேன்கொல் கடல்விழு வேன்கொல்முக் கண்ணவனே. (௧௫)

மின்போலுஞ் செஞ்சடை வித்தக னேஒளி மேவியசெம்[226]
பொன்போலு மேனிஎம் புண்ணிய னேஎனைப் போற்றிப்பெற்ற
தன்போலுந் தாய்தந்தை ஆயிரம் பேரிருந் தாலும்அந்தோ
நின்போலும் அன்புடை யார்எனக் கார்இந்த நீணிலத்தே. (௧௬)

அன்பாலென் தன்னைஇங் காளுடை யாய்இவ் வடியவனேன்
நின்பாலென் துன்ப நெறிப்பால் அகற்றென்று நின்றதல்லால்
துன்பால் இடரைப் பிறர்பால் அடுத்தொன்று சொன்னதுண்டோ
என்பால் இரங்கிலை என்பாற் கடல்பிள்ளைக் கீந்தவனே. (௧௭)

என்போன் மனிதரை ஏன்அடுப் பேன்எனக் கெய்ப்பில்வைப்பாம்
பொன்போல் விளங்கும் புரிசடை யான்றனைப் போயடுத்தேன்
துன்போர் அணுவும் பெறேன்இனி யான்என்று சொல்லிவந்தேன்
முன்போல் பராமுகஞ் செய்யேல் அருளுக முக்கணனே. (௧௮)

பொன்னுடை யார்தமைப் போய்அடுப் பாய்என்ற புன்மையினோர்க்
கென்னுடை யான்றனை யேஅடுப் பேன்இதற் கெள்ளளவும்
பின்னிடை யேன்அவர் முன்னடை யேன்எனப் பேசிவந்தேன்
மின்னிடை மாதுமை பாகாஎன் சோகம் விலக்குகவே. (௧௯)

சாதகத் தோர்கட்குத் தானருள் வேனெனில் தாழ்ந்திடுமா
பாதகத் தோனுக்கு முன்னருள் ஈந்ததெப் பான்மைகொண்டோ
தீதகத் தேன்எளி யேன்ஆ யினும்உன் திருவடியாம்
போதகத் தேநினைக் கின்றேன் கருணை புரிந்தருளே. (௨௦)

---

225. 15-ஆம் பாவொடு
"மன்ன என்னைஓர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனமிக உருகேன்
பரிகி லேன்பரி யாஉடல் தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரிதரு கின்றேன்"
என்பது போன்ற மணிவாசக முறையீடுகளையும் ஒத்துணர்க.

226. 16-ஆம் பாவொடு
"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்தேன்"
"உன்பற் றொழிய ஒருபற்றும் இல்லை உடையவனே"
என்பன போன்ற வன்தொண்டப் பெருமானார், பட்டினத்தடிகளார் முறையீடுகளையும் ஒத்துணர்க.

அருளறி யாச்சிறு தேவருந் தம்மை அடுத்தவர்கட்
கிருளறி யாவிளக் கென்றாலும் நெஞ்சம் இரங்குகின்றார்
மருளறி யாப்பெருந் தேவேநின் தன்னடி வந்தடுத்தேன்
தெருளறி யாச்சிறி யேன்ஆயி னுஞ்செய்க சீரருளே. (உக)

அரும்பொரு ளேஎன் அரசேஎன் ஆருயிர்க் காகவந்த
பெரும்பொரு ளேஅருட் பேறே சிவானந்தம் பெற்றவர்பால்
வரும்பொரு ளேமுக்கண் மாமணி யேநின் வழியருளால்
தரும்பொரு ளேபொருள் என்றுவந் தேன்எனைத் தாங்கிக்கொள்ளே. (உஉ)

சரங்கார் முகந்தொடுத் தெய்வது போலென் றனையுலகத்
தரங்கா ரிருட்பெரு வாதனை யால்இடர் ஊட்டுநெஞ்சக்
குரங்கால் மெலிந்துநின் நாமந் துணையெனக் கூறுகின்றேன்
இரங்கார் தமக்கும் இரங்குகின் றோய்எற் கிரங்குகவே. (உங)

கூறுற்ற குற்றமுந் தானே மகிழ்வில் குணமெனவே[227]
ஆறுற்ற செஞ்சடை அண்ணல்கொள் வான்என்பர் ஆங்கதற்கு
வேறுற்ற தோர்கரி வேண்டுங்கொ லோஎன்னுள் மேவிஎன்றும்
வீறுற்ற பாதத் தவன்மிடற் றேகரி மேவியுமே. (உச)

சூற்படு மேக நிறத்தோனும் நான்முகத் தோனும்என்னைப்
போற்படும் பாடுநல் லோர்சொலக் கேட்கும் பொழுதுமனம்
வேற்படும் புண்ணில் கலங்கிஅந் தோநம் விடையவன்பூங்
காற்படுந் தூளிநம் மேற்படு மோஒரு கால்என்னுமே. (உரு)

வாளேய் நெடுங்கண்ணி எம்பெரு மாட்டி வருடுமலர்த்
தாளே வருந்த மணிக்கூடற் பாணன் தனக்கடிமை
ஆளே எனவிற கேற்றுவிற் றோய்நின் னருள்கிடைக்கும்
நாளேநன் னாள்அந்த நாட்கா யிரந்தெண்டன் நான்செய்வனே. (உசு)

---

227. 24-ஆம் பாவொடு

"குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீகொண்டால்
என்றான் கெட்டது இரங்கிடாய் எண்தோள் முக்கண் எம்மானே"
என்பது போன்ற திருவாசகத் தேன்பிலிற்றும் முறையீடுகளை ஒத்துணர்க.

அடுத்தார் தமைஎன்றும் மேலோர் விடார்கள் அவர்க்குப்பிச்சை
எடுத்தா யினும்இடு வார்கள்என் பார்அதற் கேற்கச்சொற்பூத்
தொடுத்தார் ஒருவர்க்குக் கச்சூரி லேபிச்சைச் சோறெடுத்துக்
கொடுத்தாய்நின் பேரருள் என்சொல்லு கேன்என் குணக்குன்றமே.[228] (௨௭)

நாடிநின் றேநினை நான்கேட்டுக் கொள்வது நண்ணும்பத்துக்
கோடியன் றேஒரு கோடியின் நூற்றொரு கூறுமன்றே
தேடிநின் றேபுதைப் பொருந் தருவர்நின் சீர்நினைந்துட்
பாடியந் தோமனம் வாடிநின் றேன்முகம் பார்த்தருளே. (௨௮)

தாயாகி னுஞ்சற்று நேரந் தரிப்பள்நந் தந்தையைநாம்
வாயார வாழ்த்தினும் வையினும் தன்னிடை வந்திதுநீ
ஈயாய் எனில்அருள் வான்என் றுனையடுத் தேன்உமையாள்
நேயா மனமிரங் காயாஎன் எண்ணம் நெறிப்படவே. (௨௯)

நடும்பாட்டை நாவலன் வாய்த்திருப் பாட்டை நயந்திட்டநீ
குடும்பாட்டை மேற்கொண்ட என்தமிழ்ப் பாட்டையும் கொண்டெனுள்ளத்
திடும்பாட்டை நீக்கிலை என்னினுந் துன்பத் திழுக்குற்றுநான்
படும்பாட்டை ஆயினும் பார்த்திரங் காய்எம் பரஞ்சுடரே. (௩௦)

எட்டாலுங் கேளயல் என்பாரை நான்சிரித் தென்னைவெட்டிப்
போட்டாலும் வேறிடம் கேளேன்என் நாணைப் புறம்விடுத்துக்
கேட்டாலும் என்னை உடையான் இடஞ்சென்று கேட்பனென்றே
நீட்டாலும் வாயுரைப் பாட்டாலுஞ் சொல்லி நிறுத்துவனே. (௩௧)

சீர்க்கின்ற கூடலில் பாணனுக் காட்படச் சென்றஅந்நாள்[229]
வேர்க்கின்ற வெம்மணல் என்தலை மேல்வைக்கு மெல்லடிக்குப்
பேர்க்கின்ற தோறும் உறுத்திய தோஎனப் பேசிஎண்ணிப்
பார்க்கின்ற தோறும்என் கண்ணேஎன் உள்ளம் பதைக்கின்றதே. (௩௨)

---

228. 27-ஆம் பாவொடு பின்வரும் நம் சுந்தரமூர்த்திகள் மனம் பதைத்துப் பாடியது காண்க:

" கச்சேர் அரவொன்(று) அரையில் அசைத்துக்
கழலும் சிலம்பும் கலிக்கப் பலிக்கென்(று),
உச்சம் போதா ஊரூர் திரியக்
கண்டால் அடியார் உருகா ரே."

229. 32-ஆம் பாவில் நம் அடிகளார் இறைவன் அருள் விளையாட்டினை நினைத்து எங்ஙனம் நெஞ்சம் நீராக உருகுகிறார்கள் என்பது காண்க.

நீயேஎன் தந்தை அருளுடை யாய்எனை நேர்ந்துபெற்ற
தாயேநின் பாலிடத் தெம்பெரு மாட்டிஇத் தன்மையினால்
நாயேன் சிறிதுங் குணமிலன் ஆயினும் நானும்உங்கள்
சேயே எனைப்புறம் விட்டால் உலகஞ் சிரித்திடுமே. (௩௩)

தெருளும் பொருளும்நின் சீரரு ளேஎனத் தேர்ந்தபின்யான்
மருளும் புவனத் தொருவரை யேனு மதித்ததுண்டோ
வெருளும் புவியில் துயரால் கலங்கி வெதும்புகின்றேன்
இருளும் கருமணி கண்டா அறிந்தும் இரங்கிலையே. (௩௪)

பெண்ணான் மயங்கும் எளியேனை ஆளப் பெருங்கருணை
அண்ணாநின் உள்ளம் இரங்காத வண்ணம் அறிந்துகொண்டேன்
கண்ணார் உலகில்என் துன்பமெல் லாம்வெளி காணிலிந்த
மண்ணா பிலத்தொடு விண்ணாடுங் கொள்ளை வழங்குமென்றே. (௩௫)

நெறிகொண்ட நின்னடித் தாமரைக் காட்பட்டு நின்றஎன்னைக்
குறிகொண்ட வாழ்க்கைத் துயராம் பெரிய கொடுங்கலிப்பேய்
முறிகொண் டலைக்க வழக்கோ வளர்த்த முடக்கிழநாய்
வெறிகொண்ட தேனும் விடத்துணி யார்இவ் வியனிலத்தே.[230] (௩௬)

மதியாமல் ஆரையும் நான்இறு மாந்து மகிழ்கின்றதெம்
பதியாம் உனது திருவருட் சீருரம் பற்றியன்றோ
எதியார் படினும் இடர்ப்பட் டலையஇவ் வேழைக்கென்ன
விதியா இனிப்பட மாட்டேன் அருள்செய் விடையவனே. (௩௭)

கற்கோட்டை நெஞ்சருந் தம்பால் அடுத்தவர் கட்குச்சும்மாச்
சொற்கோட்டை ஆயினும் கட்டுவர் நின்னைத் துணிந்தடுத்தேன்
அற்கோட்டை நெஞ்சுடை யேனுக் கிரங்கிலை அன்றுலவா
நெற்கோட்டை ஈந்தவன் நீயல்லை யோமுக்கண் நின்மலனே. (௩௮)

ஆதிக்க மாயை மனத்தேன் கவலை அடுத்தடுத்து
வாதிக்க நொந்து வருந்துகின் றேன்நின் வழக்கம்எண்ணிச்
சோதிக்க என்னைத் தொடங்கேல் அருளத் தொடங்குகண்டாய்
போதிக்க வல்லநற் சேய்உமை யோடென்னுள் புக்கவனே. (௩௯)

---

230. 36-ஆம் பாவொடு
“ தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயி னும்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே ”
என்பது போன்ற மணிவாசக முறையீடுகளை ஒத்துணர்க.

பிறைமுடித் தாண்டொரு பெண்முடித் தோர்பிள்ளைப் பேர்முடித்த
நிறைமுடித் தாண்டவஞ் செவ்வேணி செய்திட நித்தமன்றின்
மறைமுடித் தாண்டவஞ் செய்வோய்என் பாலருள் வைத்தெளியேன்
குறைமுடித் தாண்டுகொள் என்னை பலமுறை கூறுவதே. (௪௦)

நடங்கொண்ட பொன்னடி நீழலில் நான்வந்து நண்ணுமட்டும்
திடங்கொண்ட நின்புகழ் அல்லால் பிறர்புகழ் செப்பவையேல்
விடங்கொண்ட கண்டத் தருட்குன்ற மேஇம வெற்புடையாள்
இடங்கொண்ட தெய்வத் தணிமுத லேஎம் இறையவனே. (௪௧)

விழிக்கஞ்ச னந்தரும் மின்னார்தம் வாழ்க்கையில் வீழ்ந்தயலோர்
மொழிக்கஞ்சி உள்ளம் பொருந்துநின் நாம மொழிந்தெளியேன்
குழிக்கஞ்சி போன்மயங் கின்றேன்[231] அருளக் குறித்திலையேல்
பழிக்கஞ்சி னேய்இன்னும் என்பழிக் கஞ்சப் படுமுனக்கே. (௪௨)

செல்வைக்கும் கண்ணுமை பாகநின் சித்தம் திருவருள்என்
பால்வைக்கு மேல்இடர் எல்லாம் எனைவிட்டப் பால்நடக்கக்
கால்வைக்கு மேநற் சுகவாழ்வென் மீதினில் கண்வைக்குமே
மால்வைக்கு மாயைகள் மண்வைக்கு மேதங்கள் வாய்தனிலே. (௪௩)

ஒருமாது பெற்ற மகன்பொருட் டாக உவந்துமுன்னம்
வருமாம னாகி வழக்குரைத் தோய்என் வழக்குரைத்தற்
கிருமா நிலத்தது போல்வேடங் கட்ட இருத்திகொலோ
திருமால் வணங்கும் பதத்தவ யானுன் சிறுவனன்றே. (௪௪)

முன்னஞ்ச முண்ட மிடற்றர சேநின் முழுக்கருணை
அன்னஞ் சுகம்பெற உண்டும்உன் பால்அன் படைந்திலதால்
கன்னெஞ்ச மோகட்டை வன்னெஞ்ச மோஎட்டிக் காய்நெஞ்சமோ
என்னெஞ்சம் என்னெஞ்ச மோதெரி யேன்இதற் கென்செய்வதே. (௪௫)

வானம் விடாதுறு கால்போல்என் தன்னை வளைந்துகொண்ட
மானம் விடாதிதற் கென்செய்கு வேன்நின்னை வந்தடுத்தேன்
ஊனம் விடாதுழல் நாயேன் பிழையை உளங்கொண்டிடேல்[232]
ஞானம் விடாத நடத்தோய்நின் தண்ணருள் நல்குகவே. (௪௬)

---

231. மயங்குகின்றேன் எனற்பாலது மயங்கின்றேன் என விகாரமாயிற்று: தொ.வே.

232. கொண்டிடேல் என முன்னிலை எதிர்மறை ஏவல் முற்றாகக் கொள்க: தொ.வே.

நாயுஞ் செயாத நடையுடை யேனுக்கு நாணமும்உள்[233]
நோயுஞ் செயாநின்ற வன்மிடி நீக்கிநன் நோன்பளித்தாய்
பேயுஞ் செயாத கொடுந்தவத் தால்பெற்ற பிள்ளைக்குநல்
தாயும் செயாள்இந்த நன்றிகண் டாய்செஞ் சடையவனே. (சஎ)

உருவத்தி லேசிறி யேனுகி யூகத்தி லொன்றுமின்றித்
தெருவத்தி லேசிறு கால்வீசி யாடிடச் சென்றஅந்தப்
பருவத்தி லேநல் அறிவளித் தேஉனைப் பாடச்செய்தாய்
அருவத்தி லேஉரு வானேய்நின் தண்ணளி யார்க்குளதே.[234] (சஅ)

மானெழுந் தாடுங் கரத்தோய்நின் சாந்த மனத்தில்சினந்
தானெழுந் தாலும் எழுகஎன் றேஎன் தளர்வைஎல்லாம்
ஊனெழுந் தார்க்கநின் பால்உரைப் பேன்அன்றி ஊர்க்குரைக்க
நானெழுந் தாலும்என் நாஎழு மோமொழி நல்கிடவே. (சகூ)

வனமெழுந் தாடுஞ் சடையோய்நின் சித்த மகிழ்தலன்றிச்
சினமெழுந் தாலும் எழுகஎன் றேஎன் சிறுமையைநின்
முனமெழுந் தாற்றுவ தல்லால் பிறர்க்கு மொழிந்திடஎன்
மனமெழுந் தாலும்என் வாய்எழு மோஉள்ள வாறிதுவே. (௫0)

---

233. 47-ஆம் பாவில், நம் பெருமானுர், இறைவன் தம் வறுமையை ஒழித்தான் என்கிருர்கள். பிற்காலத்தில் அடிகளார் வரைப்படுத்தி விளக்கும் ஏமசித்தியாக இந்த அருட்செயல் நிகழ்ந்தது போலும். தென் தமிழில் உள்ள சித்தர் பாடல்களினின்றும் இது தெளிவாகும். இங்ஙனம் ஏமசித்தி கைவரப்பெற்ற பெரியார் ஒருவரை இப்பதிப்பாசிரியர் தம் நெடுங்கால நேயராக நன்கறிவர். திரு அருட்பா இப்பதிப்பாசிரியர் பதிப்பு 4-ஆம் புத்தகம் உபதேசப் பகுதி பார்க்க. இப்பாவொடு

"நல்குர(வு) என்னும் தொல்விடம் பிழைத்தும்,"

"இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்"

என்பன போன்ற ஆன்ருேர் மெய்ம் மொழிகளையும் ஒத்துணர்க.

234. 48-ஆம் பாவில், நம் அடிகளார், தெருவில் ஓடி விளையாடும் சின்னஞ் சிறுவயதில் இறைவன்பால் தாகம்கொண்டு, அவன் தம்மைப் பாடச் செய்வித்தான் என்று கூறித் திரு அருளை வியத்தல் புலனும். சென்னைக்கந்த கோட்டத்து அருள் வெளியில் நிறைந்து விளங்கும் என்றும் இளையோனை நம் முருகப் பெருமானை இங்ஙனம் அடிகளார் இளம்போதில் பாடிப் பரவினர் என்ப. இது, திருநெறிச் செல்வர் காஞ்சிபுரம் மஹாவித்துவான் சபாபதி முதலியார் அவர்கள் நேரே அறிந்ததொன்று என்றும் கூறுவர்.

சிற்பர மேஎஞ் சிவமே திருவருள் சீர்மிகுந்த
கற்பக மேஉனைச் சார்ந்தோர்க் களிக்குநின் கைவழக்கம்
அற்பமன் றேபல அண்டங் களின்அடங் காததென்றே
நற்பர ஞானிகள் வாசகத் தால்கண்டு நாடினனே.[235] (௫௧)

வருஞ்செல் லுள்[236] நீர்மறுத் தாலும் கருணை மருதளங்கள்
பெருஞ்செல்வ மேஎஞ் சிவமே நினைத்தொழப் பெற்றும்இங்கே
தருஞ்செல் அரிக்கு மரம்போல் சிறுமைத் தளர்நடையால்
அருஞ்செல்லல் மூழ்கிநிற் கின்றேன் இதுநின் அருட்கழகே. (௫௨)

கருமுக நீக்கிய பாணனுக் கேகன கங்கொடுக்கத்
திருமுகம் சேரற் களித்தோய்என் றுன்னைத் தெரிந்தடுத்தேன்
ஒருமுகம் பார்த்தருள் என்கின்ற ஏழைக் குதவிலையேல்
உருமுக[237] வார்க்கும் விடையோய் எவர்மற் றுதவுவரே. (௫௩)

மருப்பா வனத்துற்ற மாணிக்கு மன்னன் மனமறிந்தோர்
திருப்பா சுரஞ்செய்து பொற்கிழி ஈந்தநின் சீர்நினைந்தே
விருப்பா நினையடுத் தேன்எனக் கீந்திட வேஇன்றென்னை
கருப்பாநின் சித்தம் திருப்பாய்என் மீது கறைக்கண்டனே. (௫௪)

பிழையை மேவும்இவ் வாழ்க்கையி லேமனம் பேதுற்றஇவ்
ஏழையை நீவிட லாமோ அடிமைக் கிரங்குகண்டாய்
மாழையைப்[238] பொன்முன்னர்த் தாங்கொண்டு வைத்து வளர்த்தஇள
வாழையைத் தாம்பின்னர் நீர்விட லின்றி மறுப்பதுண்டே. (௫௫)

கருத்தறி யாச்சிறி யேன்படுந் துன்பக் கலக்கமெல்லாம்
உருத்தறி யாமை பொறுத்தருள் ஈபவர் உன்னையன்றித்
திருத்தறி யார்பிறர் அன்றேமென் கன்றின் சிறுமைஒன்றும்
எருத்தறி யாதுநற் சேதா அறியும் இரங்குகவே. (௫௬)

வான்வேண்டிக் கொண்ட மருந்தோமுக் கண்கொண்ட வள்ளலுன்னை
நான்வேண்டிக் கொண்டது நின்னடி யார்க்கு நகைதருமீ
தேன்வேண்டிக் கொண்டனை என்பார் இதற்கின்னும் ஏனிரங்காய்
தான்வேண்டிக் கொண்ட அடிமைக்குக் கூழிடத் தாழ்ப்பதுண்டே. (௫௭)

---

235. 51-ஆம் பாவொடு நம் மணிவாசகத் தெய்வத்தின் திருஅண்டப் பகுதியை எழுத்தெழுத்தாகப் பயின்று பயின்று அறிந்தறிந்து உணர்ந்துணர்ந்து மக்கட்பிறப்பைப் பெற்ற பெரும் பயன் பெற்றுய்க.
236. செல் என்பது மேகம் : தொ.வே.
237. உரும் என்பது இடி : தொ.வே.
238. மாழை என்பது பொன் : தொ.வே.

பையுரைத் தாடும் பணிப்புயத் தோய்தமைப் பாடுகின்றோர்
உய்யுரைத் தாவுள்ள தில்லதென் றில்லதை உள்ளதென்றே
பொய்யுரைத் தாலும் தருவார் பிறர்அது போலன்றிநான்
மெய்யுரைத் தாலும் இரங்காமை நின்னருள் மெய்க்கழகே. (ருஅ)

மடல்வற்றி னாலும் மணம்வற்று றாத மலரெனஎன்
உடல்வற்றி னாலும்என் உள்வற்று மோதுயர் உள்ளவெல்லாம்
அடல்வற்று றாதநின் தாட்கன்றி ஈங்கய லார்க்குரையேன்
கடல்வற்றி னாலும் கருணைவற் றாதமுக் கண்ணவனே. (ருகூ)

எள்ளிருக் கின்றதற் கேனுஞ் சிறிதிட மின்றிஎன்பான்
முள்ளிருக் கின்றது போலுற்ற துன்ப முயக்கமெல்லாம்
வெள்ளிருக் கின்றவர் தாமுங்கண் டார்எனில் மேவிஎன்றன்
உள்ளிருக் கின்றநின் தாட்கோதல் என்எம் உடையவனே. (கூ0)

பொன்கின்று[239] பூத்த சடையாய்இவ் வேழைக்குன் பொன்னருளாம்
நன்கின்று நீதரல் வேண்டும்அந் தோதுயர் நண்ணிஎன்னைத்
தின்கின்ற தேகொடும் பாம்பையும் பாலுணச் செய்துகொலார்
என்கின்ற ஞாலம் இழுக்குரை யாதெதற் கிரங்கிடினே. (கூக)

வாய்மூடிக் கொல்பவர் போலேஎன் உள்ளத்தை வன்துயராம்
பேய்மூடிக் கொண்டதென் செய்கேன் முகத்தில் பிறங்குகையைச்
சேய்மூடிக் கொண்டுநற் பாற்கழக் கண்டுந் திகழ்முலையைத்
தாய்மூடிக் கொள்ளுவ துண்டோ அருளுக சங்கரனே. (கூஉ)

கோள்வேண்டும் ஏழை மனத்தினை வேறுற்றுக் கொட்டக்கொள்ளித்
தேள்வேண்டு மோசுடத் தீவேண்டு மோவதை செய்திடஓர்
வாள்வேண்டு மோகொடுந் துன்பே அதில்எண் மடங்குகண்டாய்
ஆள்வேண்டு மேல்என்னை ஆள்வேண்டும் என்னுள் அனுர்ஒழித்தே. (கூங)

விடையிலை யோஅதன் மேலேறி என்முன் விரைந்துவரப்
படையிலை யோதுயர் எல்லாம் துணிக்கப் பதங்கொளருட்
கொடையிலை யோஎன் குறைதீர நல்கக் குலவும்என்தாய்
புடையிலை யோஎன் தனக்காகப் பேசஎம் புண்ணியனே. (கூச)

---

239. பொன்கின்று பூத்த சடை என்பது கொன்றை பூத்த சடை: தொ.வே. இப்பாவொடு 230-ஆம் அடிக்குறிப்பினைப் பார்க்க.

நறையுள தேமலர்க் கொன்றைகொண் டாடிய நற்சடைமேல்
பிறையுள தேகங்கைப் பெண்ணுள தேபிறங் குங்கழுத்தில்
கறையுள தேஅருள் எங்குள தேஇக் கடையவனேன்
குறையுள தேஎன் றாற்றவும் சற்றுங் குறித்திலதே. (௬௫)

சினத்தாலும் காமத்தி னாலும்என் தன்னைத் திகைப்பிக்கும்இம்
மனத்தால் உறுந்துயர் போதாமை என்று மதித்துச்சுற்றும்
இனத்தாலும் வாழ்க்கை இடும்பையி னாலும் இளைக்கவைத்தாய்
அனத்தான் புகழும் பதத்தோய் இதுநின் அருட்கழகே. (௬௬)

புல்லள வாயினும் ஈயார்தம் வாயில் புகுந்துபுகழ்ச்
சொல்லள வாகின் றிரப்போர் இரக்கநற் சொன்னங்களைக்
கல்லள[240] வாத்தரு கின்றோர்தம் பாலுங் கருதிச்சென்றோர்
நெல்லள வாயினும் கேளேன்நின் பாலன்றி நின்மலனே. (௬௭)

பிறைசூழ்ந்த வேணி முடிக்கனி யேஎம் பெருஞ்செல்வமே
கறைசூழ்ந்த கண்டத்தெம் கற்பக மேநுதற் கட்கரும்பே
மறைசூழ்ந்த மன்றொளிர் மாமணி யேஎன் மனமுழுதும்
குறைசூழ்ந்து கொண்டதென் செய்கேன் அகற்றக் குறித்தருளே. (௬௮)

கண்கட்டி ஆடும் பருவத்தி லேமுலை கண்டஒரு[241]
பெண்கட்டி யாள நினைக்கின்ற ஓர்சிறு பிள்ளையைப்போல்
எண்கட்டி யானுன் அருள்விழைந் தேன்சிவ னேஎன்நெஞ்சம்
புண்கட்டி யாய்அலைக் கின்றது மண்கட்டிப் போலுதிர்ந்தே. (௬௯)

மெய்விட்ட வஞ்சக நெஞ்சால் படுந்துயர் வெந்நெருப்பில்
நெய்விட்ட வாறிந்த வாழ்க்கையின் வாதனை நேரிட்டதால்
பொய்விட்ட நெஞ்சுறும் பொற்பதத் தையஇப் பொய்யனைநீ
கைவிட் டிடநினை யேல்அருள் வாய்கரு ணைக்கடலே. (௭௦)

---

240. கல் என்பது மலை : தொ.வே.

241. 69-ஆம் பாவொடு பின்வரும் தாயுமானவரின் திருப்பாடல்கள் காண்க :
“ தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகை தனக்கும் உண்டோ.”
“ அரும்போதன் மணம்காட்டும் காமரசம் கன்னிஅறி
வாளோ அபக்குவர்க்கோ அந்நலந்தான் விளங்கும்.”

அருட்கட லேஅக் கடலமு தேஅவ் வமுதத்துற்ற
தெருட்சுவை யேஅச் சுவைப்பய னேமறைச் சென்னிநின்ற
பொருட்பத மேஅப் பதத்தர சேநின் புகழ்நினையா
இருட்குண மாயை மனத்தே னையும்உவந் தேன்றுகொள்ளே. (எக)

அண்டங்கண் டானும் அளந்தானும் காண்டற் கரியவநின்
கண்டங்கண் டார்க்குஞ் சடைமேல் குறைந்த கலைமதியின்
துண்டங்கண் டார்க்கும் பயமுள தோஎனச் சூழ்ந்தடைந்தேன்
தொண்டன்கண் டாள்பல தெண்டன்கண் டாய்நின் துணையடிக்கே. (எஉ)

தேட்டக்கண் டேர்மொழிப் பாகா உலகில் சிலர்குரங்கை
ஆட்டக்கண் டேன்அன்றி அக்குரங் கால்அவர் ஆடச்சற்றும்
கேட்டுக்கண் டேனிலை நானேழை நெஞ்சக் கிழக்குரங்கால்
வேட்டுக்கொண் டாடுகின் றேன்இது சான்ற வியப்புடைத்தே. (எங)

போகங்கொண் டார்த்த அருளார் அமுதப் புணர்முலையைப்
பாகங்கொண் டார்த்த பரம்பொரு ளேநின் பதநினையா
வேகங்கொண் டார்த்த மனத்தால்இவ் வேழை மெலிந்துமிகச்
சோகங்கொண் டார்த்துநிற் கின்றேன் அருளத் தொடங்குகவே. (எச)

இன்றல வேநெடு நாளாக ஏழைக் கெதிர்த்ததுன்பம்
ஒன்றல வேபல எண்ணில வேஉற் றுரைத்ததயல்
மன்றல வேபிறர் நன்றல வேஎன வந்தகயக்
கன்றல வேபசுங் கன்றடி யேன்றனைக் காத்தருளே. (எரு)

படிபட்ட மாயையின் பாற்பட்ட சாலப் பரப்பிற்பட்டே
மிடிபட்ட வாழ்க்கையின் மேற்பட்ட துன்ப விசாரத்தினுல்
அடிபட்ட நானுனைக் காட்பட்டும் இன்னும் அலைதல்நன்றோ
பிடிபட்ட நேரிடைப் பெண்பட்ட பாகப் பெருந்தகையே. (எசு)

உடையாய்என் விண்ணப்பம் ஒன்றுண்டு கேட்டருள் உன்னடிச்சீர்
தடையாதும் இன்றிப் புகல்வதல் லால்இச் சகத்திடைநான்
நடையால் சிறுமைகொண் டந்தோ பிறரை நவின்றவர்பால்
அடையா மையுநெஞ் சுடையாமை யுந்தந் தருளுகவே. (எஎ)

தஞ்சமென் றேநின்ற நாயேன் குறையைத் தவிர்உனக்கோர்
பஞ்சமின் றேஉல கெல்லாநின் சீரருட் பாங்குகண்டாய்
எஞ்சநின் றேற்குனை யல்லால் துணைபிறி தில்லைஇது
வஞ்சமன் றேநின் பதங்காண்க முக்கண் மணிச்சுடரே. (எஅ)

பொறுத்தாலும் நான்செயும் குற்றங்கள் யாவும் பொறுத்தெனைநீ
ஒறுத்தாலும் நன்றினிக் கைவிட்டி டேல்என் னுடையவன்நீ
வெறுத்தாலும் வேறிலை வேற்றோர் இடத்தை விரும்பிஎன்னை
அறுத்தாலுஞ் சென்றிட மாட்டேன் எனக்குன் அருளிடமே. (எகூ)

செல்வரும் ஏர்விழி மங்கைபங் காஎன் சிறுமைகண்டால்
மேல்வரு நீவரத் தாழ்த்தாலும் உன்றன் வியன்அருட்பொற்
கால்வரு மேஇளங் கன்றழத் தாய்பசுக் காணின்மடிப்
பால்வரு மேமுலைப் பால்வரு மேபெற்ற பாவைக்குமே. (அ0)

வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டநின்
பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவிநடையாம்
துன்பட்ட வீரர்அந் தோவாத வூரர்தம் தூயநெஞ்சம்
என்பட்ட தோஇன்று கேட்டஎன் நெஞ்சம் இடிபட்டதே.[242] (அக)

நீர்சிந்தும் கண்ணும் நிலைசிந்தும் நெஞ்சமும் நீணடையில்
சீர்சிந்து வாழ்க்கையும் தேன்சிந்தி வாடிய செம்மலர்போல்
கூர்சிந்து புந்தியும் கொண்டுநின் றேன்உட் குறைசிந்தும்வா
றோர்சிந்து போலருள் நேர்சிந்தன் ஏத்தும் உடையவனே. (அஉ)

கொடிகொண்ட ஏற்றின் நடையும் சடையும் குளிர்முகமும்
துடிகொண்ட கையும் பொடிகொண்ட மேனியும் தோலுடையும்
பிடிகொண்ட பாகமும் பேரருள் நோக்கமும் பெய்கழலும்
குடிகொண்ட நன்மனம் என்மனம் போற்குறை கொள்வதின்றே. (அங)

விதிக்கும் பதிக்கும் பதிநதி ஆர்மதி வேணிப்பதி
திதிக்கும் பதிக்கும் பதிமேற் கதிக்குந் திகழ்பதிவான்
துதிக்கும் பதிக்கும் பதிஇங்கு மாபதி சொற்கடந்த
பதிக்கும் பதிசிற் பதியெம் பதிநம் பசுபதியே. (அச)

எனையடைந் தாழ்த்திய துன்பச் சுமையை இறக்கெனவே
நினையடைந் தேன்அடி நாயேற் கருள நினைதிகண்டாய்
வினையடைந் தேமன வீறுடைந் தேநின்று வேற்றவர்தம்
மனையடைந் தேமனம் வாடல்உன் தொண்டர் மரபல்லவே. (அரு)

---

242. 81-ஆம் பாவில் இறைவன்பால் மணிவாசகப் பெருமானுக்கு இருந்த இணையற்ற அன்பை இராமலிங்க அடிகளார் உணர்ந்து உருகிப் போற்றும் ஆற்றினைக் கண்டு அப்பாவினைப் பாடிப்பாடி நுகர்ந்து நுகர்ந்து மகிழ்க.

வனம்போய் வருவது போலேவன் செல்வர் மனையிடத்தே
தினம்போய் வருமிச் சிறியேன் சிறுமைச் செயலதுபோய்ச்
சினம்போய்க் கொடும்பகைக் காமமும் போய்நின் திறநிகழ்த்தா
இனம்போய்க் கொடிய மனம்போய் இருப்பதென் றென்னரசே. (அசு)

பெற்றாளனையநின் குற்றேவல் செய்து பிழைக்கறியாச்
சிற்றாள் பலரினும் சிற்றாளனுமென் சிறுமைதவிர்த்
தாற்றாள் கிலைனின் மற்றார் துணைஎனக் குன்கமலப்
பொற்றாள் அருட்புகழ்க் கற்றாய்ந்து பாடப் புரிந்தருளே. (அஎ)

அந்நாளை யாதுநஞ் சேற்றயன் மால்மனை யாதியர்தம்
பொன்னாணைக் காத்த அருட்கட லேபிறர் புன்மனைபோய்
இந்நாளை யாவகை என்னாணைக் காத்தருள் ஏழைக்குநின்
தன்னாணை ஐயநின் தாளாணை வேறு சரணில்லையே. (அஅ)

பவசாத னம்பெறும் பாதகர் மேவும்இப் பாரிடைநல்
சிவசாத னத்தரை ஏன்படைத் தாய்அத் திருவிலிகள்
அவசாத னங்களைக் கண்டிவ ருள்ளம் அழுங்களன்றோ
கவசா தனமெனக் கைம்மா னுரியைக் களித்தவனே.[243] (அகூ)

நான்செய்த புண்ணிய மியாதோ சிவாய நமஎனவே
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்பவரார்
வான்செய்த நான்முகத் தோனும் திருநெடு மாலுமற்றைத்
தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே.[244] (கூ0)

---

243. 89-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசகப் பெருமறையினை ஒத்துணர்க :

"புற்றில்வா ளரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாத நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மான்
கற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே."

244. 90-ஆம் பாவில் இறைவனது அருள்மயத்தை உடம்பிலும் உயிரிலும் உள்ளத்திலும் உணர்விலும் பதியவைக்கும் ஐந்தெழுத்து ஓதலின் சிறப்பை நம் பெருமானார் தாம் அநுபவித்து மகிழ்ந்து வியந்துரைத்தலைக் காண்க. இது குறித்து, மேலும் திரு அருட்பா இப் பதிப்பாசிரியர் பதிப்பு 5-ஆம் புத்தகம் திருமுகப் பகுதி பார்க்க.

ஐந்தெழுத்தின் அருள் தன்மையை மீண்டும் மீண்டும் , 115, 119, 191, 201, 216, 230-ஆம் பாக்களில் அடிகளார் மகிழ்ந்துரைத்தல் காண்க.

உற்று யினுமறைக் கோர்வரி யோய்எனை உற்றுப்பெற்ற
நற்று யினும்இனி யானேநின் நல்லருள் நல்கில்என்னை
விற்று யினுங்கொள வேண்டுகின் றேன்என் விருப்பறிந்தும்
சற்று யினும்இரங் காதோநின் சித்தம் தயாநிதியே.[245] (௬௧)

வான்மா றினுமொழி மாறாத மாறன் மனங்களிக்கக்
கான்மாறி யாடிய கற்பக மேநின் கருணையென்மேல்
தான்மா றினும்விட்டு நான்மாறி டேன்பெற்ற தாய்க்குழலைப்
பான்மாறி னும்பிள்ளை பான்மாறு மோஅதில் பல்விடுமே. (௬௨)

அன்பரி தாமனத் தேழையன் யான்துய ரால்மெலிந்தே
இன்பரி தாமிச் சிறுநடை வாழ்க்கையில் ஏங்குகின்றேன்
என்பரி தாப நிலைநீ அறிந்தும் இரங்கிலையேல்
வன்பரி தாந்தண் அருட்கட லேஎன்ன வாழ்வெனக்கே. (௬௩)

---

244 (தொடர்ச்சி). இப்பாக்களொடு பின்வரும் தேவாரத் திருவாசக திருமந்திர மறை மொழிகள் பார்க்க:

"துஞ்சலும் துஞ்சல்இ லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்(று)
அஞ்சஉ தைத்தன அஞ்செ ழுத்துமே."

"ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும்
ஓதி அஞ்செழுத் தும்உணர் வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர்மாற் பேறரே."

"அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு ஆரூர்புக்(கு)
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே."

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்."

"பழுத்தன ஐந்தும் பழமறை உள்ளே
விழித்தங்(கு) உறங்கும் வினையறி வாரில்லை
எழுத்தறி வோம்என்(று) உரைப்பார்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்தறி யாரே."

245. 91-ஆம் பாவொடு பின்வரும் திருவாசகத் தெள்ளமுதை ஒத்துணர்க:

"இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னின் அல்லால்
விருந்தின னேனை விடுதி கண்டாய்."

மைகண்ட கண்டமும் மான்கண்ட வாமமும் வைத்தருளில்
கைகண்ட நீஎங்கும் கண்கண்ட தெய்வம் கருதிலென்றே
மெய்கண்ட நான்மற்றைப் பொய்கண்ட தெய்வங்கள் மேவுவனோ
நெய்கண்ட ஊண்விட்டு நீர்கண்ட கூழுக்கென் றேடுவதே.[246] (கூச)

வேணிக்கு மேலொரு வேணி[247]வைத் தோய்முன் விரும்பிஒரு
மாணிக்கு வேதம் வகுத்தே கிழிஒன்று வாங்கித்தந்த
காணிக்குத் தானரைக் காணிமட் டாயினும் காட்டுகண்டாய்
பாணிக்கு மோதரும் பாணிவந் தேற்றவர் பான்மைகண்டே. (கூரு)

மறைக்கொளித் தாய்நெடு மாற்கொளித் தாய்திசை மாமுகங்கொள்
இறைக்கொளித் தாய்இங் கதிலோர் பழியிலை என்றன்மனக்
குறைக்கொளித் தாலும் குறைதீர்த் தருளெனக் கூவிடும்என்
முறைக்கொளித் தாலும் அரசேநின் பால்பழி மூடிடுமே. (கூசு)

முன்மழை வேண்டும் பருவப் பயிர்வெயில் மூடிக்கெட்ட[248]
பின்மழை பெய்ந்தென்ன பேறுகண் டாய்அந்தப் பெற்றியைப்போல்
நின்மழை போற்கொடை இன்றன்றி மூப்பு நெருங்கியக்கால்
பொன்மழை பெய்ந்தென்ன கன்மழை பெய்ந்தென்ன பூரணனே. (கஎ)

நீளா தரவுகொண் டென்குறை யாவும் நிகழ்த்தவும்நீ
கேளா தவன்என வாளா இருக்கின்ற கேண்மைஎன்னோ
சூளாத முக்கண் மணியே விடேல்உனைச் சூழ்ந்தஎன்னை
ஆளாகக் கொள்ளினும் மீளா நரகத் தழுத்தினுமே. (கூஅ)

246. 94-ஆம் பாவொடு பின்வரும் நம் தாயுமானாரின் திருப்பாடல் பார்க்க :
" ஐய னேஉனை அன்றி ஒருதெய்வம்
கையி னால்தொழ வும்கரு தேன்கண்டாய்."

247. வேணி என்பது நதி : தொ.வே.

248. 97-ஆம் பாவில் மூப்பு வீடுபேற்றிற்குத் தடையாக நிற்பதெனல் காண்க. இதனொடு 116-ஆம் அடிக்குறிப்பினையும் பின்வரும் தேவாரப் பெருமறையினையும் பார்க்க :
" நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்த மர்நர கத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே."
" இளமை கைவிட்(டு) அகறலும் மூப்பினார்
வளமை போய்ப்பிணி யோடு வருதலால்
உளமெ லாம்ஒளி ஆய்மதி ஆயினான்
இளமை யேகினை யாக நினைப்பனே."
" முனிவும் மூப்பும் நீக்கிய முக்கண் மூர்த்தி அல்லனே."

வளங்கன்று மாவனத் தீன்றதன் தாயின்றி வாடுகின்ற
இளங்கன்று போல்சிறு வாழ்க்கையில் நின்அருள் இன்றிஅந்தோ
உளங்கன்று நான்செய்வ தென்னே கருணை உதவுகண்டாய்
களங்கன்று பேரருட் காரென்று கூறும் களத்தவனே. (௯௯)

காற்றுக்கு மேல்விட்ட பஞ்சாகி உள்ளம் கறங்கச்சென்றே
சோற்றுக்கு மேற்கதி இன்றென வேற்றகந் தோறும்உண்போர்
தூற்றுக்கு மேல்பெருந் தூறிலை ஆங்கென் துயரமெனும்
சேற்றுக்கு மேல்பெருஞ் சேறிலை காண்அருட் செவ்வண்ணனே. (௧௦௦)

அந்தோ துயரில் சுழன்றுடும் ஏழை அவலநெஞ்சம்
சிந்தோத நீரில் சுழியோ இளையவர் செங்கைதொட்ட
பந்தோ சிறுவர்தம் பம்பர மோகொட்டும் பஞ்சுகொலோ
வந்தோ டுழலும் துரும்போஎன் சொல்வதெம் மாமணியே. (௧௦௧)

பொன்வச மோபெண்க ளின்வச மோகடற் பூவசமோ
மின்வச மோஎனும் மெய்வச மோஎன் விதிவசமோ
தன்வச மோமலந் தன்வச மோஎன் சவலைநெஞ்சம்
என்வச மோஇல்லை நின்வசம் நான்எனை ஏன்றுகொள்ளே.[249] (௧௦௨)

நானடங் காதொரு நாட்செயும் குற்ற நடக்கைஎல்லாம்
வானடங் காதிந்த மண்ணடங் காது மதிக்குமண்டம்
தானடங் காதெங்குந் தானடங் காதெனத் தானறிந்தும்
மானடங் காட்டு மணிஎனை ஆண்டது மாவியப்பே.[250] (௧௦௩)

பாம்பா யினும்உணப் பால்கொடுப் பார்வளர்ப் பார்மனைப்பால்
வேம்பாயி னும்வெட்டல் செய்யார் வளர்த்த வெருட்சிக்கடாத்
தாம்பா யினும்ஒரு தாம்பாயி னுங்கொடு தாம்பின் செல்வார்
தேம்பாய் மலர்க்குழற் காம்பாக என்னையும் சேர்த்துக்கொள்ளே.[251] (௧௦௪)

249. 102-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசகம் பார்க்க:
"இற்ற வாமன மேகெடு வாய்உடை யான்அடி நாயேனை
விற்றெ லாமிக ஆள்வ தற்(கு) உரியவன்."

250. 103-ஆம் பாவொடு பின்வரும் வன்தொண்டப் பெருமானார் தேவாரம் பார்க்க:
"பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் தன்னைப் போகாமே
மெய்யே வந்திங் கெனை ஆண்ட மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே."

251. 104-ஆம் பாவொடு பின்வரும் அபிராமி அந்தாதி முறையீட்டினை ஒத்துணர்க:
"அறி யார்எனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே."

நெருப்புக்கு முட்டையும் கூழ்க்கிட உப்பையும் நேடிச்செல்வோர்
பருப்புக்கு நெய்யும்ஒண் பாலுக்கு வாழைப் பழமுங்கொள்ளத்
தெருப்புக்கு வாரொடு சேர்கிலென் னும்இச் சிறுநடையாம்
இருப்புக்கு வேண்டிய நான்சிவ யோகர்பின் எய்திலென்னே. (௧௦௫)

எம்மத மாட்டு மரியோய்என் பாவி இடும்பைநெஞ்சை
மும்மத யானையின் காலிட் டிடறினும் மொய்அனற்கண்
விம்மத மாக்கினும் வெட்டினும் நன்றுன்னை விட்டஅதன்
வெம்மத் நீங்கலென் சம்மதங் காண்எவ் விதத்தினுமே. (௧௦௬)

கல்லாத புந்தியும் அந்தோநின் தாளில் கணப்பொழுதும்
நில்லாத நெஞ்சமும் பொல்லாத மாயையும் நீண்மதமும்
கொல்லாமல் கொன்றெனைத் தின்னாமல் தின்கின்ற கொள்கையைஇங்
கெல்லாம் அறிந்த உனக்கெளி யேனின் றிசைப்பதென்னே. (௧௦௭)

தெவ்வழி ஓடும் மனத்தேனுக் குன்றன் திருஉளந்தான்
இவ்வழி ஏகென் றிருவழிக் குள்விட்ட தெவ்வழியோ
அவ்வழி யேவழி செவ்வழி பாடநின் றாடுகின்றோய்
வெவ்வழி நீர்ப்புணைக் கென்னே செயல்இவ் வியனிலத்தே. (௧௦௮)

கண்ணார் நுதற்செங் கரும்பேநின் பொன்னருட் கான்மலரை
எண்ணாத பாவிஇங் கேன்பிறந் தேன்நின்னை ஏத்துகின்றோர்
உண்ணாத ஊனும் உடுக்கா உடையும் உணர்ச்சிசற்றும்
நண்ணாத நெஞ்சமும் கொண்டுல கோர்முன்னர் நாணுறவே. (௧௦௯)

அம்மா வயிற்றெரிக் காற்றேன் எனநின் றழுதலறச்
சும்மாஅச் சேய்முகங் தாய்பார்த் திருக்கத் துணிவள்கொலோ
இம்மா நிலத்தழு தேற்றாயி னுந்தந் திடுவள்முக்கண்
எம்மான்இங் கேழை அழுமுகம் பார்த்தும் இரங்கிலையே. (௧௧௦)

ஓயாக் கருணை முகிலே நுதற்கண் ஒருவநின்பால்
தோயாக் கொடியவென் நெஞ்சத்தை நான்சுடு சொல்லைச்சொல்லி
வாயால் சுடினுந் தெரிந்தில தேஇனி வல்வடவைத்
தீயால் சுடினுமென் அந்தோ சிறிதுந் தெரிவதன்றே. (௧௧௧)

மாலறி யான்மல ரோன்அறி யான்மக வான்அறியான்
காலறி யான்மற்றை வானோர் கனவினுங் கண்டறியார்
சேலறி யாவிழி மங்கைபங் காநின் திறத்தைமறை
நாலறி யாஎனில் நானறி வேன்எனல் நாணுடைத்தே. (௧௧௨)

ஆறிட்ட வேணியும் ஆட்டிட்ட பாதமும் அம்மை ஒரு
கூறிட்ட பாகமும் கோத்திட்ட கொன்றையும் கோலமிக்க
நீறிட்ட மேனியும் நான்காணும் நாள்என் னிலைத்தலைமேல்
ஏறிட்ட கைகள்கண் டாணவப் பேய்கள் இறங்கிடுமே. (கக௩)

அல்லுண்ட கண்டத் தரசேநின் சீர்த்தி அமுதமுண்டோர்
கொல்லுண்ட தேவர்தங் கோளுண்ட சீரெனும் கூழுண்பரோ
சொல்லுண்ட[252] வாயினர் புல்லுண்ப ரோஇன் சுவைக்கண்டெனும்
கல்லுண்ட பேர்கருங் கல்லுண்ப ரோஇக் கடலிடத்தே. (ககச)

காரே எனுமணி கண்டத்தி னின்பொற் கழலையன்றி
யாரே துணைநமக் கேழைநெஞ் சேஇங் கிருந்துகழு
நீரே எனினுந் தரற்கஞ்சு வாரொடு நீயுஞ்சென்று
சேரேல் இறுகச் சிவாய நமஎனச் சிந்தைசெய்யே. (ககரு)

வலைப்பட்ட மானென வாட்பட்ட கண்ணியர் மையலென்னும்
புலைப்பட்ட பேய்க்கு விலைப்பட்ட நான்மதி போய்ப்புலம்ப
விலைப்பட்ட இம்மனம் அந்தோஇவ் வேழைக்கென் றெங்கிருந்து
தலைப்பட்ட தோஇதற் கென்செய்கு வேன்முக்கட் சங்கரனே. (ககசு)

குருந்தாமென் சோக மனமான பிள்ளைக் குரங்குக்கிங்கே
வருந்தா ணவமென்னு மானிடப் பேயொன்று மாத்திரமோ
பெருந்தா மதமென் றிராக்கதப் பேயும் பிடித்ததெந்தாய்
திருந்தா அதன்குதிப் பென்ஒரு வாய்கொண்டு செப்பரிதே. (ககஎ)

பெண்மணி பாகப் பெருமணி யேஅருட் பெற்றிகொண்ட
விண்மணி யான விழிமணி யேஎன் விருப்புறுநல்
கண்மணி நேர்கட வுண்மணி யேஒரு கால்மணியைத்
திண்மணிக் கூடலில் விற்றோங்கு தெய்வ சிகாமணியே. (ககஅ)

அலையெழுத் துந்தெறும் ஐந்தெழுத் தாலுன்னை அர்ச்சிக்கின்றோர்
கலையெழுத் தும்புகழ் காலெழுத் திற்குக் கனிவிரக்கம்
இலையெழுத் தும்பிறப் பீடெழுத் துங்கொண்ட எங்கள்புழுத்
தலையெழுத் துஞ்சரி யாமோ நுதற்கண் தனிமுதலே. (ககக)

ஆட்சிகண் டார்க்குற்ற துன்பத்தைத் தான்கொண் டருளளிக்கும்
மாட்சிகண் டாய்எந்தை வள்ளற் குணமென்பர் மற்றதற்குக்
காட்சிகண் டேனிலை ஆயினும் உன்னருட் கண்டத்திலோர்
சாட்சிகண் டேன்களி கொண்டேன் கருணைத் தடங்கடலே. (க௨௦)

252. சொல் என்பது நெல் : தொ.வே.

கண்கொண்ட நெற்றியும் கார்கொண்ட கண்டமும் கற்பளிக்கும்
பெண்கொண்ட பாகமும் கண்டேன்முன் மாறன் பிரம்படியால்
புண்கொண்ட மேனிப் புறங்கண்டி லேன்அப் புறத்தைக்கண்டால்
ஒண்கொண்ட கல்லும் உருகும்என் றேஇங் கொளித்தனையே. (கஉக)

வேய்க்குப் பொரும்எழில் தோளுடைத் தேவி விளங்குமெங்கள்
தாய்க்குக் கனிந்தொரு கூறளித் தோய்நின் தயவுமிந்த
நாய்க்குக் கிடைக்கும் எனஒரு சோதிடம் நல்கில்அவர்
வாய்க்குப் பழத்தொடு சர்க்கரை வாங்கி வழங்குவனே. (கஉஉ)

காண்டத்தின் மேவும் உலகீர்இத் தேகம் கரும்பனைபோல்
நீண்டத்தி லென்ன நிலையல வேஇது நிற்றல்பசும்
பாண்டத்தில் நீர்நிற்றல் அன்றோ நமைநம் பசுபதிதான்
ஆண்டத்தில் என்ன குறையோநம் மேற்குறை ஆயிரமே.[253] (கஉ௩)

வேணிக்கண் நீர்வைத்த தேவே மதுரை வியன்தெருவில்
மாணிக்கம் விற்றசெம் மாணிக்க மேஎனை வாழ்வித்ததோர்
ஆணிப்பொன் னேதெள் ளமுதேநின் செய்ய அடிமலர்க்குக்
காணிக்கை ஆக்கிக்கொண் டாள்வாய் எனது கருத்தினையே. (கஉச)

மாகலை வாணர் பிறன்பால் எமக்கும் மனைக்கும்கட்ட
நீகலை தாஒரு மேகலை தாஉண நென்மலைதா
போகலை யாஎனப் பின்தொடர் வார்அவர் போல்மனனீ
ஏகலை ஈகலர் ஏகம்ப வாண ரிடஞ்செல்கவே. (கஉரு)

ஊர்தரு வார்நல்ல ஊண்தரு வார்உடை யுந்தருவார்
பார்தரு வார்உழற் கேர்தரு வார்பொன் பணந்தருவார்
சோர்தரு வார்உள் ளறிவுகெ டாமல் சுகிப்பதற்கிங்
கார்தரு வார்அம்மை யார்தரு பாகனை யன்றிநெஞ்சே. (கஉசு)

---

253. 123-ஆம் பாவில் இறைவன் எல்லா உயிர்களையும் ஆட்கொண் டருளுதல் கண்கூடாயினும், உயிர்கள்பால் உள்ள குற்றங் குறைகளே அருளிலாமை போல் தோன்றச் செய்கிறது எனல் காண்க. இதனோடு பின்வரும் மணிவாசக முறையீட்டினை ஒத்துணர்க:

“நெடுந்தகை நீஎன்னை ஆட்கொள்ள யான்ஐம் புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண் டாய்.”

பண்செய்த சொன்மங்கை பாகவெண் பாற்கடல் பள்ளிகொண்டோன்
திண்செய்த சக்கரங் கொள்வான் அருச்சனை செய்திட்டநாள்
விண்செய்த நின்னருட் சேவடி மேற்பட வேண்டியவன்
கண்செய்த நற்றவம் யாதோ கருத்தில் கணிப்பரிதே. (கஉஎ)

மாப்பிட்டு நேர்ந்துண்டு வந்தியை வாழ்வித்த வள்ளல்உன்வெண்
காப்பிட்டு மேற்பல பாப்பிட்ட மேனியைக் கண்டுதொழக்
கூப்பிட்டு நாணிற்க வந்திலை நாதனைக் கூடஇல்லாள்
பூப்பிட்ட காலத்தில் கூப்பிட்ட போதினும் போவதுண்டே. (கஉஅ)

என்மேற் பிழையிலை யானென்செய் கேன்என் இடத்திருந்தேன்
சொன்மேற் கொளாதெனை இன்மேல் துரும்பெனச் சுற்றுநெஞ்சத்
தின்மேற் பிழையது புன்மேற் பனியெனச் செய்தொழிக்க
நின்மேற் பரம்விடை தன்மேற்கொண் டன்பர்முன் நிற்பவனே. (கஉகூ)

மைவிட்டி டாமணி கண்டாநின் தன்னை வழுத்தும்என்னை
நெய்விட்டி டாஉண்டி போல்இன்பி லான்மெய்ந் நெறியறியான்
பொய்விட்டி டான்வெம் புலைவிட்டி டான்மயல் போகமெலாம்
கைவிட்டி டான்எனக் கைவிட்டி டேல்வந்து காத்தருளே. (கநo)

நல்லமு தம்சிவை தான்தரக் கொண்டுநின் நற்செவிக்குச்
சொல்லமு தந்தந்த எங்கள் பிரான்வளஞ் சூழ்மயிலை
இல்லமு தந்திகழ் பெண்ணாக என்பை எழுப்பியநாள்
சில்லமு தம்பெற்ற தேவரை வானஞ் சிரித்ததன்றே.[254] (கநக)

சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதியைநின்
பொற்றுணை வார்கழற் கேற்றியப் பொன்னடிப் போதினையே
நற்றுணை யாக்கரை ஏறிய புண்ணிய நாவரசைக்
கற்றுணை யாதிந்தக் கூற்றுணை யாமென் கடைநெஞ்சமே. (கநஉ)

சடையவ நீமுன் தடுத்தாண்ட நம்பிக்குச் சற்றெனினும்
கடையவ னேன்செயுங் கைம்மா றறிந்திலன் கால்வருந்தி
நடையுற நின்னைப் பரவைதன் பாங்கர் நடத்தி அன்பர்
இடைவரும் உன்றன் இரக்கத்தைத் தான்வெளி யிட்டதற்கே. (கநந)

---

254. 131 முதல் 5 பாக்களில் நம் பெருமானார் தம் ஞானாசிரியர்களான நால்வரும் இறைவன்பால் கொண்ட பேரன்பினையும் அதனால் அவர்கள் எய்திய அளப்பரும் தன்மையையும் வியந்து கூறுதல் புலனாம்.

திருவாத வூரெம் பெருமான் பொருட்டன்று தென்னன்முன்னே
வெருவாத வைதிகப் பாய்பரி மேற்கொண்டு மேவிநின்ற
ஒருவாத கோலத் தொருவாஅக் கோலத்தை உள்குளிர்ந்தே
கருவாத நீங்கிடக் காட்டுகண் டாய்என் கனவினிலே. (௧௩௪)

சீர்தரு நாவுக் கரையரைப் போலிச் சிறியனும்ஓர்
கார்தரு மாயைச் சமணன் மனக்கருங் கல்லிற்கட்டிப்
பார்தரு பாவக் கடலிடை வீழ்த்திடப் பட்டுழன்றே
ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின் றேன்கரை ஏற்றரசே. (௧௩௫)

தூக்கமும் சோம்பலும் துக்கமும் வாழ்க்கையைத் தொட்டுவரும்
ஏக்கமும் நோயும் இடையூறும் மற்றை இடரும்விட்ட
நீக்கமும் நின்மல நெஞ்சமும் சாந்த நிறைவும்அருள்
ஆக்கமும் நின்பதத் தன்பும் தருக அருட்சிவமே. (௧௩௬)

பொய்வந்த வாயும் புலைவந்த செய்கையும் புன்மையெல்லாம்
கைவந்த நெஞ்சமும் கண்டேன் இனிநற் கனிவுடன்யான்
மெய்வந்த வாயும் விதிவந்த செய்கையும் வீறன்பினால்
தைவந்த நெஞ்சமும் காண்பதென் றோசெஞ் சடைக்கனியே. (௧௩௭)

கங்கைகொண் டாய்மலர் வேணியி லேஅருட் கண்ணிமலை[255]
மங்கைகொண் டாய்இடப் பாகத்தி லேஐய மற்றுமொரு
நங்கைகொண் டால்எங்கு கொண்டருள் வாயென்று நண்ணுமன்பர்
சங்கைகொண் டால்அதற் கென்சொல்லு வாய்முக்கட் சங்கரனே. (௧௩௮)

வாட்கொண்ட கண்ணியர் மாயா விகார வலைபிழைத்துன்
தாட்கொண்ட நீழலில் சார்ந்திடு மாறென் றனக்கருள்வாய்
கீட்கொண்ட கோவணப் பேரழ காளனைக் கேதமற
ஆட்கொண்ட நீஇன்று வாளா இருப்ப தழகல்லவே.[256] (௧௩௯)

---

255. 138-ஆம் பாவில் நம் அடிகளார் இறைவனோடு விளையாடி மகிழ்வது காண்க. இவ்வகை விளையாட்டு நம் வன்தொண்டப் பெருமானுக்குப் பெரிதும் உரித்தானது என்க.

256. 139-ஆம் பாவொடு நம் அடிகளார் பின்னரும் ஆறாந் திருமுறையாக வகுத்திருக்கும் ஓர் அருட்பாவில்
"நீ இனிச்சும்மா இருக்க ஒண்ணா தண்ணே"
என்று முறையிடுதலையும் காண்க.

வீட்டுத் தலைவனின் தாள்வணங் கார்தம் விரிதலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத் தலைபுன் வராகத்தலை
ஆட்டுத் தலைவெறி நாய்த்தலை பாம்பின் அடுந்தலைகற்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை நாற்றப் புழுத்தலையே.[257] (௧௪௦)

தெண்ணீர் முடியனைக் காணார்தங் கண்இருள் சேர்குருட்டுக்
கண்ணீர் சொரிந்தகண் காசக்கண் புன்முலைக் கண்நகக்கண்
புண்ணீர் ஒழுகுங் கொடுங்கண் பொறாமைக்கண் புன்கண்வன்கண்
மண்ணீர்மை யுற்றகண் மாமணி நீத்தகண் மாலைக்கண்ணே. (௧௪௧)

கண்ணுத லான்புகழ் கேளார் செவிபொய்க் கதைஒலியும்
அண்ணுற மாதரு மைந்தருங் கூடி அழுமொலியும்
துண்ணெனுந் தீச்சொல் ஒலியும்அவ் வந்தகன் தூதர்கண்மோத்
துண்ணுற வாவென் றாரப்பொலி யும்புகும் ஊன்செவியே. (௧௪௨)

மணிகொண்ட கண்டனை வாழ்த்தார்தம் வாய்தெரு மண்ணுண்டவாய்
பிணிகொண்ட வாய்விடப் பிச்சுண்ட வாய்வரும் பேச்சற்றவாய்
துணிகொண்ட வாயனற் சூடுண்ட வாய்மலஞ் சோர்ந்திழிவாய்
குணிகொண்ட உப்பிலிக் கூழுண்ட வாய்எனக் கூறுபவே. (௧௪௩)

சகமிலை யேஎன் றுடையானை எண்ணலர் தங்கள்நெஞ்சம்
சுகமிலை யேஉணச் சோறிலை யேகட்டத் தூசிலையே
அகமிலை யேபொரு ளாவிலை யேவள்ள லாரிலையே
இகமிலை யேஒன்றும் இங்கிலை யேஎன் றிரங்குநெஞ்சே. (௧௪௪)

பொங்கரும் பேர்முலை மங்கைக் கிடந்தந்த புத்தமுதே
செங்கரும் பேநறுந் தேனே மதுரச் செழுங்கனியே
திங்களுங் கங்கையுஞ் சேர்ந்தொளிர் வேணிச் சிவக்கொழுந்தே
எங்களை ஆட்கொண்டும் என்னே துயரில் இருத்துவதே.[258] (௧௪௫)

---

257 140 முதல் 5 பாக்களில் இறைவனை வணங்காத உடற் பகுதிகளும் உள்ளமும் அழியும் தகையன எனல் காண்க. இதனோடு தேவாரம் திருஅங்கமாலை போன்றவற்றை ஒத்துணர்க.

258. 145-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசகத் தேனையும் நுகர்க:
" அடியேன் அல்லேன் கொல்லோ
தான்எனை ஆட்கொண் டிலைகொல்லோ."

வில்லைப்பொன் னாக்கரங் கொண்டோய்வன் தொண்டர் விரும்புறச்செங்
கல்லைப்பொன் னாக்கிக் கொடுத்தோய்நின் பாதங் கருத்தில்வையார்
புல்லைப்பொன் னாக்கொளும் புல்லர்கள் பாற்சென்று பொன்னளிக்க
வல்லைப்பொன் னார்புய என்பார் இஃதென்சொல் வாணர்களே. (௧௪௬)

கூத்துடை யாய்என் னுடையாய்முத் தேவரும் கூறுகின்ற
ஏத்துடை யாய்அன்பர் ஏத்துடை யாய்என்றன் எண்மைமொழிச்
சாத்துடை யாய்நின் தனக்கே பரம்எனைத் தாங்குதற்கோர்
வேத்துடை யார்மற் றிலைஅருள் ஈதென்றன் விண்ணப்பமே. (௧௪௭)

வெப்பிலை யேஎனும் தண்விளக் கேமுக்கண் வித்தகநின்
ஒப்பிலை யேஎனும் சீர்புக லார்புற்கை உண்ணுதற்கோர்
உப்பிலை யேபொரு ளொன்றிலை யேஎன் றுழல்பவர்மேல்
தப்பிலை யேஅவர் புன்தலை எட்டில் தவமிலையே. (௧௪௮)

எனைப்பெற்ற தாயினும் அன்புடை யாய்எனக் கின்பநல்கும்
உனைப்பெற்ற உள்ளத் தவர்மலர்ச் சேவடிக் கோங்கும்அன்பு
தனைப்பெற்ற நன்மனம் தாம்பெற்ற மேலவர் சார்பைப்பெற்றால்
வினைப்பெற்ற வாழ்வின் மனைப்பெற்றம் போல மெலிவதின்றே. (௧௪௯)

நிறைமதி யாளர் புகழ்வோய் சடையுடை நீண்முடிமேல்
குறைமதி தானொன்று கொண்டனை யேஅக் குறிப்பெனவே
பொறைமதி யேன்றன் குறைமதி தன்னையும் பொன்னடிக்கீழ்
உறைமதி யாக்கொண் டருள்வாய் உலகம் உவப்புறவே. (௧௫௦)

துடிவைத்த செங்கை அரசேநல் லூரில்நின் தூமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்கள் அப்பர்தம் சென்னி யதுகுளிர்ந்தெப்
படிவைத்த தோஇன்ப மியான்எணுந் தோறும்இப் பாவிக்குமால்
குடிவைத்த புன்தலை ஒன்றோ மனமும் குளிர்கின்றதே.[259] (௧௫௧)

ஒருமுடி மேல்பிறை வைத்தோய் அரிஅயன் ஒண்மறைதம்
பெருமுடி மேலுற வேண்ட வராதுனைப் பித்தனென்ற
மருமுடி யூரன் முடிமேல் மறுப்பவும் வந்ததவர்
திருமுடி மேலென்ன ஆசைகண் டாய்நின் திருவடிக்கே. (௧௫௨)

---

259. 151, 152-ஆம் பாக்களில் இறைவன் அப்பர் சுவாமிகளுக்கும் வன்தொண்டப் பெருமானுக்கும் திருவடிப்பேறு அளித்ததை வியந்து கூறுதல் காண்க.

வேல்கொண்ட கையுமுந் நூல்கொண்ட மார்பமும் மென்மலர்ப்பொற்
கால்கொண்ட ஒண்கழற் காட்சியும் பன்னிரு கண்ணும்விடை
மேல்கொண்ட செஞ்சுடர் மேனியும் சண்முக வீறுங்கண்டு[260]
மால்கொண்ட நெஞ்சம் மகிழ்வதெந் நாள்என்கண் மாமணியே. (௧௫௩)

விண்பூத்த கங்கையும் மின்பூத்த வேணியும் மென்முகமும்
கண்பூத்த நெற்றியும் பெண்பூத்த பாகமும் கார்மிடறும்
தண்பூத்த பாதமும் பொன்பூத்த மேனியும் சார்ந்துகண்டே
மண்பூத்த வாழ்க்கையை விண்பூத்த பூவின் மதிப்பதென்றே. (௧௫௪)

தண்மதி யோஅதன் தண்ணமு தோஎனச் சார்ந்திருணீத்
துண்மதி யோர்க்கின் புதவுநின் பேரருள் உற்றிடவே
எண்மதி யோடிச்சை எய்தா தலையுமென் ஏழைமதி
பெண்மதி யோஅன்றிப் பேய்மதி யோஎன்ன பேசுவதே. (௧௫௫)

பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந் தாயென்பர் பித்தனென்ற
திட்டுக்கும் சீரருள் செய்தளித் தாயென்பர் தீவிறகுக்
கட்டுக்கும் பொன்முடி காட்டிநின் றாயென்பர் கண்டிடஎன்
மட்டுக்கும் வஞ்சகத் தெய்வமென் கோமுக்கண் மாணிக்கமே. (௧௫௬)

மையிட்ட கண்ணியர் பொய்யிட்ட வாழ்வின் மதிமயங்கிக்
கையிட்ட நானும்உன் மெய்யிட்ட சீரருள் காண்குவனோ
பையிட்ட பாம்பணி மையிட்ட மேனியும் பத்தருள்ள
மொய்யிட்ட காலுஞ்செவ் வையிட்ட வேலுங்கொள் முன்னவனே. (௧௫௭)

தவமே புரியும் பருவமி லேன்பொய்ச் சகநடைக்கண்
அவமே புரியும் அறிவிலி யேனுக் கருளுமுண்டோ
உவமேய மென்னப்ப டாதெங்கு மாகி ஒளிர்ஒளியாம்
சிவமேமுக் கண்ணுடைத் தேவேநின் சித்தந் தெரிந்திலனே. (௧௫௮)

மட்டுண்ட கொன்றைச் சடையர சேஅன்று வந்திபிட்ட
பிட்டுண்ட பிச்சைப் பெருந்தகை யேகொடும் பெண்மயலால்
கட்டுண்ட நான்சுகப் பட்டுண்டு வாழ்வன் இக் கன்மனமாம்
திட்டுண்ட பேய்த்தலை வெட்டுண்ட நாளில்என் தீமையற்றே. (௧௫௯)

---

260. 153-ஆம் பாவில் அடிகளார் முருகப் பெருமானை வாழ்த்தி வணங்குதல் காண்க.

ஆட்டுக்குக் காலெடுத் தாய்நினைப் பாடலர் ஆங்கியற்றும்[261]
பாட்டுக்குப் பேரென்கொல் பண்ணென்கொல் நீட்டியப் பாட்டெழுதும்
ஏட்டுக்கு மையென்கொல் சேற்றில் உறங்க இறங்குங்கடா
மாட்டுக்கு வீடென்கொல் பஞ்சணை என்கொல் மதித்திடினே. (௧௬௦)

ஒப்பற்ற முக்கட் சுடரேநின் சீர்த்தி உறுதவெறும்
துப்பற்ற பாட்டில் சுவையுள தோஅதைச் சூழ்ந்துகற்றுச்
செப்பற்ற வாய்க்குத் திருவுள தோசிறி தேனும்உண்டேல்
உப்பற்ற புன்கறி உண்டோர்தந் நாவுக் குவப்புளதே. (௧௬௧

செல்வருங் கண்ணி இடத்தோய்நின் சீர்த்தியைச் சேர்த்தியந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப் புறத்தில் நடக்கச்சற்றே
கால்வரும் ஆயினும் இன்புரு வாகிக் கனிமனம்அப்
பால்வரு மோஅதன் பாற்பெண் களைவிட்டுப் பார்க்கினுமே. (௧௬௨)

கார்முக மாகப்பொற் கல்வளைத் தோய்இக் கடையவனேன்
சோர்முக மாகநின் சீர்முகம் பார்த்துத் துவளுகின்றேன்
போர்முக மாகநின் றூரையும் காத்தநின் பொன்னருள்இப்
பார்முகமாக என் ஓர்முகம் பார்க்கப் பரிந்திலதே. (௧௬௩)

வான்வளர்த் தாய்இந்த மண்வளர்த் தாய்எங்கும் மன்னுயிர்கள்
தான்வளர்த் தாய்நின் தகைஅறி யாஎன் றனைஅரசே
ஏன்வளர்த் தாய்கொடும் பாம்பையெல் லாந்தள் ளிலைவளர்த்தாய்
மான்வளர்த் தாய்கரத் தார்நினைப் போல வளர்ப்பவரே. (௧௬௪)

அற்கண்டம் ஓங்கும் அரசேநின் றன்அடி யார்மதுரச்
சொற்கண்ட போதும்என் புற்கண்ட நெஞ்சம் துணிந்துநில்லா
திற்கண்ட மெய்த்தவர் போலோடு கின்ற தெறிந்தது நீங்
கற்கண் டெனினும்அக் கற்கண்ட காக்கைநிற் காதென்பரே. (௧௬௫)

சொல்லுகின் றோர்க்கமு தம்போல் சுவைதரும் தொல்புகழோய்
வெல்லுகின் றோரின்றிச் சும்மா அலையுமென் வேடநெஞ்சம்
புல்லுகின் றோர்தமைக் கண்டால்என் னுங்கொல் புகல்வெறும்வாய்
மெல்லுகின் றோர்க்கொரு நெல்லவல் வாய்க்கில் விடுவரன்றே. (௧௬௬)

---

261. 160 முதல் 3 பாக்களில் இறைவனைக் குறிக்காத பாட்டின் இழிவும் இறைவனைக் குறிக்கும் தேவாரத் திருவாசகப் பாடல்களின் சொலற்கரிய பெருமையும் கூறுதல் புலனும்.

சீரிடு வார்பொருட் செல்வர்க்க லாமல்இத் தீனர்கட்கிங்
காரிடு வார்பிச்சை ஆயினும் பிச்சன் அசடன்என்றே
பேரிடு வார்வம்புப் பேச்சிடு வார்இந்தப் பெற்றிகண்டும்
போரிடு வார்நினைப் போற்றார்என் னேமுக்கட் புண்ணியனே. (கசுஎ)

சேலுக்கு நேர்விழி மங்கைபங் காஎன் சிறுமதிதான்
மேலுக்கு நெஞ்சையுட் காப்பது போல்நின்று வெவ்விடய
மாலுக்கு வாங்கி வழங்கவுந் தான்சம் மதித்ததுகாண்
பாலுக்குங் காவல்வெம் பூனைக்குந் தோழன்என் பார்இதுவே. (கசுஅ)

இணையேதும் இன்றிய தேவே கனல்இனன் இந்தெனுமுக்
கணையே கொளும்செங் கரும்பே பிறவிக் கடல்கடத்தும்
புணையே திருவருட் பூரண மேமெய்ப் புலமளிக்கும்
துணையேஎன் துன்பந் துடைத்தாண்டு கொள்ளத் துணிந்தருளே. (கசுகூ)

நிலைகாட்டி ஆண்டநின் தாட்கன்பி லாதன்பில் நீண்டவன்போல்
புலைகாட் டியமனத் தேன்கொண்ட வேடம் புனைஇடைமேல்
கலைகாட்டிக் கட்டு மயிர்த்தலை காட்டிப்புன் கந்தைசுற்றி[262]
முலைகாட்டி ஆண்மகன் பெண்வேடம் காட்டு முறைமையன்றே. (கஎo)

விடநாகப் பூணணி மேலோய்என் நெஞ்சம் விரிதல்விட்டென்
உடனாக மெய்அன்பு ளூற்றாக நின்னரு ளூற்றிடுதற்
கிடனாக மெய்ந்நெறிக் கீடாகச் செய்குவ திங்குனக்கே[263]
கடனாக நிற்பது கண்டேன்பின் துன்பொன் றுங் கண்டிலனே. (கஎக)

நயப்படும் ஓர்நின் அருளெனக் கின்றெனில் நாய்மனமென்
வயப்படு மோதுயர் மண்படு மோநல்ல வாழ்வைஎன்னால்
செயப்படு மோகுணம் சீர்ப்படு மோபவம் சேரச்சற்றும்
பயப்படு மோமலம் பாழ்படு மோஎம் பசுபதியே. (கஎஉ)

---

262. 170-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசகத் தெய்வ விளையாட்டுரையும் காண்க:

"தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை உம்ப ரானை வம்பனேன்
நானின் அடியேன் நீஎன்னை ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானும் சிரித்தே அருளலாம் தன்மை யாம்என் தன்மையே."

263. 171, 172-ஆம் பாக்களொடு பின்வரும் அப்பர் சுவாமிகள் தேவாரம் பார்க்க:

"நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பி யாதே
வஞ்சமே செய்தி யாலோ வானவர் தலைவ னேநீ."

சோபங்கண் டார்க்கருள் செய்வோய் மதிக்கன்றிச் சூழ்ந்திடுவெந்
தீபங்கண் டாலும் இருள்போம்இவ் வேழை தியங்கும்பரி[264]
தாபங்கண் டாய்அருள் செய்யாதென் குற்றந் தனைக்குறித்துக்
கோபங்கண் டாலுநன் றையாஎன் துன்பக் கொதிப்பறுமே. (கஎங)

எல்லா முடைய இறையவ னேநினை ஏத்துகின்ற
நல்லார் தமக்கொரு நாளேனும் பூசை நயந்தியற்றிச்
சொல்லால் அவர்புகழ் சொல்லாதிவ் வண்ணம் துயர்வதற்கென்
கல்லான்ம ஒன்றுமற் றில்லாமை ஒன்றிரு காரணமே. (கஎச)

பிறையாறு கொண்டசெவ் வேணிப் பிரான்பதப் பேறடைவான்
மறையாறு காட்டுநின் தண்ணரு ளேயன்றி மாயைஎன்னும்
நிறையாறு சூழுந் துரும்பாய்ச் சுழலும்என் நெஞ்சினுள்ள
குறையாறு தற்கிடம் வேறில்லை காண்இக் குவலயத்தே. (கஎரு)

மாலறி யாதவன் அன்றேஅத் தெய்வ வரதனுநின்
காலறி யாதவன் என்றால்அக் காலைக் காலைஎமைப்
போலறி யாதவர் காண்பார்முற் கண்டமெய்ப் புண்ணியர்தம்
பாலறி யாதவன் நானிது கேட்டுணர் பாலனன்றே. (கஎசு)

ஒன்றேஎன் ஆருயிர்க் கோருற வேஎனக் கோரமுதே
நன்றேமுக் கண்ணுடை நாயக மேமிக்க நல்லகுணக்
குன்றே நிறைஅருட் கோவே எனது குலதெய்வமே
மன்றே ஒளிர்முழு மாணிக்க மேஎனை வாழ்விக்கவே. (கஎஎ)

தாழ்வேதும் இன்றிய கோவே எனக்குத் தனித்தபெரு
வாழ்வே நுதற்கண் மணியேஎன் உள்ள மணிவிளக்கே
ஏழ்வேலை என்னினும் போதா இடும்பை இடுங்குடும்பப்
பாழ்வே தனைப்பட மாட்டேன் எனக்குன் பதமருளே. (கஎஅ)

வண்டுகொண் டார்நறுங் கொன்றையி னான்றன் மலரடிக்குத்
தொண்டுகொண் டார்தஞ் சுகத்துக்கும் வாழ்க்கைச் சுழலிற்றள்ளும்
பெண்டுகொண் டார்தம் துயருக்கும் ஒப்பின்று பேசில்என்றே
கண்டுகொண் டாய்இனி நெஞ்சேநின் உள்ளக் கருத்தெதுவே. (கஎகூ)

---

264. 173-ஆம் பாவில் நம் அடிகளார், இறைவன் தம் குற்றங்களைக் கண்டு சினமே கொண்டால்கூட அது தமக்கு நன்மை பயக்கும் எனல் காண்க.

மலங்கவிழ்ந் தார்மனம் வான்கவிழ்ந் தாலும்அவ் வான்புறமாம்
சலங்கவிழ்ந் தாலும் சலியாதென் புன்மனந் தான்கடலில்
கலங்கவிழ்ந் தார்மனம் போலே சலிப்பது காண்குடும்ப
விலங்கவிழ்ந் தாலன்றி நில்லாதென் செய்வல் விடையவனே. (கஅ0)

மைகொடுத் தார்நெடுங் கண்மலை மானுக்கு வாய்ந்தொருபால்
மெய்கொடுத் தாய்தவர் விட்டவெம் மானுக்கு மேவுறஓர்
கைகொடுத் தாய்மயல் கண்ணியில் வீழ்ந்துட் கலங்குறும்என்
கொய்கொடுத் தாழ்மன மானுக்குக் காலைக் கொடுத்தருளே. (கஅக)

உடம்பார் உறுமயிர்க் கால்புழை தோறனல் ஊட்டிவெய்ய
விடம்பாச் சியஇருப் பூசிகள் பாய்ச்சினும் மெத்தென்னும்இத்
தடம்பார் சிறுநடைத் துன்பஞ்செய் வேதனைத் தாங்கரிதென்
கடம்பாநற் பன்னிரு கண்ணா இனிஎனைக் காத்தருளே.[265] (கஅஉ)

மண்ணாலும் மண்ணுற்ற வாழ்க்கையி னாலும்அவ் வாழ்க்கைக்குற்ற
பெண்ணாலும் நொந்துவந் தாரை எலாம்அருட் பேறெனுமுக்
கண்ணாலும் பார்த்தைந்து கையாலும் ஈயுங் கணபதிநின்
பண்ணாலும் மாமறை மேற்றாளை என்னுட் பதித்தருளே. (கஅங)

வானாள மாலயன் வாழ்வாள அன்றிஇம் மண்முழுதும்
தானாள நின்பதம் தாழ்பவர் தாழ்கஒண் சங்கையங்கை
மானாள மெய்யிடந் தந்தோய்நின் பற்ற மனமதொன்றே
நானாள எண்ணிநின் தாளேத்து கின்றனன் நல்குகவே. (கஅச)

ஈடறி யாதமுக் கண்ணாநின் அன்பர் இயல்பினைஇங்
நாடறி யாதுன் அருளன்றி ஊண்சுவை நாவையன்றி
மேடறி யாதுநற் பாட்டைக்கற் றோரன்றி மேற்சுமந்த
ஏடறி யாதவை யேஅறி யாஎன் றிகழ்வரன்றே.[266] (கஅரு)

சூடுண்ட பூனைக்குச் சோறுண்ட வாய்பின் துடிப்பதன்றி
ஊடுண்ட பாலிட்ட ஊண்கண்ட தேனும் உணத்துணியா
தீடுண்ட என்மனம் அந்தோ துயரில் இடியுண்டும்இவ்
வீடுண்ட வாழ்க்கையில் வீழுண்ட தால்எம் விடையவனே. (கஅசு)

---

265. 182, 183 ஆம் பாக்களில் அடிகளார் முருகப் பெருமானையும் மூத்த பிள்ளையாரையும் அழைத்து முறையிடுதல் காண்க.

266. 185 ஆம் பாவில் அடியார்கள் தன்மையை உலகியலார் அறியுமாறில்லை எனல் காண்க.

கரங்காட்டி மைபிட்ட கண்காட்டி என்பெருங் கன்மநெஞ்சக்
குரங்காட்டிச் செப்மையில் நிற்கின்ற மாதரைக் கொண்டுகல்லார்
உரங்காட்டிக் கோலிலான் றுடனீட்டிக் காட்டி உரப்பிஒரு
முரங்காட் டியகுரங் காட்டுகின் றோரென் மணிகண்டனே. (கஅஎ)

களங்கனி போல்மணி கண்டாநின் பொற்கழல் காணற்கென்சிற்
றுளங்கனி யாதுநின் சீர்கேட் கினும்அன் புறஉருகா
வளங்கனி காமஞ் சிறவாமல் சிற்றில் வருத்துழலும்
இளங்கனி போல்நின்ற தென்செய்கு வேன்எம் இறையவனே. (கஅஅ)

மாமத்தி னூல்சுழல் வெண்தயிர் போன்று மடந்தையர்தம்[267]
காமத்தி னூல்சுழல் என்றன்நெஞ் சேஉன்றன் காலைஅன்பாம்
தாமத்தி னூல்தளை யிட்டநெஞ் சோஇத் தகைஇரண்டின்
நாமத்தினூல் பித்தன் என்போய் நினக்கெது நல்லநெஞ்சே. (கஅகூ)

ஏற்றிலிட் டார்கொடி கொண்டோய் விளக்கினை ஏற்றபெருங்
காற்றிலிட் டாலும் இடலாம்நெல் மாவைக் கலித்திடுநீர்
ஆற்றிலிட் டாலும் பெறலாம்உட் காலை அடுங்குடும்பச்
சேற்றிலிட் டால்பின் பரிதாம் எவர்க்கும் திருப்புவதே. (ககூ0)

தேரோங்கு காழிக்கண் மெய்ஞ்ஞானப் பாலுண்ட செம்மணியைச்
சீரோங்கு முத்துச் சிவிகையின் மேல்வைத்த தேவஉன்றன்
பேரோங்கும் ஐந்தெழுத் தன்றோ படைப்பைப் பிரமனுக்கும்
ஏரோங்கு காப்பைத் திருநெடு மாலுக்கும் ஈந்ததுவே. (ககூக)

வேதனை யாமது சூதனை யாஎன்று வேதனையால்
போதனை யாநின் றனைக்கூவு மேழையைப் போதனைகேள்
வாதனை யாதிங்கு வாதனை யாவென்றுன் வாய்மலரச்
சோதனை யாயினுஞ் சோதனை யாசிற் சுகப்பொருளே. (ககூஉ)

இன்பற்ற இச்சிறு வாழ்க்கையி லேவெயி லேறவெம்பும்
என்பற்ற புன்புழுப் போல்தளர் ஏழை எனினுமிவன்
அன்பற்ற பாவிஎன் றந்தோ எனைவிடில் ஐயவையத்
தென்பற்ற தாகமற் றில்லைகண் டாய்எனை என்றுகொள்ளே. (ககூங)

---

267. 189-ஆம் பாவில் அடிகளார் இறைவனிடம் மீண்டும் விளையாட்டாகப் பேசி மகிழ்வது காண்க.

களங்கொண்ட ஓமணிக் காட்சியும் முச்சுடர்க் கண்அருளும்
வளங்கொண்ட தெய்வத் திருமுக மாட்சியும் வாய்ந்தபரி
மளங்கொண்ட கொன்றைச் சடையும்பொற் சேவடி மாண்பும்ஒன்ற
உளங்கொண்ட புண்ணியர் அன்றோஎன் தன்னை உடையவரே. (கசுச)

காவிக்கு நேர்மணி கண்டாவண் டார்குழல் கற்பருளும்
தேவிக்கு வாமங் கொடுத்தோய்நின் மாமலர்ச் சேவடிப்பால்
சேவிக்கும் சேவகஞ் செய்வோரை ஆயினுஞ் சேவிக்கஇப்
பாவிக்கு வாய்க்கில்என் ஆவிக்கு நீண்ட பயனதுவே. (கசுரு)

கொங்கிட்ட கொன்றைச் சடையும்நின் னோர்பசுங் கோமளப்பெண்
பங்கிட்ட வெண்திரு நீற்றொளி மேனியும் பார்த்திடில்பின்
இங்கிட்ட மாயையை எங்கிட்ட வாஎன் றிசைப்பினும்போய்ச்
சங்கிட்ட ஓசையில் பொங்கிட்ட வாய்கொடு தாண்டிடுமே.[268] (கசுசு)

வெம்பெரு மானுக்குக் கைகொடுத் தாண்ட மிகுங்கருணை
எம்பெரு மானுக்கு விண்ணப்பம் தேவர் இளம்பிடியார்[269]
தம்பெரு மானுக்கும் சார்மலை மானுக்கும் சாற்றுமைங்கைச்
செம்பெரு மானுக்கும் எந்தாய்க்கும் நான்பணி செய்ச்செய்யே. (கசுஎ)

சாற்றவ னேகநன் றுவுள்ள தாயினும் சாற்றரிதாம்
வீற்றவ னேவெள்ளி வெற்பவ னேஅருள் மேவியவெண்
நீற்றவ னேநின் னருள்தர வேண்டும் நெடுமுடிவெள்
ஏற்றவ னேபலி ஏற்றவ னேஅன்பர்க் கேற்றவனே. (கசுஅ)

---

268. 196-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசகத் தெய்வ மொழியைக் காண்க:

"கண்ணால் யானும் கண்டேன் காண்க."

269. 197-ஆம் பாவில் இறைவனை, முருகன், மூத்தபிள்ளை, அம்மை, அப்பன் என்று பலவாறாக உரைக்கும்போதும் இறைவனை முடிவாக "எந்தாய்" என்று கூறும் பரிவினைக் கூர்ந்துணர்க. இப்பாவொடு பின்வரும் திருஞானசம்பந்த மூர்த்திகள் தேவாரப் பெருமறையை ஒத்துணர்க:

"தாயானே தந்தையும் ஆகிய தன்மைகள் ஆயானே."

பதியே சரணம் பரமே சரணம் பரம்பரமாம்
திதியே சரணம் சிவமே சரணம் சிவமுணர்ந்தோர்
கதியே சரணம்என் கண்ணே சரணம்முக் கட்கருணை
நிதியே சரணம் சரணம்என் பால்மெய்ந் நிலையருளே. (ககூகூ)

என்னுற வேஎன் குருவேஎன் உள்ளத் தெழும்இன்பமே
என்னுயி ரேஎன்றன் அன்பே நிலைபெற்ற என்செல்வமே
என்னறி வேஎன்றன் வாழ்வேஎன் வாழ்வுக் கிடுமுதலே
என்னர சேஎன் குலதெய்வ மேஎனை என்றுகொள்ளே. (உ00)

கான்போல் இருண்டஇவ் வஞ்சக வாழ்க்கையில் கன்னெஞ்சமே
மான்போல் குதித்துக்கொண் டோடேல் அமுத மதிவிளங்கும்
வான்போல் குளிர்ந்த சிவானந்த வாழ்க்கையின் வாழ்வுறச்செந்
தேன்போல் இனிக்கும் சிவாய நமஎனச் சிந்தைசெய்யே. (உ0க)

வேதனென் கோதற வேண்டுமென் கோஎன விண்ணப்பஞ்செய்
பாதனென் கோகடற் பள்ளிகொண் டான்தொழும் பண்பன்என்கோ
நாதனென் கோபர நாதனென் கோஎங்கள் நம்பிக்குநல்
தூதனென் கோஅவன் தோழனென் கோநினைத் தூய்மணியே. (உ0உ)

இயங்கா மனமும் கயங்கா நிலையும் இகபரத்தே
மயங்கா அறிவும் தியங்கா நெறியும் மகிழ்ந்தருள்வாய்
வயங்கா நிலத்தின் முயங்கா உயர்தவர் வாழ்த்துகின்ற
புயங்கா துதித்தற் குயங்கா தவருட் புகுந்தவனே. (உ0ங)

சிவசங்க ராசிவ யோகா சிவகதிச் சீரளிக்கும்
சிவசம்பு வேசிவ லோகா சிவானந்தச் செல்வநல்கும்
சிவசுந்த ராசிவ போகா சிவாகமச் செந்நெறிசொல்
சிவபுங்க வாசிவ ஞானிகள் வாழ்த்தும் சிவகுருவே. (உ0ச)

மதிதத்து வாந்த அருட்சிவ மேசின் மயசிவமே
துதிசித் தெலாம்வல்ல மெய்ச்சிவ மேசிற் சுகசிவமே
கதிநித்த சுத்தச் சிவமே விளங்குமுக் கட்சிவமே
பதிசச்சி தாநந்த சிற்சிவ மேஎம் பரசிவமே. (உ0ரு)

கடும்புல வேடர்கள் ஐவர் இந்தியக் கள்வரைவர்[270]
கொடுங்கர ணத்துட்டர் நால்வர்கள் வன்மலக் கோளரைவர்
அடும்படை கோடிகொண் டுற்றார்மற் றேழையன் யானொருவன்
இடும்படை யாதுமி லேன்வெல்வ தெங்ஙன் இறையவனே. (௨௦௬)

இடைக்கொடி வாமத் திறைவாமெய்ஞ் ஞானிகட் கின்பநல்கும்
விடைக்கொடி ஏந்தும் வலத்தாய்நின் நாமம் வியந்துரையார்
கடைக்கொடி போலக் கதறுகின் றார்பொய்க் கதையவர்தாம்
புடைக்கொடி யாலன்றிப் புல்லால் எயிலைப் புனைபவரே. (௨௦௭)

உருமத்தி லேபட்ட புன்புழுப் போல்இவ் உலகநடைக்
கருமத்தி லேபட்ட என்மனந் தான்நின் கழலடையும்
தருமத்தி லேபட்ட தின்றேஎன் றெண்ணுந் தனையுமந்தோ
மருமத்தி லேபட்ட வாளியைப் போன்று வருத்துவதே. (௨௦௮)

என்னிறை வாஇமை யோரிறை வாமறை யின்முடிபின்
முன்னிறை வாமலை மின்னிறை வாமலர் முண்டகத்தோன்
தன்னிறை வாதிதித் தானிறை வாமெய்த் தபோதனருள்
மன்னிறை வாஇங்கு வாஎன் றெனக்குநல் வாழ்வருளே. (௨௦௯)

போற்றிஎன் ஆவித் துணையேஎன் அன்பில் புகுஞ்சிவமே
போற்றிஎன் வாழ்வின் பயனேஎன் இன்பப் புதுநறவே
போற்றிஎன் கண்ணுண் மணியேஎன் உள்ளம் புனைஅணியே
போற்றிஎன் ஓர்பெருந் தேவே கருணை புரிந்தருளே. (௨௧௦)

கஞ்சத்தி லேர்முக மஞ்சத்தி லேர்நடைக் கன்னியர்கண்
நஞ்சத்தி லேஅவர் வஞ்சத்தி லேபட்டு நாணுறும்புன்
நெஞ்சத்தி லேஅதன் தஞ்சத்தி லேமுக் கணித்த என்போல்
பஞ்சத்தி லேபிர பஞ்சத்தி லேஉழப் பார்எவரே. (௨௧௧)

---

270. 206-ஆம் பாவொடு பின்வரும் தாயுமானவரின் திருப்பாடலை ஒத்துணர்க:

“ கருணைமொழி சிறிதில்லேன் ஈதல் இல்லேன்
கண்ணீர்கம் பலைஎன்றன் கருத்துக் கேற்க
ஒருபொழுதும் பெற்றறியேன் என்னை ஆளும்
ஒருவாஉன் அடிமைநான் ஒருத்த னுக்கோ
இருவினையும் முக்குணமும் கரணம் நான்கும்
இடர்செயும்ஐம் புலனும்கா மாதி ஆறும்
வரவரவும் ஏழைக்கோர் எட்டா னான
மதத்தொடும்வந் தெதிர்த்தநவ வடிவம் அன்றே.”

நான்முகத் தோனும் திருநெடு மாலுமெய்ஞ் ஞானமென்னும்
வான்முகக் கண்கொண்டு காணாமல் தம்உரு மாறியும்நின்
தேன்முகக் கொன்றை முடியும்செந் தாமரைச் சேவடியும்
ஊன்முகக் கண்கொண்டு தேடிநின் றார்சற் றுணர்விலரே.[271] (உகஉ)

இருவர்க் கறியப் படாதெழுந் தோங்கிநின் றேத்துகின்றோர்
கருவர்க்க நீக்கும் கருணைவெற் பேஎன் கவலையைஇங்
கொருவர்க்கு நான்சொல மாட்டேன் அவரென் னுடையவரோ
வெருவற்க என்றெனை ஆண்டருள் ஈதென்றன் விண்ணப்பமே. (உகங)

ஒண்ணுதல் ஏழை மடவார்தம் வாழ்க்கையின் உற்றிடினும்
பண்ணுத லேர்மறை ஆயிரஞ் சூழுநின் பாதத்தையான்
எண்ணுத லேதொழி லாகச்செய் வித்தென்னை ஏன்றுகொள்வாய்
கண்ணுத லேகரு ணைக்கட லேஎன் கருத்திதுவே. (உகச)

தளைக்கின்ற மாயக் குடும்பப் பெருந்துயர் தாங்கிஅங்ஙோ[272]
இளைக்கின்ற ஏழைக் கிரங்குகண் டாய்சிறி தேஇறகு
முளைக்கின்ற போதறுப் பார்போல்நின் னாமமொழிந்திடுங்கால்
வளைக்கின்ற மாயைக்கிங் காற்றேன்முக் கண்ணுடை மாமணியே. (உகரு)

மஞ்சடை வான நிறத்தோன் அயன்முதல் வானவர்க்கா
நஞ்சடை யாள மிடுமிடற் றோய்கங்கை நண்ணுகின்ற
செஞ்சடை யாய்நின் திருப்பெய ராகச் சிறந்தஎழுத்
தஞ்சடை யார்கண்கள் பஞ்சடை யாமுன் னறிவிலரே. (உகசு)

இலங்கா புரத்தன் இராக்கதர் மன்னன் இராவணன்முன்
மலங்காநின் வெள்ளி மலைக்கீ ழிருந்து வருந்தநின்சீர்
கலங்காமல் பாடக் கேட்டே இரங்கிக் கருணைசெய்த
நலங்காணின் தன்மைஇன் றென்னள வியாண்டையின் நண்ணியதே. (உகஎ)

உடையென்றும் பூணென்றும் ஊணென்றும் நாடி உழன்றிடும்இந்
நடையென்றும் சஞ்சலஞ் சஞ்சலங் காணிதி னுஞ்சிறியேன்
புடையென்று வெய்ய வுறும்புழுப் போன்று புழுங்குகின்றேன்
விடையென்று மாலறங் கொண்டோயென் துன்பம் விலக்குகவே. (உகஅ)

---

271. 212-ஆம் பாவில் இறைவன் அக உணர்வுக்குத்தான் எளிதில் புலப்படுவான் எனல் காண்க.

272. 215-ஆம் பாவில் அடிகளார் மாயையின் கொடுந்தொழில் கூறுவது காண்க.

அருள்அர சேஅருட் குன்றேமன் றாடும் அருளிறையே
அருள்அமு தேஅருட் பேறே நிறைந்த அருட்கடலே
அருள்அணி யேஅருட் கண்ணேவிண் ணோங்கும் அருள்ஒளியே
அருள்அற மேஅருட் பண்பேமுக் கண்கொள் அருட்சிவமே. (௨௧௯)

நிலையறி யாத குடும்பத் துயரென்னும் நீத்தத்திலே
தலையறி யாது விழுந்தேனை ஆண்டருள் தானளிப்பாய்
அலையறி யாத கடலேமுக் கண்கொண்ட ஆரமுதே
விலையறி யாத மணியே விடேலிதென் விண்ணப்பமே. (௨௨௦)

மெய்யகத் தேகணப் போதும் விடாது விரும்புகின்றோர்
கையகத் தேநின் றொளிர்கனி யேநுதற் கட்கரும்பே
வையகத் தேநினை அல்லாமல் நற்றுணை மற்றிலைஇப்
பொய்யகத் தேன்செயும் தீங்கா யிரமும் பொறுத்தருளே. (௨௨௧)

முலைக்கலங் கார மிடுமட வார் மயல் மூடிஅவர்
தலைக்கலங் கார மலர்சூடு வார்நின் றணைவழுத்தார்
இலைக்கலங் காரவ் வியமன்வந் தாலென் இசைப்பர்வெள்ளி
மலைக்கலங் கார மணியேமுக் கண்கொண்ட மாமருந்தே. (௨௨௨)

புரிகின்ற வீட்டகம் போந்தடி பட்டுப் புறங்கடையில்
திரிகின்ற நாய்க்கும் சிரிப்பாம்என் பாவிச் சிறுபிழைப்பைச்
சொரிகின்ற புண்ணில் கனலிடல் போலெணுந் தோறுநெஞ்சம்
எரிகின்ற தென்செய்கு வேன்பிறை வார்சடை என்னமுதே. (௨௨௩)

மனக்கேத மாற்று மருந்தே பொதுஒளிர் மாணிக்கமே
கனக்கே துறஎன் கருத்தறி யாமல் கழறுகின்ற
தனக்கேளர் பாற்சென் றடியேன் இதயம் தளர்வதெல்லாம்
நினக்கே தெரிந்த தெனக்கே அருள நினைந்தருளே. (௨௨௪)

மோகங் கலந்த மனத்தேன் துயரங்கள் முற்றுமற்றுத்
தேகங் கலந்த பவந்தீர்க்கும் நின்பதம் சிந்திக்கும்நாள்
போகங் கலந்த திருநாள் மலையற் புதப்பசுந்தேன்
பாகங் கலந்தசெம் பாலே நுதற்கட் பரஞ்சுடரே. (௨௨௫)

கோலொன்று கண்ட இறைமகன் வாழ்வினும் கோடிபங்கு[273]
மேலொன்று கண்டனம் நெஞ்சேஎன் சொல்லை விரும்பினியஞ்
சேலொன்று கண்ட மணியான் வரைப்பசுந் தேன்கலந்த
பாலொன்று கண்டகண் கொண்டுயர் வாழ்வு பலித்ததுவே. (உஉசு)

புலையள வோஎனும் நெஞ்சக னேன்துயர்ப் போகமெட்டு
மலையள வோ இந்த மண்ணள வோவந்த வானளவோ
அலையள வோவன்று மன்றுணின் றோங்கும் அருமருந்தே
இலையள வோஎனுந் தேவே அறிந்தும் இரங்கிலையே. (உஉஎ)

கல்லென்று வல்லென்று மின்னார் புளகக் கனதனத்தைச்
சொல்லென்று சொல்லுமுன் சொல்லுமந் தோநின் துணையடிக்கண்
நில்லென்று பல்ல நிகழ்த்தினும் என்மனம் நிற்பதன்றே
அல்லென்று வெல்களங் கொண்டோய்என் செய்வ தறிந்திலனே. (உஉஅ)

கள்ளா டியகொன்றைச் செஞ்சடை யோய்நற் கனகமன்றின்
உள்ளா டியமலர்ச் சேவடி யோய்இவ் வுலகியற்கண்
எள்ளா டியசெக் கிடைப்படல் போல்துன் பிடைஇளைத்துத்
தள்ளா டியநடை கொண்டேற்கு நன்னடை தந்தருளே. (உஉகூ)

மருக்கா மலர்க்குழல் மின்னார் மயல்சண்ட மாருதத்தால்
இருக்கா துழலுமென் ஏழைநெஞ் சேஇவ் விடும்பையிலே
செருக்கா துருகிச் சிவாய நமஎனத் தேர்ந்தன்பினால்
ஒருக்கால் உரைக்கில் பெருக்காகும் நல்லின்பம் ஓங்கிடுமே. (உ௩௦)

மதிக்கண்ணி வேணிப் பெருந்தகை யேநின் மலரடிக்குத்
துதிக்கண்ணி சூட்டுமெய்த் தொண்டரில் சேர்ந்துநின் தூயஒற்றிப்
பதிக்கண்ணி நின்னைப் பணிந்தேத்தி உள்ளம் பரவசமாக்
கதிக்கண்ணி வாழும் படிஅரு ளாயென் கருத்திதுவே.[274] (உ௩க)

---

273. 226-ஆம் பாவில் இறைவனுக்கு ஆட்பட்டு வாழும் வாழ்வுக்கு இணை எதுவும் இல்லை எனல் காண்க. இதனோடு பின்வரும் அப்பர் சுவாமிகள் தேவாரப் பெருமறையை ஒத்துணர்க:
"கனியி னும்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்அடைந் தார்க்(கு)இடை மருதனே."

274. 231, 232-ஆம் பாக்களில் நம் அடிகளார் தம்மைப் பழ அடியாரொடும் கூட்டும்படி முறையிடுவது காண்க. இவற்றோடு பின்வரும் மணிவாசகப் பெருமறையை ஒத்துணர்க:
"மருளார் மனத்தோ(டு) உனைப்பிரிந்து வருந்து வேனை வாஎன்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல் செத்தே போனால் சிரியாரோ."

இரையேற்று துன்பக் குடும்ப விகார இருட்கடலில்
புரையேற்று நெஞ்சம் புலர்ந்துநின் றேனைப் பொருட்படுத்திக்
கரையேற்ற வேண்டுமென் கண்ணே பவத்தைக் கடிமருந்தே
திரையேற்று செஞ்சடைத் தேவே அமரர் சிகாமணியே. (௨௧௨)

திருச்சிற்றம்பலம்

சா. திருஅருண் முறையீடு[275]

முற்றிற்று.

---

275. இந்நூலில் 219-ஆம் பாவாக இருக்கும் "அருள் அரசே" என்று தொடங்கும் பாவினையும், 210-ஆம் பாவாக இருக்கும் "போற்றி என் ஆவித்துணையே" என்று தொடங்கும் பாவினையும் முறையே இந்நூலின் முதற்பாவாகவும் இறுதிப்பாவாகவும் திருவாளர் ச. மு. கந்தசாமி பிள்ளை அவர்களது 1924-ஆம் ஆண்டுப் பதிப்பில் அவர்கள் அச்சிட்டிருக்கிறார்கள். நம் அடிகளார் திருவேட்டைப் பின்பற்றி இங்கு அச்சிட்டிருப்பது போலவே திருவாளர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களது 1867-ஆம் ஆண்டு முதற் பதிப்பிலும் அச்சிட்டிருக்கிறது.

220-ஆம் அடிக்குறிப்பில் மஹாதேவமாலை சார்பாக மேற்கோள் முதலியவைபற்றி உரைத்திருப்பது இந்நூலுக்கும் பொருந்தும். தமிழின் எளிமையையும் கனிவையும் உள்ளுணர்வையும் பயில விரும்பும் தமிழ் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் இந்நூல் என்றும் வற்றாத வைப்பாக இருக்கிறது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
சிவகணபதி துணை

எ. வடிவுடை மாணிக்க மாலை[276]

காப்பு

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

சீர்கொண்ட ஒற்றிப் பதியுடை யானிடம் சேர்ந்தமணி
வார்கொண்ட கொங்கை வடிவாம் பிகைதன் மலரடிக்குத்
தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்தத் தமியனுக்கே
ஏர்கொண்ட நல்லருள் ஈயும் குணாலய ஏரம்பனே.

---

276. வடிவுடை மாணிக்க மாலை என்னும் இந்நூலினை நம் பெருமானார் இராமலிங்க அடிகளார், அழகும், அன்பும், ஆனந்தமும் கலந்து தேக்கிய செம்பொருட் பெருவெள்ளத்தில், அடியாராவார் எல்லவரும் மீளா ஆளாய் மூழ்கி உய்யுமாறு திருஅருளால் திருவாய் மலர்ந்திருக்கிறார்கள்.

உலகம் யாவையும் பெற்றெடுத்து வளர்த்து வரும் நம் தாயினை அடிகளார் மடலவிழ் ஞான மலரே என்றும், மதுரச் செழுங் கனியே என்றும், காம நெஞ்சர் காணாத பொன்னே என்றும், வாடாமணி மலர்க் கொம்பே என்றும், மலை மங்கையங் கோமள மானே என்றும், ஒப்போதரு மலைப் பெண்அமுதே என்றும், மன்னும் கடைக்கண் மயிலே என்றும், மரகத மென் கரும்பே என்றும், இமயப் பொற் பாவாய் என்றும், மனங் கடந்து, ஓதும் அவ்வாக்கும் கடந்த மறை அன்னமே என்றும், எழுதா எழில் உயிர்ச் சித்திரமே என்றும், இசையிற் கனிந்த குயிற் குரலே என்றும், இரும்பேய் மனத்தினர்பால் இசையாத இளங் கிளியே என்றும், செம்பால் கலந்த பைந்தேனே என்றும், குயின் மென் குழற் பிடியே என்றும், தெய்வ மணமொன்று பச்சைக்கொடியே என்றும், வண்ணப் பசும்பொன் வடிவே என்றும், எண்ணப்படா எழில் ஓவியமே என்றும், மாறாக் கருணை மழையே என்றும், காதார் நெடுங்கட் கரும்பே என்றும், 'மெய்யன்பர் புனைந்த தமிழ்ப் பாவாய்' என்றும், இன்ன பலபல வகையில் எழுதற்கரிய பேரழகு பிறங்க, பேரன்போடு புனைந்து, ஆனந்தமாக அழைக்கும் இப்பசுந்தமிழ்ப் பாவையை அகக்கண்களாலும் புறக்கண்களாலும் கண்ணிறைந்து காண்பவர் அன்புருவம் அடைந்தும் இன்புருவம் எய்தியும் பேரா இயற்கைப் பெருவாழ்வடைதல் ஒருதலை. .

வரிக்கு வரி சொற்கள் தோறும் எழுத்தெழுத்திற்கு 'அழகொழுகும் மழ இளந்தமிழில் இங்ஙனம் ஒரு நூல் உருக்கொண்டது தமிழ் மக்களான நாமும் நம் முன்னோரும் பின்னோரும் செய்த பெருந்தவத்தின் உறுபயனே ஆகும் என்க. என்னை? வடித்த தெள்ளமுதில் தோய்ந்த இதன் நுண்அழகினைப் பிற மொழிகளில் பார்த்தலும் பெயர்த்தலும் இயலாததொன்று ஆகலின்.

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

கடலமு தேசெங் கரும்பே அருட்கற்ப கக்கனியே
உடல்உயி ரேஉயிர்க் குள்உணர் வேஉணர் வுள்ஒளியே
அடல்விடை யார்ஒற்றி யார்இடங் கொண்ட அருமருந்தே
மடலவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே.[277] (க)

அணியே அணிபெறும் ஒற்றித் தியாகர்தம் அன்புறுசற்
குணியேஎம் வாழ்க்கைக் குலதெய்வ மேமலைக் கோன்தவமே
பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட தெய்வப் பதிகொள்சிந்தா
மணியேஎன் கண்ணுண் மணியே வடிவுடை மாணிக்கமே. (உ)

மானேர் விழிமலை மானேஎம் மானிடம் வாழ்மயிலே
கானேர் அளகப் பசுங்குயி லேஅருட் கட்கரும்பே
தேனே திருவொற்றி மாநகர் வாழும் சிவசத்தியே
வானே கருணை வடிவே வடிவுடை மாணிக்கமே. (ங)

---

276 (தொடர்ச்சி). பெண்மை என்றாலே மென்மை, சாயல், அழகு, அன்பு, பொறுமை, பரிவு, தன்னலம் மறுத்தல், சார்ந்தோர் குற்றங்குறைகளைச் சகித்துக் கொள்வது, உருக்கம், உயிர்க்கிரங்கி உபகரித்தல், கனிவு என்பன போன்ற பலபல அருட்பண்புகள் நம் அகக்கண்ணுக்குப் புலனும். அருட் பெண்மை நிறைந்து அகமும் புறமும் ததும்பி வழியும் இவ் வடிவுடை மாணிக்க மாலையைச் சிறப்பாக—இன்றுணை மகளிர்க்கு இன்றியமையாக் கற்புக் கடம்பூண்ட—நம் தமிழ்த்தாயர்கள், பெரியரும் சிறியரும், ஒருமையுடன் ஓதி, உளங்கொண்டு உணர்ந்து, உயிரினும் சிறந்த தம் தம் பெண்மைக்கு அருளரசியின் தெய்வப் பெண்மையை மணிமுடியாகச் சூட்டிக் கொள்வார்களாக.

திருஅருளால் அரிதில் கிடைத்த இராமலிங்க அடிகளாருடைய திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திருஏட்டினைப் பின்பற்றி இங்கு அச்சிட்டிருக்கிறது. இச்சுவடியின் காப்பேட்டில் "உ. சிவமயம். சண்முக நம. சுந்தரீ நம. வடிவுடை மாணிக்கமாலை" என்றும், காப்புச் செய்யுளுக்குப் பிறகு சிவ சிவ என்று பதினாறு முறையும் அடிகளார் எழுதியிருக்கிறார்கள். அடிகளார்க்கு ஆட்பட்டிருந்த அன்பர் தருமலிங்கம் பிள்ளை அவர்கள் பெயர்த்து எழுதிய சுவடி ஒன்றும் இந்நூலுக்குக் கிடைத்திருக்கிறது. இதன் தலைப்பேட்டில் "சிவ கணபதி துணை. எனது சற்குருவாகிய சிதம்பரம் இராமலிங்க தேசிகர் திருவாய் மலர்ந்தருளிய வடிவுடை மாணிக்க மாலை. திருச்சிற்றம்பலம்" என்று எழுதியிருக்கிறது.

277. முதற் பாவில் வடிவுடை மாணிக்கத்தை நம் பெருமானார் கரைகடந்த பேரன்போடு பாலூறு தேன்வாய் கொண்டு அமுதம் சொரிய அழைத்தலைத் தத்துவங்களெல்லாம் குழையப் பின்பற்றி அழைத்து இன்புறுக. பின்வரும் பாக்களில் பெரும்பாலன இத்தன்மையனவே.

பொருளே அடியர் புகலிட மேஒற்றிப் பூரணன்தன்
அருளேஎம் ஆருயிர்க் காந்துணை யேவிண் ணவர்புகழும்
தெருளேமெய்ஞ் ஞானத் தெளிவே மறைமுடிச் செம்பொருளே
மருளேத நீக்கும் ஒளியே வடிவுடை மாணிக்கமே. (௪)

திருமாலும் நான்முகத் தேவுமுன் னாள்மிகத் தேடிமனத்
தருமா லுழக்க அனலுரு வாகி அமர்ந்தருளும்
பெருமான்எம் மான்ஒற்றிப் பெம்மான்கைம் மான்கொளும் பித்தன்மலை
மருமான் இடங்கொள்பெண் மானே வடிவுடை மாணிக்கமே. (௫)

உன்னேர் அருள்தெய்வம் காணேன் மனத்தும் உரைக்கப்படாப்
பொன்னேஅப் பொன்னற் புதலொளி யேமலர்ப் பொன்வணங்கும்
அன்னே எம்ஆருயிர்க் கோர்உயி ரேஒற்றி யம்பதிவாழ்
மன்னே ரிடம்வளர் மின்னே வடிவுடை மாணிக்கமே. (௬)

கண்ணேஅக் கண்ணின் மணியே மணியில் கலந்தொளிசெய்
விண்ணே வியன்ஒற்றி யூர்அண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே மலைபெறும் பெண்மணி யேதெய்வப் பெண்ணமுதே
மண்நேயம் நீத்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (௭)

மலையான் தவஞ்செய்து பெற்றமுத் தேஒற்றி வாழ்கனகச்
சிலையான் மணக்க மணக்குந்தெய் வீகத் திருமலரே
அலையான் மலிகடல் பள்ளிகொண் டான்தொழும் ஆரமுதே
வலையான் அருமை மகளே வடிவுடை மாணிக்கமே. (௮)

காமம் படர்நெஞ் சுடையோர் கனவினும் காணப்படாச்
சேமம் படர்செல்வப் பொன்னே மதுரச் செழுங்கனியே
தாமம் படர்ஒற்றி யூர்வாழ் பவளத் தனிமலையின்
வாமம் படர்பைங் கொடியே வடிவுடை மாணிக்கமே. (௯)

கோடா அருட்குணக் குன்றே சிவத்தில் குறிப்பிலரை
நாடாத ஆனந்த நட்பேமெய் யன்பர் நயக்கும்இன்பே
பீடார் திருவொற்றிப் பெம்மான் இடஞ்செய் பெருந்தவமே
வாடா மணிமலர்க் கொம்பே வடிவுடை மாணிக்கமே.[278] (௧௦)

---

278. 10-ஆம் பாவொடு பின்வரும் செந்தமிழ்ப் பெருங்கடலான நம் குமரகுருபர சுவாமிகள் கண்ட காட்சியினை நோக்குக :
“ ஊன்வலையில் அகப்பட்டார்க்(கு) உட்படாய்.”

நாலே எனுமறை அந்தங்கள் இன்னமும் நாடியெனைப்
போலே வருந்த வெளிஒளி யாய்ஒற்றிப் புண்ணியர்தம்
பாலே இருந்த நினைத்தங்கை யாகப் பகரப்பெற்ற
மாலே தவத்தில் பெரியோன் வடிவுடை மாணிக்கமே.[279] (கக)

கங்கைகொண் டோன்ஒற்றி யூர்அண்ணல் வாமம் கலந்தருள்செய்
நங்கைஎல் லாஉல குந்தந்த நின்னைஅந் நாரணற்குத்
தங்கைஎன் கோஅன்றித் தாயர்என் கோசொல் தழைக்குமலை
மங்கையங் கோமள மானே வடிவுடை மாணிக்கமே. (கஉ)

சோலையிட் டார்வயல் ஊரொற்றி வைத்துத்தன் தொண்டரன்பின்
வேலையிட் டால்செயும் பித்தனை மெய்யிடை மேவுகரித்
தோலையிட் டாடும் தொழிலுடை யோனைத் துணிந்துமுன்னாள்
மாலையிட் டாய்இஃ தென்னே வடிவுடை மாணிக்கமே.[280] (கங)

தனையாள் பவரின்றி நிற்கும் பரமன் தனிஅருளாய்
வினையாள் உயிர்மல நீக்கிமெய் வீட்டின் விடுத்திடுநீ
எனையாள் அருளொற்றி யூர்வா ழவன்றன் னிடத்துமொரு
மனையாள் எனநின்ற தென்னே வடிவுடை மாணிக்கமே.[281] (கச)

பின்னின்ற பிள்ளையின் மேலார்வம் தாய்க்கெனப் பேசுவர்நீ
முன்னின்ற பிள்ளையின் மேலாசை யுள்ளவா மொய்யசுரர்
கொன்னின்ற போர்க்கிளம் பிள்ளையை ஏவக் கொடுத்ததென்னே
மன்னின்ற ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. (கரு)

---

279. 11, 12-ஆம் பாக்களொடு பின்வரும் திருவாசக மறைமொழியினை உய்த்துணர்க:

"என்னுடை ஆரமு(து) எங்களப்பன் எம்பெருமான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன் தமையன்."

280. 13, 14, 15-ஆம் பாக்களில் நம் அடிகளார் உளையா அன்பில் உதித்த விளையாட்டு மொழிகள் மொழிந்து இன்புறுதல் காண்க.

281. 14-ஆம் பாடலொடு 11, 12-ஆம் பாடல் அடிக்குறிப்பினையும் பார்க்க.

பையாளும் அல்குல் சுரர்மட வார்கள் பலருளும்இச்[282]
செய்யாளும் வெண்ணிற மெய்யாளும் எத்தவம் செய்தனரோ
கையாளும் நின்னடிக் குற்றேவல் செய்யக் கடைக்கணித்தாய்
மையாளும் கண்ணொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (கசு)

---

282. 16, 17, 18, 19-ஆம் பாக்களொடு பின்வரும் குமரகுருபர சுவாமிகளுடைய அமுதொழுகு பசுந்தமிழ் காண்க:

"திருமகள் கலைமகள் தலைமகள் மலைமகள்."

"முகரக் களிவண்(டு) அடைகிடக்கும்
முளரிக் கொடிக்கும் கலைக்கொடிக்கும்
முருந்து முறுவல் விருந்திடுபுன்
மூரல் நெடுவெண் நிலவெறிப்ப
மகரக் கருங்கண் செங்கனிவாய்
மடமான் கன்று வருகவே."

"குண்டுபடு பேரகழி வயிறுளைந்(து) ஈன்றபைங்
கோதையும் மதுரமொழுகும்
கொழிதமிழ்ப் பனுவல் துறைப்படியும் மடநடைக்
கூந்தலம் பிடியும்அறுகால்
வண்டுபடு முண்டக மனைக்குடி புகச்சிவ
மணங்கமழ விண்டதொண்டர்
மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட
மாணிக்கவல்லி"

"பதுமமொ(டு) ஒழுகொளி வளையுகின் நளினமு
கத்துமி டற்றுமுறப்
பனிமதி யொடுசுவை அமுதமு நுதலொடு
சொற்குத லைக்கணிறீஇ
முதுதமி ழுததியில் வருமொரு திருமகள்
முத்தம ளித்தருளே."

"புண்டரிக
வீட்டிற் பொலிந்துமதுரச்
சொற்பொலி பழம்பாடல் சொல்லுகின் றவளுநின்
சொருபமென் பதும்"

மேற்கண்ட பாடல்கள் முறையே திருமகளும் கலைமகளும் மலைமகளின் துணைவியர் என்றும், அவ்விரு தெய்வ மகளிரிடம் மலைமகட்குத் தனிச் சார்பு உண்டென்றும், திருமகளும் கலைமகளும் செந்தாமரையிலும் வெண்தாமரையிலும் வீற்றிருப்ப, மலைமகள் அன்பர் உளத் தாமரையில் அமர்ந்திருக்கிறுள் என்றும், மலைமகளே திருமகளாகவும் கலைமகளாகவும் உருக்கொண்டிருக்கிறுள் என்றும் குமரகுருபர சுவாமிகள், ஒழியா அன்பொடு, பேரழகு ததும்ப, மொழிந்திருத்தலைக் கூர்ந்துணர்க.

இலையாற்று நீமலர்க் காலால் பணிக்குங்குற் றேவலெல்லாம்
தலையால் செயும்பெண்கள் பல்லோரில் பூமகள் தன்னைத்தள்ளாய்
நிலையால் பெரியநின் தொண்டர்தம் பக்க நிலாமையினுன்
மலையாற் கருளொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (கஎ)

கலைமக ளோநின் பணியைஅன் போடும் கடைப்பிடித்தாள்
அலைமக ளோஅன் பொடுபிடித் தாள்எற் கறைதிகண்டாய்
தலைமக ளேஅருட் டாயேசெவ் வாய்க்கருந் தாழ்குழற்பொன்
மலைமக ளேஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (கஅ)

பொன்னோடு வாணிஎன் போரிரு வோரும் பொருணற்கல்வி
தன்னோ டருளுந் திறநின்குற் றேவலைத் தாங்கிநின்ற
பின்னோ அலததன் முன்னோ தெளிந்திடப் பேசுகநீ
மன்னோ டெழிலொற்றி யூர்வாழ் வடிவுடை மாணிக்கமே. (கக)

காமட் டலர்திரு வொற்றிநின் னாயகன் கங்கைதசுற்றி
யேமட் டரையொடு நிற்பது கண்டும் இரங்கலர்போல்
நீமட்டு மேபட் டுடுக்கின் றனைஉன்றன் நேயம்என்னே
மாமட் டலர்குழல் மானே வடிவுடை மாணிக்கமே.[283] (உ0)

வீற்றுார்நின் றன்மணத் தம்மியின் மேல்சிறு மெல்லணிச்சம்
ஆற்றாநின் சிற்றடிப் போதினைத் தூக்கிவைத் தாரெனின்மால்
ஏற்றார் திருவொற்றி யூரார் களக்கறுப் பேற்றவரே
மாற்றா இயல்கொண் மயிலே வடிவுடை மாணிக்கமே. (உக)

பொருப்புறு நீலியென் பார்நின்னை மெய்அது போலும்ஒற்றி
விருப்புறு நாயகன் பாம்பா பரணமும் வெண்தலையும்
நெருப்புறு கையும் கனல்மேனி யும்கண்டு நெஞ்சம்அஞ்சாய்
மருப்புறு கொங்கை மயிலே வடிவுடை மாணிக்கமே. (உஉ)

---

283. 20 முதல் 6 பாக்களில் நம் பெருமானார் மேலும் விளையாட்டு மொழிகள் கூறுவது காண்க.

20-ஆம் பாவொடு பின்வரும் பத்திமை பதிந்த அபிராமி அந்தாதிச் செய்யுள் பார்க்க ;

"விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யானிடம் சேர்பவளே."

அனம்பொறுத் தான்புகழ் ஒற்றிநின் நாயகன் அங்குமிழித்
தனம்பொறுத் தாள்ஒரு மாற்றுளைத் தன்முடி தன்னில்வைத்தே
தினம்பொறுத் தான்அது கண்டும் சினமின்றிச் சேர்ந்தநின்போல்
மனம்பொறுத் தார்எவர் கண்டாய் வடிவுடை மாணிக்கமே. (உங)

ஒருரு வாய்ஒற்றி யூர்அமர்ந் தார்நின் னுடையவர்பெண்
சீருரு வாகுநின் மாற்றுளை நீதெளி யாத்திறத்தில்
நீருரு வாக்கிச் சுமந்தார் அதனை நினைந்திலையே
வாருரு வார்கொங்கை நங்காய் வடிவுடை மாணிக்கமே. (உச)

சார்ந்தேநின் பால்ஒற்றி யூர்வாழும் நாயகர் தாமகிழ்வு
கூர்ந்தே குலாவும்அக் கொள்கையைக் காணில் கொதிப்பளென்று
தேர்ந்தேஅக் கங்கையைச் செஞ்சடை மேல்சிறை செய்தனர்ஒண்
வார்ந்தே குழைகொள் விழியாய் வடிவுடை மாணிக்கமே. (உரு)

நீயே எனது பிழைகுறிப் பாயெனில் நின்னடிமைப்[284]
பேயேன் செயும்வண்ணம் எவ்வண்ண மோஎனைப் பெற்றளிக்கும்
தாயே கருணைத் தடங்கட லேஒற்றிச் சார்குமுத
வாயேர் சவுந்தர[285] மானே வடிவுடை மாணிக்கமே. (உசு)

முப்போதும் அன்பர்கள் வாழ்த்தொற்றி யூர்எம் முதல்வர்மகிழ்
ஒப்போ தருமலைப் பெண்ணமு தேஎன்று வந்துநினை
எப்போதும் சிந்தித் திடர்நீங்கி வாழ எனக்கருள்வாய்
மைப்போ தனையகண் மானே வடிவுடை மாணிக்கமே. (உஎ)

மீதலத் தோர்களுள் யார்வணங் காதவர் மேவுநடுப்
பூதலத் தோர்களுள் யார்புக ழாதவர் போற்றிநிதம்
பாதலத் தோர்களுள் யார்பணி யாதவர் பற்றிநின்றுள்
மாதலத் தோங்கொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (உஅ)

---

284. • 26-ஆம் பாவொடு பின்வரும் நம் தாயுமான அடிகளாரின் என்புருகும் முறையீட்டினைக் காண்க:

"உலகிலே பிழைபொறுக்கும்
தாயான கருணையும் உனக்குண்(டு) எனக்கினிச்
சஞ்சலம் கெடஅருள் செய்வாய்."
" அன்னையிலாச் சேய்போல் அலக்கணுற்றேன் கண்ணா
என்னகத்தில் தாய்போல் இருக்கும் பராபரமே."
" தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்விடத்தும்
நீஇருந்தும் நான்தளர்ந்து நின்றேன் பராபரமே."

285. சௌந்தரம் என்பது சவுந்தரம் எனப் போலியாயிற்று: தொ.வே.

சேய்க்குற்றம் தாய்பொறுத் தேடா வருகெனச் செப்புவள்இந்
நாய்க்குற்றம் நீபொறுத் தாளுதல் வேண்டும் நவின்மதியின்
தேய்க்குற்ற மாற்றும் திருவொற்றி நாதர்தந் தேவிஅன்பர்
வாய்க்குற்றம் நீக்கும் மயிலே வடிவுடை மாணிக்கமே.[286] (உகூ)

செங்கம லாசனன் தேவிபொன் நாணும் திருமுதலோர்
சங்கம தாமிடற் றேங்குபொன் நாணும் தலைகுனித்துத்
துங்கமு றுதுளம் நாணத் திருவொற்றித் தோன்றல்புனை
மங்கல நாணுடை யாளே வடிவுடை மாணிக்கமே.[287] (௩௦)

சேடா ரியன்மணம் வீசச் செயன்மணம் சேர்ந்துபொங்க
ஏடார் பொழிலொற்றி யூரண்ணல் நெஞ்சம் இருந்துவக்க
வீடா இருளும் முகிலும்பின் னிட்டு வெருவவைத்த
வாடா மலர்க்குழ லாளே வடிவுடை மாணிக்கமே. (௩௧)

புரநோக்கி னல்பொடி தேக்கிய ஒற்றிப் புனிதர்களக்
கரநோக்கி[288] நல்லமு தாக்கிநிற் போற்றுங் கருத்தினர்ஆ
தரநோக்கி உள்ளிருள் நீக்கிமெய்ஞ் ஞானத் தனிச்சுகந்தான்
வரநோக்கி ஆள்விழி மானே வடிவுடை மாணிக்கமே. (௩௨)

உன்னும் திருவொற்றி யூருடை யார்நெஞ் சுவப்பஎழில்
துன்னும் உயிர்ப்பயிர் எல்லாந் தழைக்கச் சுகக்கருணை
என்னும் திருவமு தோயாமல் ஊற்றி எமதுளத்தின்
மன்னும் கடைக்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே. (௩௩)

---

286. 29-ஆம் பாவொடு பின்வரும் குமரகுருபர சுவாமிகளின் தண்டமிழ்த் தேறல் நுகர்க:

"தாட்டுணை
குறுகுதொண்டர்பிழை அறம றந்துபிறர் குணமி கழ்ந்ததக வில்லியை"

இதில் உலகன்னையை நடுநிலை பிறழ்ந்தவள் என்று ஏசிக் களிப்பது காண்க.

287. 30-ஆம் பாவொடு பின்வரும் குமரகுருபர சுவாமிகளின் வடிதமிழ் தெரிக்கும் உண்மையையும் கூட்டிப் பார்க்க:

"நம்பா நினக்கோல முறையோ எனக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவ ரென்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர்"

288. காம் என்பது விடம்: தொ.வே.

வெள்ளம் குளிரும் சடைமுடி யோன்ஒற்றி வித்தகன்தன்
உள்ளம் குளிரமெய் பூரிப்ப ஆனந்தம் ஊற்றெடுப்பத்
தெள்ளம் குளிர்இன் அமுதே அளிக்கும்செவ் வாய்க்குமுத
வள்ளம் குளிர்முத்த மானே வடிவுடை மாணிக்கமே. (௩௪)

மாநந்த மார்வயல் காழிக் கவுணியர் மாமணிக்கன்
றாநந்த இன்னமு தூற்றும் திருமுலை ஆரணங்கே
காநந்த வோங்கும் எழிலொற்றி யார்உட் களித்தியலும்
வாநந் திருமிடை மானே வடிவுடை மாணிக்கமே. (௩௫)

வான்தேட நான்கு மறைதேட மாலுடன் வாரிசமே
லான்தேட மற்றை அருந்தவர் தேடஎன் அன்பின்மையால்
யான்தேட என்னுளம் சேர்ஒற்றி யூர்எம் இருநிதியே
மான்தேடும் வாட்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே. (௩௬)

முத்தேவர் விண்ணன்[289] முதல்தேவர் சித்தர் முனிவர்மற்றை
எத்தே வருநின் அடிநினை வார்நினைக் கின்றிலர்தாம்
செத்தே பிறக்கும் சிறியர்அன் றோஒற்றித் தேவர்நற்றா
மத்தேவர் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே. (௩௭)

திருநாள் நினைத்தொழும் நன்னாள் தொழாமல் செலுத்தியநாள்
கருநாள் எனமறை எல்லாம் புகலும் கருத்தறிந்தே
ஒருநா ளினுநின் றனைமற வார்அன்பர் ஒற்றியில்வாழ்
மருநாண் மலர்க்குழல் மானே வடிவுடை மாணிக்கமே.[290] (௩௮)

வாணாள் அடைவர் வறுமை யுறார்நன் மனைமக்கள்பொன்
பூணாள் இடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மைஒன்றும்
காணார்நின் நாமம் கருதுகின் றோர்ஒற்றிக் கண்ணுதல்பால்
மாணார்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே.[291] (௩௯)

---

289. விண்ணன் என்பது இந்திரன் : தொ.வே.

290. 38-ஆம் பாவொடு பின்வரும் தேவார மறைமொழியினையும் நெஞ்சில் பொறித்துவைத்தல் கடனாம் :

"பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

291. 39-ஆம் பாவொடு குமரகுருபர சுவாமிகள், தாயுமானப் பெருந்தகையார், அபிராமிபட்டர் முறையே பின்வருமாறு கூறுவன காண்க :

"பொதுவற அடிமைசெய் திடுவழி அடியர்பொ
ருட்டலர் வட்டணையில்

சீரறி வாய்த்திரு வொற்றிப் பரம சிவத்தைநினைப்
போரறி வாய்அவ் அறிவாம் வெளிக்கப் புறத்துநின்றாய்
யாரறி வார்நின்னை நாயேன்அறிவு. தழகுடைத்தே
வாரெறி பூண்முலை மானே வடிவுடை மாணிக்கமே. (௪0)

போற்றிடு வோர்தம் பிழைஆ யிரமும் பொறுத்தருள்செய்
வீற்றொளிர் ஞான விளக்கே மரகத மென்கரும்பே
ஏற்றொளிர் ஒற்றி யிடத்தார்இடத்தில் இலங்கும்உயர்
மாற்றொளி ரும்பசும் பொன்னே வடிவுடை மாணிக்கமே. (௪௧)

ஆசைஉள் ளார்அயன் மால்ஆதி தேவர்கள் யாரும்நின்தாள்
பூசையுள் ளார்எனில் எங்கே உலகர்செய் பூசைகொள்வார்
தேசையுள் ளார்ஒற்றி யூருடை யார்இடஞ் சேர்மயிலே
மாசையுள்[292] ளார்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே. (௪௨)

அண்டாரை வென்றுல காண்டுமெய்ஞ் ஞானம் அடைந்துவிண்ணில்
பண்டாரை சூழ்மதி போலிருப் போர்கள்நின் பத்தர்பதம்
கண்டாரைக் கண்டவர் அன்றோ திருவொற்றிக் கண்ணுதல்சேர்
வண்டாரை வேலன்ன மானே வடிவுடை மாணிக்கமே. (௪௩)

---

291 (தொடர்ச்சி).

தழைமலர் பொதுளிய களிஅளி குமிறுகு
முற்றிரு வைத்தவளச்
சததள முளரியின் வனிதையை உதவுக
டைக்கண்ம டப்பிடியே."
பதிஉண்டு நிதிஉண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண்(டு) எக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம.
படரெனும் திமிரமணுகாக்
கதிஉண்டு ஞானமாம் கதிருண்டு சதிருண்டு
காயசித் திஉண்டு
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன் றும் உண்டாகுமேல்."

" தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல்வ மும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே."

292. மாசை என்பது பொன்: தொ.வே.

அடியார் தொழுநின் அடிப்பொடி தான்சற் றணியப்பெற்ற
முடியால் அடிக்குப் பெருமைபெற் றூர்அம் முகுந்தன்சந்தக்
கடியார் மலர்அயன் முன்னோர்தென் ஒற்றிக் கடவுட்செம்பால்
வடியாக் கருணைக் கடலே வடிவுடை மாணிக்கமே. (சச)

ஓவா தயன்முத லோர்முடி கோடி உறழ்ந்துபடில்
ஆவா அனிச்சம் பொருமலர்ச் சிற்றடி ஆற்றுங்கொலோ
காவாய் இமயப்பொற் பாவாய் அருளொற்றிக் காமர்வல்லி
வாவா எனும்அன்பர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (சரு)

இட்டார் மறைக்கும் உபநிட தத்திற்கும் இன்னுஞ்சற்றும்
எட்டாநின் பொன்னடிப் போதெளி யேன்தலைக் கெட்டுங்கொலோ
கட்டார் சடைமுடி ஒற்றிஎம் மான்நெஞ்சு கத்தமர்ந்த
மட்டார் குழன்மட மானே வடிவுடை மாணிக்கமே. (சசு)

வெளியாய் வெளிக்குள் வெறுவெளி யாய்ச்சிவ மேநிறைந்த
ஒளியாய் ஒளிக்குள் ஒளியாம் பரைநினை ஒப்பவரார்
எளியார்க் கெளியர் திருவொற்றி யார்மெய் இனிதுபரி
மளியாநின் றோங்கு மருவே வடிவுடை மாணிக்கமே. (சஎ)

விணங்காத லன்பர்தம் அன்பிற்கும் நின்புல விக்கும்அன்றி
வணங்கா மதிமுடி எங்கள் பிரான்ஒற்றி வாணனும்நின்
குணங்கா தலித்துமெய்க் கூறுதந் தான்எனக் கூறுவர்உன்
மணங்கா தலித்த தறியார் வடிவுடை மாணிக்கமே.[293] (சஅ)

---

293. 48-ஆம் பாவொடு பின்வரும் குமரகுருபர சுவாமிகளின் 'செழுமறை தெளிய வடித்த' தமிழினைப் பார்க்க:

"செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
எருக்கம் கண்ணியும் சூடி விருப்புடை
இடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினும்
மடலூர் குறிப்புத் தோன்ற விடலரும்
காமமீ தூர வழுற் றிரந்தவள்
தாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்தும் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினும் இருக்கும்."

பன்னும்பல் வேறண்டம் எல்லாம்அவ் அண்டப் பரப்பினின்று
துன்னும் சராசரம் யாவையும் ஈன்றது சூழ்ந்தும்உன்னை
இன்னும் இளந்தை அழியாத கன்னிகை என்பதென்னே
மன்னும் சுகாநந்த வாழ்வே வடிவுடை மாணிக்கமே.[294] (௪௯)

சினங்கடந் தோர்உள்ளச் செந்தா மரையில் செழித்துமற்றை
மனங்கடந் தோதும்அவ் வாக்கும் கடந்த மறைஅன்னமே
தினங்கடந் தோர்புகழ் ஒற்றிஎம் மானிடம் சேரமுதே
வனங்கடந் தோன்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே.[295] (௫0)

வல்லாரும் வல்லவர் அல்லாரும் மற்றை மனிதர்முதல்
எல்லாரும் நின்செயல் அல்லா தணுவும் இயக்கிலரேல்
இல்லாமை யால்உழல் புல்லேன்செய் குற்றங்கள் ஏதுகண்டாய்
மல்லார் வயல்ஒற்றி நல்லாய் வடிவுடை மாணிக்கமே.[296] (௫௧)

எழுதா எழில்உயிர்ச் சித்திர மேஇன் இசைப்பயனே
தொழுதாடும் அன்பர்தம் உட்களிப் பேசிற் சுகக்கடலே
செழுவார் மலர்ப்பொழில் ஒற்றிஎம் மான்தன் திருத்துணையே
வழுவா மறையின் பொருளே வடிவுடை மாணிக்கமே. (௫௨)

தெருட்பா லுறும்ஐங்கைச் செல்வர்க்கும் நல்இளஞ் சேய்க்குமகிழ்ந்
தருட்பால் அளிக்கும் தனத்தன மேஎம் அகங்கலந்த
இருட்பால் அகற்றும் இருஞ்சுட ரேஒற்றி எந்தைஉள்ளம்
மருட்பால் பயிலு மயிலே வடிவுடை மாணிக்கமே. (௫௩)

---

294. 49-ஆம் பாவொடு பின்வரும் தாயுமானப் பெருமானார் குமரகுருபர சுவாமிகள் அருளிய மெய்ம்மொழி காண்க:

“அகிலாண்ட கோடிஈன்ற
அன்னையே பின்னையும் கன்னிஎன மறைபேசும்
ஆநந்த ரூபமயிலே.”
“குமரர் முன்னிருவர் அமரர் அன்னைஇவள்
குமரி இன்னமும்என னச்சித்தர் பாடவும்”

295. 50-ஆம் பாவொடு பின்வரும் தாயுமானார் கண்ணி காண்க:
“கொலைகளவு கள்காமம் கோபம்விட்டால் அன்றோ
மலைஇலக்கா நின்அருள்தான் வாய்க்கும் பராபரமே.”

296. 51-ஆம் பாவாடு “அவனன்றி ஓரணுவும் அசையாது” என்னும் தாயுமானாரின் திருப்பாடல் பார்க்க.

அயிலேந்தும் பிள்ளைநற் றாயே திருவொற்றி ஐயர்மலர்க்
கயிலேந்[297] தரும்பெறல் முத்தே இசையில் கனிந்தகுரல்
குயிலே குயின்மென் குழற்பிடி யேமலைக் கோன்பயந்த
மயிலே மதிமுக மானே வடிவுடை மாணிக்கமே. (ருச)

செய்யகம் ஓங்கும் திருவொற்றி யூரில் சிவபெருமான்
மெய்யகம் ஓங்குநல் அன்பேநின் பால்அன்பு மேவுகின்றோர்
கையகம் ஓங்கும் கனியே தனிமெய்க் கதிநெறியே
வையகம் ஓங்கு மருந்தே வடிவுடை மாணிக்கமே.[298] (ருரு)

தரும்பேர் அருளொற்றி யூருடை யான்இடஞ் சார்ந்தபசுங்
கரும்பே இனியகற் கண்டே மதுரக் கனிநறவே
இரும்பேய் மனத்தினர் பால்இசை யாத இளங்கிளியே
வரும்பேர் ஒளிச்செஞ் சுடரே வடிவுடை மாணிக்கமே. (ருசு)

சேலேர் விழியருள் தேனே அடியருள் தித்திக்கும்செம்
பாலே மதுரச்செம் பாகேசொல் வேதப் பனுவல்முடி
மேலே விளங்கும் விளக்கே அருளொற்றி வித்தகனார்
மாலே கொளும்எழில் மானே வடிவுடை மாணிக்கமே. (ருஎ)

எம்பால் அருள்வைத் தெழிலொற்றி யூர்கொண் டிருக்கும்இறைச்
செம்பால் கலந்தபைந் தேனே கதலிச் செழுங்கனியே
வெம்பாலை நெஞ்சருள் மேவா மலர்ப்பத மென்கொடியே
வம்பால் அணிமுலை மானே வடிவுடை மாணிக்கமே. (ருஅ)

ஏமமுய்ப் போர்எமக் கென்றே இளைக்கில் எடுக்கவைத்த
சேமவைப் பேஅன்பர் தேடுமெய்ஞ் ஞானத் திரவியமே
தாமமைக் கார்மலர்க் கூந்தல் பிடிமென் தனிநடையாய்
வாமநற் சீர்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே.* (ருகூ)

---

297. கையிலேந்து எனற்பாலது கயிலேந்து எனப் போலியாயிற்று : தொ.வே.

298. 55-ஆம் பாவொடு பின்வரும் குமாரகுருபர சுவாமிகளின் தீந்தமிழினைக் கண்டு களிக்க :

" திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக."

மன்னோர் மலையன் மனையும்நற் காஞ்சன மாலையும்நீ
அன்னே எனத்திரு வாயால் அழைக்கப்பெற் றார்அவர்தாம்
முன்னே அருந்தவம் என்னே முயன்றனர் முன்னும்ஒற்றி
வன்னோர் இளமுலை மின்னே வடிவுடை மாணிக்கமே.[299] (சுo)

கணமொன்றி லேனும்என் உள்ளக் கவலைக் கடல்கடந்தே
குணமொன்றி லேன்எது செய்கேன்நின் உள்ளக் குறிப்பறியேன்
பணமொன்று பாம்பணி ஒற்றிஎம் மானிடப் பாலில்தெய்வ
மணமொன்று பச்சைக் கொடியே வடிவுடை மாணிக்கமே. (சுக)

கருவே தனையற என்னெஞ் சகத்தில் களிப்பொடோற்றிக்
குருவே எனும்நின் கணவனும் நீயும் குலவும் அந்தத்
திருவே அருள்செந் திருவே முதற்பணி செய்யத்தந்த
மருவே மருவு மலரே வடிவுடை மாணிக்கமே. (சுஉ)

எண்ணிய எண்ணங்கள் எல்லாம் பலிக்க எனக்குன்அருள்
பண்ணிய உள்ளங்கொள் உள்ளும் புறம்பும் பரிமளிக்கும்
புண்ணிய மல்லிகைப் போதே எழில்ஒற்றிப் பூரணர்பால்
மண்ணிய பச்சை மணியே வடிவுடை மாணிக்கமே. (சுங)

தீதுசெய் தாலும்நின் அன்பர்கள் தம்முன் செருக்கிநின்று
வாதுசெய் தாலும்நின் தாள்மறந் தாலும் மதியிலியேன்
ஏதுசெய் தாலும் பொறுத்தருள் வாய்ஒற்றி யின்னிடைப்பூ
மாதுசெய் தாழ்குழல் மானே வடிவுடை மாணிக்கமே. (சுச)

மருந்தினின் றான்ஒற்றி யூர்வாழும் நின்றன் மகிழ்நன்முன்னும்
திருந்திநின் றார்புகழ் நின்முன்னும் நல்லருள் தேன்விழைந்தே
விருந்தினின் றேன்சுற்றும் உள்ளிரங் காத விதத்தைக்கண்டு
வருந்திநின் றேன்இது நன்றோ வடிவுடை மாணிக்கமே. (சுரு)

---

299. 60-ஆம் பாவொடு பின்வரும் குமாருருபர சுவாமிகளின் பிள்ளைத் தமிழினைக் காண்க :

“ கோமாட்டி இவள்நின்னை வம்மெனக் கொம்மெனக்
கூவிடப் பெற்றாயுனக்(கு)

அண்டபடு சீரிதன்(று) ஆதலால் இவளுடன்
அம்புலீ ஆடவாவே.”

என்போல் குணத்தில் இழிந்தவர் இல்லைஎப் போதும்எங்கும்
நின்போல் அருளில் சிறந்தவர் இல்லைஇந் நீர்மையினால்
பொன்போலும் நின்னருள் அன்னே எனக்கும் புரிதிகண்டாய்
மன்போல் உயர்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.[300] (௬௬)

துன்பே மிகும்இவ் அடியேன் மனத்தில்நின் தூயஅருள்
இன்பே மிகுவதெந் நாளோ எழிலொற்றி எந்தைஉயிர்க்
கன்பேமெய்த் தொண்டர் அறிவே சிவநெறிக் கன்பிலர்பால்
வன்பேமெய்ப் போத வடிவே வடிவுடை மாணிக்கமே.[301] (௬௭)

சற்றே யெனினும்என் நெஞ்சத் துயரம் தவிரவும்நின்
பொற்றே மலர்ப்பதம் போற்றவும் உள்ளம் புரிதிகண்டாய்
சொற்றேர் அறிஞர் புகழ்ஒற்றி மேவும் துணைவர்தஞ்செம்
மற்றோர் புயத்தணை மானே வடிவுடை மாணிக்கமே. (௬௮)

சந்தோட மாப்பிறர் எல்லாம் இருக்கவும் சஞ்சலத்தால்
அந்தோ ஒருதமி யேன்மட்டும் வாடல் அருட்கழகோ
நந்தோட நீக்கிய நங்காய் எனத்திரு நான்முகன்மால்
வந்தோதும் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே.[302] (௬௯)

அடியேன் மிசைஎப் பிழையிருந் தாலும் அவைபொறுத்துச்
செடியேதம் நீக்கிநற் சீரருள் வாய்திகழ் தெய்வமறைக்
கொடியே மரகதக் கொம்பே எழில்ஒற்றிக் கோமளமே
வடியேர் அயில்விழி மானே வடிவுடை மாணிக்கமே. (௭௦)

---

300. 66-ஆம் பாவொடு நம் தாயுமானத் தந்தையாரின் "ஆணிலே பெண்ணிலே" "எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்" என்னும் தெய்வத் திருப்பாடல்கள் பார்க்க.

301. 67-ஆம் பாவொடு 29-ஆம் பாவின் அடிக்குறிப்பினைப் பார்க்க.

302. 69-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசக மறைமொழி கண்டு மகிழ்க:

"அடியார் சிலருன் அருள்பெற்றார் ஆர்வம் கூர யான்அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடியேன்
மூக்கின்றேன்."

கண்ணப்பன் ஏத்துநற் காளத்தி யார்மங் கலங்கொள்ஒற்றி
நண்ணப்பர் வேண்டும் நலமே பரானந்த நன்னறவே
எண்ணப் படாஎழில் ஓவிய மேஎமை ஏன்றுகொண்ட
வண்ணப் பசும்பொன் வடிவே வடிவுடை மாணிக்கமே.[303] (எக)

கற்பே விகற்பம் கடியும்ஒன் றேஎங்கள் கண்நிறைந்த
பொற்பேமெய்த் தொண்டர்தம் புண்ணிய மேஅருட் போதஇன்பே
சொற்பேர் அறிவுட் சுகப்பொரு ளேமெய்ச் சுயஞ்சுடரே
மற்பேர் பெறும்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே. (எஉ)

மிகவே துயர்க்கடல் வீழ்ந்தேனை நீகை விடுதலருள்
தகவே எனக்குநற் றாயே அகில சராசரமும்
சுகவேலை மூழ்கத் திருவொற்றி யூரிடந் துன்னிப்பெற்ற
மகவே எனப்புரக் கின்றாய் வடிவுடை மாணிக்கமே. (எங)

வேதங்க ளாய்ஒற்றி மேவும் சிவத்தின் விளைவருளாய்ப்
பூதங்க ளாய்ப்பொறி யாய்ப்புல னாகிப் புகல்கரண
பேதங்க ளாய்உயிர் ஆகிய நின்னைஇப் பேதைஎன்வாய்
வாதங்க ளால்அறி வேனோ வடிவுடை மாணிக்கமே.[304] (எச)

மதியே மதிமுக மானே அடியர் மனத்துவைத்த
நிதியே கருணை நிறைவே சுகாநந்த நீள்நிலையே
கதியே கதிவழி காட்டுங்கண் ணேஒற்றிக் காவலர்பால்
வதியேர் இளமட மானே வடிவுடை மாணிக்கமே. (எரு)

ஆறாத் துயரத் தழுந்துகின் றேனைஇங் கஞ்சல்என்றே
கூறாக் குறைஎன் குறையே இனிநின் குறிப்பறியேன்
தேறாச் சிறியர்க் கரிதாம் திருவொற்றித் தேவர்மகிழ்
மாறாக் கருணை மழையே வடிவுடை மாணிக்கமே. (எசு)

---

303. 71-ஆம் பாவொடு பின்வரும் குமரகுருபர சுவாமிகளின் அமுதுகு மழலைத் தமிழ் காண்க :

"எறிதரங்கம்
'உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன் திருஉள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோ வியமே."

304. 74-ஆம் பாவொடு பின்வரும் தாயுமானரின் மெய்ம்மொழி காண்க :

"வீறுவா தம்புகலுவாய்
வாதரோ யாளர்க்கும் எட்டாத முக்கணுடை மாமருந் துக்கமிர்தமே."

எற்றே நிலைஒன்றும் இல்லா துயங்கும் எனக்கருளச்
சற்றேநின் உள்ளம் திரும்பிலை யான்செயத் தக்கதென்னே
சொற்றேன் நிறைமறைக் கொம்பேமெய்ஞ் ஞானச் சுடர்க்கொழுந்தே
மற்றோர் அணியொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (எஎ)

செவ்வேலை வென்றகண் மின்னேநின் சித்தம் திரும்பினனக்
கெவ்வேலை செய்என் றிடினும்அவ் வேலை இயற்றவல்காண்
தெவ்வேலை வற்றச்செய் அவ்வேலை யீன்றொற்றித் தேவர்நெஞ்சை
வவ்வேல வார்குழல் மானே வடிவுடை மாணிக்கமே. (எஅ)

தாயே மிகவும் தயவுடை யாள்எனச் சாற்றுவர்இச்
சேயேன் படுந்துயர் நீக்கஎன் னேஉளம் செய்திலையே
நாயேன் பிழைஇனி நாடாது நல்லருள் நல்கவரு
வாயேஎம் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. (எகூ)

நானே நினைக்கடி யேன்என் பிழைகளை நாடியநீ
தானே எனைவிடில் அந்தோ இனிஎவர் தாங்குகின்றோர்
தேனேநல் வேதத் தெளிவே கதிக்குச் செலுநெறியே
வானோர் பொழில்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே. (அ0)

கல்லா ரிடத்தில்என் இல்லாமை சொல்லிக் கலங்கிஇடர்
நல்லாண்மை உண்டருள் வல்லாண்மை உண்டெனின் நல்குவையோ
வல்லார் எவர்கட்கும் வல்லார் திருவொற்றி வாணரொடு
மல்லார் பொழில்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (அக)

சுந்தர வாண்முகத் தோகாய் மறைகள் சொலும்பைங்கிள்ளாய்
கந்தர வார்குழற் பூவாய் கருணைக் கடைக்கண்நங்காய்
அந்தர நேரிடைப் பாவாய் அருள்ஒற்றி அண்ணல்மகிழ்
மந்தர நேர்கொங்கை மங்காய் வடிவுடை மாணிக்கமே. (அஉ)

பத்தர்தம் உள்ளத் திருக்கோயில் மேவும் பரம்பரையே
சுத்தமெய்ஞ் ஞான ஒளிப்பிழம் பேசிற் சுகானந்தமே
நித்தநின் சீர்சொல எற்கருள் வாய்ஒற்றி நின்மலர்உன்
மத்தர்தம் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே. (அங)

பூவாய் மலர்க்குழல் பூவாய்மெய் அன்பர் புனைந்ததமிழ்ப்
பாவாய் நிறைந்தபொற் பாவாய்செந் தேனிற் பகர்மொழியாய்
காவாய் எனஅயன் காவாய் பவனும் கருதுமலர்
மாவாய் எழில்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.[305] (அச)

தாதா உணவுடை தாதா எனப்புல்லர் தம்மிடைப்போய்
மாதாகம் உற்றவர் வன்னெஞ்சில் நின்அடி வைகுங்கொலோ
காதார் நெடுங்கட் கரும்பேநல் ஒற்றிக் கருத்தர்நட
வாதா ரிடம்வளர் மாதே வடிவுடை மாணிக்கமே. (அரு)

களந்திரும் பாஇக் கடையேனை ஆளக் கருணைகொண்டுன்
உளந்திரும் பாமைக்கென் செய்கேன் துயர்க்கட லூடலைந்தேன்
குளந்திரும் பாவிழிக் கோமா னெடுந்தொண்டர் கூட்டமுற
வளந்திரும் பாஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (அசு)

ஆரணம் பூத்த அருட்கோ மளக்கொடி அந்தரிபூந்
தோரணம் பூத்த எழில்ஒற்றி யூர்மகிழ் சுந்தரிசற்
காரணம் பூத்த சிவைபார்ப் பதிநங் கவுரிஎன்னும்
வாரணம் பூத்த தனத்தாய் வடிவுடை மாணிக்கமே. (அஎ)

திருவல்லி ஏத்தும் அபிடேக வல்லிஎஞ் சென்னியிடை
வருவல்லி கற்பக வல்லிஒண் பச்சை மணிவல்லிஎம்
கருவல்லி நீக்கும் கருணைம் பகவல்லி கண்கொள்ஒற்றி
மருவல்லி என்று மறைதேர் வடிவுடை மாணிக்கமே. (அஅ)

உடையென்ன ஒண்புலித் தோல்உடை யார்கண் டுவக்குமிள
நடையன்ன மேமலர்ப் பொன்முத லாம்பெண்கள் நாயகமே
படையன்ன நீள்விழி மின்னேர் இடைப்பொற் பசுங்கிளியே
மடைமன்னு நீர்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (அகூ)

கற்பதும் கேட்பதும் எல்லாம்நின் அற்புதக் கஞ்சமலர்ப்
பொற்பதம் காணும் பொருட்டெனா எண்ணுவர் புண்ணியரே
சொற்பத மாய்அவைக் கப்புற மாய்நின்ற தூய்ச்சுடரே
மற்பதம் சேரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (கூ0)

---

305. 84-ஆம் பாவொடு பின்வரும் குமரகுருபர சுவாமிகளின் பண்ணுலாம் வடிதமிழ் மாந்துக:

"தொடுக்கும் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே."

நின்னால் எனக்குள எல்லா நலனும் நினைஅடைந்த
என்னால் உனக்குள தென்னைகண் டாய்எமை ஈன்றவளே
முன்னால் வருக்கருள் ஒற்றிஎம் மான்கண் முழுமணியே
மன்னான் மறையின் முடிவே வடிவுடை மாணிக்கமே.[306] (கக)

நன்றே சிவநெறி நாடுமெய்த் தொண்டர்க்கு நன்மைசெய்து
நின்றேநின் சேவடிக் குற்றேவல் செய்ய நினைத்தனன்ஈ
தென்றே முடிகுவ தின்றே முடியில் இனிதுகண்டாய்
மன்றோர் எழில்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (கஉ)

அத்தனை ஒற்றிக் கிறைவனை அம்பலத் தாடுகின்ற
முத்தனைச் சேர்ந்தஒண் முத்தே மதிய முகவமுதே
இத்தனை என்றள வேலாத குற்றம் இழைத்திடும்இம்
மத்தனை ஆளல் வழக்கோ வடிவுடை மாணிக்கமே. (கங)

கூறாத வாழ்க்கைச் சிறுமையை நோக்கிக் குறித்திடும்என்
தேறாத விண்ணப்பம் சற்றேனும் நின்றன் திருச்செவியில்
ஏறாத வண்ணம்என் ஒற்றித் தியாகர் இடப்புறத்தின்
மாறா தமர்ந்த மயிலே வடிவுடை மாணிக்கமே. (கச)

ஓயா இடர்கொண் டுலைவேனுக் கன்பர்க் குதவுதல்போல்
ஈயா விடினும்ஓர் எள்ளள வேனும் இரங்குகண்டாய்
சாயா அருள்தரும் தாயே எழில்ஒற்றித் தற்பரையே
மாயா நலம்அருள் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (கரு)

பெரும்பேதை யேன்சிறு வாழ்க்கைத் துயர்எனும் பேரலையில்
துரும்பே எனஅலை கின்றேன் புணைநின் துணைப்பதமே
கரும்பே கருணைக் கடலே அருண்முக் கனிநறவே
வரும்பேர் அருள்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (கசு)

காதர வால்உட் கலங்கிநின் றேன்நின் கடைக்கண்அருள்
ஆதர வால்மகிழ் கின்றேன் இனிஉன் அடைக்கலமே
சீதரன் ஏத்தும் திருவொற்றி நாதர்தம் தேவிஎழில்
மாதர சேஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.[307] (கஎ)

---

306. 91-ஆம் பாவொடு பின்வரும் மணிவாசகத் திருமறையை ஓர்க.:
" தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆநந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்(று) என்பால்."

307. 97-ஆம் பாவொடு திருவாசகம் அடைக்கலப் பத்தினைப் பார்த்து உணர்க.

பொன்னுடை யார்அன் றிப் போற்றுநற் கல்விப் பொருளுடையார்
என்னுடை யார்என ஏசுகின் றார்இஃ தென்னை அன்னே
மின்னுடை யாய்மின்னில் துன்னிடை யாய்ஒற்றி மேவுமுக்கண்
மன்னுடை யாய்என் னுடையாய் வடிவுடை மாணிக்கமே. (௯அ)

பொய்விட்டி டாதவன் நெஞ்சகத் தேனைப் புலம்பும்வண்ணம்
கைவிட்டி டாதின்னும் காப்பாய் அதுநின் கடன்கரும்பே
மெய்விட்டி டாருள் விளைஇன்ப மேஒற்றி வித்தகமே
மைவிட்டி டாவிழி மானே வடிவுடை மாணிக்கமே. (௯௯)

நேயானு கூல மனமுடை யாய்இனி நீயும்என் றன்
தாயாகில் யான்உன் தனையனும் ஆகில்என் தன்உளத்தில்
ஓயா துறுந்துயர் எல்லாம் தவிர்த்தருள் ஒற்றியில்செவ்
வாயார் அமுத வடிவே வடிவுடை மாணிக்கமே.[308] (௧00)

வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்
வாழிநின் தாண்மலர் போற்றிநின் தண்ணளி வாழிநின்சீர்
வாழிஎன் உள்ளத்தில் நீயுநின் ஒற்றி மகிழ்நரும்நீ
வாழிஎன் ஆருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.[309] (௧0௧)

திருச்சிற்றம்பலம்

எ. வடிவுடை மாணிக்க மாலை[310]

முற்றிற்று.

---

308. 100-ஆம் பாவொடு, 26-ஆம் பாவின் அடிக் குறிப்பினையும் பின்வரும் தாயுமான அடிகளாரின் முறையீட்டினையும் காண்க:
“ கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலஎனக்(கு)
என்றிரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே.”

309. 275-ஆம் அடிக்குறிப்பில் திருஅருண்முறையீட்டின் சார்பாக எடுத்துக் காட்டுக்கள் முதலியவைபற்றிக் கூறியிருப்பது இந்நூலுக்கும் பொருந்தும்.

310. தமிழின் பச்சிளம் பான்மையையும் தேனூறு இனிமையையும் நிலைபெற்ற கன்னித்தன்மையையும் அழகொழுகு சாயலையும் இன்ன பிற மென்பண்புகளையும் பயில விரும்பும் மாணவர்களும் ஆசிரியர்களும் பிறரும் இவ்வடிவுடை மாணிக்க மாலையைக் கைக்கொள்வார்களாக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவகணபதி துணை

அ. இங்கித மாலை[311]

காப்பு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஒருமா முகனை யொருமாவை யூர்வா கனமா யுறநோக்கித்
திருமான் முதலோர் சிறுமையெலாந் தீர்த்தெம் மிருகண் மணியாகிக்
கருமா லகற்றுங் கணபதியாங் கடவு ளடியுங் களித்தவர்பின்
வருமா கருணைக் கடற்குமர வள்ள லடியும் வணங்குவாம்.

---

311. இங்கிதமாலை என்னும் இந்நூல் முன்போந்த மற்ற நூல்கள்போல் அல்லாது, தலைவனும் தலைவியும் அன்பு மேலீட்டால் ஒருவரை ஒருவர் எள்ளியும், ஏசியும், நகையாடியும், புன்முறுவல் பூத்தும் இன்புறுதல் கூறுவதாக இருக்கின்றது.

உலகியலில் நமக்கு எப்பாங்கரும் எக்காலத்தும் நடைபெறும் இந்தக் காதல் கற்பு மொழிகளும் பொருள்களும்—இவற்றின் மொழி நுட்பமும் பொருள் நுட்பமும்—பூஇதழ் போன்ற மென்மையும், சாயலும், வண்ணமும் வாய்ந்து காதலர்க்கும் கற்பினர்க்கும் உள்ளும் வெளியும் இன்பம் பயப்பனவாக நிலவுவது யாவரும் அறிந்ததொன்று.

தமிழ் மக்கள் நூல்முறையிலும், இந்தக் காதல் கற்புக்கு உரிய இடம் அரும்பெரு முதன்மை வாய்ந்ததாகும். பழந்தமிழ் நூல்களுள் இவற்றைப் போற்றி எழுந்த செய்யுட்களே பெரும்பாலன. பெருவாரியாக இறந்தன போக, எஞ்சி நிற்பன—அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை முதலிய தொகைநூல்களிலும், முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களிலும்—எழுதா எழில் சித்திரங்கள் எனவும், உயிர் ஓவியங்கள் எனவும் முடிவுற்ற பேரழகு வாய்ந்து நிலைபெற்றிருக்கின்றன.

நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரது களவியல் கற்பியல் குறட்பாக்களும் இந்தக் காதல் கற்பையே பாட்டுடைப் பொருளாகக் கொண்டிருக்கின்றன. இவற்றின் நுண் அழகினை நுகர்ந்து நெஞ்சழியாத தமிழ் மகனும் உளனாவனோ?

பிற்காலத்துப் புலவர் பெருமகனாரான கம்பநாடரும் தமிழ் மக்களின் இந்தக் களவொடு கூடிய கற்பின் உண்மையையும் பெருமையையும் தாம் சொல்லவந்த வடநாட்டு இராமகாதைக் கண்ணும் அதிநுட்பமாக உரைத்துவைத்துப் பேரானந்தம் கொண்டிருக்கிறார்.

இவ்வண்ணம் இந்த அகப்பொருள் நூல்வழக்கில் பரந்து நிலவின காரணத்தினால்தான், இதைச் சார்ந்து இதன் வரையறை விளக்க,

பாடாண் திணை[312]

கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்

(வினா வுத்தரம்)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவார் கமலத் தடம்பணைசூழ் செல்வப் பெருஞ்சீ ரொற்றியில்வாழ்
மருவார் கொன்றைச் சடைமுடிகொள் வள்ள லிவர்க்குப் பலிகொடுநா
னொருவா தடைந்தே னினிநமக்கிங் குதவ வருந்தோ றுன்முலைமே
லிருவா ரிடுநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (க)

---

311. (தொடர்ச்சி) தொல்காப்பியம் அகப்பொருள் இயல்கள், இறையனார் அகப்பொருள், நம்பி அகப்பொருள் தொடக்கத்த இலக்கண நூல்கள் அவ்வக்காலத்துத் தோன்றுவன ஆயின.

இவை இங்ஙனம் ஆதலால் அன்றோ, தெய்வம் பராவும் பரிபாடலின் ஆசிரியர்களில் ஒருவராகிய குன்றம்பூதனார் என்னும் தண்தமிழ்வாணர் வடமொழி வேதப்பொருளைத் தாங்க, தமிழ்மொழி களவியலை உயிராகக்கொண்ட அகப்பொருளைத் தாங்கி நிற்கிறது என்று மகிழ்ந்தும் இறுமாந்தும் மொழிந்து வைத்திருக்கிறார்.

இப்பதிப்பாசிரியர் இந்தக் களவு - கற்பு அல்லது ‘அன்பின் ஐந்திணை’ என்னும் மணவினையின் சிறப்பைக் குறித்துப் பண்டைத் தமிழரின் மணவினைச் சட்டதிட்டங்கள் ("The Hindu Marriage Law Reform in the Light of certain South Indian Customs") என்னும் ஒரு நூலினை ஆங்கில மொழியில் 1920-இல் வெளியிட்டிருக்கிறார். அதைக் காண விரும்புவோர் காண்க.

தமிழ் மக்கள் செந்நெறிக்கண் நின்று, இறைவன் திருஅருளினுக்கு உரியவர் ஆகுமாறு, செஞ்ஞாயிறுபோல் உதயமாகி விளங்கும் நம் மணிவாசகப் பெருமானாரின் திருச்சிற்றம்பலக் கோவையாரும் இந்தக் காதல் கற்பையே மேற் கொண்டிருக்கிறது. ஆனால், ஒரு பெரு வேறுபாடு. இந்த ‘அறிவனூலில்’ இறைவனே தலைவன்; ஆன்மாவே தலைவி. அமுதுகு செழுந்தமிழ்க் கல்லாடநூலும் இத்தன்மையதே. தேவாரப் பெருமறை கிளந்த மூவரும், திருமால் அடியார்களாகிய தெய்வத் திருமகள் ஆண்டாள் முதலியவரும் இந்த இறை-உயிர், தலைவன் - தலைவி அந்தரங்காநுபவத்தைப் பேரழகு ததும்ப மொழிந்து இன்புறுவது தமிழராவார் யாவரும் அறியக் கிடப்பதுவே. இவ்வாறு தொன்றுதொட்டுவரும் உலகியல் அருளியல் அநுபவத்தையும் நூல் வழக்கையும் பின்பற்றிய பல திருநெறிப் பேரடியார்களில் தாயுமானப் பெருந்தகையாரும் ஒருவர். நம் பெருமான் இராமலிங்க அடிகளாரைக் குறித்துச் சொல்லவே வேண்டுவதில்லை. அடிகளார், முதல் திருமுறையில் இங்கிதமாலையின்கண்ணும், மூன்றாந் திருமுறை முழுவதிலும்,

தண்ணார் மலரை மதிநதியைத் தாங்குஞ் சடையா ரிவர்தமைநா
னண்ணு லொற்றி யிருந்தவரே யைய ரேநீர் யாரென்றே
னண்ணு ரிடத்து மம்பலத்து நடவா தவர்நா மென்றுசொலி
யெண்ணு தருகே வருகின்று ரிதுதான் சேடி யென்னேடீ. (உ)

311. (தொடர்ச்சி) ஐந்தாந் திருமுறையிலும், ஆறும் திருமுறையில் பெரும் பகுதிகளிலும், ஆங்காங்கு ஒரோ ஓரிடத்திலும், இங்ஙனம் இறை-உயிர், தலைவன் - தலைவி அநுபவத்தைச் சொல்வோரும் கேட்போரும் பக்க நிற்போரும் பேரானந்தப் பெருங் கடலுள் திளைத்துத் தம்மை மறந்துய்யும் வண்ணம், ஆயிரக்கணக்கில் அருட்பாக்கள் திருவாய் மலர்ந்திருக்கிறார்கள்.

விவிலிய நூலில் (The Holy Bible) இந்த வகையான இறை-உயிர், தலைவன்-தலைவி அநுபவம் கூறியிருக்கிற சாலமன் பாட்டுக்களும் (Solomon's Songs) அன்பு நெறியில் திகழ்ந்து, பெரிதும் இன்பம் பயப்பனவாக இருக்கின்றன. அவற்றை அங்கே கண்டுணர்க.

இங்கிதமாலையிலும், இறைவனே தலைமகன்; ஆன்மாவே தலைமகள். வீடு பெறும் உயிர்க்குத் துணையாக நிற்கும் முடிந்த தத்துவப்பகுதியே உயிர்த் தோழியாகும். இவ்விருபாலாரிடை நிகழும் காதல் மொழி களும் மெய்ப்பாடுகளும் தெரிக்கும் அந்தரங்காநுபவங்களே இவற்றுள் விவரிக்கப்படும் பொருட் கூறுகள். இவை மோப்பக் குழையும் அனிச்சப்பூ ஒத்த மென்மை வாய்ந்தன; பொதுவாக எல்லார்க்கும் தெரியும் நேர் மொழிகளில் உரைத்திருப்பதுபோல் மேலோட்டமான பார்வைக்குப் படும். எனினும், இதன் பாக்களுடு, பல சொல் ஒரு சொல்லாகவும், ஒரு சொல் பல பொருள்படுவதாகவும், ஒரு சொல் அதற்கீடான பிறிதொரு சொல் குறிப்பதாகவும், இவ்விரண்டாம் சொல் முதல் சொல்லுக்கு இல்லாத வேறு பொருள் குறிப்பதாகவும், முன்பின் சொற்களைச் சேர்க்கும் வகையிலும், இல்லாத சொற்களை வருவிக்கும் வகையிலும், உடன் நிகழும் மெய்ப்பாடுகளை உணர்த்தும் வகையிலும், பற்பல இன்ப வடிவமான மறைபொருள் உறுவதாகவும், இன்னபிற மிகமிக நுட்பம் செறிந்த பான்மை யுள்ளதாகவும்— துறைபோய பெருங் கல்வியாளர்க்கும், நுண்ணறிவாற்றல் நிரம்பி யவர்க்கும், மெய்ப்பத்திமை வயம் அடைந்தார்க்கும் பெருங்களிப்பு அளிப்பதாக—இந்நூல் அமைந்திருக்கிறது. இந்நூலைப் பயிலுந் தொறும் பயிலுந்தொறும், "அறிதோ(று) அறியாமை கண்டற்றால், காமம் செறிதோறும் சேயிழை மாட்டு" என்னும் பொய்யாமொழி— உவமப் பொருளும் உவமிக்கப்படும் பொருளும் ஆகிய—இருவாற்று னும் புலப்படுத்தும் பேரநுபவம் விளங்கும் என்க.

இந்த நூலின் பாக்களுடைய பொருள் நுட்பத்தைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் அரிது. ஒவ்வொரு பாவிலும் அடங்கிய சொற்கூறுகளையும் பொருட்கூறுகளையும் வான் முறைப்படுத்தி விளக்கினாலன்றி அப்பாவினைப் போதுமானபடி நுகர்ந்து பயன்பெறு மாறில்லை. ஒரு பொருளைமட்டும் குறித்து வைப்பது என்றால், பாவின்

பிட்டி னதிமண் சுமந்தவொற்றிப் பிச்சைத் தேவ ரிவர்தமைநான்
றட்டின் மலர்க்கை யிடத்தெதுவோ தனத்தைப் பிடியு மென்றுரைத்தேன்
மட்டி னொருமூன் றுடனேழு மத்தர் தலையீ தென்றுசொலி
யெட்டி முலையைப் பிடிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௩)

மடையிற் கயல்பா யொற்றிநகர் வள்ள லாகு மிவர்தமைநா
னடையிற் கனிவாற் பணியென்றே யருளீ ருரியீ ருடையென்றேன்
கடையிற் படுமோர் பணியென்றே கருதி யுரைத்தே மென்றுரைத்தென்
னிடையிற் கலையை யுரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௪)

---

311. (தொடர்ச்சி) பாப்பையும் ஆழத்தையும் நுட்பத்தையும் நெறி தவறிக் குறைப்பதாகும். இங்ஙனம் ஒருவாறு குறிப்புக்கள் குறித்தாலும், அவை இப்பெருநூல் தரத்திற்குமேல் பின்னும் இடங்கொள்ளும் எனத் தெரிகிறது. தவிர, திருஅருட்பா இப்பதிப்பாசிரியர் பதிப்பு 6-ஆம் புத்தகம் தனிப்பாசுரப் பகுதியில், 1933-இல், முதன்முதலாக, வெளிப்படுத்தியிருக்கிறபடி, “அருண்மொழி மாலை” “இன்பமாலை” என்னும்—இங்கிதமாலையைப்போன்ற—அருட்பாக்கள் பலப்பலவும், இங்கு அச்சிட்டிருக்கும் இங்கிதமாலையோடு பின்னும் சிலபல பாக்களும் பாடங்களும் நம் பெருமானார் கையெழுத்தில் உள்ளன. இவற்றை எல்லாம் உள்ளவாறு அச்சிட்டு, அவ்வவற்றிற்கும் குறிப்புக்கள் போதிய அளவு குறித்தால்தான், அடிகளாரின் சிவாநுபவ அந்தரங்கங்களை நாம் ஒருவாறு ஊகித்துணர இயலும். ஆகவே, இந்த இங்கிதமாலையை இதைச் சார்ந்த மற்றப் பாக்களோடும், பாடங்களோடும், குறிப்புக்களோடும் தனிநூலாக வெளியிட முடிவு செய்திருக்கிறது.

இந்தப் பெருநூல் பகுதியில் இங்கிதமாலையின் சுத்தபாடம் ஒன்று மட்டும் நூன்முறையாக அச்சிட்டிருக்கிறது. குறிப்புக்கள் வேண்டி நிற்காத திரு நெறித் தமிழன்பர்களும் பிறரும் இதைப் பயின்று பயன் பெறுவார்களாக.

இதைச் சார்ந்து, திருஅருட்பா இப்பதிப்பாசிரியர் பதிப்பு 6-ஆம் புத்தகம் தனிப்பாசுரப் பகுதி 97-ஆம் பக்கத்தில் குறித்திருக்கிறபடி, “அன்பர்பால் நீங்கா என் அம்மையே” என்று நம் அடிகளார் கலைமகளைப் பேரன்போடு அழைத்து வழிபடும் அருட்பாவிற்கும் இங்கிதமாலைக்கும் உள்ள தொடர்பைக் காண்க.

இந்நூல் குறித்துக் கிடைத்திருப்பன நம் பெருமானாரின் திருக்கரத்தால் பொறித்த தெய்வத்திரு ஏடுகளும், அவர்களுக்கு ஆட்பட்டு அவர்களுடன் வதிந்த அன்பர்கள் சிலரின் சுவடிகளும் ஆகும். இவற்றின் விவரங்கள் இங்கித மாலையின் தனிப்பதிப்பில் விளக்கப்படும்.

312. இத்திணை முதலிய குறிப்புக்கள் நம் பெருமானார் எழுத்தில் இல்லை. இங்கித மாலையை முதல் முதல் அச்சிட்டபோது, திருவாளர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் இங்ஙனம் குறித்திருக்கிறார்கள்.

மன்றன் மணக்கு மொற்றிநகர் வாண ராகு மிவர்தமைநா
னின்றன் பொடுங்கை யேந்தனத்தை யேற்றோர் கலத்திற் கொளுமென்றே
னன்றன் புடையா யெண்கலத்தி னுங்கொண் டிடுவே மென்றுசொலி
யென்றன் முலையைத் தொடுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௫)

கோமாற் கருளுந் திருவொற்றிக் கோயி லுடையா ரிவரைமத
மாமாற் றியநீ ரேகலவி மகிழ்ந்தின் றடியேன் மனையினிடைத்
தாமாற் றிடக்கொண் டேகுமென்றேன் றாவென் றார்தந் தாலென்னை
யேமாற் றினையே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬)

அம்மா லயனுங் காண்பரியீர்க் கமரும் பதிதான் யாதென்றே
னிம்மா லுடையா யொற்றுதற்கோ ரெச்ச மதுகண் டறியென்றார்
செம்மா லிஃதொன் றென்னென்றேன் திருவே புரிமேற் சேர்கின்ற
வெம்மான் மற்றொன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ (௭)

கண்கள் களிப்ப வீண்டுநிற்குங் கள்வ ரிவரூ ரொற்றியதாம்
பண்க ளியன்ற திருவாயாற் பலிதா வென்றார் கொடுவந்தேன்
பெண்க டாலீ தன்றென்றார் பேசப் பலியா தென்றேனின்
னெண்கண் பலித்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௮)

ஆரா மகிழ்வு தருமொருபே ரழக ரிவரூ ரொற்றியதா
நேராய் விருந்துண் டோவென்றார் நீர்தான் வேறிங் கிலையென்றேன்
வாரார் முலையாய் வாயமுது மலர்க்கை யமுது மனையமுது
மோரா யுளவே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௯)

அடுத்தார்க் கருளு மொற்றிநக ரைய ரிவர்தா மிகத்தாகங்
கடுத்தா மென்றார் கடிதடநீர் கண்டீ ரையங் கொளுமென்றேன்
கொடுத்தாய் கண்ட திலையையங் கொள்ளு மிடஞ்சூழ்ந் திடுங்கலையை
யெடுத்தாற் காண்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௦)

இந்தா ரிதழி யிலங்குசடை யேந்த லிவரூ ரொற்றியதாம்
வந்தார் பெண்ணே யமுதென்றார் வரையின் சுனையிங் குண்டென்றே
னந்தார் குழலாய் பசிக்கினும்பெண் ணாசை விடுமோ வமுதின்றே
லெந்தா ரந்தா வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧)

தன்னந் தனியா யிங்குநிற்குஞ் சாமி யிவரூ ரொற்றியதா
மன்னந் தருவீ ரென்றார்நா னழைத்தே னின்னை யன்னமிட
முன்னம் பசிபோ யிற்றென்றார் முன்னின் றகன்றே னிவ்வன்ன
மின்னந் தருவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௨)

மாறு வழகோ டிங்குநிற்கும் வள்ள லிவரு சொற்றியதாம்
வீறு முணவீ யென்றார்நீர் மேவா வுணவிங் குண்டென்றேன்
கூறு மகிழ்வே கொடுவென்றார் கொடுத்தா லிதுதா னன்றென்றே
யேறு வழக்குத் தொடுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஙு)

வண்மை யுடையார் திருவொற்றி வாண ரிவர்தாம் பலியென்றா
ருண்மை யறிவீர் பலியெண்மை யுணர்கி லீரென் னுழையென்றேன்
பெண்மை சிறந்தாய் நின்மனையிற் பேசும் பலிக்கென் றடைந்ததுநா
மெண்மை யுணர்ந்தே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கச)

திருவை யளிக்குந் திருவொற்றித் தேவ ரீர்க்கென் விழைவென்றேன்
வெருவ லுனது பெயரிடையோர் மெய்நீக் கியநின் முகமென்றார்
தருவ லதனை வெளிப்படையாற் சாற்று மென்றேன் சாற்றுவனே
யிருவை மடவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கரு)

முந்தை மறையோன் புகழொற்றி முதல்வ ரிவர்தம் முகநோக்கிக்
கந்தை யுடையீ ரென்னென்றேன் கழியா வுன்றன் மொழியாலே
யிந்து முகத்தா யெமக்கொன்றே யிருநான் குனக்குக் கந்தையுள
திந்த வியப்பென் னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசு)

துன்ன லுடையா ரிவர்தமைநீர் துன்னும் பதிதான் யாதென்றே
னென்ன லிரவி லெமைத்தெளிவா னின்ற நினது பெயரென்றா
ருன்ன லுறுவீர் வெளிப்படவீ துரைப்பீ ரென்றே னுரைப்பேனே
யின்ன லடைவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஎ)

சிமைக்கொள் சூலத் திருமலர்க்கைத் தேவர் நீரெங் கிருந்ததென்றே
னமைக்கண் டளவின் மாதேநீ யிருந்த தெனயா மிருந்ததென்றா
ரமைக்கு மொழியிங் கிதமென்றே னுமுன் மொழியிங் கிதமன்றோ
விமைக்கு மிழையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஅ)

நடங்கொள் பதத்தீர் திருவொற்றி நங்கள் பெருமா னீரன்றோ
திடங்கொள் புகழ்க்கச் சூரிடஞ்சேர்ந் தீரென் றேனின் னடுநோக்காக்
குடஞ்சேர்ந் ததுமாங் கஃதென்றார் குடம்யா தென்றே னஃதறிதற்
கிடங்கர் நடுநீக் கென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசூ)

சங்க மருவு மொற்றியுளீர் சடைமே லிருந்த தென்னென்றேன்
மங்கை நினது முன்பருவ மருவு முதனீத் திருந்ததென்றார்
கங்கை யிருந்த தேயென்றேன் கமலை யனையாய் கழுக்கடையு
மெங்கை யிருந்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (உ0)

துதிசே ரொற்றி வளர்தரும துரையே நீர்முன் றுடலுறும்
பதியா தென்றே னம்பெயர்முற் பகரீ ரெழுத்தைப் பறித்ததென்றார்
நிதிசேர்ந் திடும்ப் பெயர்யாது நிகழ்த்து மென்றே னீயிட்ட
தெதுவோ வதுகா ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (உக)

உடற்கச் சுயிரா மொற்றியுளீ ருமது திருப்பேர் யாதென்றேன்
குடக்குச் சிவந்த பொழுதினைமுன் கொண்ட வண்ண ராமென்றார்
விடைக்குக் கருத்தா வாநீர்தாம் விளம்பன் மிகக்கற் றவரென்றே
னிடக்குப் புகன்றா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (உஉ)

மணங்கே தகைவான் செயுமொற்றி வள்ளலிவரை வல்விரைவேன்
பிணங்கேஞ் சிறிது நில்லுமென்றேன் பிணங்கா விடினு மென்னலென
வணங்கே நினக்கொன் றினிற்பாதி யதிலோர் பாதி யாகுமிதற்
கிணங்கேஞ் சிறிது மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (உங)

ஒற்றி நகரா ரிவர்தமைநீ ருவந்தே துவதிங்கி யாதென்றேன்
மற்றுன் பருவத் தொருபங்கே மட்வா யென்றார் மறைவிடையீ
திற்றென் றறிதற் கரிதென்றே னெம்மை யறிவா ரன்றியஃ
தெற்றென் றறிவா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (உச)

கண்ணின் மணிபோ லிங்குநிற்குங் கள்வ ரிவரு ரொற்றியதாம்
பண்ணின் மொழியாய் நின்பாலோர் பறவைப் பெயர்வேண் டினம்படைத்தான்
மண்ணின் மிசையோர் பறவையதா வாழ்வாயென்றா ரென்னென்றே
னெண்ணி யறிநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (உரு)

சேடார் வளஞ்சூ ழொற்றிநகர் செல்வப் பெருமா னிவர்தமைநா
னோடார் கரத்தீ ரெண்டோள்க ளுடையீ ரென்னென் றுரைத்தேனீ
கோடா கோடி முகநூறு கோடா கோடிக் களமென்னே
யீடா யுடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (உசு)

துருமஞ் செழிக்கும் பொழிலொற்றித் தோன்றா லிங்கு நீர்வந்த
கருமஞ் சொலுமென் றேனிவண்யாங் கடாதற் குன்பா லெம்முடைமைத்
தருமம் பெறக்கண் டாமென்றார் தருவ லிருந்தா லென்றேனில்
லிருமந் தரமோ வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (உஎ)

ஒருகை முகத்தோர்க் கையரெனு மொற்றித் தேவ ரிவர்தமைநான்
வருகை யுவந்தீ ரென்றணைநீர் மருவி யணைதல் வேண்டுமென்றேன்
றருகை யுடனே யகங்காரந் தனையெம் மடியார் தமைமயக்கை
யிருகை வளைசிந் தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (உஅ)

திருத்த மிகுஞ்சீ ரொற்றியில்வாழ் தேவ ரேயிங் கெதுவேண்டி
வருத்த மலர்க்கா லுறநடந்து வந்தீ ரென்றேன் மாதேநீ
யருத்தந் தெளிந்தே திருவாண மாகவுன்ற னகத்தருட்க
ணிருத்த வடைந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௨௯)

வளஞ்சே ரொற்றி மாணிக்க வண்ண ராகு மிவர்தமைநான்
குளஞ்சேர்ந் திருந்த துமக்கொருகண் கோலச் சடையீ ரழகிதென்றேன்
களஞ்சேர் குளத்தி னெழின்முலைக்கண் காண வோரைந் துனைக்கழகி
திளஞ்சேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௩0)

பலஞ்சே ரொற்றிப் பதியுடையீர் பதிவே றுண்டோ நுமக்கென்றே
னுலஞ்சேர் வெண்பொன் மலையென்றா ருண்டோ நீண்ட மலையென்றேன்
வலஞ்சே ரிடைத்தவ் வருவித்த மலைகா ணதனின் மம்முதல்சென்
றிலஞ்சேர்ந் ததுவு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௩௧)

வயலா ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றார் வாய்திறவார்
செயலார் விரல்கண் முடக்கியடி சேர்த்தீ ரிதழ்கள் விரிவித்தார்
மயலா ருளத்தோ டென்னென்றேன் மறித்தோர் விரலா லென்னுடைய
வியலார் வடிவிற் சுட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௩௨)

பேர்வா ழொற்றி வாணரிவர் பேசா மௌன யோகியராய்ச்
சீர்வாழ் நமது மனையினிடைச் சேர்ந்தார் விழைவென் செப்புமென்றே
னோர்வா ழடியுங் குழலணியு மொருநல் விரலாற் சுட்டியுந்தம்
மோர்வா ழொருகை பார்க்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௩௩)

பெருஞ்சீ ரொற்றி வாணரிவர் பேசா மௌனம் பிடித்திங்கே
விரிஞ்சீர் தரநின் றுடன்கீழு மேலு நோக்கி விரைந்தார்யான்
வருஞ்சீ ருடையீர் மணிவார்த்தை வகுக்க வென்றேன் மார்பிடைக்கா
ழிருஞ்சீர் மணியைக் காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௩௪)

வலந்தங் கியசீ ரொற்றிநகர் வள்ள லிவர்தாம் மௌனமொடு
கலந்திங் கிருந்த வண்டசத்தைக் காட்டி மூன்று விரனீட்டி
நலந்தங் குறப்பின் னடுமுடக்கி நண்ணு மிந்த நகத்தொடுவா
யிலந்தங் கரத்தாற் குறிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௩௫)

தேனார் பொழிலா ரொற்றியில்வாழ் தேவ ரிவர்வாய் திறவாராய்
மானார் கரத்தோர் நகந்தெரித்து வாளா நின்றார் நீளார்வந்
தானா ருளத்தோ டியாதென்றேன் றங்கைத் தலத்திற் றலையையடி
யேனா டறவே காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௩௬)

செச்சை யழகர் திருவொற்றித் தேவ ரிவர்வாய் திறவாராய்
மெச்சு மொருகாற் கரந்தொட்டு மீண்டு மிடற்றக் கரம்வைத்தார்
பிச்ச ரடிகேள் வேண்டுவது பேசீ ரென்றேன் றமைக்காட்டி
யிச்சை யெனையுங் குறிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௩௭)

மன்றார் நிலையார் திருவொற்றி வாண ரிவர்தா மௌனமொடு
நின்றா ரிருகை யொலியிசைத்தார் நிமிர்ந்தார் தவிசி னிலைகுறைத்தார்
நன்றா ரமுது சிறிதுமிழ்ந்தார் நடித்தா ரியாவு மையமென்றே
னின்றார் மறைக்கை யேந்துகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௩௮)

வாரா விருந்தாய் வள்ளலிவர் வந்தார் மௌன மொடுநின்றார்
நீரா ரெங்கே யிருப்பதென்றே னீண்ட சடையைக் குறிப்பித்தா
ரூரா வைத்த தெதுவென்றே னெண்கை யோடென் னிடத்தினில்வைத்
தேரார் கரத்தாற் சுட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ (௩௯)

செங்கேழ் கங்கைச் சடையார்வாய் திறவா ராக வீண்டடைந்தா
ரெங்கே யிருந்தெங் கணைந்ததுகா ணெங்கள் பெருமா னென்றேனென்
னங்கே ழுருகி னகன்றுபோ யங்கே யிறைப்போ தமர்ந்தெழுந்தே
யிங்கே நடந்து வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௪௦)

கோடையா ரொற்றி வாணரிவர் கூறா மௌன ராகிநின்றார்
தொடையா ரிதழி மதிச்சடையென் றுரையே விழைவே துமக்கென்றே
னுடையார் துன்னற் கந்தைதனை யுற்று நோக்கி நகைசெய்தே
யிடையாக் கழுமுட் காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ (௪௧)

பொன்னைக் கொடுத்தும் புணர்வரிய புனித ரிவரூ ரொற்றியதா
முன்னைத் தவத்தா லியாங்காண முன்னே நின்றார் முகமலர்ந்து
மின்னிற் பொலியுஞ் சடையீரென் வேண்டு மென்றே னுணச்செய்யா
லின்னச் சினங்கா ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௪௨)

வயலார் சோலை யெழிலொற்றி வாண ராகு மிவர்தமைநான்
செயலா ரடியர்க் கருள்வீர்நுஞ் சிரத்து முரத்துந் திகழ்கரத்தும்
வியலாய்க் கொண்ட தென்னென்றேன் விளங்கும் பினாக மவைமூன்று
மியலாற் காண்டி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௪௩)

பொதுநின் றருள்வீ ரொற்றியுளீர் பூவுந் தியதென் விழியென்றே
னிதுவென் றறிநா மேறுகின்ற தென்றா ரேறு கின்றதுதா
னெதுவென் றுரைத்தே னெதுநடுவோ ரெழுத்திட் டறிநீ யென்றுசொலி
யெதிர்நின் றுவந்து நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௪௪)

இட்டங் களித்த தொற்றியுளீ ரீண்டிவ் வேளை யெவனென்றேன்
சுட்டுஞ் சுதனே யென்றார்நான் சுட்டி யறியச் சொலுமென்றேன்
பட்டுண் மருங்குற் பாவாய்நீ பரித்த தன்றே பாரென்றே
யெட்டுங் களிப்பா லுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (சரு)

பாற்றக் கணத்தா ரிவர்காட்டுப் பள்ளித் தலைவ ரொற்றியினின்
றூற்றப் பசித்து வந்தாரா மன்ன மிடுமி னென்றுரைத்தேன்
சோற்றுக் கிளைத்தோ மாயினும்யாஞ் சொல்லுக் கிளையேங் கீழ்ப்பள்ளி
யேற்றுக் கிடந்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (சசு)

குருகா ரொற்றி வாணர்பலி கொள்ள வகையுண் டோவென்றே
னொருகா லெடுத்தீண் டுரையென்றா ரொருகா லெடுத்துக் காட்டுமென்றேன்
வருகா விரிப்பொன் னம்பலத்தே வந்தாற் காட்டு கின்றாம்வி
ழிருகா லுடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (சஎ)

வேலை ஞாலம் புகழொற்றி விளங்குந் தேவ ரணிகின்ற
மாலை யாதென் றேனயன்மான் மாலை யகற்று மாலையென்றார்
சோலை மலரன் றேயென்றேன் சோலை யோநாந் தொடுப்பதென
வேலை முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (சஅ)

உயிரு ளுறைவீர் திருவொற்றி யுடையீர் நீரென் மேற்பிடித்த
வயிர மதனை விடுமென்றேன் வயிரி யலநீ மாதேயாஞ்
செயிர தகற்றுன் முலையிடங்கொள் செல்வ னலகாண் டெனியென்றே
யியல்கொண் முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (சகூ)

தண்கா வளஞ்சூழ் திருவொற்றித் தலத்தி லமர்ந்த சாமிநுங்கை
யெண்கார் முகமாப் பொன் னென்றே னிடையிட் டறித லரிதென்றார்
மண்கா தலிக்கு மாடென்றேன் மதிக்குங் கணைவி லன்றென்றே
யெண்கா ணகைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (ருO)

செய்காண் வளஞ்சூ ழொற்றியுளீர் திருமான் முதன்முத் தேவர்கட்கு
மைகா ணீரென் றேனிதன்மே லணங்கே நீயே யுடைதி யென்றார்
மெய்கா ணதுதா னென்னென்றேன் விளங்குஞ் சுட்டுப் பெயரென்றே
யெய்கா ணுறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (ருக)

விண்டு வணங்கு மொற்றியுளீர் மென்பூ விருந்தும் வன்பூவில்
வண்டு விழுந்த தென்றேனெம் மலர்க்கை வண்டும் விழுந்ததென்றார்
தொண்டர்க் கருள்வீர் மிகவென்றேன் றோகாய் நாமே தொண்டனென
வெண்டங் குறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (ருஉ)

மட்டார் மலர்க்கா வொற்றியுளீர் மதிக்குங் கலைமேல் விழுமென்றே
னெட்டா மெழுத்தை யெடுத்ததுநா மிசைத்தே மென்று ரெட்டாக
வுட்டா வுறுமவ் வெழுத்தறிய வுரைப்பீ ரென்றே னந்தணரூர்க்
கிட்டார் நாம மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. (௫௩)

ஒற்றி நகரீர் மனவசிதா னுடையார்க் கருள்வீர் நீரென்றேன்
பற்றி யிறுதி தொடங்கியது பயிலு மவர்க்கே யருள்வதென்றார்
மற்றி துணர்கி லேனென்றேன் வருந்தே லுள்ள வன்மையெலா
மெற்றி லுணர்தி யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. (௫௪)

வான்றோய் பொழில்சூ ழொற்றியுளீர் வருந்தா தணைவே னோவென்றே
னான்றோ யுடற்கென் றார்தெரிய வுரைப்பீ ரென்றே னோவிதுதான்
சான்றோ ருமது மரபோர்ந்து தரித்த பெயர்க்குத் தகாதென்றே
யேன்றோர் மொழிதந் தருள்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. (௫௫)

தீது தவிர்க்கு மொற்றியுளீர் செல்ல லறுப்ப தென்றென்றே
னீது நமக்குத் தெரிந்ததென்று ரிறையா மோவிங் கிதுவென்றே
னோது மடியார் மனக்கங்கு லோட்டு நாமே யுணரன்றி
யேது மிறையன் றென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. (௫௬)

ஒண்கை மழுவோ டனலுடையீ ரொற்றி நகர்வா ழுத்தமர்நீர்
வண்கை யொருமை நாதரென்றேன் வண்கைப் பன்மை நாதரென்று
ரெண்கண டங்கா வதிசயங்கா ணென்றேன் பொருளன் றிவையதற்கென்
றெண்சொன் மணிதந் தருள்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. (௫௭)

ஒருவ ரனவா ழொற்றியுளீ ருமக்கம் மனையுண் டோவென்றே
னிருவ ரொருபே ருடையவர்கா ணென்று ரென்னென்றே னெம்பேர்
மருவு மீறற் றயலகரம் வயங்கு மிகர மானதென்றே
யிருவு மொழிதந் தருள்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. (௫௮)

பேரா ரொற்றி யீரும்மைப் பெற்று ரெவரென் றேனவர்தம்
மேரார் பெயரின் முன்பினிரண் டிரண்டா மெழுத்தா ரென்றுரென்
னேரா யுரைப்பீ ரென்றேனீ நெஞ்ச நெகிழ்ந்தா லுரைப்பாமென்
றேரா யுரைசெய் தருள்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. (௫௯)

தளிநான் மறையீ ரொற்றிநகர் தழைக்க வாழ்வீர் தனிஞான
வொளிநா வரசை யைந்தெழுத்தா லுவரி கடத்தி னீரென்றேன்
களிநா வலனை யீரெழுத்தாற் கடலின் வீழ்த்தி னேமென்றே
யெளியேற் குவப்பின் மொழிகின்று ரிதுதான் சேடி யென்னேடி. (௬௦)

ஓமூன் றுளத்தீ ரொற்றியுளீ ருற்றோர்க் களிப்பீ ரோவென்றேன்
றாமூன் றென்பார்க் கயன்மூன்றுந் தருவே மென்றா ரம்மமிகத்
தேமூன் றினநும் மொழியென்றேன் செவ்வா யுறுமுன் னகையென்றே
யேமூன் றுறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬௧)

மன்னி விளங்கு மொற்றியுளீர் மடவா ரிரக்கும் வகையதுதான்
முன்னி லொருதா வாமென்றேன் முத்தா வெனலே முறையென்றா
ரென்னி லிதுதா னையமென்றே னெமக்குந் தெரியு மெனத்திருவா
யின்ன லமுத முகுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬௨)

வளஞ்சே ரொற்றி யீரெனக்கு மாலை யணிவீ ரோவென்றேன்
குளஞ்சேர் மொழிப்பெண் பாவாய்நின் கோலமனைக்க ணுமகிழ்வா
னுளஞ்சேர்ந் தடைந்த போதேநின் னுளத்தி லணிந்தே முணரென்றே
யிளஞ்சீர் நகைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬௩)

வீற்றா ரொற்றி நகரமர்ந்தீர் விளங்கு மலரே விளம்புநெடு
மாற்றா ரென்றே னிலைகாணும் மாலை முடிமேற் பாரென்றார்
சாற்றாச் சலமே யீதென்றேன் சடையின் முடிமே லன்றென்றே
யேற்றா தரவான் மொழிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬௪)

புயப்பா லொற்றி யீரச்சம் போமோ வென்றே ணுமென்றார்
வயப்பா வலருக் கிறையானீர் வஞ்சிப் பாவிங் குரைத்ததென்றேன்
வியப்பா நகையப் பாவெனும்பா வெண்பா கலிப்பா வுரைத்துமென்றே
யியற்பான் மொழிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬௫)

தண்ணம் பொழில்சூ ழொற்றியுளீர் சங்கங் கையிற்சேர்த் திடுமென்றேன்
றிண்ணம் பலமேல் வருங்கையிற் சேர்த்தோ முன்னர் தெரியென்றார்
வண்ணம் பலவிம் மொழிக்கென்றேன் மடவா யுனது மொழிக்கென்றே
யெண்ணங் கொளநின் றுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬௬)

உகஞ்சே ரொற்றி யூருடையீ ரொருமா தவரோ நீரென்றேன்
முகஞ்சேர் வடிவே யிரண்டுடையாய் மும்மா தவர்நா மென்றுரைத்தார்
சுகஞ்சேர்ந் திடுநும் மொழிக்கென்றேன் றோகா யுனதுமொழிக்கென்றே
யிகஞ்சேர் நயப்பா லுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬௭)

ஊரா மொற்றி யீராசை யுடையே னென்றே னெமக்கலது
நேரா வழக்குத் தொடுக்கின்றாய் நினக்கே தென்றார் நீரெனக்குச்
சோரா வணமீ தென்றேன்முன் சேர்த்தீ தெழுதித் தந்தவர்தாம்
யாரார் மடவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௬௮)

வருத்தந் தவிரீ ரொற்றியுளீர் மனத்தி லகாத முண்டென்றே
னிருத்தந் தொழுநம் மடியவரை நினைக்கின் றோரைக் காணினது
வுருத்தன் பெயர்முன் னெழுத்திலக்க முற்றே மற்ற வெல்லையகன்
றிருத்த லறியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (சுசு)

மைய லகற்றீ ரொற்றியுளீர் வாவென் றுரைப்பீ ரோவென்றேன்
செய்ய வதன்மேற் சிகரம்வைத்துச் செவ்வ னுரைத்தா லிருவாவென்
றுய்ய வுரைப்பே மென்றார்நம் முறையென் னுரையென் றேனிங்கே
யெய்யுன் னுரையை யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எ0)

தாவென் றருளு மொற்றியுளீர் தமியேன் மோக தாகமற
வாவென் றருள்வீ ரென்றேனவ் வாவின் பின்னர் வருமெழுத்தை
மேவென் றதனிற் சேர்த்ததிங்கே மேவி னன்றோ வாவென்பே
னேவென் றிடுகண் ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எக)

என்மே லருள்கூர்ந் தொற்றியுளீ ரென்னை யணைவா னினைவீரேற்
பொன்மேல் வெள்ளி யாமென்றேன் பொன்மேற் பச்சை யாங்கதன்மே
லன்மேற் குழலாய் சேயதன்மே லலவ னதன்மேன் ஞாயிறஃ
தின்மே லொன்றின் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எ௨)

வயலா ரொற்றி மேவுபிடி வாதர் நாம மியாதென்றேன்
மயலா யிடுமிப் பெயர்ப்பின்னர் வந்த வினைய நாமமென்றார்
செயலார் கால மறிந்தென்னைச் சேர்வீ ரென்றேன் சிரித்துனக்கிங்
கியலா ரயலா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எ௩)

நாலா ரணஞ்சூ ழொற்றியுளீர் நாகம் வாங்க லென்னென்றேன்
காலாங் கிரண்டிற் கட்டவென்றார் கலைத்தோல் வல்லீர் நீரென்றேன்
வேலார் விழிமாப் புலித்தோலும் வேழத் தோலும் வல்லேமென்
றேலா வமுத முகுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எச)

முடியா வளஞ்சூ ழொற்றியுளீர் முடிமே லிருந்த தென்னென்றேன்
கடியா வுள்ளங் கையின்முதலைக் கடிந்த தென்றார் கமலமென
வடிவார் கரத்தி லென்னென்றேன் வரைந்த வதனீ றகன்றதென்றே
யிடியா நயத்தி னகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எரு)

ஒன்றும் பெருஞ்சீ ரொற்றிநக ருடையீர் யார்க்கு முணர்வரியீ
ரென்றும் பெரியீர் நீர்வருதற் கென்ன நிமித்த மென்றேன்யான்
றுன்றும் விசும்பே காணென்றார் சூதா முமது சொல்லென்றே
னின்றுன் முலைதா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எசு)

வானார் வணங்கு மொற்றியுளீர் மதிவாழ் சடையீர் மரபிடைநீர்
தானாரென்றே னனிப்பள்ளித் தலைவ ரெனவே சாற்றினர்கா
ணானா லொற்றி யிருமென்றே னுண்டே யிருந்து வந்தனஞ்சே
யீனா தவணீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எஎ)

பற்று முடித்தோர் புகழொற்றிப் பதியீர் நுமது பசுவினிடைக்
கற்று முடித்த தென்னிருகைக் கன்று முழுதுங் காணென்றேன்
மற்று முடித்த மாலையொடுன் மருங்குற் கலையுங் கற்றுமுடிந்
திற்று முடித்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எஅ)

வானங் கொடுப்பீர் திருவொற்றி வாழ்வீ ரன்று வந்தெனது
மானங் கெடுத்தீ ரென்றுரைத்தேன் மாநன் றிஃதுன் மானன்றே
யூனங் கலிக்குந் தவர்விட்டா ருலக மறியுங் கேட்டறிந்தே
யீனந் தவிர்ப்பா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (எகூ)

ஞானம் படைத்த யோகியர்வாழ் நகரா மொற்றி நலத்தீர்மா
லேனம் புடைத்தீ ரணையென்பீ ரென்னை யுவந்திப் பொழுதென்றே
னூனந் தவிர்த்த மலர்வாயி னுள்ளே நகைசெய் திஃதுரைக்கே
மீனம் புகன்றா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அ0)

கருமை யளவும் பொழிலொற்றிக் கணத்தீர் முனிவர் கலக்கமறப்
பெருமை நடத்தி னீரென்றேன் பிள்ளை நடத்தி னானென்றார்
தரும மலவிவ் விடையென்றேன் றரும விடையு முண்டென்பா
லிருமை விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அக)

ஓசிய விடுகு மிடையாரை யொற்றி யிருந்தே மயக்குகின்ற
வசியர் மிகநீ ரென்றேனெம் மகன்கா ணென்றார் வளர்காமப்
பசிய தொடையுற் றேனென்றேன் பட்ட மவிழ்த்துக் காட்டுதியே
லிசையக் காண்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அஉ)

கலையா ளுடையீ ரொற்றிநின்றீர் காம மளித்தீர் களித்தணைவீர்
மலையா ளுமது மனையென்றேன் மருவின் மலையா ளல்லளென்றா
ரலையாண் மற்றை யவளென்றே னறியி னலையா ளல்லளுனை
யிலையா மணவ தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அங)

சீலம் படைத்தீர் திருவொற்றித் தியாக ரேநீர் திண்மையிலோர்
சூலம் படைத்தீ ரென்னென்றேன் றோன்று முலகுய்ந் திடவென்றா
ராலங் களத்தீ ரென்றேனீ யாலம் வயிற்றா யன்றோநல்
லேலங் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அச)

ஞால நிகழும் புகழொற்றி நடத்தீர் நீர்தா னூட்டமுறும்
பால ரலவோ வென்றேனெம் பாலர் பாலைப் பருவத்திற்
சால மயல்கொண் டிடவருமோர் தனிமைப் பால ரியாமென்றே
யேல முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அ௫)

வண்மை தருவீ ரொற்றிநகர் வாழ்வீ ரென்னை மருவீரென்
னுண்மை யறியீ ரென்றேன்யா முணர்ந்தே யகல நின்றதென்றார்
கண்மை யிலரோ நீரென்றேன் களமை யுடையேங் கண்மையுற
லெண்மை நீயே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அ௬)

தவந்தங் கியசீ ரொற்றிநகர் தனைப்போ னினைத்தென் மனையடைந்தீ
ருவந்தென் மீதிற் றேவர்திரு வுள்ளந் திரும்பிற் றேவென்றேன்
சிவந்தங் கிடநின் னுள்ளமெம்மேற் றிரும்பிற் றதனைத் தேர்ந்தன்றே
யிவர்ந்திங் கணைந்தா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அ௭)

ஒன்னார் புரமுன் றெரிசெய்தீ ரொற்றி யுடையீ ருமதுடைய
பொன்னார் சடைமேல் வெள்ளெருக்கம் பூவை மிலைந்தீ ரென்னென்றே
னின்னா ரளகத் தணங்கேநீ யெட்டி மிலைந்தா யிதிலதுகீ
ழென்னா ருலக ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அ௮)

கனிமா னிதழி மூலைச்சுவடு களித்தீ ரொற்றிக் காதலர்நீர்
தனிமா னேந்தி யாமென்றேன் றடங்கண் மடந்தாய் நின்முகமும்
பனிமா னேந்தி யாமென்றார் பரைமான் மருவி னீரென்றே
னினிமான் மருவி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (அ௯)

சிறியேன் றவமோ வெனைப்பெற்றார் செய்த தவமோ வீண்டடைந்தீ
ரறியே னொற்றி யடிகேளிங் கடைந்த வாறென் னினைத்தென்றேன்
பொறிநே ருனது பொற்கலையைப் பூவார் கலையாக் குறநினைத்தே
யெறிவேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௯0)

அளிக்குங் குணத்தீர் திருவொற்றி யழக ரேநீ ரணிவேணி
வெளிக்கொண் முடிமே லணிந்ததுதான் விளியா விளம்பத் திரமென்றேன்
விளிக்கு மிளம்பத் திரமுமுடி மேலே மிலைந்தாம் விளங்கிழைநீ
யெளிக்கொண் டுரையே லென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௯௧)

வாசங் கமழு மலர்ப்பூங்கா வனஞ்சூ ழொற்றி மாநகரீர்
நேசங் குறிப்ப தென்னென்றே னீயோ நாமோ வுரையென்றார்
தேசம் புகழ்வீர் யானென்றேன் றிகழ்தைத் திரிதித் திரியேயா
மேசங் குறிப்ப தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௯௨)

பேசுங் கமலப் பெண்புகழும் பெண்மை யுடைய பெண்களெலாங்
கூசும் படியிப் படியொற்றிக் கோவே வந்த தென்னென்றேன்
மாசுந் தரிநீ யிப்படிக்கு மயங்கும் படிக்கு மாதருனை
யேசும் ப்டிக்கு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௯௩)

கொடியா லெயில்சூ ழொற்றியிடங் கொண்டீ ரடிகள் குருவுருவாம்
படியா லடியி லிருந்தமறைப் பண்பை யுரைப்பீ ரென்றேனின்
மடியா லடியி லிருந்தமறை மாண்பை வகுத்தா யெனிலதுநா
மிடியா துரைப்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௯௪)

என்னே ருளத்தி னமர்ந்தீர்நல் லெழிலா ரொற்றி யிடையிருந்தீ
ரென்னே யடிகள் பலியேற்ற லேழ்மை யுடையீர் போலுமென்றே
னின்னே கடலி னிடைநீபத் தேழ்மை யுடையாய் போலுமென
வின்னே யங்கொண் டுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ, (௯௫)

நல்லார் மதிக்கு மொற்றியுளீர் நண்ணு முயிர்க டொறுநின்றீ
ரெல்லா மறிவீ ரென்னுடைய விச்சை யறியீர் போலுமென்றேன்
வல்லா யறிவின் மட்டொன்று மனமட் டொன்று வாய்மட்டொன்
றெல்லா மறிந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௯௬)

மறிநீர்ச் சடையீர் சித்தெல்லாம் வல்லீ ரொற்றி மாநகரீர்
பொறிசே ருமது புகழ்பலவிற் பொருந்துங் குணமே வேண்டுமென்றேன்
குறிநே ரமது விற்குணத்தின் குணத்தா யதனால் வேண்டுற்றா
யெறிவேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௯௭)

ஊரூ ரிருப்பீ ரொற்றிவைத்தீ ரூர்தான் வேறுண் டோவென்றே
னோரூர் வழக்கிற் கரியையிறை யுன்னி வினவு மூரொன்றோ
பேரூர் தினையூர் பெரும்புலியூர் பிடவூர் கடவூர் முதலாக
வேரூ ரனந்த மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௯௮)

விழியொண் ணுதலீ ரொற்றியுளீர் வேதம் பிறவி யிலரென்றே
மொழியு நுமைத்தான் வேயீன்ற முத்த ரெனலிங் கென்னென்றேன்
பழியன் றணங்கே யவ்வேய்க்குப் படுமுத் தொருவித் தன்றதனு
விழியும் பிறப்போ வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௯௯)

விண்ணார் பொழில்சூ ழொற்றியுளீர் விளங்குந் தாம மிகுவாசத்
தண்ணார் மலர்வே தனையொழிக்கத் தருதல் வேண்டு மெனக்கென்றேன்
பண்ணார் மொழியா யுபகாரம் பண்ணாப் பகைவ ரேனுமிதை
யெண்ணா ரெண்ணா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௦௦)

செம்பான் மொழியார் முன்னரெனைச் சேர்வீரென்கோ திருவொற்றி
யம்பார் சடையீ ருமதாட லறியே னருளல் வேண்டுமென்றேன்
வம்பார் முலையாய் காட்டுகின்றா மன்னும் பொன்னா ரம்பலத்தே
யெம்பால் வாவென் றுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௧0௧)

மைக்கொண் மிடற்றீ ரூரொற்றி வைத்தீ ருண்டோ மனையென்றேன்
கைக்க ணிறைந்த தனத்தினுந்தங் கண்ணி னிறைந்த கணவனையே
துய்க்கு மடவார் விழைவரெனச் சொல்லும் வழக்கி தறிந்திலையோ
வெய்க்கு மிடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௧0௨)

ஆறு முகத்தார் தமையீன்ற வைந்து முகத்தா ரிவர்தமைநான்
மாறு முகத்தார் போலொற்றி வைத்தீர் பதியை யென்னென்றே
னாறு மலர்ப்பூங் குழனீயோ நாமோ வைத்த துன்மொழிமன்
றேறு மொழியன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௧0௩)

வள்ளன் மதியோர் புகழொற்றி வள்ளா லுமது மணிச்சடையின்
வெள்ள மகண்மேற் பிள்ளைமதி விளங்க லழகீ தென்றேனின்
னுள்ள முகத்தும் பிள்ளைமதி யொளிகொண் முகத்தும் பிள்ளைமதி
யெள்ள லுடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௧0௪)

உள்ளத் தனையே போலன்ப ருவக்குந் திருவா ழொற்றியுளீர்
கள்ளத் தவர்போ லிவணிற்குங் கரும மென்னீ ரின்றென்றேன்
மெள்ளக் கரவு செயவோநாம் வேட மெடுத்தோ நின்சொனினை
யெள்ளப் புரிந்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௧0௫)

அச்சை யடுக்குந் திருவொற்றி யவர்க்கோர் பிச்சை கொடுமென்றேன்
விச்சை யடுக்கும் படிநம்பான் மேவினோர்க்கிவ் வகில நடைப்
பிச்சை யெடுப்பே மலதுன்போற் பிச்சை கொடுப்பே மலவென்றே
யிச்சை யெடுப்பா யுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௧0௬)

அள்ளற் பழனத் திருவொற்றி யழக ரிவர்தம் முகநோக்கி
வெள்ளச் சடையீ ருள்ளத்தே விருப்பே துரைத்தாற் றருவலென்றேன்
கொள்ளக் கிடையா வலர்குமுதங் கொண்ட வமுதங் கொணர்ந்தின்னு
மெள்ளத் தனைதா வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௧0௭)

விஞ்சு நெறியீ ரொற்றியுளீர் வியந்தீர் வியப்பென் னிவணென்றேன்
கஞ்ச மிரண்டு நமையங்கே கண்டு குவிந்த விரிந்திங்கே
வஞ்ச விருதா மரைமுகையை மறைக்கின் றனநின் பால்வியந்தா
மெஞ்ச லறநா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. (௧0௮)

அளியா ரொற்றி யுடையாருக் கன்ன நிரம்ப விடுமென்றே
னளியார் குழலாய் பிடியன்ன மளித்தாற் போது மாங்கதுநின்
னொளியார் சிலம்பு சூழ்கமலத் துளதாற் கடகஞ் சூழ்கமலத்
தெளியார்க் கிடுநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௦௯)

விச்சைப் பெருமா னெனுமொற்றி விடங்கப் பெருமா னீர்முன்னம்
பிச்சைப் பெருமா னின்றுமணப் பிள்ளைப் பெருமா னாமென்றே
னச்சைப் பெறுநீ யம்மணப்பெண் ணாகி யிடையி லையங்கொள்
ளிச்சைப் பெரும்பெண் ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௦)

படையம் புயத்தோன் புகழொற்றிப் பதியீ ரரவப் பணிசுமந்தீர்
புடையம் புயத்தி லென்றேன்செம் பொன்னே கொடையம் புயத்தினுநன்
னடையம் புயத்துஞ் சுமந்தனைநீ நானா வரவப் பணிமற்று
மிடையம் பகத்து மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௧)

கூம்பா வொற்றி யூருடையீர் கொடும்பாம் பணிந்தீ ரென்னென்றே
னோம்பா துரைக்கிற் பார்த்திடினுள் ளுன்னில் விடமேற் றுன்னிடைக்கீழ்ப்
பாம்பா வதுவே கொடும்பாம்பெம் பணிப்பாம் பதுபோற் பாம்பலவென்
றேம்பா நிற்ப விசைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௨)

புயல்சூ ழொற்றி யுடையீரென் புடையென் குறித்தோ போந்ததென்றேன்
கயல்சூழ் விழியாய் தனத்தவரைக் காண விரப்போ ரெதற்கென்றார்
மயல்சூழ் தனமிங் கிலையென்றேன் மறையா தெதிர்வைத் திலையென்ற
வியல்சூ ழறமன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௩)

நடவாழ் வொற்றி யுடையீர்நீர் நாக மணிந்த தழகென்றேன்
மடவா யதுநீர் நாகமென மதியே லயன்மான் மனனடுங்க
விடவா யுமிழும் படநாகம் வேண்டிற் காண்டி யென்றேயென்
னிடவா யருகே வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௪)

கோடா வொற்றி யுடையீர்நுங் குலந்தான் யாதோ கூறுமென்றேன்
வீடார் பிரம குலந்தேவர் வேந்தர் குலநல் வினைவசியப்
பாடார் குலமோர் சக்கரத்தான் பள்ளிக் குலமெல் லாமுடையே
மேடார் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௫)

நலமா மொற்றி யுடையீர்நீர் நல்ல வழக ரானாலுங்
குலமே துமக்கு மாலையிடக் கூடா தென்றே னின்குலம்போ
லுலகோ துறுநங் குலமொன்றா வோரா யிரத்தெட் டுயர்குலமிங்
கிலகா நின்ற தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௬)

மதிலொற் றியினீர் நும்மனையாண் மலையின் குலநும் மைந்தருளோர்
புதல்வர்க் கானைப் பெருங்குலமோர் புதல்வர்க் கிசையம் புலிக்குலமா
மெதிரற் றருள்வீர் நுங்குலமிங் கெதுவோ வென்றேன் மனைவியருள்
ளிதுமற் றொருத்திக் கென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௭)

தேமாம் பொழில்சூ ழொற்றியுளீர் திகழுந் தகரக் காற்குலத்தைப்
பூமா னிலத்தில் விழைந்துற்றீர் புதுமை யிஃதும் புகழென்றே
னாமா குலத்தி லரைக்குலத்து ளணைந்தே புறமற் றரைக்குலங்கொண்
டேமாந் தனைநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௮)

அனஞ்சூ ழொற்றிப் பதியுடையீ ரகில மறிய மன்றகத்தே
மனஞ்சூழ் தகரக் கால்கொண்டீர் வனப்பா மென்றே னுலகறியத்
தனஞ்சூ ழகத்தே யணங்கேநீ தானுந் தகரத் தலைகொண்டா
யினஞ்சூ ழழகா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௧௯)

பங்கே ருகப்பூம் பணையொற்றிப் பதியீர் நடுவம் பரமென்னு
மங்கே யாட்டுக் காலெடுத்தீ ரழகென் றேனவ் வம்பரமே
லிங்கே யாட்டுத் தோலெடுத்தா யாமொன் றிரண்டு நீயென்றா
லெங்கே நின்சொல் லென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௨௦)

மாணப் புகழ்சே ரொற்றியுளீர் மன்றார் தகர வித்தைதனைக்
காணற் கினிநான் செயலென்னே கருதி யுரைத்தல் வேண்டுமென்றேன்
வேணச் சுறுமெல் லியலேயாம் விளம்பு மொழியவ் வித்தையுனக்
கேணப் புகலு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௨௧)

நல்லா ரொற்றி யுடையீர்யா னடக்கோ வெறும்பூ வணையணைய
வல்லா லவனும் முடன்வருகோ வணையா தவலத் துயர்துய்க்கோ
செல்லா வென்சொன் நடவாதோ திருக்கூத் தெதுவோ வெனவிடைக
ளெல்லா நடவா தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௨௨)

ஆட்டுத் தலைவர் நீரொற்றி யழகீ ரதனாற் சிறுவிதிக்கோ
ராட்டுத் தலைதந் தீரென்றே னன்றா லறவோ ரறம்புகல
வாட்டுத் தலைமுன் கொண்டதனா லஃதே பின்ன ரளித்தாமென்
றீட்டுத் தரமீந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௨௩)

ஒற்றிப் பெருமா னுமைவிழைந்தா ரூரில் வியப்பொன் றுண்டிரவிற்
கொற்றக் கமலம் விரிந்தொருகீழ்க் குளத்தே குமுதங் குவிந்ததென்றேன்
பொற்றைத் தனத்தீர் நுமைவிழைந்தார் புரத்தே மதியந் தேய்கின்ற
தெற்றைத் தினத்து மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௨௪)

இடஞ்சே ரொற்றி யுடையீர்நீ ரென்ன சாதி யினரென்றேன்
தடஞ்சேர் முலையாய் நாந்திறலாண் சாதி நீபெண் சாதியென்றார்
விடஞ்சேர் களத்தீர் நும்மொழிதான் வியப்பா மென்றே னயப்பானின்
னிடஞ்சேர் மொழிதா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஉரு)

உடையா ரென்பா ருமையொற்றி யுடையீர் பணந்தா னுடையீரோ
நடையா யேற்கின் றீரென்றே னங்காய் நின்போ லொருபணத்தைக்
கடையா ரெனக்கீழ் வைத்தருமை காட்டேம் பணிகொள் பணங்கோடி
யிடையா துடையே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஉசு)

என்னா ருயிர்க்குப் பெருந்துணையா மெங்கள் பெருமா னீரிருக்கு
நன்னா டொற்றி யன்றோதா னவில வேண்டு மென்றுரைத்தேன்
முன்னா ளொற்றி யெனினுமது மொழித லழகோ தாழ்தலுயர்
வின்னா னிலத்துண் டென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஉஎ)

பெருந்தா ரணியோர் புகழொற்றிப் பெருமா னிவர்தம் முகநோக்கி
யருந்தா வமுத மனையீரிங் கடுத்த பரிசே தறையுமென்றேன்
வருந்தா திங்கே யருந்தமுத மனையா ளாக வாழ்வினொடு
மிருந்தா யடைந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஉஅ)

செம்மை வளஞ்சூ ழொற்றியுளீர் திகழாக் கரித்தோ லுடுத்தீரே
யும்மை விழைந்த மடவார்க ளுடுக்கக் கலையுண் டோவென்றே
னெம்மை யறியா யொருகலையோ விரண்டோ வனந்தங் கலைமெய்யி
லிம்மை யுடையே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஉகூ)

கற்றைச் சடையீர் திருவொற்றிக் காவ லுடையீ ரீங்கடைந்தீ
ரிற்றைப் பகலே நன்றென்றே னிற்றை யிரவே நன்றெமக்குப்
பொற்றைத் தனத்தாய் கையமுதம் பொழியா தலர்வாய்ப் புத்தமுத
மிற்றைக் களித்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஙO)

கற்றீ ரொற்றீர் முன்பொருவான் காட்டிற் கவர்ந்தோர் நாட்டில்வளை
விற்றீ ரின்றென் வளைகொண்டீர் விற்கத் துணிந்தீ ரோவென்றேன்
மற்றீர்ங் குழலாய் நீயெம்மோர் மனையின் வளையைக் கவர்ந்துகளத்
திற்றீ தணிந்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஙக)

உடுக்கும் புகழா ரொற்றியுளா ருடைதா வென்றார் திசையெட்டு
முடுக்கும் பெரியீ ரெதுகண்டோ வுரைத்தீ ரென்றேன் றிசைமுழுது
முடுக்கும் பெரிய வரைச்சிறிய வொருமுன் றானை யான்மூடி
யெடுக்குந் திறங்கண் டென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கஙஉ)

காவா யொற்றிப் பதியுடையீர் கல்லா னைக்குக் கரும்பன்று
தேவாய் மதுரை யிடத்தளித்த சித்த ரலவோ நீரென்றேன்
பாவா யிருகல் லானைக்குப் பரிவிற் கரும்பிங் கிரண்டொருநீ
யீவா யிதுசித் தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௩௩)

ஊட்டுந் திருவா ழொற்றியுளீ ருயிரை யுடலாஞ் செப்பிடைவைத்
தாட்டுந் திறத்தீர் நீரென்றே னணங்கே யிருசெப் பிடையாட்டுந்
தீட்டும் புகழன் றியுமுலகைச் சிறிதோர் செப்பி லாட்டுகின்றா
யீட்டுந் திறத்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௩௪)

கந்த வனஞ்சூ ழொற்றியுளீர் கண்மூன் றுடையீர் வியப்பென்றேன்
வந்த வெமைத்தான் பிரிபோது மற்றை யவரைக் காண்போதுஞ்
சுந்த மிகுங்கண் ணிருமூன் றுந் தகுநான் கொன்றுந் தானடைந்தா
யிந்த வியப்பென் னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௩௫)

ஆழி விடையீர் திருவொற்றி யமர்ந்தீ ரிருவர்க் ககமகிழ்வான்
வீழி யதனிற் படிக்காசு வேண்டி யளித்தீ ராமென்றேன்
வீழி யதனிற் படிக்காசு வேண்டா தளித்தா யளவொன்றை
யேழி லகற்றி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௩௬)

உற்ற விடத்தே பெருந்துணையா மொற்றிப் பெருமா னும்புகழைக்
கற்ற விடத்தே முக்கனியுங் கரும்பு மமுதுங் கயவாவோ
மற்ற விடச்சீ ரென்னென்றேன் மற்றை யுபய விடமுமுத
லெற்ற விடமே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௩௭)

யான்செய் தவத்தின் பெரும்பயனே யென்னா ரமுதே யென்றுணையே
வான்செ யரசே திருவொற்றி வள்ளால் வந்த தென்னென்றேன்
மான்செய் விழிப்பெண் ணேநீயாண் வடிவா னதுகேட் டுள்ளம்வியந்
தேன்கண் டிடவே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௩௮)

கருணைக் கடலே யென்னிரண்டு கண்ணே முக்கட் கரும்பேசெவ்
வருணப் பொருப்பே வளரொற்றி வள்ளன் மணியே மகிழ்ந்தணையத்
தருணப் பருவ மிஃதென்றேன் றவிரன் றெனக்காட் டியதுன்ற
னிருணச் சளக மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௩௯)

காவிக் களங்கொள் கனியேயென் கண்ணுண் மணியே யணியேயென்
னாவித் துணையே திருவொற்றி யரசே யடைந்த தென்னென்றேன்
பூவிற் பொலியுங் குழலாய்நீ பொன்னி னுயர்ந்தா யெனக்கேட்டுன்
னீவைக் கருதி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (௧௪௦)

கண்ணும் மனமுங் களிக்குமெழிற் கண்மூன் றுடையீர் கலையுடையீர்
நண்ணுந் திருவா ழொற்றியுளீர் நடஞ்செய் வல்லீர் நீரென்றேன்
வண்ண முடையாய் நின்றனைப்போன் மலர்வாய் நடஞ்செய் வல்லோமோ
வெண்ண வியப்பா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசக)

தாங்கும் விடைமே லழகிரோன் றன்னைக் கலந்துந் திருவொற்றி
யோங்குந் தளியி லொளித்தீர்நீ ரொளிப்பில் வல்ல ராமென்றேன்
வாங்கு நுதலாய் நீயுமெனை மருவிக் கலந்து மலர்த்தளியி
லீங்கின் றொளித்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசஉ)

அம்மை யடுத்த திருமேனி யழகி ரொற்றி யணிநகரீ
ரும்மை யடுத்தோர் மிகவாட்ட முறுத லழகோ வென்றுரைத்தேன்
நம்மை யடுத்தாய் நமையடுத்தோர் நம்போ லுறுவ ரன்றெனிலே
தெம்மை யடுத்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசங)

உண்கண் மகிழ்வா லளிமிழற்று மொற்றி நகரீ ரொருமூன்று
கண்க ளுடையீ ரென்காதல் கண்டு மிரங்கீ ரென்னென்றேன்
பண்கொண் மொழியாய் நின்காதல் பன்னுஞ் சுவைசெய் பழம்போலு
மெண்கொண் டிருந்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசச)

வணங்கே ழிலங்குஞ் செஞ்சடையீர் வளஞ்சே ரொற்றி மாநகரீர்
குணங்கேழ் மிடற்றீர் பாலிருளைக் கொண்டீர் கொள்கை யென்னென்றே
னணங்கே யொருபா லன்றிநின்போ லெம்பா லிருள்கொண் டிடச்சற்று
மிணங்கே மிணங்கே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசரு)

கரும்பி னினியீ ரென்னிரண்டு கண்க ளனையீர் கறைமிடற்றீர்
பெரும்பை யணியீர் திருவொற்றிப் பெரியீ ரெதுநும் பெயரென்றே
னரும்பண் முலையாய் பிறர்கேட்க வறைந்தா லளிப்பீ ரெனச்சூழ்வ
ரிரும்பொ னிலையே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசசு)

நிலையைத் தவறூர் தொழுமொற்றி நிமலப் பெருமா னீர்முன்ன
மலையைச் சிலையாக் கொண்டீர்நும் மாவல் லபமற் புதமென்றேன்
வலையத் தறியாச் சிறுவர்களு மலையைச் சிலையாக் கொள்வர்களீ
திலையற் புதந்தா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசஎ)

உதயச் சுடரே யனையீர்நல் லொற்றி யுடையீ ரென்னுடைய
விதயத் தமர்ந்தீ ரென்னேயென் னெண்ண மறியீ ரோவென்றேன்
சுதையிற் றிகழ்வா யறிந்தன்றோ துறந்து வெளிப்பட் டெதிரடைந்தா
மிதையுற் றறிநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசஅ)

புரக்குங் குணத்தீர் திருவொற்றிப் புனித ரேநீர் போர்க்களிற்றை
யுரக்குங் கலக்கம் பெறவுரித்தீ ருள்ளத் திரக்க மென்னென்றேன்
கரக்கு மிடையாய் நீகளிற்றின் கன்றைக் கலக்கம் புரிந்தனைநின்
னிரக்க மிதுவோ வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசகூ)

பதங்கூ றொற்றிப் பதியீர்நீர் பசுவி லேறும் பரிசதுதான்
விதங்கூ றறத்தின் விதிதானோ விலக்கோ விளம்பல் வேண்டுமென்றே
னிதங்கூ றிடுநற் பசுங் கன்றை நீயுமேறி யிடுகின்றா
யிதங்கூ றிடுக வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கரு0)

யோக முடையார் புகழொற்றி யூரிற் பரம யோகியராந்
தாக முடையா ரிவர்தமக்குத் தண்ணீர் தரநின் றனையழைத்தேன்
போக முடையாய் புறத்தண்ணீர் புரிந்து விரும்பா மகத்தண்ணீ
ரீக மகிழ்வி னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருக)

வளநீ ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றார் மாதேநா
முளநீர்த் தாக மாற்றுறுநீ ருதவ வேண்டு மென்றார்நான்
குளநீ ரொன்றே யுளதென்றேன் கொள்ளே மிடைமேற் கொளுமிந்த
விளநீர் தருக வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருஉ)

மெய்ந்நீ ரொற்றி வாணரிவர் வெம்மை யுளநீர் வேண்டுமென்றா
ரந்நீ ரிலைநீர் தண்ணீர்தா னருந்தி லாகா தோவென்றேன்
முந்நீர் தனையை யனையீரிம் முதுநீ ருண்டு தலைக்கேறிற்
றிந்நீர் காண்டி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருஙூ)

சீலஞ் சேர்ந்த வொற்றியுளீர் சிறிதாம் பஞ்ச காலத்துங்
கோலஞ் சார்ந்து பிச்சைகொளக் குறித்து வருவீ ரென்னென்றேன்
காலம் போகும் வார்த்தைநிற்குங் கண்டா யிதுசொற் கடனுமோ
வேலங் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருச)

ஊற்றூர் சடையீ ரொற்றியுளீ ரூரூ ரிரக்கத் துணிவுற்றீர்
நீற்றால் விளங்குந் திருமேனி நேர்ந்திங் கிளைத்தீர் நீரொன்றேன்
சோற்றா லிளைத்தே மன்றமது சொல்லா லிளைத்தே மின்றினிநா
மேற்றா லிகழ்வே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருரு)

நீரை விழுங்குஞ் சடையுடையீ ருளது நமக்கு நீரூருந்
தேரை விழுங்கும் பசுவென்றேன் செறிநின் கலைக்கு ளொன்றுளது
காரை விழுங்கு மெமதுபசுக் கன்றின் றேரை நீர்த்தேரை
யீர விழுங்கு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருசூ)

பொன்னேர் மணிமன் றுடையீர்நீர் புரிந்த தெதுவெம் புடையென்றே
னின்னே யுரைத்தற் கஞ்சுதுமென் றூரென் னென்றே னியம்புதுமேன்
மின்னே நினது நடைப்பகையா மிருகம் பறவை தமைக்குறிக்கு
மென்னே யுரைப்ப தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருஎ)

அடையார் புரஞ்செற் றம்பலத்தே யாடு மழகீ ரெண்பதிற்றுக்
கடையா முடலின் றலைகொண்டீர் கரமொன் றினிலற் புதமென்றே
னுடையாத் தலைமேற் றலையாக வுன்கை யீரைஞ் ஞூறுகொண்ட
திடையா வளக்கே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருஅ)

தேவர்க் கரிய வானந்தத் திருத்தாண் டவஞ்செய் பெருமானீர்
மேவக் குகுகு குகுகுவணி வேணி யுடையீ ராமென்றேன்
தாவக் குகுகு குகுகுகுகுத் தாமே யைந்து விளங்கவணி
யேவற் குணத்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கருகூ)

கொன்றைச் சடையீர் கொடுங்கோளூர் குறித்தீர் வருதற் கஞ்சுவல்யா
னென்றப் பெருங்கோ ளென்மீது மூரைப்பா ருண்டென் றுணர்ந்தென்றேன்
நன்றப் படியேற் கோளிலையா நகரு முடையே நங்காய்நீ
யின்றச் சுறலென் னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசூ0)

புரியுஞ் சடையீ ரமர்ந்திடுமூர் புலியூ ரெனிலெம் போல்வார்க்கு
முரியும் புலித்தோ லுடையீர்போ லுறுதற் கியலு மோவென்றேன்
றிரியும் புலியூ ரன்றுநின்போற் றெரிவை யரைக்கண் டிடிற்பயந்தே
யிரியும் புலியூ ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசூக)

தெவ்வூர் பொடிக்குஞ் சிறுநகையித் தேவர் தமைநா னீரிருந்த
வெவ்வூ ரென்றே னகைத்தணங்கே யேழூர் நாலூ ரென்றார்பின்
னவ்வூர்த் தொகையி னிருத்தலரி தாமென் றேன்மற் றதிலொவ்வூ
ரிவ்வூ ரெடுத்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசூஉ)

மணங்கொ ளிதழிச் சடையீர்நீர் வாழும் பதியா தென்றேனின்
குணங்கொண் மொழிகேட் டோரளவு குறைந்த குயிலாம் பதியென்று
ரணங்கின் மறையூ ராமென்றே னஃதன் றருளோத் தூரிஃது
மிணங்க வுடையே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசூ௩)

ஆற்றுச் சடையா ரிவர்பலியென் றடைந்தார் நுமதூ ரியாதென்றேன்
சோற்றுத் துறையென் றார்நுமக்குச் சோற்றுக் கருப்பேன் சொலுமென்றேன்
றேற்றுத் திரிவே மன்றுநின்போற் சொல்லுங் கருப்பென் றுலகியம்ப
வேற்றுத் திரியே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசுச)

ஓங்குஞ் சடையீர் நெல்வாயி லுடையே மென்றீ ருடையீரேற்
றோங்கும் புகழ்நும் மிடைச்சிறுமைச் சார்ந்த தெவனீர் சாற்றுமென்றே
னேங்கும் படிநும் மிடைச்சிறுமை யெய்திற் றலதீண் டெமக்கின்றா
லீங்குங் காண்டி ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. (கசுரு)

திருச்சிற்றம்பலம்

அ. இங்கித மாலை[313]

முற்றிற்று.

திரு அருட்பா

எ. முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி

முற்றிற்று.

---

313. "மையலழகீர்" என்று தொடங்கும் அருட்பா ஒன்றனை இந்நூலின் 166-ஆம் பாவாகத் திருவாளர் ச. மு. கந்தசாமி பிள்ளை அவர்களுடைய 1924-ஆம் ஆண்டுப் பதிப்பில் முதல் முதலாகச் சேர்த்திருக்கிறது. இது குறித்துத் திரு அருட்பா இப்பதிப்பாசிரியர் பதிப்பு 6-ஆம் புத்தகம் தனிப் பாசுரப் பகுதி 79-ஆம் பக்கம் பார்க்க. 311-ஆம் அடிக்குறிப்பில் கண்டபடி, இப் பதிப்பாசிரியரால் இனி வரவிருக்கும் இங்கித மாலையின் தனிப்பதிப்பும் பார்த்துணர்க.

அநுபந்தம்

1. சிவநேச வெண்பாவிற்குத் தொழூவூர் வேலாயுத முதலியார் அவர்களுடைய குறிப்புக்கள்[314]

7-ஆம் வெண்பா.	வந்திதேன் எனற்பாலது வந்தித்தேன் என விரித்தல் விகாரமாயிற்று. ஈண்டு தேன் என்பது இனிமை.
36-ஆம் வெண்பா.	வங்கணம் என்பது நட்பு.
37-ஆம் வெண்பா.	ஆவலென்பதனை எதிர்காலத் தன்மை ஒருமை வினைமுற்றாகக் கொள்க.
44-ஆம் வெண்பா.	எம்பா என்பது அண்மைவிளி, இறை முன்னிலை.
49-ஆம் வெண்பா.	மாயற்கு என்பது மாயாற்கென நீட்டல் விகாரமாயிற்று.
64-ஆம் வெண்பா.	நீத்தம் என்பது நீத்தெனக் குறைந்து நின்றது. வித்தம் என்பது அறிவு.
66-ஆம் வெண்பா.	தானம் என்பது சுவர்க்கம்.
97-ஆம் வெண்பா.	உய்ங்தேம் என்பது உய்ஞ்சேம் எனத் திரிந்தது.

---

314. மேற்கண்ட ஒன்பது குறிப்புக்களும் சிவநேச வெண்பாவின் அடிக் குறிப்புக்களில் சேர்க்க வேண்டியன. இவையும் தொழூவூர் வேலாயுத முதலியார் அவர்களின் பெயர்கொண்டு இந்நூலில் வழங்கும் மற்ற அடிக்குறிப்புக்களும் 1867-ஆம் ஆண்டில் வெளிவந்த அவர்களது திரு அருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதல் பதிப்பினின்றும் எடுத்தவையாகும். அடுத்த இரு பக்கங்கள் பார்க்க. இந்நூலின் 10-ஆம் அடிக்குறிப்பினையும் பார்க்க.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கபிள்ளை

அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா

முதற்புத்தகம்

இஃது

சமரசவேத சன்மார்க்க சங்கத்தை யபிமானித்த

புதுவை - வேலுமுதலியார்

சிவாநந்தபுரம் - செல்வராயமுதலியார்

இறுக்கம் - இரத்தினமுதலியார்

வேண்டுகோளின்படி

இவ்வாசிரியர் மாணாக்கரும்

ஷை சமரசவேதசன்மார்க்கசங்க

வித்வான்களிலொருவருமாகிய

தொழுவூர் - வேலாயுதமுதலியாரால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதிவருஷம் ௪௯௬௮-ல்-நிகழும் - அக்ஷயவருஷம்-மகரரவி

ASIATIC PRESS, 292, LINGEE CHETTY STREET, MADRAS.
February 1867.

Registered Copy-right.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கபிள்ளை

அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா

இரண்டாம் பதிப்பு

இஃது
சமரசவேத சன்மார்க்க சங்கத்தை யபிமானித்த
மயிலை - சிக்கிட்டி - சோமசுந்தரசெட்டியார்
வேண்டுகோளின்படி

இவ்வாசிரியர் மாணக்கரும்
ஷை சமரச வேத சன்மார்க்க சங்க
வித்வான்களிலொருவரும்
பிரஸிடென்ஸி காலேசு தமிழ்ப்பண்டிதருமாகிய
தொழுவூர் - வேலாயுதமுதலியாரால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி௵ ௪௯௮௯-ல்-நிகழும்-ஸர்வஜித்து௵-மேஷரவி

MEMORIAL PRESS, 39, THUMBU CHETTY STREET, MADRAS.
1887

Registered Copy-right.

இதன்விலை ரூ - 2. தபால்சிலவு தவிர.

அநுபந்தம்

4. திருவடிப் புகழ்ச்சியின்

சிற்சில வடமொழிச் சொற்கள் விளக்கம்[315]

1. *பரசிவம்* : para-s'ivam : the supreme auspicious being : *மேலான மங்கள வடிவம்.*
2. *சின்மயம்* : cin-mayam : of the nature of consciousness : *அறிவாந்தன்மை.*
3. *பூரணம்* : pūrṇam : the plenum : *முழுமை.*
4. *சிவபோக பாக்கியம்* : s'iva-bhoga-bhāgyam : the fortune which is the enjoyment of siva : *சிவநுகர்வாகிய செல்வம்.*
5. *பரமநிதியம்* : parama-nidhiḥ : the supreme treasure : *மேலான வைப்பு.*
6. *பரசுகம்* : para-sukham : the supreme happiness : *மேலான இன்பம்.*
7. *தன்மயம்* : tan-mayam : of the nature of that : *அது என்பதன் தன்மை.*
8. *சச்சிதானந்தம்* : saccidānandam : existence-consciousness-bliss : *மெய்-அறிவு-இன்பம்.*

---

315. *இந்நூல் பாயிரத்தில் முன்னுரையின் இறுதிப் பத்திகள் பார்க்க. அவற்றில் கண்டபடி, இவ்விளக்கத்தில் உள்ள ஆங்கில எழுத்தில் காட்டியிருக்கும் வடமொழிச் சொற்களும் அவற்றின் பொருள்களை அறிவிக்கும் ஆங்கில மொழிகளும் திருவாளர் டாக்டர் டி.எம்.பி. மஹாதேவன் எம்.ஏ.பிஎச்.டி. அவர்களால் உதவப்பட்டன. அவ்வாங்கில மொழிகளின் பொருள்கள் தமிழ்ச் சொற்களில் இந்நூலின் பதிப்பாசிரியராகிய என்னால் குறிக்கப்பட்டன. திருவடிப் புகழ்ச்சியின் வடமொழிச் சொற்கள் சார்பாக, என் நண்பர் இருவர் சென்னைச் சர்வகலாசாலையில் வடமொழி ஆசிரியராக விளங்கும் திருவாளர் ஸ்ரீ. சுப்பிரமண்ய சாஸ்திரியார் சிரோமணி, எம்.ஏ. அவர்களையும், தத்துவநூல் ஆசிரியராகத் திகழும் திருவாளர் டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி எம்.ஏ. பிஎச்.டி. அவர்களையும் கலந்து அவர்களின் கருத்துரைகளையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். இதன்பொருட்டு, இவ்விரு கல்விக்கடற்கும் என் அன்பும் நன்றியும் உரியனவாகும்.*

9. பரம ஏகாந்த நிலயம் : parama-ekānta-nilayam : the place of the supreme one-end : மேலான ஒரு முடிவின் நிலைக்களம்.

10. பரம ஞானம் : parama-jñānam : the supreme knowledge : மேலான அறிவின் வைப்பு.

11. பரம சத்துவ மகத்துவம் : parama-sattva-mahatvam : the supreme goodness and greatness : மேலான நன்மையும் பெருமையும்.

12. பரம கைவல்ய நிமலம் : parama-kaivalya-nimalam : the supreme state of perfection and purity : நிறைவும் தூய்மையும் கொண்ட மேலான நிலை.

13. பரம தத்துவ நிரதிசய நிட்களம் : parama-tattva-niratis'aya-niṣkalam : the supreme truth which is unexcellable and partless : ஒப்பற்றதும் பிரிவற்றதும் ஆன மேலான உண்மை.

14. பூத பௌதிகாதார நிபுணம் : bhūta-bhautikādhāra-nipuṇam : the excellent basis of the elements and elementals : முதல்கட்கும் முதல்களா லாயவற்றிற்கும் ஆன மேலான ஆதாரம் அல்லது அடிப்படை.

15. பவ பந்த நிக்ரக விநோத சகளம் : bhava-bandha-nigraha-vinoda-sakalam : the full that sports in destroying the bondage of birth : பிறப்பிறப்பின் தளையை அழித்தற்கு அருளும் நிறைவு.

16. சிற்பரம் பரானந்த சொருபம் : cit-param-parānanda-svarūpam : the own-nature that is consciousness and the supreme bliss : அறிவு வடிவமும் மேலான இன்பமும் ஆய தன்-தன்மை.

17. பரிசயாதீதம் : paricayātītam : beyond acquaintance : உணர முடியாதது.

18. சுயம் சதோதயம் : svayam-sadodayam : that which is self-luminous always : எப்போதும் தன் ஒளியில் திகழ்வது.

19. வரம் : varam : the goal : முடிவானது.

20. பரமார்த்த முக்த மௌனம் : paramārtha-mukta-maunam : the supreme truth which is freed silence : விடுபட்டதும் பேச்சற்றதும் ஆன மேலான உண்மை.

21. படன வேதாந்தாந்தம் : paṭhana-vedāntāntam : the end of the study of vedānta : பயிலும் மறைமுடிவின் முடிவானது.

22. ஆகமாந்தாந்த நிருபாதிகம் : āgamāntānta-nirupādhikam : the end of agamānta which is devoid of adjuncts : யாதொரு சேர்க்கையும் அற்ற ஆகம முடிவின் முடிவானது.

23. பரம சாந்தம் : parama-s'āntam : the supremely peaceful : மேலான அமைதி பொருந்தியது.

24. பரநாத தத்துவாந்தம் : paranāda-tattvāntam : the end which is the principle of the supreme sound : மேலான ஓசை உண்மையின் முடிவானது.

25. சகச தரிசனம் : sahaja-dars'anam : the natural sight : இயல்பான ஒளிநிலை.

26. பகிரங்க மந்தரங்கம் : bahirangam-antarangam : that which is without and within : உள்ளும் புறம்பும் உள்ளது.

27. பர வியோமம் : para-vyomam : the supreme ether : மேலான வெளிநிலை.

28. பரம ஜோதிமயம் : parama-jyoti-mayam : that which is of the nature of supreme light : மேலான ஒளிநிலைத் தன்மை பொருந்தியது.

29. விபுலம் : vipulam : the noble : பெருமையுற்றது.

30. பரம்பரம் : paramparam : the most high : உயர்வற உயர்ந்தது.

31. அனந்தம் : anantam : the endless : முடிவற்றது.

32. அசலம் : acalam : the unmoving : அசைவற்றது.

33. பரம லோகாதிக்க நித்திய சாம்பிராச்சியம் : parama-lokādhikya-nitya samrājyam : the eternal universal empery which is even over the highest world : உயர்வற உயர்ந்த உலகத்துக்கும் மேற்பட்ட நிலைபெற்ற பொது நிலையம்.

34. பரபதம் : para-padam : the supreme goal : மேலான முடிவானது.

35. பரம சூக்ஷ்மம் : parama-sūkṣmam : the supremely subtle : மேலான நுண்மையானது.

36. பராபரம் : parāparam : the higher and the lower : மேலானதும் கீழானதும்.

37. அநாமய நிராதாரம் : anāmaya-nirādhāram : that which is without defect and support : குறைவற்றதும் தனக்குத் தாங்குதல் வேண்டாததும்.

38. அகோசரம் : agocaram : the imperceptible : காணமுடியாதது.

39. பரம தந்திரம் : parama-tantram : the supreme *tantra* (that which supports and saves the world) : உலகத்தை நிலைநிறுத் தலும் உய்வித்தலும் ஆகிய மேலான உளவானது.

40. விசித்ரம் : vicitram : the variegated (or the wonderful) : பலதிறப்பட்டது அல்லது வியப்பானது.

41. பராமுத நிராகரம் : paramṛta-nirākāram : the supreme, immortal, formless being : மேலானதும், என்றும் நிலை பெற்றதும், வடிவற்றதும் ஆன மெய்ம்மை.

42. விகாசனம் : vikās'anam : the unmanifest : வெளிப்படாது தன்னுள் அடங்கியிருப்பது.

43. விகோடணம் : vighoṣaṇam : the unutterable : சொல்ல முடியாதது.

44. பர சுகோதயம் : para-sukhodayam : the dawn of the supreme happiness : மேலான இன்பத்தின் உதயம்.

45. அக்ஷயம் : akṣayam : that which does not decay : அழிவடை யாதது.

46. பரிபவ விமோசனம் : paribhava-vimocanam : that which frees (one) from humiliation : உயிர்களை எல்லாம் தாழ்ந்த நிலையினின்றும் மேலேற்றுவது.

47. குண ரகிதம் : guṇa-rahitam : that which is devoid of *gunas* : குணங்கள் இல்லாதது.

48. விசுவம் : vis'vam : the all : எல்லாமானது.

49. பதித்வ பரோபரிணம் : patitva paropariṇam : that which has lordship and is greater than the great : இறைநிலை பொருந் தியதும் பெரியதினும் பெரியதும்.

50. பஞ்சகிர்த்திய சுத்த கர்த்தத்துவம் : pañcakṛtya-s'uddha-kartṛtvam : that which performs the five cosmic functions and whose agency is pure : மாசற்ற நிலையில் ஐந்தொழில் நடாத்துவது.

51. தற்பரம் : tat-param : the supreme that : அதுவென்று சுட்டப் படும் மேலானது.

52. சிதம்பர விலாசம் : cidambara-vilāsam : the manifestation of the intelligence-ether : அறிவு வெளிப்படுத்தும் வெளிநிலை.

53. அதுலம் : atulam : the unequalled : ஒப்பற்றது.

54. அதுலிதம் : atulitam : the incomparable : ஒத்துப்பார்க்க முடியாதது.

55. அம்பராம்பர நிராலம்பனம் : ambarāmbara-nirālambanam : the ether of the ether, that which has no support : வெளிக்கும் வெளியாயது ; தனக்கு நிலைக்களம் வேண்டாதது.

56. சாக்ஷாத்கார நிரவயவம் : sākṣātkāra-niravayavam : that which is direct experience and is devoid of limbs : நேரான உணர்வும் உறுப்பற்றதும்.

57. கற்பனாதீத நிருவிகாரம் : kalpanātīta-nirvikāram : that which is beyond imagination and without change : நினைவுக்கு எட்டாததும் மாறுதல் அடையாததும்.

58. பரதுரிய அநுபவம் : para-turīya-anubhavam : the supreme, transcendent experience : மேலான கடந்த அநுபவம்.

59. குருதுரிய பதம் : guru-turīya-padam : the great transcendent goal or the preceptor who is the transcendent goal : பெரிய கடந்தநிலை அல்லது கடந்த நிலையாகிய குரு.

60. அம்பகம் : ambakam : the eye : காணும் கண்.

61. அம்பகாதீத : ambakātīta : beyond the eye : காட்சிக்கு எட்டாதது.

62. விமலம் : vimalam : the pure : மாசற்ற நிலை.

அம்பகம்பகாதீத விமலம் : ambaka-ambakātīta-vimalam : the pure which is the eye and beyond the eye : காணும் கண்ணும் காட்சிக்கு எட்டாததும் ஆன மாசற்ற நிலை.

63. பரம கருணாம்பரம் : parama-karuṇāmbaram : the ether of supereme mercy : மேலான அருள் என்னும் வெளிநிலை.

64. தற்பதம் : tat-padam : (the signification of) the word 'that' : அது என்னும் சொல்லின் பொருளாவது.

65. பரோக்ஷ ஞானாதீதம் : parokṣa jñānātītam : that which is beyond mediate knowledge : அறிவுக்கெட்டாதது.

66. அபரோக்ஷ ஞானநுபவ விலாசப் பிரகாசம் : aparokṣa-jñānānubhava-vilasa-prakāśam : the effulgence that is the manifestation of the experience of direct knowledge : நேர்முகமாக அறியும் அறிவை வெளிப்படுத்தும் பேர் ஒளிநிலை.

67. பாவனாதீதம் : bhāvanātītam : that which is beyond thought : எண்ணத்திற்கு அப்பாற்பட்டது.

68. குணாதீதம் : guṇātītam : that which is beyond the guṇas : குணங்களுக்கு அப்பாற்பட்டது.

69. உபசாந்தபதம் மகாமௌன ரூபம் : upas'āntapada-mahāmauna-rūpam : the absolutely quiescent state, of the nature of the great silence : முழுதும் போக்குவரவற்றது, பேச்சற்ற பெரிய நிலைக்களமானது.

70. பரம போதம் : parama-bodham : the supreme awareness : மேலான அறிவு.

71. போதரகித சகிதம் : bodharahita-sahitam : that which is without and with knowledge : அறிவுநிறைந்ததும் அறிவற்றதும்.

72. சம்பவாதீதம் : sambhavātītam : that which is beyond the possible (or phenomena): தோற்றம் நிலைபேறு கெடுதல் இல்லாதது.

73. அப்பிரமேயம் : aprameyam : the unknowable: அறிவுக் கப்பாற்பட்டது.

74. அனந்தானந்தம் : anantānandam : the endless bliss : முடிவற்ற இன்பம்.

75. அமலம் : amalam : the defectless : குறைவற்றது.

76. உசிதம் : ucitam : the apt : பொருத்தமானது.

77. சிற்பதம் : citpadam : consciousness which is the goal : முடிவான அறிவுநிலை.

78. சதானந்த சாரம் : sadānanda-sāram : the essence of perpetual bliss : முடிவற்ற இன்பத்தின் உயிர்நிலை.

79. பராயாதி கிரணாங்க சாங்க சௌபாங்க பிம்பாகார நிருவிகற்பம் : parā-ādi kiraṇāṅga-sāṅga-s'ubhāṅga-bimbākāra nirvikalpam : that which is the prototype endowed with all the auspicious limbs beginning with the ray-limb Para etc., and which is distinctionless : மூலகாரணம், மங்கள வடிவினன், ஒளி முதல் உருவினன், வேறுபாடற்றவன்.

80. பரசுகாரம்பம் : para-sukhārambham : the beginning of supreme happiness : மேலான இன்பத்தின் தொடக்கம்.

81. பரப்பிரம வித்தம் : parabrahma-vittam : the knowledge that is the supreme brahman : மேலான பிரமம் என்பதாகிய ஞானம்.

82. பரானந்த புரண போகம் : parānanda-pūrṇa-bhogam : the plenary enjoyment that is the supreme bliss : மேலான இன்பம் என்று சொல்லும் குறைவற்ற அநுபவம்.

83. பரிமிதாதீதம் : parimitātītam : that which is beyond limit : வரம்புக்கு அப்பாற்பட்டது.

84. பரோதயம் : parodayam : the supreme dawn : மேலான உதயம்.

85. பரஹிதம் : parahitam : the supreme good : மேலான நன்மை.

86. பரபரிணம் : paraparinam : the supreme abundance : முடிவற்ற செல்வம்.

87. பராந்தம் : parantam : the supreme end : மேலான முடிவு.

88. பரமாற்புதம் : paramādbhutam : the supreme wonder : மேலான இறும்பூது (வியப்பு, அதிசயம்).

89. பரமசேதனம் : parama-cetanam : the supreme consciousness : மேலான அறிவுநிலை.

90. பசு பாச பாவனம் : pas'u-pās'a-pāvanam : that which purifies the souls and the bonds : ஆன்மாக்களையும் அவற்றின் தளைகளையும் தூய்மைப்படுத்துவது.

91. பரம மோக்ஷம் : parama-mokṣam : the supreme release : மேலான வீடு பேறு.

92. பரமானுகுண நவாதீதம் : paramānuguṇa-navātītam : the supremely helpful, and the newer than the new : மேலான உதவியும் புதுமைக்கும் புதுமையானதும்.

93. சிதாகாச பாஸ்கரம் : cidākās'a-bhāskaram : the sun of the intelligence-ether : அறிவுச்சுடர் அல்லது வெளிநிலை.

94. பரம போகம் : parama-bhogam : the supreme enjoyment : மேலான அனுபவம்.

95. பரிபாக வேதன வரோதயானந்த பத பாலனம் : paripāka-vedana-varodayānanda-pada-pālanam : the protection that is of the great rise of the goal which is bliss and which is known by maturity : ஆநந்தமாகிய முடிவும் பக்குவ நிலையுற்றதும் ஆன வீடு பேற்றை அருளும் இறைவன்.

96. பரம யோகம் : parama-yogam : the supreme yoga : மேலான யோகம்.

97. பரம சாத்திய அதீதானந்த போக்கியம்: parama-sādhya-atītānanda-bhogyam : the supreme goal which is the enjoyment of transcendent bliss : கரைகடந்த இன்பாநுவம் அடைவிக்கும் மேலான முடிவு.

98. பரிகதம் : parigatam : the all-pervading : எங்கும் நீக்கமற நிறைந்தது.

99. பரிவேத்தியம் : parivedyam : that which is known alround : எப்பாங்கரும் உள்ளதாய் இருப்பது.

100. பர கேவ லாத்வி தானந் தானுபவ சத்த பாதாக்ர சுத்தபலிதம் : para-kevalādvaitānandānubhava-s'abda-pādāgra-s'uddha-phalitam : the experience which is the supreme, pure, non-dual bliss ; the pure fruition of the end of the vedas : மேலானதும், மாசற்றதும், இரண்டற்றதும் ஆன இன்பநிலை; வேதங்களின் முடிவின் மெய் விளைவு.

101. பரம சுத்தாத் விதாநந்த அநுபூதிகம் : parama-s'uddhādvaitānanda-anubhūtikam : the experience that is the supreme pure non-dual bliss : மேலானதும், மாசற்றதும், இரண்டற்றதும் ஆன இன்பநிலையின் அநுபவம்.

102. பரிபூத சிற்குணாந்தம் : paribhūta-cidguṇāntam : the end which has the characteristic of excelling consciousness : அறிவுநிலைக்கு மேற்பட்ட தன்மைவாய்ந்த இன்பாநுபவம்.

103. பரம சிந்தாந்த நிகமாந்த சமரச சுத்த பாமானுபவ விலாசம் : parama-siddhānta-nigamānta-samarasa-s'uddha-paramanubhava-vilāsam : the manifestation that is the supreme experience which is the pure harmony of the great siddhānta and vedānta : உயர்ந்த சித்தாந்தநிலை வேதாந்த நிலை ஆகிய இவற்றின் தெளிவான இயைபு பொருந்திய மேலான அநுபவம் அருள்வதாய் வெளிப்படுவது.

அநுபந்தம்

5. திரு அருட்பா முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாட்டு	பக்கம்
திருவடிப் புகழ்ச்சி	
இன்றிவருமோ	1
பரசிவம்	1
விண்ணப்பக் கலிவெண்பா	
அவ்வவ்	6
சொற்பெறு	6
நெஞ்சறிவுறுத்தல்	
ஆறுமுகத்தான்	38
சீர்சான்ற	38
பொன்னூர்	38
சிவநேச வெண்பா	
அ	
அங்கணனே	101
அண்டங்களோ	97
அப்பாலுன்	96
அன்புடையார்	106
ஆ	
ஆமோ	98
ஆயாக்	103
ஆயிரமன்றே	106
ஆராவமுதே	108
ஆர்கொண்டார்	102
இ	
இண்டைச்	111
இப்பாரில்	112
இன்படையான்	107
இன்றே	79
உ	
உப்பிருந்த	99
உருவாய்	96
உள்ளொன்ற	105
உன்றல்	98
ஊ	
ஊட்டுகின்ற	98
ஊணே	110
எ	
எங்கோவே	102
எச்சம்	104
எண்ணிலெளி	105
எந்தாய்நின்	98
எந்தாயென்	109
எம்பரவை	102
எவ்வேளை	108
எள்ளலே	109
என்சிறுமை	109
என்பாலோ	103
என்னமுதே	108
என்னுருயிர்	106
என்னெஞ்சோர்	101
ஏ	
ஏசும்	99
ஏசொலிக்கு	107
ஏய்ப்பிறப்பு	107
ஏலார்	99
ஓ	
ஓகோ	100
க	
கங்கை	110
கண்குழைந்து	100
கண்ணப்பன்	111
கண்ணு	111
கண்ணுதலே	101
கல்லென்கோ	100
கற்றறியேன்	104
கு	
குற்றம்	107
கொ	
கொன்செய்தால்	105
கொன்னஞ்சேன்	109
கோ	
கோடும்	108
கோளாக்கி	110
கோள்கொண்ட	102
சி	
சிவமே	110
சீ	
சீர்சான்ற	96
செ	
செய்யார்	103
சென்றுரைப்பார்	98
சொ	
சொல்லுகின்ற	100
சோ	
சோர்படைத்து	100
த	
தந்தையாய்	98

பாட்டு	பக்கம்
தா	
தாரம்விற்றும்	105
தாழ்விக்கும்	106
தி	
திண்ணம்	109
திண்ணஞ்சற்றே	111
தீ	
தீக்குணத்தார்	107
து	
துற்குணத்தில்	112
துற்சங்க	108
தே	
தேனென்ற	97
தோ	
தோற்றமிலா	99
ந	
நண்ணி	102
நா	
நாணவத்தினேன்	103
நி	
நினைப்பித்தா	96
நின்னன்பர்	109
நீ	
நீத்தாடும்	105
ப	
பண்ணுலுன்	101
பு	
புல்லங்கணநீர்	99
பூ	
பூதமெங்கே	97
பூவுக்கரையரும்	102
பூவைவிட்டு	101
பெ	
பெற்றிடுதாய்	103
பே	
பேசத்தெரியேன்	110
பேரறிவால்	97
பேருருவோ	97
பொ	
பொன்போல்	103
பொன்னின்	111
ம	
மண்ணுலைச	97
மா	
மாதேவா	104
மாலெங்கே	108
மான்றும்	100
மு	
முத்தேவர்	110
முன்மணத்தில்	103
முன்னவனே	95
மெ	
மெய்தான்	104
மெய்யாக	109
யா	
யாதோ	101
வ	
வஞ்சந்தரும்	106
வந்தித்தேன்	97
வா	
வாயன்றேல்	99
வீ	
வீட்டார்	99
வீயுமிடு	100
வீறுடையாய்	95
வெ	
வெங்கோடை	99
வெஞ்செஞ்சலமா	96
வெள்ளமுதும்	101
வெள்ளை	106
வே	
வேணிக்கமே	110
வேதமுடிவோ	102

மஹா தேவ மாலை

பாட்டு	பக்கம்
அ	
அடிமை	136
அடியனே	140
அண்டங்கள்	116
அண்டமெலாம்	124
அந்தரம்	129
அம்பரத்தே	138
அரிதாகி	117
அருமறை	130
அருளருவி	122
அருளுடைய	143
அருள்வெளியில்	135
அலைகடலும்	124
அல்விலங்கு	134
அளவிறந்த	116
அளவை	123
அன்னை	132
அன்பர்	142

பாட்டு	பக்கம்
ஆ	
ஆனேறு	131
இ	
இந்தியமாய்	115
உ	
உடல்குளிர	125
உய்குவித்து	135
உருத்திரர்	129
உருநான்கு	128
உருவாகி	117
உலகநிலை	114
உலகமெலாம்	114
எ	
எண்ணிய	142
எம்பெருமான்	138
எழுத்தறிந்து	128
எனையறியா	137
என்னரசே	134
என்னுயிர்	131
ஒ	
ஒலிவடிவு	127
க	
கண்ணுடைய	139
கண்மயக்கும்	141
கருணை	113
கற்பங்கள்	127
கற்றவனை	135
கா	
காட்சி	122
கி	
கிரியை	125
கூ	
கூம்பாத	136
கோ	
கோதகன்ற	122
கோவே	120
ச	
சகமாகி	118
சகலமாய்	117
சு	
சுழியாத	123
செ	
செஞ்சடை	132
சொ	
சொல்லொழிய	124
சொற்போதற்கு	125
ஞா	
ஞாலமே	121
த	
தண்ணமுத	123
தத்துவமே	121
தம்மை	140
தா	
தானாகி	131
தீ	
தீவினை	138
தே	
தேசுவிரித்து	119
தோ	
தோன்றுதுவி	115
தோன்றுபர	129
ந	
நற்றாயு	141
நி	
நின்மயமாய்	116
ப	
படித்தேன்	133
பரமாகி	115
பரிக்கிரக	130
பற்றறியா	126
பா	
பாங்குளநாம்	128
பாயிரமாமறை	129
பு	
புற்றோங்கு	142
பூ	
பூதமே	121
பே	
பேதமுறு	125
பேராய	127
பொ	
பொங்கு	126
பொது	130
பொற்குன்றே	119
பொன்மலை	140
பொன்னாகி	117
பொன்னுடையார்	139

பாட்டு	பக்கம்
ம	
மட்டகன்ற	128
மணக்கு	130
மதியணிந்த	133
மத்தேறி	133
மந்திரமாய்	119
மலைமேலும்	119
மறைமுடி	122
மா	
மாணேய	120
மாறுகி	118
மெ	
மெய்ஞ்ஞான	126
மெய்யுணர்ந்த	127
யோ	
யோகமே	121
வ	
வரம்பழுத்த	124
வருகணத்து	139
வன்கொடுமை	134
வன்புகலந்து	123
வா	
வாசகமாய்	118
வாயாகி	116
வானே	120
வான்காணு	126
வி	
விண்ணே	120
விதியாகி	118
வித்தாகி	114
வெ	
வெள்ளமணி	137
வே	
வேதாந்த	115

திரு அருண் முறையீடு

பாட்டு	பக்கம்
அ	
அடுத்தார்	150
அண்டங்	157
அந்தோ	162
அந்நாளே	159
அம்மா	163
அருட்கடலே	157
அரும்பொருளே	149
அருளரசே	180
அருளறியா	149
அலையெழுத்தும்	164
அல்லுண்ட	164
அற்கண்ட	171
அன்பரிதா	160
அன்பாலென்	148
ஆ	
ஆட்சி	164
ஆட்டுக்கு	171
ஆதிக்க	151
ஆறிட்ட	164
இ	
இடைக்கொடி	178
இணையே	172
இயங்கா	177
இருவர்க்	179
இரையேற்று	182
இலங்கா	179
இன்பற்ற	175
இன்றலவே	157
ஈ	
ஈடறியா	174
உ	
உடம்பார்	174
உடையாய்	157
உடையென்றும்	179
உருமத்திலே	178
உருவத்திலே	153
உற்றுயினு	160
ஊ	
ஊர்தருவார்	165
எ	
எம்மத	163
எல்லாமுடைய	173
எள்ளிருக்	155
எனைப்பெற்ற	169
எனையடை	158
என்போன்	148
என்மேற்	166
என்னிறைவா	178
என்னுறவே	177
என்னே	145
ஏ	
ஏட்டாலும்	150
ஏற்றிலிட்டார்	175
ஒ	
ஒண்ணுதல்	179
ஒப்பற்ற	171
ஒருமாது	152
ஒருமுடி	169
ஒன்றே	173
ஓ	
ஓயாக்கருணே	163
க	
கங்கை	167
கஞ்சத்திலோர்	178
கடும்புல	178

பாட்டு	பக்கம்
கண்கட்டி	156
கண்கொண்ட	165
கண்ணுர்	163
கண்ணுதலான்	168
கரங்காட்டி	175
கருத்தறியா	154
கருமுக	154
கல்லாத	163
கல்லென்று	181
களங்கனி	175
களங்கொண்ட	176
கள்ளாடிய	181
கற்கோட்டை	151
கா	
காண்டத்தின்	165
காரேயெனு	164
கார்முக	171
காவிக்கு	176
காற்றுக்கு	162
கான்போல்	177
கீ	
கீளுடையாய்	146
கு	
குருந்தாமென்	164
கூ	
கூத்துடையாய்	169
கூறுற்ற	149
கை	
கைக்கின்ற	147
கொ	
கொங்கிட்ட	176
கொடிகொண்ட	158
கோ	
கோலொன்று	181
கோள்வேண்டும்	155
ச	
சகமிலையே	168
சடையவ	166
சரங்கார்	149
சா	
சாதகத்தோர்	148
சாற்றவனே	176
சி	
சிவசங்கரா	177
சிற்பரமே	154
சினத்தாலும்	156
சீ	
சீரிடுவார்	172
சீர்க்கின்ற	150
சீர்தரு	167
சூ	
சூடுண்ட	174
சூற்படு	149
சே	
சேலுக்கு	172
சேல்வருங்	171
சேல்வரும்	158
சேல்வைக்கும்	152
சொ	
சொல்லுகின்றோர்	171
சொற்றுணை	166
சோ	
சோபங்கண்டார்	173
த	
தஞ்சமென்றே	157
தண்டாது	146
தண்மதி	170
தவமே	170
தளைக்கின்ற	179
தா	
தாயாகி	150
தாழ்வேதும்	173
தி	
திருவாதவூர்	167
து	
துடிவைத்த	169
துனியால்	144
தூ	
தூக்கமும்	167
தெ	
தெண்ணீர்	168
தெருளும்	151
தெவ்வழி	163
தே	
தேட்டக்	157
தேரோங்கு	175
தேன்சொல்	147
ந	
நடங்கொண்ட	152
நடும்பாட்டை	150
நயப்படும்	172
நல்லமுதம்	166
நறையுளதே	156

பாட்டு	பக்கம்
நா	
நாடிநின்றே	150
நாயுஞ்	153
நானடங்	162
நானோர்	148
நான்செய்த	159
நான்படும்	146
நான்முக	179
நி	
நிலைகாட்டி	172
நிலையறியாத	180
நிறைமதி	169
நீ	
நீயேயென்	151
நீர்சிந்து	158
நீளாதரவு	161
நெ	
நெருப்புக்கு	163
நெறிகொண்ட	151
ப	
படிபட்ட	157
பண்செய்	166
பதியே	177
பவசாதனம்	159
பா	
பாம்பாயினும்	162
பி	
பிட்டுக்கு	170
பிறைசூழ்ந்த	156
பிறைமுடி	152
பிறையாறு	173
பீ	
பீழையை	154
பு	
புரிகின்ற	180
புலையளவோ	181
புல்லள	156
பெ	
பெண்ணான்	151
பெண்மணி	164
பெற்றாளனைய	159
பை	
பையுரை	155
பொ	
பொங்கரும்	168
பொய்யாம்	146
பொய்யோ	147
பொய்வந்த	167
பொறுத்தாலும்	158
பொன்கின்று	155
பொன்வசமோ	162
பொன்னுடை	148
போ	
போகங்	157
போற்றி	178
ம	
மஞ்சடை	179
மடல்வற்	155
மட்டுண்ட	170
மணிகொண்ட	168
மண்ணாலும்	174
மதிக்கண்ணி	181
மதித்து	177
மதியாமல்	151
மருக்கா	181
மருப்பா	154
மலங்கவிழ்	174
மறைக்கொளி	161
மனக்கேத	180
மா	
மாகலை	165
மாப்பிட்டு	166
மாமதி	175
மாலறியாத	173
மாலறியான்	163
மானெழு	153
மி	
மின்போலும்	148
மு	
முலைக்	180
முன்மழை	161
முன்னஞ்ச	152
மெ	
மெய்யகத்தே	180
மெய்விட்ட	156
மை	
மைகண்ட	161
மைகொடுத்தார்	174
மையிட்ட	170
மைவிட்டிடா	166
மோ	
மோகங்	180
வ	
வண்டு	173
வருஞ்செல்	154
வலைப்பட்ட	164
வளங்கன்று	162
வனமெழு	153
வனம்போய்	159
வன்பட்ட	158
வா	
வாட்கொண்ட	167

பாட்டு	பக்கம்
வாய்மூடி	155
வாளேய்	149
வானம்	152
வானுள	174
வான்மறுகினும்	160
வான்வளர்	171
வான்வேண்டி	154
வி	
விடநாக	172
விடமிலை	146
விடையிலையோ	155
விடையுடை	146
விண்ணுடை	146
விண்பூத்த	170
விதிக்கும்	158
வில்லை	169
விழிக்கஞ்சனம்	152
வீ	
வீட்டுத்	168
வீணே	147
வெ	
வெப்பிலை	169
வெம்பெரு	176
வென்றே	147
வே	
வேணிக்கண்	165
வேணிக்கு	161
வேதனென்	177
வேதனை	175
வேய்க்கு	165
வேலகொண்ட	170

வடிவுடை மாணிக்க மாலை

பாட்டு	பக்கம்
அ	
அடியார்	193
அடியேன்	197
அணியே	184
அண்டாரை	192
அத்தனை	201
அயிலேந்தும்	195
அனம்	189
ஆ	
ஆசையுள்	192
ஆரணம்	200
ஆருத்துயரத்து	198
இ	
இட்டார்	193
இலையாற்று	188
உ	
உடையென்ன	200
உன்னும்	190
உன்னோர்	185
எ	
எண்ணிய	196
எம்பால்	195
எழுதா	194
எற்றே	199
என்போல்	197
ஏ	
ஏமமுர்	195
ஓ	
ஓயா	201
ஓருருவாய்	189
ஓவாத	193
க	
கங்கை	186
கடலமுதே	184
கணமொன்றி	196
கண்ணப்ப	198
கண்ணே	185
கருவேதனை	196
கல்லா	199
கலைமகளோ	188
களந்திரும்பா	200
கற்பதுங்	200
கற்பே	198
கா	
காதரவால்	201
காமட்டலர்	188
காமம்	185
கூ	
கூருத	201
கோ	
கோடா	185
ச	
சந்தோடமா	197
சற்றே	197
சா	
சார்ந்தே	189
சி	
சினங்கடந்தோர்	194
சீ	
சீரறிவா	192
சீர்கொண்ட	183
சு	
சுந்தர	199
செ	
செங்கம	190
செய்ய	195
செவ்வேலை	199

பாட்டு	பக்கம்
சே	
சேடாரியன்	190
சேய்க்குற்றம்	190
சேலேர்	195
சோ	
சோலை	186
த	
தரும்பேர்	195
தனையாள்பவர்	186
தா	
தாதா	200
தாயே	199
தி	
திருநாள்	191
திருமாலும்	185
திருவல்லி	200
தீ	
தீதுசெய்	196
து	
துன்பே	197
தெ	
தெருட்பால்	194
ந	
நன்றே	201
நா	
நாலே	186
நானே	199
நி	
நின்னால்	201
நீ	
நீயே	189
நே	
நேயானுகூல	202
ப	
பத்தர்	199
பன்னும்	194
பி	
பின்னீன்ற	186
பு	
புரகோக்கினால்	190
பூ	
பூவாய்	200
பெ	
பெரும்பேதை	201
பை	
பையாளும்	187
பொ	
பொய்விட்டி	202
பொருப்புறு	188
பொருளே	185
பொன்னுடை	202
பொன்னே	188
போ	
போற்றிடு	192
ம	
மதியே	198
மருந்தி	196
மலையான்	185
மன்னோர்	196
மா	
மாநந்த	191
மானோர்	184
மி	
மிகவே	198
மீ	
மீதலத்தோர்	189
மு	
முத்தே	191
முப்போதும்	189
வ	
வல்லாரும்	194
வா	
வாணாள்	191
வாழிநின்	202
வான்தேட	191
வி	
விணங்காத	193
வீ	
வீற்றார்	188
வெ	
வெளியாய்	193
வெள்ளம்	191
வே	
வேதங்களாய்	198

பாட்டு	பக்கம்
இங்கித மாலை	
அ	
அச்சை	219
அடுத்தார்	207
அடைந்தார்	226
அம்மாலையனும்	207
அம்மை	224
அளிக்குங்	217
அளியார்	220
அள்ளற்	219
அனஞ்சூழ்	221
ஆ	
ஆட்டுத்	221
ஆழிவிடை	223
ஆராமகிழ்வு	207
ஆறுமுகத்தார்	219
ஆற்றுச்	227
இ	
இடஞ்சேர்	222
இட்டங்களித்த	212
இந்தாரிதழி	207
உ	
உகஞ்சேர்	214
உடற்கச்சு	209
உடுக்கும்	222
உடையார்	222
உண்கண்	224
உதையச்சுடரே	224
உயிருளுறைவீர்	212
உள்ளத்தனே	219
உற்றவிடத்தே	223
ஊ	
ஊட்டும்	223
ஊராமொற்றி	214
ஊருரிருப்பீர்	218
ஊற்றூர்	225
எ	
என்மேல்	215
என்னுருயிர்	222
என்னேர்	218
ஒ	
ஒசியவிகுடு	216
ஒண்கை	213
ஒருகை	209
ஒருமாமுகனை	203
ஒருவரென	213
ஒற்றிநகரீர்	213
ஒற்றிநகரார்	209
ஒற்றிப்பெருமான்	221
ஒன்றும்	215
ஒன்னூர்	217
ஓ	
ஓங்குஞ்	227
ஓமூன்று	214
க	
கண்கள்	207
கண்ணின்	209
கண்ணும்	224
கந்தவனம்	223
கருணைக்கடலே	223
கருமை	216
கரும்பினினியீர்	224
கலையாளுடையீர்	216
கனிமானிதழி	217
கற்றீரொற்றீர்	222
கற்றைச்சடையீர்	222
கா	
காவாயொற்றி	223
காவிக்களம்	223
கு	
குருகார்	212
கூ	
கூடம்பா	220
கொ	
கொடியால்	218
கொடையார்	211
கொன்றை	226
கோ	
கோடா	220
கோமாற்கு	207
ச	
சங்கமருவும்	208
சி	
சிமைக்கொள்	208
சிறியேன்	217
சீ	
சீலஞ்சேர்ந்த	225
சீலம்படைத்தீர்	216
செ	
செங்கேழ்	211
செச்சை	211
செம்பான்	219
செம்மை	222
செய்காண்	212
சே	
சேடார்	209
ஞா	
ஞாலநிகழும்	217
ஞானம்	216
த	
தண்காவளம்	212
தண்ணம்	214

பாட்டு	பக்கம்
தண்ணார்	205
தவந்தங்கிய	217
தளிநான்	213
தன்னந்தனியாய்	207
தா	
தாங்கும்	224
தாவென்றருளும்	215
தி	
திருத்தமிகும்	210
திருவார்	204
திருவை	208
தீ	
தீதுதவிர்க்கும்	213
து	
துதிசேர்	209
துருமஞ்	209
துன்னல்	208
தெ	
தெவ்வூர்	226
தே	
தேமாம்	221
தேவர்	226
தேனார்	210
ந	
நடங்கொள்	208
நடவாழ்	220
நலமாம்	220
நல்லார்மதிக்கு	218
நல்லாரொற்றி	221
நா	
நாலாரணம்	215
நி	
நிலையை	224
நீ	
நீரைவிழுங்கும்	225
ப	
பங்கேருக	221
படையம்	220
பதங்கூறு	225
பலஞ்சேர்	210
பற்று	216
பா	
பாற்றக்	212
பி	
பிட்டி	206
பு	
புயப்பால்	214
புயல்சூழ்	220
புரக்குங்	225
புரியுஞ்	226
பெ	
பெருஞ்சீர்	210
பெருந்தாரணி	222
பே	
பேசுங்	218
பேரார்	213
பேர்வாழ்	210
பொ	
பொதுநின்	211
பொன்னேர்	226
பொன்னைக்	211
ம	
மடையிற்	206
மட்டார்	213
மணங்கே	209
மணங்கொள்	226
மதிலொற்றி	221
மறிநீர்	218
மன்றன்	207
மன்றார்	211
மன்னி	214
மா	
மாணப்புகழ்	221
மாறுவழகோடு	208
மு	
முடியா	215
முந்தை	208
மெ	
மெய்ந்நீர்	225
மை	
மைக்கொள்	219
மையலகற்றீர்	215
யா	
யான்செய்	223
யோ	
யோகமுடையார்	225
வ	
வணக்கேழ்	224
வண்மையுடை	208
வண்மைதருவீர்	217
வயலாரொற்றிவா	210
வயலார்சோலை	211
வயலாரொற்றிமே	215
வருத்தங்	215
வலந்தங்கிய	210
வளஞ்சேரொற்றிமா	210
வளஞ்சேரொற்றியீ	214
வளநீரொற்றி	225
வள்ளன்	219
வா	
வாசங்	217
வாராவிருந்தாய்	211
வானங்	216
வானார்	216
வான்றேய்	213
வி	
விச்சைப்	220
விஞ்சு	219
விண்டு	212
விண்ணார்	218
விழியொண்	218
வீ	
வீற்றொற்றி	214
வே	
வேலைஞாலம்	212

உ

திருச்சிற்றம்பலம்

ஞான சபை

சத்திய ஞான சபையில், இறைவனை, அருள்நெறி நின்று, வழிபட விரும்பும் அடியார்கள் பொருட்டு, நம் பெருமானார் இராமலிங்க அடிகளாரின் தனிப்பேர் உபதேசங்களினின்றும், இப்பதிப்பாசிரியனாகிய என்னால், உளநிறைந்த பத்திமையோடும், உளஒளி யோடும், பேருவகையோடும் துருவித் துருவி ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருஅருட்பாக்கள், ஞானசபைக் கட்டடத்தின் அகத்தினும் புறத்தினும், என் நண்பர் முருகப்பெருமான் அடியாரான ஸ்ரீ கிருபாநந்தவாரியார் அவர்கள் ஆணையின் கீழ் ஸ்தபதியாகத் தொண்டாற்றிய ஸ்ரீ சிவனார் அவர்களால் அழகு ததும்ப, பேர் அன் போடும், பேர் ஆர்வத்தோடும், பெருங் களிப்போடும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஞானசபைக்கு அன்ப ராவார் யாவரும் அவற்றைக் கண்ணுற்று, ஒருமையுடன் ஓதி உணர்ந்து அருள் நலம் அடைவார்களாக! ஒன்றுக் கும் பற்றாத எளியேனுக்கு இத் தெய்வத் திருஅருட்பாத் தொண்டினை இப்பிறவியில் ஈந்த இறைவன் எங்கள் பெருமானார்க்கு, யான் எப்பிறவியினும், இத்திருத் தொண்டினை இயற்றி, மீளாது ஆட்பட்டொழுகும் — பேற்றினைப் பெறுமாறு அருள் புரிவாராக! —

வாழ்க சத்திய ஞான சபை!
வாழ்க எங்கள் பெருமானார்!
வாழ்க அவர்கள் அருள்நெறி!

திருச்சிற்றம்பலம்

உ

அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை



இராமலிங்க அடிகளார் அருள்நெறி வழிபாட்டிற்காக அமைத்தருளிய

சத்திய ஞான சபை

உத்தரஞான சிதம்பரம் அல்லது வடலூர், தென்னார்க்காடு ஜில்லா, சென்னை.

விற்பனை உரிமை : வசந்தம் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை